தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண் 390

# திருவாப்பனூர்ப் புராணம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

கி. பி.1998 விலை :- ரூ. 50

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண் 390

# திருவாப்பனூர்ப் புராணம்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் ;

நா. செயப்பிரகாசு எம். ஏ., எம். ஃபில் .

தமிழ்விரிவுரையாளர்,

மன்னர் சரபோஜி அரசுக்கல்லூரி,

தஞ்சாவூர்-613005

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

கி. பி.1998 விலை :- ரூ. ௫0

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | திருவாப்பனூர்ப் புராணம் |
| பதிப்பாசிரியர் | : | திரு. நா. செயப்பிரகாசு எம். ஏ. எம்.ஃபில்., |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீட்டு எண் | : | 390 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | நவம்பர், 1998 |
| தாள் | : | 13.7 கிலோ சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 254 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 18, 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடாஜலபதி பிரிண்டர்ஸ் தஞ்சாவூர். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | புராணம் |
| விலை | : | ரூ. 50-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தமிழிலக்கியப் பரப்பு ஆழமும் அகலமும் கொண்டது; அருமையும் பெருமையும் வாய்ந்தது; சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியம், புராணம் சிற்றிலக்கியம் எனப் பற்பல எழில்முகம் காட்டுவது.

புராண இலக்கியங்களில், 'தலபுராணம்' எனும் வகை பல்கிய எண்ணிக்கையில் நூல்களைக் கொண்டதாகும். சிதம்பரப் புராணம், தணிகைப் புராணம், திருக்கூவப் புராணம், சீகாளத்திப் புராணம், திருக் கழுக்குன்றப் புராணம், திருவெண்காட்டுப் புராணம் முதலான பல தலபுராண இலக்கியங்கள் தமிழில் தோன்றியுள்ளன.

பக்திப் பொருண்மையில், குறிப்பிட்ட திருத் தலத்தின் சிறப்புக்களைச் செய்யுள் நடையில் பெரும்பாலான தலபுராண இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அத்தகைய தலபுராண இலக்கியங்களுள் ஒன்றே இங்குப் பதிப்பித்து வெளியிடப்பெறும் "திருவாப்பனூர்ப் புராணம்" எனும் இந்நூலாகும்.

திருவாப்பனூர்ப் புராணம் என்னும் இந்நூல் மதுரையில் வையை வடகரையில் உள்ள சிவத் தலத்தைப் பற்றியதாகும். இத்தலம் தற்போது திருவாப்புடையார் கோவில் என்னும் பெயரில் வழங்கப் படுகிறது.

இத்தலபுராண இலக்கியம், மதுரையை அடுத்த திருப்பூவனம் எனும் ஊரைச்சார்ந்த கந்தசாமிக் கவிஞரால் இயற்றப்பெற்றதாகும். இவ்விலக்கியம் பதினேழாம் நூற்றாண்டில் தோன்றியதாகும்.

இந்நூலை அருஞ்சொற்பொருள், ஆய்வுரை யோடு பதிப்பித்து அளித்துள்ள பதிப்பாசிரியர் திரு நா. செயப்பிரகாசு எம். ஏ. எம். ஃபில்., அவர்கட்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் நன்முறையில் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய மைய அரசுக்கும், இந்த நூலகத்தைச் செவ்வனே பராமரித்து வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும், பள்ளி கல்வித்துறைச் செயலாளர் திரு எம். ஏ. கௌரிசங்கர், இ. ஆ. ப., அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலை நுண்ணாய்வு செய்து வெளியிடப் பரிந்துரைத்த அறிஞர் திரு ப. வெ. நாகராசன் அவர்களுக்கு எனது நன்றியையும் இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள நூலக நிருவாக அலுவலர் திரு. நா. தியாகராஜன், எம். ஏ. பி. எல் , அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல் ஐ. எஸ்., அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழிலக்கிய அன்பர்களும், ஆன்மீக அன்பர்களும் இந்நூலை ஈடுபாட்டோடு வரவேற்பர் என நம்புகிறேன்.

து. நா. இராமநாதன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்
10-11-98

# பதிப்பாசிரியர் உரை

தமிழ் இலக்கிய உலகம் பரந்துபட்டது. தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் நிலைபெற்றன என்று கூற இயலாது. அதற்குக் காரணங்கள் பலப்பல. ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்ற நூல்கள் காலத்தை எதிர்த்து நிற்க இயலாமல் மக்கி மடிந்து போவதும்; மக்களின் அறியாமையால் அழிந்து போவதும் வாடிக்கையாக இருந்து வருகிறது. இத்தகைய அழிவுகளிலிருந்து இலக்கிய உலகத்தைக் காக்கும் முயற்சியே ஓலைச் சுவடிகளில் உள்ள நூல்களை அச்சேற்றும் பணியாகும். தஞ்சாவூர் சரசுவதி மகால் அத்தகைய அரிய முயற்சியில் முனைந்து செயல் படுகிறது.

சரசுவதி மகால் நூலகத்தில் 1463-ஆம் எண்ணுடைய தமிழ் ஓலைச் சுவடியான "திருவாப்பனூர்ப் புராணம்" என்னும் நூலைப் பதிப்பிக்கும் இப்பணிக்குக் காரணமாகவும் உறுதுணையாகவும் இருந்து உதவியோர் பலர்.

இந் நூலைப் பதிப்பிக்க அனுமதியளித்துதவிய அன்றைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்; மற்றும் வெளியீட்டாளர் முகவுரை அளித்துச் சிறப்புச் செய்த இன்றைய மாவட்ட ஆட்சித்தலைவரும் நூலக இயக்குநருமான திருமிகு. து. நா. இராமநாதன், இ. ஆ. ப. அவர்கள்; நிருவாக அலுவலர் திருமிகு நா. தியாகராஜன் அவர்கள்; வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் உயர்திரு. அ. பஞ்சநாதன் அவர்கள்; நூலகத்தின் தமிழ்த்துறை வல்லுநர்கள் திருமதி. ச. திலகம், மற்றும் திரு ய. மணிகண்டன் ஆகியோர்...

நூலின் கையெழுத்துப்படியை முழுமையாகப் படித்துப் பார்த்து உரிய ஆலோசனைகள் வழங்கி உதவிய தமிழறிஞர் கம்பராமன் என்னும் திரு. இராம

ராசன் அவர்கள்; நூலை நுண்ணாய்வு செய்து உதவிய சிரவை ஆதீனக்கவிஞர் புலவர் திரு. ப வெ நாகராசன் அவர்கள்...

இந்நூலின் அச்சுப் பணியை மேற்கொண்ட தஞ்சை ஸ்ரீ வெங்கடாஜலபதி அச்சகப் பணியாளர்கள்..

இவர்கள் அனைவரும் இந்நூல் சிறப்புடன் அமையப் பேருதவி புரிந்தவர்கள். இவர்களை இங்கு நன்றியுடன் நினைத்துப்பார்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நா செயப்பிரகாசு,
சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i—XXVI |
| சம்பந்தர் பதிகம் | 1 |
| நூல் | 3 - 203 |
| காப்பு | 3 |
| நைமிசாரண்ய வருணனை | 16 |
| சூதரை வினாய காதை | 20 |
| மூர்த்தி மகிமை | 25 |
| இடவபுரச் சருக்கம் | 69 |
| அன்னவினோதச் சருக்கம் | 85 |
| சந்திரசேனச் சருக்கம் | 104 |
| பாடகளச் சருக்கம் | 133 |
| குபேரச் சருக்கம் | 153 |
| சுதரிசனச் சருக்கம் | 170 |
| அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் | 184 |
| பாட்டு முதற்குறிப்பு அகராதி | 204 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே ''நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்.
6—11—98

**மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,**
**சரசுவதி மகால் நூலகம்.**

# திருவாப்பனூர்ப் புராணம்

## முன்னுரை

நம் தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றை நோக்கும்பொழுது காலந்தோறும் புதிய புதிய இலக்கிய வகைகள் தோன்றிச் சிறந்திருப்பதைக் காண முடிகிறது பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்னும் சங்க இலக்கியங்களும், சிலம்பு முதல் இராமாயணம் வரையிலான காவியங்களும், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்கள் என்னும் சமய இலக்கியங்களும், பெரிய புராணம் போன்ற புராண இலக்கியங்களும் பல்வேறு வகைகளாக அவை அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு புதுப்புது இலக்கிய வகைகள் தோன்றுவதற்குக் காரணம் அரசியல் மற்றும் சமுதாய மாற்றங்களும் அவற்றால் தோன்றும் சமுதாயத் தேவைகளுமே எனலாம். எப்பொழுதெல்லாம் அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்றனவோ அப்பொழுதெல்லாம் அம்மாற்றங்கள் சமுதாயத்தையும் பாதித்துத் தொடர்ந்து இலக்கியத்தையும் பாதிப்பதை நாம் அரசியல், சமுதாய இலக்கிய வரலாறுகளை ஒத்துப் பார்க்கும்பொழுது தெளிவாகத் தெரிகிறது.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. அக்காலம் அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் இருண்ட காலம் என்றே அறிஞர்கள்.

கருதுகின்றனர். இந்நிலை கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. அதேபோன்று மற்றுமொரு அரசியல் நிலையின்மை கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் ஏற்பட்டது கி பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு முன் தமிழில் சமய இலக்கியங்களும் காப்பிய இலக்கியங்களுமாக ஏராளமாகத் தோன்றித் தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்த்தன. சேக்கிழார், கம்பர் போன்ற பெரும்புலவர்கள் மன்னர்களின் ஆதரவுடன் பேரிலக்கியங்களைப் படைத்தனர் ஆனால், அவர்கள் காலத்திற்குப் பின் அரசியல் அமைதியின்மை காரணமாக அத்தகு பெரும்புலவர்களும் பேரிலக்கியங்களும் தோன்ற வழியில்லாமல் போயிற்று.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தில் சேர சோழ பாண்டியர் வலிமை குறைந்து ஒடுங்கினர். வலிமையுடைய நிலையான ஆட்சி இன்மையால் குழப்பங்கள் தலைதூக்கின. ஹொய்சளர்களின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகியது. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அலாவுதீனின் படைத்தலைவன் மாலிக்காபூரின் படையெடுப்பு தென்னகத்தின் அரசியல் அமைதியைப் பெரிதும் குலைத்தது. மாலிக்காபூரின் படையெடுப்பு தென்னகத்தின் அரசியல் அமைதியைப் பெரிதும் குலைத்தது. மாலிக்காபூரின் ஆட்சியிலும் அவனுக்குப் பின்வந்தோரின் பிடியிலும் ஐம்பதாண்டு காலம் மதுரை சிக்கியிருந்தது. பின் விஜயநகரப்பேரரசின் தோற்றம் தமிழகத்தில் நாயக்க மன்னர்களின் ஆட்சியை ஏற்படுத்தியது தஞ்சையும் மதுரையும் நாயக்கர்களின் கீழ் வந்தன. இக்காலத்தில்தான் தமிழகத்தில் கலை, இலக்கியம் முதலியன மீண்டும் மெல்லத் தலைதூக்கின. அதன்பின் தஞ்சை மராட்டியர்கைக்கு மாறியது. கருநாடக நவாபு தமிழகத்தின் [illegible] பகுதியைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினான். எங்கும் போராட்டங்களும் போர்களும்

நடைபெற்றன. நாட்டில் அமைதியான சூழலே நிலவவில்லை. தமிழகம் பாளையப்பட்டுகளாகச் சிதைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடந்தது. வேற்றவர் கலை, நாடகம், இலக்கியம் முதலிய மரபுகளும் தெலுங்கிசையும் தமிழகத்தில் வேரூன்றின. தமிழர்களின் செல்வாக்குப் பல துறைகளிலும் அடிபட்டது. இந்தச் சூழலில் 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தில் கம்பர், சேக்கிழார் போன்ற பெரும் புலவர்களும் பேரிலக்கியங்களும் தோன்றவியலாது போயிற்று.

நாயக்க மன்னர்கள் சமய நூல்களுக்கும் சமயக் கலைகளுக்கும் இலக்கியங்களுக்கும் மதிப்புத் தந்து வளர்த்து வந்த காரணத்தால் அவ்வப்போது சமயச் சான்றோர்கள் தோன்றிச் சிறந்த நூல்களை இயற்றினர் சிறுசிறுநூல்கள் பிரபந்தங்கள் என்னும் பெயரில் தோன்றி வளர்ந்தன. சமய நூல்களுக்கு விரிவான விளக்கங்கள் எழுதினர். சமயத்தைக் காக்கும் மடங்கள் தோன்றின. அந்த மடங்களை ஒட்டிப் புலவர் சிலர் சமயத்தையும், தமிழையும் ஓரளவு வளர்த்து வந்தனர். சொல்லை வைத்து விளையாடும் விளையாட்டு புலவர்களைக் கவர்ந்தது. புலவர்கள் சிலர் ஆங்காங்கே இருந்த செல்வர்களையும், சிற்றரசர்களையும் மகிழ்விக்க அவர்கள் மீது சிறுசிறு நூல்கள் பாடினர்.

இப்படிப்பட்ட சூழலில்தான் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தலபுராணங்கள் தோன்றிக் கிளைத்துப் பல்கிப் பெருகின. வள்ளல்களைப் புகழ்ந்து பாடுவதுபோல் ஓரளவு புகழ்வாய்ந்த தலங்கள் அனைத்தையும் பற்றித் தலபுராணம் எழுதுவதை இக்காலத்துப் புலவர்கள் பெருவழக்காகக் கொண்டனர். ஒரே ஊருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலபுராணங்கள் தோன்றியதும் உண்டு.

14-ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவம் கோவில் புராணம் என்னும் தலபுராணம் பாடினார். இதுவே தலபுராணங்களுள் முதலாவதாகக் கருதப்படுகின்றது. அதற்குப்பிறகு அதனையொட்டிப் பல தலபுராணங்கள் எழுந்தன. தலபுராணங்களுள் புகழ்பெற்றவை மதுரையில் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறும் பரஞ்சோதி திருவிளையாடல், காஞ்சிப்புராணம், தணிகை புராணம், பேரூர் புராணம், சேது புராணம், குற்றாலப் புராணம் ஆகிய புராணங்களே இவற்றுள் பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடல் புராணமே இன்று பெரிதும் போற்றப்பட்டு வருகிறது

தருமபுர மடத்தைச் சார்ந்த புலவர்கள் திருமழபாடி திருவொற்றியூர் முதலான தலங்களுக்குப் புராணங்கள் பாடினர். நிரம்பவழகிய தேசிகர் திருப்பரங்கிரிப் புராணம், சேது புராணம் என்னும் புராணங்களைப் பாடினார் அதிவீரராமபாண்டியர் வடநாட்டுத் தலமாகிய காசியைப் பற்றிக் காசிக்கண்டம் என்னும் தலபுராணத்தைப் பாடினார். திருமலைநாதர் சிதம்பரப் புராணமும், கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணமும், சிவப்பிரகாசர் திருக்கூவப் புராணமும், சீகாளத்திப் புராணமும், வீரராகவ முதலியார் திருக்கழுக்குன்றப் புராணமும், எல்லப்ப நாவலர் திருவண்ணாமலை, திருவெண்காடு, திருவிரிஞ்சை, தீர்த்தகிரி, திருச்செங்காட்டங்குடி, என்னும் தலங்கள் மீது தலபுராணங்களும், ஞானப்பிரகாசர் திருவொற்றியூர்ப் புராணமும்,ஞானக்கூத்தர் திருவாரூர்ப் புராணமும் பாடியருளினர். இப்பெருமக்களால் பாடப்பெற்ற தலங்கள் நீங்கலாக எண்ணற்ற தல்புராணங்கள் தமிழில் தோன்றின.

சில தல புராணங்களில் காணப்படும் நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியன இலக்கியச் சுவையுடையன. நிலவளம், நீர்வளம், இயற்கை அழகு முதலியன பற்றித்

தமது கற்பனைகளைக், கனவுகளை அழகுறப் பாடினர். அவ்வப் பகுதி மக்கள் இவ்வருணனைகளால் மனமகிழ்ச்சியுற்றனர். கொடியவர்களும் அதிகாரச்செருக்கு மிக்கவர்களும் துன்புற்று மனம் திருந்தி அவ்வக் கோயிலுக்கு வந்து வழிபட்டுத் துயர் தீர்ந்ததாகத் தலபுராணங்கள் சொல்வது வழக்கம். இந்திரன் முதலான தேவர்களும் தாம் பெற்ற சாபம் நீங்குவதற்காகவும் பாபம் தீர்வதற்காகவும் அவ்வூர்க் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்ததாகவும் அதற்குப் பிறகே கடவுளின் அருள் பெற்றுக் கடைத்தேறியதாகவும் கதைகள் புனையப்பட்டன. அந்தந்த ஊரையடுத்த மலை, ஆறு முதலியன வெகுவாக வருணிக்கப்பட்டன. இதனால் அவ்வப்பகுதி மக்கள் பெருமையும், மகிழ்ச்சியும் உற்றனர். இதனால் எந்த ஒரு குறிப்பிடத்தக்க தலத்துக்கும் தலபுராணம் இல்லையெனில் அஃது ஒரு குறையாகக் கருதப்பட்டது. இவ்வாறு தலபுராணம் என்னும் இலக்கிய வகை தமிழில் பெருகி வளரலாயிற்று.

திருவாப்பனூர்ப் புராணம் என்னும் இந்நூல் மதுரையில் வையை வடகரையில் உள்ள சிவத்தலத்தைப் பற்றியதாகும் இத்தலம் தற்போது திருவாப்புடையார் கோவில் என்னும் பெயரில் வழங்கப்படுகிறது. இக்கோவில் அமைந்துள்ள பகுதி தற்போது செல்லூர் என்று வழங்கப்படுகிறது. ஞானசம்பந்தரின் பாடல் பெற்ற இத்தலம் மிகப் பழமையானது என்பதில் ஐயமில்லை.

"*அந்தண் புனல்வையை யணியாப்ப னூர்மேய*
*சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை*
*நந்தீ யடிபரவு நல்ஞான சம்பந்தன்*
*சந்த மிவைவல்லார் தடுமாற் றறுப்பாரே*" என்பது சம்பந்தர் தேவாரப் பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடலாகும். இத்தலத்து இறைவன் ஆப்பனூரீசன்

என்றும், அன்னை குரவங் கமழ் குழலாள் என்றும் இந்நூல் குறிக்கிறது. சம்பந்தரும் இப்பெயரிலேயே குறிக்கிறார்.

*"குரவங் கமழ்குழலாள் குடிகொண்டு*
*நின்றுவிண்ணோர்*
*விரவும் திருமேனி விளங்கும் வளையெயிற்றின்*
*அரவம் அணிந்தானை அணியாப் பனூரானைப்*
*பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே."*

(ஆப்பனூர்ப்பதிகம் - 2)

இத்தலத்துத் தீர்த்தம் இடப தீர்த்தம் எனக் குறிக்கப்படுகிறது. சோழாந்தகப் பாண்டியனால் முளை வடிவாய்க் கண்டறியப்பட்ட ஆப்பனூரீசன் பின்னா சைவ வேதியனுடன் தற்போதைய தலத்திற்கு வரும்பொழுது அவனுக்கு வழிகாட்டி வந்த நந்தியம்பெருமானின் பெயரால் இத்தீர்த்தம் வழங்கப்படுவது இடபுரச் சருக்கத்தால் அறிகிறோம்.

திருவாப்புடையார் கோவில் என்று இன்று வழங்கப்பெறும் இக்கோவிலின் இறைவன் முதன்முதலில் சோழாந்தகப் பாண்டியனால் ஆப்பு வடிவத்தில் காணப் பெற்றுப் பின் அவன் மகன் சுகுணனால் கோவில் திருப்பணி செய்யப்பெறறது என்னும் செய்தி

*"தெண்ணிலவின் வழித்தோன்றிச் சயம்புதெரி*
*சனவிரத சீலமேற் கொண்*
*டெண்ணில்மறை வித்தனையோர் முளையிடங்கண்*
*டிடபுரத் திறையோன் கோயில்*
*உண்ணிலவு மானமுதற் றிருப்பணிசெய்*
*சுகுணனையீன் றுலகங் காத்த*

*தண்ணளிவெண் குடைச்செங்கோல் வழுதிசோ*
*ழாந்தகன்றாள் தலைமேல் கொள்வாம்.''*

(வாழ்த்து - 16)

என்னும் வாழ்த்துப் பாடலாலும் ஆப்பனூர்ச் சருக்கம், இடபபுரச் சருக்கம், அன்ன வினோதச் சருக்கம் என்னும் சருக்கங்களாலும் தெரிய வருகிறது.

இந்நூலை இயற்றியவர் மதுரையை அடுத்த திருப்பூவனம் என்னும் ஊரைச் சார்ந்த கந்தசாமிக் கவிஞர் ஆவார். இந்நூலின் பாயிரத்தில் இச்செய்தி அறியக் கிடைக்கிறது.

*'' கனியினைப் பிழிந்து செந்தேன்*
*கண்டென ஆப்ப னூர்நம்*
*பனிமதி மிலைந்த நாதன்*
*பன்னரும் புராணந் தன்னைப்*
*புனிதன்மெய்க் கந்த சாமிக்*
*கவிஞன்பூ வனத்தான் பார்மேல்*
*இனிதெனப் புலவர் கூற*
*இன்றமிழ்ப் புணர்த்தி னானே''* (பாயிரம் - 3.)

என்பது பாடல். இவர் வரலாறு பற்றிய அகச்சான்று இந்நூலில் கிடைக்கவில்லை. எனினும் இவர் இயற்றிய பிறநூல்களில் இவரைப் பற்றிய சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

இவர் திருப்பூவனத்துப் பிறந்தவராகலில் திருப்பூவனம் கந்தசாமிக் கவிஞர் என்றே அழைக்கப் பெற்றார். இனிய சந்தங்களில் தமிழ்ப் பாடல்கள் பாட வல்ல இவர் தாம் பிறந்த ஊரான திருப்பூவனத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பிரான் மீது

உலா, புராணம், வண்ணம் முதலிய நூல்களும் திருவாப்பனூர்ப் புராணமும் பாடினார். இவர் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவர். இவர் திருப்பூவணப் புராணம் என்னும் நூலை கி பி, 1621-ஆம் ஆண்டு பாடினார் என்னும் குறிப்பு,

*" தருமுலகிற் சகத்தமா யிரத்தைந் நூறு*
*தங்குநாற்பான் மூன்றுதந்த வாண்டிற்*
*பொருவருநற் புலவோர்சொற் புலமை காட்டப்*
*புட்பவனப் புராணமெனப் புகல லுற்றேன்"* என்று

கூறும் திருபூவனப் புராணப் பாயிரத்தில் கிடைக்கிறது. எனவே, இந்நூல் செய்யப்பட்ட காலம் மேலே குறிப்பிட்டவாறு (சகம் 1543) கி பி 1621 ஆகும். இந்நூலுக்குப்பின் இவர் திருவாப்பனூர்ப் புராணம் பாடியிருக்கலாம்.

இவரை ஆதரித்த வள்ளல் சிவகங்கை ஜமீன்தார் முத்துவடுகநாத துரை ஆவார் எனத் தெரிகிறது. இவரை ஆதரித்த மற்றொரு வள்ளல் சீதக்காதி ஆவார். சீதக்காதி நொண்டி நாடகத்தில்,

*" சந்தமுத் தமிழ்தோறும் கல்வித்*
*தலைவர் மகிழ்உமறுப் புலவருடன்*
*செந்தமிழ்க் கந்தசாமிப் புலவனும்*
*சீராட் டெனத்தமிழ்ப் பாராட்டவே."*

(சீதக்காதி நொண்டி : 185)

என்று காணப்படுகிறது. சீதக்காதி கி.பி. 1682 வரை வாழ்ந்தவர். படிக்காசுப் புலவர் காலத்தில் இறந்தவர். இச்செய்திகளால் கந்தசாமிக் கவிஞர் நீண்ட காலம் வாழ்ந்திருந்தாராதல் வேண்டும் எனத் தோன்றுகிறது. இவர் காலத்தில் வாழ்ந்திருந்த பிற புலவர் பெருமக்கள் சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவரும் சீதக்காதி

நொண்டி நாடக ஆசிரியரும் (பெயர் இன்னதென்று தெரியவில்லை) ஆவர் எனத் தெரிகிறது.

இவர் பாடிய பிற நூல்களுள் திருப்பூவனப் புராணம், புட்பவனநாதர்வண்ணம், திருப்பூவனநாதர் உலா என்பன குறிப்பிடத்தக்கவை. இவையன்றித் திருப்பூவனத் தலவகுப்பு, தீர்த்த வகுப்பு, மூர்த்தி வகுப்பு முதலாய நூல்களும் பாடினார் எனத்தெரிகிறது. அவை எங்கும் தற்போது கிடைப்பதாகத் தெரியவில்லை.

திருவாப்பனூர்ப் புராணம் என்னும் இந்நூல் திருவாப்பனூர் மான்மியம் என்றும் குறிக்கப்படுதல் உண்டு. இந்நூலைப் பாடுவித்தோர் பற்றிக் குறிப்பிடுகையில்,

*" மறைமுழுதும் அளப்பரிய ஆப்பனூர்*
*உடையபிரான் மான்மி யஞ்சிற்*
*றறிவுடைய யானளக்குந் தரத்ததோ?*
*அத்தலத்தின் ஆதி சைவர்*
*இறைகுலசே கரவழுதி நாமநம்பி*
*மரபுதித்தோ ரின்னூல் தென்னூல்*
*துறைமுறையி னியற்றெனவச் சொல்மறுக்க*
*மாட்டாமைத் தொடங்கி னேனால்."* (பாயிரம்-1)

என்று குலசேகர வழுதி நம்பி என்னும் ஆதிசைவர் மரபில் வந்தவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்நூலைச் செய்ததாகக் குறிப்பிடுகிறார்.

புராணம் என்பது தொல்காப்பியரால்,

*" அம்மை அழகு தொன்மை தோலே*
*விருந்தே இயைபே புலனே இழைபெனப்*
*பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ."*

(தொல் : செய். 1)

எனக் கூறப்பெறும் எண்வகை வனப்பு நூல்களுள் தொன்மை என்னும் வனப்பு நூலே பிற்காலத்தில் புராணங்கள் எனக் கூறப்படுகின்றன. தொன்மை எனினும் புராணம் எனினும் ஒன்றே. மேலும் தொன்மை என்னும் வனப்பியலுக்கு ஆசிரியர் தொல்காப்பியர் சிறப்பிலக்கணம் கூறுங்கால்,

"*தொன்மை தானே*
*உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.*"
(தொல். செய்.: 237

என்பார். இதற்கு உரை கூறிய பேராசிரியர் "*தொன்மை என்பது உரைவிராஅய்ப் பழமைய வாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது*" என்று கூறுவார். இதன்படி இந்நூல் அமைந்து பழமையான கதையைச் சொல்வதாக இருப்பதைக் காணலாம்.

அடியார்களுக்கு அருள்புரியும் முகமாக மதுரையம்பதியில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்த ஈசனார் மதுரை வையை வடகரையில் உள்ள திருவாப்பனூர் என்னும் திருத்தலத்தில் (தற்போது மதுரையின ஒரு பகுதி) புரிந்த அருள்விளையாட்டினைப் பற்றிக் கூறுவந்த திருவாப்பனூர்ப் புராணம் என்னும் இப்புராணமாகும்.

புராணம் என்னும் சொல் வடமொழியில் ஒருவகை இலக்கியத்திற்குப் பெயர். வடமொழியில் புராணங்கள் பதினெட்டு எனத் தொகுத்துக் கூறுவர். அதனை இந்நூலாசிரியர் சூதரை வினாய காதையில் "*கேள்வியுறும் பதினெண் புராணப் பெருங்கடற் கரையே*" (சூ. வி. காதை 8) என்று நைமிசாரணியத்து முனிவர்கள் சூத முனிவரை நோக்கிக் கூறுவதாக அமைத்துள்ளமையும் காணலாம்.

இந்நூல் இயற்றிய ஆசிரியர் வடநூலார் புராணம் கூறும் மரபு பற்றியே இத்திருவாப்பனூர்ப் புராணத்-திற்கும் வரலாறு கூறியுள்ளார்.

இந்நூலாசிரியரும் பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய சைவத்தின் திருத்தலக் காண்டத்திற்கேற்-பட்ட பதினோராவது புராணத்தில் உருத்திரசங்கிதையில் கூறப்பட்டுள்ள கதையைக் கூறுவதாகக் கூறிச் சூதமுனிவன் கதையைத் தொடங்குவதாகக் குறிப்பிட்-டுள்ளார்.

*" சாற்றிய புராண மோராறு மூன்றுஞ்*
*சைவத்திற் சேத்திர காண்டத்*
*தேற்றிய வேகா தசவுருத் திரசங்*
*கிதையினி லீறிலா னருளால்*
*தோற்றிய விடப புரியின்மான் மியத்தைச்*
*சொற்சுவை பொருட்சுவை தோன்ற*
*ஆற்றிய தவத்தீர் சொல்லுகேன் உலகம்*
*அறம்பொருள் இன்பம்வீ டடைய"*

(சூத. வி. காதை. 12)

என்னும் பாடலில் இச்செய்தியைக் காணலாம். மேலும் இக்கதை முன்பு திருக்கைலாயத்தில் கந்தவேள் நந்தி-தேவனுக்குச் சொல்ல, நந்திதேவனிடம் கேட்ட வியாசன் தன் மாணாக்கன் சூதமுனிக்கு உரைத்தது என்று மூர்த்தி மகிமை முதற்பாடலில் இந்நூலாசிரியர் கூறுகிறார்.

இந்நூல் கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம் ஆகிய பகுதிகளுடன் நைமிசாரணிய வருணனை, சூதரை வினாய காதை, மூர்த்தி மகிமை, ஆப்பனூர்ச் சருக்கம், இடவபுரச் சருக்கம், அன்னவினோதச் சருக்கம், சந்திர-சேனச் சருக்கம், பாட்களச் சருக்கம், குபேரச் சருக்கம், சுதரிசனச் சருக்கம், அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் என்னும் பதினோரு பகுதிகளைக் கொண்டது.

மொத்தம் 515 விருத்தங்களைக் கொண்டுள்ளது. ஆனால் ஆசிரியர் பாயிரத்தில் எட்டுச் சருக்கங்களும் 514 விருத்தங்களும் கொண்டதாகக் குறித்துள்ளார்.

*"நற்கடவுள் வணக்கம்பா யிரஞ்சொலவை யடக்க*
*நயமிசா ரணியவரு ணைசூதர் காதை*
*பொற்கமலச் சடைமூர்த்தி யாபனூர் இடப*
*புரமனவி னோதஞ்சந் திரசேனன் நூலிற்*
*தர்க்கமுணர் பாட்களஞ்மெய்க் குபேரனொடு சுதரி*
*சனனரிச்சந் திரனிராச் சருக்கமோ ரெட்டாய்க்*
*கற்கநிறை விருத்தயாப் பைந்நூற்றி ரேழிற்*
*கவிஞரவை முறுவலிப்பக் கழறுதலுற் றேனால்.*

(பாயிரம் - 2)

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடியில் அன்னவினோதச் சருக்கம் 43-ஆவது பாடல் விடுபட்டுள்ளது இஃது ஏடெடுத்து எழுதுவோர் தவறுதலாக விட்டது எனக் கருதலாம் இதைப் பாடலுக்கு எண்ணிட்டுள்ள முறையால் அறிய முடிகிறது. "*பானுமுற்பட*" எனத் தொடங்கும் 43-ஆவது பாடல் விடப்பட்டு, "*நந்தீ தீர்த்தத்தின்*" என்னும் அடுத்த பாடலுக்கு 43 என்ற எண்ணும், "*கிருதமாலையி னர்புக*" எனத் தொடங்கும் அடுத்த பாடலுக்கு 44-என்ற எண்ணும், இன்பமுற்றடியவர் எனத்தொடங்கும் அடுத்த பாடலுக்கு 46-என்ற எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எண் கொடுத்துள்ள முறையால் ஏடெடுத்து எழுதுவோர் தவறுதலாகப் பாடலை எழுதவிட்டது தெரிய வருகிறது. விடப்பட்டுள்ள இப்பாடல் பழைய பதிப்பு ஒன்றில் (தாது ஆண்டு மாசி மாதம்) 43-ஆவது பாடலாகக் காணப்படுகிறது. எனவே, இப்பாடல் இடைச்செருகல் எனக்கொள்ளாது தவறுதலாக விடப்பட்டது எனக்கொண்டு இப்பதிப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது. இனி இந்நூலில் கூறப்பட்டுள்ள பொருள் பற்றிக் காணலாம்.

# கடவுள் வணக்கம்

எடுத்துக்கொண்ட இலக்கண இலக்கியம் இடுக்கண் இன்றி இனிது முடிதற்கு வழிபடுதெய்வம் வணக்கம் கூறல் மரபு. அம்மரபுப்படி கடவுள் வாழ்த்து என்னும் பகுதியொடு நூல் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தின் தொடக்கத்தில் காப்புச் செய்யுளில் விநாயகரை வணங்கும்பொழுது அரி அயன் ஆகியோரினும் சிவனே பெரிய கடவுள் என்ற குறிப்பை வைக்கத் தவறவில்லை. திருமாலின் மகனாகிய பிரமன் பரவும் வேதத்தின் பொருளானவன் எனச் சிவபெருமானைக் குறிக்கிறார் ஆசிரியர். பின்னர் நூற்பயனைக் குறித்து தலமூர்த்தியான திருவாப்புடையாரையும் குரவங் கமழ் குழலாளையும் வணங்கி, சபாபதி, துர்க்கை, விநாயகர், சுப்பிரமணியர், நந்திதேவர், கலைமகள், சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரை வணங்கிப் பின் இத்தலத்து இறைவனை ஆப்பு வடிவில் கண்டறிந்து வழிபட்ட சோழாந்தக பாண்டியன், இறைவனுக்கு மணற்சோறட்டுப் பூசித்து வந்த சைவவேதியன், சண்டீசர் ஆகியோரை முறையே வாழ்த்துகிறார்.

## பாயிரம், அவையடக்கம்.

பாயிரம் என்னும் இப்பகுதியில் முதற்பாடலில் ஆப்பனூர் உடைய பிரான்றன் மான்மியம் கூறுவதாகக் குறித்து, இந்நூலைப் பாண்டியன் குலசேகர வழுதியின் வழிவந்தோர் கேட்டுக்கொண்டதற்கிணங்கத் தொடங்கியதாகக் குறித்துள்ளார். அடுத்த பாடலில் நூலின் சருக்கங்களைக் கூறி மூன்றாம் பாடலாகிய தற்சிறப்புப் பாயிரத்தில் தன் பெயரைத் திருப்பூவணத்துக் கந்தசாமிக் கவிஞர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவையடக்கப் பாடலில் மணற்சோற்றை இறைவன் உவந்து ஏற்றுக்கொண்டது போல் மணற்சோறொத்த தன் நூலையும் சிறப்பாகக் கொண்டருளுமாறு கேட்டுக்-கொள்கிறார்.

## நைமிசாரணிய வருணனை

கதை சொல்லப்படுவதாகக் குறிக்கப்படும் இடமான நைமிசாரணியத்தின் வருணனையை இப்பகுதியில் கூறுகிறார் நைமிசவனத்தைத் தவ முனிவர்கள் மாதவப் பயிர் விளைக்கும் விளைநிலமாகக் குறிக்கிறார்.

*வேத வித்தெனு மருந்தவ வுழவர்கள் மிடைந்து*
*தீத கற்றுநன் காலமோர்ந் துறுபுலன் திருத்தி*
*ஆதி பத்திமை வித்தியா னந்தநீர்ப் பாய்ச்ச*
*மாத வப்பயிர் விளைநில நைமிச வனமே.*

(நைமிச. 2)

என்னும் பாடலில் பயனுள்ள சிலேடை கற்றின்புறத் தக்கது இதேபோன்று சிலேடைப் பொருளில் அமைந்த மற்றொரு பாடலில் மரங்களும் முனிவர்கள் போன்று தவம் செய்வதாகக் குறிப்பிடுகிறார். கரிய வண்டாகிய உருத்திராக்கமணிந்து மலராகிய முகம் தேனாகிய கண்ணீரால் நனைய ஆகாயத்தில் கிளைகளாகிய கைகளைப் பரப்பி மகரந்தமாகிய பொடியணிந்து தன் ஒருகாலால் நின்று தவம் செய்வதாகக் காட்டுகிறார்.

*கரிய வணடெனுங் கண்டிபூண் டலர்முகம் கண்ணீர்*
*வரநனைந்துமா கமண்டலங் கையுற வாய்ந்து*
*பரவு பூம்பொடி யணிந்தொரு தாணின்று பன்னாள்*
*மரனு மெய்த்தவம் புரிவது நைமிச வனமே.*

(நைமிச. 5)

என்பது பாடல்.

பிறிதொரு பாடலில் இந்த நைமிச வனத்தில் முனிவர்கள் இயற்றும் யாகத்தின் அவியுணவை ஏற்க வந்த பிரமனுடன் வந்த அவன் வாகனமாகிய அன்னம் இங்கேயே தங்கி வேதங்களைப் பயின்று நாளும் ஓதிக் கொண்டிருக்க அவை தவறுமிடங்களை இங்கு வாழும் கிளிகள் திருத்திச் சரி செய்வதாகக் காட்டுகிறார்.

## சூதரை வினாய காதை

நைமிச அருந்தவ வனத்தில் ஒரு நாள் சூதமுனி வர, அம்முனிவனை வரவேற்றுத் தங்களுக்கு ஏதேனும் ஒரு புராணக்கதை கூற வேண்டுவதாகவும் அதற்கு முனிவன் கதை கூறுவதாகவும் அமைவது மரபு. அம்மரபுப்படி இந்நூலிலும் சூதமுனிவர் நைமிசவனத்திற்குவருவதாகக் காட்டுகிறார் ஆசிரியர். அம்முனிவனைப் பற்றிக் கூறுங்கால், கனல் தளிர்த்தனைய மேனியை உடையவனும், விடைக்கடவுளின் நீறணிந்தவனும், என்றும் சிவபுராணம் எனும் அமுத ஊற்றூறு நாவினனும் ஆனவன் எனக் குறிப்பிடுகிறார். சூதமுனிவனை நைமிச-வன முனிவர்கள் வரவேற்றுப் பணிந்து ஆசனத்தில் அமரச்செய்து

*பண்டுநீ எமக்கு முக்கட் பரனுறை தலங்கள் மேன்மை*
*விண்டுமற் றவற்றுள் யாதோ விசிட்டமென் றகத்துள் மோகம்*
*கொண்டுழல் கின்ற மேகக் குவையிருட் புலரச் சோதி*
*உண்டுமிழ் கதிர்போ லின்னு மோர்தல முரைக்க வேண்டும்.*

**(சூதரை. வி. காதை. 9)**

என வேண்டிக்கொள்ள அதைக் கேட்ட சூதமுனிவன் பதினெண் புராணங்களுள் சைவ சேத்திர காண்டம்

கூறும் பதினோராவது புராணத்தில் உருத்திர சங்கிதையில் கூறப்பட்டுள்ள இடபபுரியின் பெருமைகளைக் கூறுவதாகக் கூறிப் புராணம் தொடங்குகிறார்.

## மூர்த்தி மகிமை

இப்பகுதியில் ஆப்பனூரீசன் எழுந்தருளியுள்ள தலத்தின் பெருமையும் எழிலும், அஃது அடியார்க்கு அருள் நல்கும் சிறப்பும் கூறப்படுகிறது. மேலும் இப்பகுதியின் தொடக்கத்தில் இப்புராணம் முதலாவதாகக் கைலாயத்தில் கந்தவேள் நந்திநாதனுக்கு உரைப்பப் பின்னர் நந்தி வியாசனுக்குக் கூற, வியாசன் சூதனுக்குக் கூறியதாகப் பரம்பரை சொல்லப்பட்டுள்ளது

*இந்த மாக்கதை முன்னைநாட் கயிலையி னிடத்தில்*
*கந்த வேணந்தி நாதனுக் குரைப்பவக் கதைகேட்*
*டெந்தை யென்குரு வியாதன்மற் றெனக்குரை*
*செய்தான்*
*அந்த வாறுரை செய்தும்நீ ரசைவரக் கேண்மின்.*

(மூர்த்தி மகிமை - 1)

என்பது பாடல் மற்றொரு பாடலில் இடபபுரம் அமைந்துள்ள இடத்தை எல்லையிட்டுக் காட்டுகிறார்.

*முத்த ருக்கருள் ஆலவாய்ச் சுந்தர மூர்த்திக்*
*குத்த ரத்தொரு கூவிளி யெல்லையின் விடையி*
*னத்தி ரிக்குமோ ரோசனை நிருதிக் கன்று*
*தத்து நீர்வையை வடகரை இருக்குமோர் தானம்.*

(மூர்த்தி மகிமை - 3)

என்று கூறிப் பின் இறுதியாக ஆப்புடையீசன் பெருமையைக் கூறிவந்தவர் இறுதியாக,

*ஆப்புடை யமலன் மகிமையை யனந்தற்*
*கனந்தம்வாய் படைப்பினும் நவிற்ற*

*நாப்புடை பெயரா வெனினொரு வாயால்*
*நவிற்றுதற் கொண்ணுமோ ...*

(மூர்த்தி மகிமை - 19)

என்றுரைத்து முடிக்கிறார்.

## ஆப்பனூர்ச் சருக்கம்

இப்பகுதியில் பாண்டியன் சோழாந்தகன் வேட்டைக்குச் சென்றவிடத்து இறைவனை ஆப்பு வடிவில் கண்டதும் ஆப்புடைப்பிரானுக்குக் கோயில் அமைத்து அந்நகருக்கு ஆப்பனூர் எனப் பெயரிட்டதும் பின்னர்த் தன் இறுதிக் காலத்து ஆப்பனூர் வதியும் இறைவனை வழிபட்டு வாழ்ந்தமையும் கூறப்படுகிறது.

இச்சருக்கத்தின் தொடக்கத்தில் மதுரை மாநகரின் பொருட்செல்வமும் அருட்செல்வமும் மக்களின் இன்ப வாழ்வும் அழகுறக் காட்டப்படுகின்றன. உண்மைச்சுயம்பு லிங்கம் காணாது தனது சிவவிரதத்திற்குக்கேடு ஏற்பட்டது குறித்து வருந்திய சோழாந்தகன் பசிமுளைத்த குடலினைக் கொய்யவோ உண்மையும் பொய்யும் பிரித்துணரா நெஞ்சைப் பிளக்கவோ சரியாகக் கண்டறியாக் கண்ணினை வாள்கொண்டு ஈர்க்கவோ என்றும் இதையெல்லாம் செய்யாது உயிர் வாழ்ந்திருக்கும் தன் பொய்யான அன்பைக் கண்டு மெய்யடியார் நகைப்பரே என்றும் வருந்துவது தவக்கோலத்தில் இராமனைக் கண்ட குகன் ' இராமனை இக்கோலத்தில் கண்டும் என் கண்களை ஈர்ந்திலாக் கள்வன் யான் ' எனக் கூறி வருந்தும் காட்சியை நினைவுபடுத்துகிறது.

யாக்கை நிலையாமையைக் கூறவந்தவர்

*புன்னுனிப் பனியைக் கானற்*
*புனலினைப் புனற்கோ லத்தை*
*யன்னநீர்க் குமிழி யைநீ*

*ரருந்திய கமஞ்சூழ் வானை*
*யின்னவா னகத்தில் தோன்றும்*
*இந்திர சிலையை யேயும்*
*மின்னுடற் பொறையை நம்பி*
*விரதத்தை விடுகி லேன் யான்*

( ஆப்ப சருக்கம் 38 )

எனப் புல்நுனிப் பனி, கானல் நீர், நீர்க்கோலம், நீர்க்குமிழ், வானத்து மேகம், இந்திரவில், மின்னல் ஆகியன போன்றது இவ்வுடல் எனக் கூறுகிறார். இறைவனைக் கொன்றை மர நிழலில் ஆப்புருவில் கண்டறிந்த சோழாந்தகன்

*" எவ்வுருவில் யாரொருவர் இயைந்துள்கு வாருளத்தில்*
*அவ்வுருவ தாய்த்தோன்றி அருள்கொடுக்கும்*
*புண்ணியனென்*
*றெவ்வுலகும் துணிபொருள் "*

( ஆப் சருக்கம் 67 )

என்று பரவுகிறான். இது சைவ சித்தாந்தத்தை விளக்கும் பதினான்கு சாத்திர நூல்களுள் ஒன்றான சிவஞான சித்தியாரில் கூறப்பட்டுள்ள

*"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே*
*மாதொரு பாகனார்தம் வருவர் "*

( சிவ.சித் 2 : 25 )

என்னும் கருத்தை எதிரொலிக்கிறது.

## 2 இடவபுரச் சருக்கம்

இப்பகுதியில் ஆப்பனூரீசன் ஆப்பனூரினின்றும் நீங்கி மதுரை நகரில் வையை வடகரையில் வந்து எழுந் தருளிய வரலாறும் அப்பகுதிக்கு இடவபுரம் என்ற

பெயரும் அங்குள்ள தீர்த்தத்திற்கு இடபதீர்த்தம் என்ற பெயரும் ஏற்பட்ட வகையைக் கூறுகிறது.

பாண்டி நாட்டின் வளத்தைக் கூறும் ஆசிரியர் அங்கு மழைவளம் சிறந்திருப்பதைக் கூறுங்கால்

*வீறாநி லத்தேவர் தீரிகால*
*கருமத்தின் விலகாரதின்*
*மாறாத செந்தீவ ளர்த்தெங்கும்*
*விண்மாரி வருவிப்பர்வன்*
*பாறாடும் வேண்மன்னர் முதன்மூன்று*
*வருணத்தர் பல்கிப்பெறும்*
*பேறான தங்கன்மம் வழுவாத*
*நெறிநிற்பர் பின்றார்களால்*

(இடவ சரு : 3)

என்றும்

*மாரிக்கு வித்தன்ன மடமாதர்*
*கற்போங்கி மல்கும்பெருந்*
*தூரிக்கு முதலான பைங்கூழ்நி*
*லந்தான்சு ரந்தேவளம்*
*பாரிக்கும்......*

(இடவ சரு : 4)

என்றும் உள்ள பாடலின் மூலம் அரசன் தன் கடமை தவறாது நீதிநெறியில் ஆட்சிசெய்ய, வேதியர் முக்காலத்தும் தம் கருமம் வழுவாது தீ வளர்த்து வழிபட, மகளிர் கற்பு நெறியில் விளங்க எங்கும் மழை பொழிந்து வளம் நிறைந்தது என்று கூறுகிறார். இதையே விவேக சிந்தாமணியின்

" வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே "

(விவேக சிந் : 24)

என்னும் பாடலும் கூறுகிறது. மேலும்

" மாரிக்கு வித்தன்ன மடதாதர் கற்போங்கி "

என்னும் அடி

" தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை " (குறள் 55)

என்னும் வள்ளுவரின் வாக்கை வலியுறுத்தி நிற்கிறது.

## 3. அன்னவினோதச் சருக்கம்

இச் சருக்கத்தில் இறைவனுக்கு அன்ன வினோதன் என்னும் திருநாமம் ஏற்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. இறைவனின் ஆணைப்படி இடவபுரம் அடைந்த சைவ வேதியன் இறைவனுக்குப் படைத்து வழிபடத் தன்னிடம் பொருள் ஏதும் இல்லையே என வருந்தி வேண்ட

" இப்பால் நீ வேண் டுறும் பொருளுக்
கிந்த வேக வதிமணலுன்
கைப்பால் வாரிக் கொடுவனைமட்
கலனிட் டறலிட் டுலையேற்றி
வெப்பார் காட்டத் தெரிமூட்டி
மெய்யன் புறுத்தி யடிலமுதாம்
தப்பா ததனை யெமக்குநிவே
தனம் செய் "

(அன்ன சரு 10)

என்று இறைவன் அருள் புரிந்தான். இதனால் இறைவனுக்கு அன்னவினோதன் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

நாடெங்கும் பஞ்சம் நிலவத் தமக்கு மட்டும் இனிய அமுது கிடைக்கும் வகையினைக் கூறும்படி வேதியனை அவன் மனைவி கேட்க அவன் கூற மறுத்தபோது அவள் சினம்கொண்ட வகையை அழகாகக் காட்டுகிறார்.

*கேட்டாள் மதிவாள் நுதற்குறுவேர்*
*கிளர்ந்தாள் புகைந்தாள் இதழ்துடித்தாள்*
*தீட்டா வேற்கண் கடைசிவந்தாள்*
*சிரித்தாள் புருவ மேனெரித்தாள்*
*நாட்டா மரைமென் முகம்புலர்ந்தாள்*
*நண்பா நன்று நன்றுசொல்லிக்*
*காட்டாய் எனிலியா னின்னேயுன்*
*கழற்கீழ் விடுவன் உயிரென்றாள்.*

(அன்ன சரு 18)

என்று கூறுகிறார். இதற்குமுன் அவன் கணவனை அணுகும்பொழுது அவளது எழிலினைக் கூறும் ஆசிரியர்

*காந்த னிடத்தி னவனிருகண்*
*களிப்பச் சிலம்பு புலம்பநறுஞ்*
*சாந்த மணிந்த தனந்ததும்பத்*
*ததும்ப நடந்து வரிக்குயிலும்*
*வாய்ந்த கிளியும் வாயடைப்ப*
*மதுரந் துளிப்ப மலைமுருக்கின்*
*சேந்த பவள மணிச்செவ்வாய்*
*திறந்தாள் திறந்தீங் கிவைகேட்பாள்*

(அன்ன வினோ. சரு 15)

எனக் கூறுகிறார். ஒரே பெண்ணின் முரண்பட்ட இருவேறு தோற்றத்தையும் அடுத்தடுத்துக் கூறும் அழகு கற்றின்புறத் தக்கதே.

## 4. சந்திரசேனச் சருக்கம்

இச்சருக்கத்தில் சந்திரசேனன் என்னும் அவந்தி மன்னன் இடபபுரம் வந்து இடபதீர்த்தத்தில் மூழ்கித் தன் பாவத்தைத் தீர்த்த கதை சொல்லப்படுகிறது. பிராமணனைக் கொன்றதால் வந்த பிரமபாவம் தீர அகத்தியரின் அறிவுரைப்படி இடபபுரம் வந்து இடப தீர்த்தத்தில் மூழ்கித் தன்பாவம் தீர்த்தான். அத்தோடு வைரவன் சிவபெருமானின் ஆணைப்படி பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றைக்கொய்து அவனை நான்முக னாக்கியபோது பிடித்த பிரம பாவத்தை இத்தீர்த்தத்தின் மகிமையால் போக்கினான் என்ற கதையும் அகத்தியர் மூலமாகச் சொல்லப்பட்டுள்ளது.

## 5. பாட்களச் சருக்கம்

இச்சருக்கத்திலும் முன்னதுபோல் இரண்டு வரலாறு கள் கூறப்பட்டுள்ளன. வேசையராசையால் தான் தேடிய பொருள் முழுவதும் தொலைத்தநன்றித் திருடவும் தலைப்பட்டுக் கால் குறைக்கப்பட்ட பாட்களன் என்பான் இந்த இடபதீர்த்தத்தில் மூழ்கி மீண்டும் கால் பெற்ற வரலாறும் கௌதம முனிவரிடம் பெற்ற சாபத் தால் ஆயிரம் யோனிகளைக் கொண்ட இந்திரன் இத்தலத்தில் மூழ்கி ஆயிரம் கண்ணாகப் பெற்றதுமான இருகதைகள் இப்பகுதியில் உள. எத்தகைய பாவியும் இறைவனை எவ்வாற்றானும் நினைத்து வழிபடின் அவன் துன்பம் தீர்ந்து உய்வது திண்ணம் என்னும் கருத்து இப்பகுதியில் புலப்படுகிறது. இந்திரன் ஆயிரம் கண்ணாகப் பெற்றபின் இறைவனுக்கு விழா எடுத்து வழிபட்டதைக் குறிப்பிடும்பொழுது

"*கண் கொடுத்த கடவுளையார் கருதாரம்மா*"

என்று கூறுவது நினைத்துமகிழ்தற்குரிய நயமான பகுதியாகும்.

கதைப்போக்கிலேயே பொருளாசை மிக்க மருத்துவரும் சோதிடரும் மக்களை ஏமாற்றிப் பொருள் சேர்க்கும் கயமையை இடித்துரைக்கும் வகையில்

*மண்ணின் முளைத்த புற்கொடிநீள்*
*மரத்து மூலம் இலைகாய் பூ*
*வண்ண நறுமென் கனிகிழங்கின்*
*மருவுங் குணங்கள் விதந்துரைத்தும்*
*எண்ணின் மருந்துண் டிறந்தவுயிர்*
*எழுப்பும் எனப்பண் டிதஞ்சொற்றும்*
*நண்ணும் பிணியை மிகவளர்த்து*
*நாளிற் றிணித்து நிதிகவரும்*

(பாட்களன்-10)

என்றும்

*அல்லல் புரியும் கேதுதிசைக்*
*கப்பால் பிருகு திசைநுமக்கு*
*மல்கும் பொழுது தனகனக*
*வத்து வாக னாபரணம்*
*புல்கும் குடைசா மரையாதி*
*பொருந்தும் எனவும் வறுமையிலாச்*
*செல்வ ரிடத்திற் சோதிடநூல்*
*தேற்றித் திரிந்தும் பொருள்கூட்டும்.*

(பாட்களன் - 11)

என்றும் கூறிப் பழித்துரைக்கின்றார்.

## குபேரச் சருக்கம்

இச்சருக்கத்தில் புண்ணியசேனன் எண்ணிதிக்கு அரசனாகவும் வடதிசைக் காவலனாகவும் ஆன வரலாறும் அவனுக்குக் குபேரன் என்னும் பெயர் ஏற்பட்ட விதமும் கூறப்பட்டுள்ளது, இத்துடன்

இறைவன் மலைமகளை மணந்தபோது பூவுலகைச் சமன்செய்ய அகத்தியர் தென்திசைக்கு ஏகிப் பொய்கை யில் அமர்ந்த செய்தியும் சுருங்கக் கூறப்பட்டுள்ளது.

சிவனும் சக்தியும் வேறல்ல என்னும் சைவசித்தாந்தக் கருத்து இப்பகுதியில் ஒரு பாடலில் கூறப்படுகிறது. இடபபுரேசனைச் சேர்ந்திருக்க இவன் என்ன தவம் செய்தாளோ எனக் குரவங்கமழ் குழலாளைப் பற்றி நினைக்க அவன் தன் கண்ணிழந்து வருந்தும் பொழுது

*எழுந்தயர் பவனைப் பெருந்தவச் சிறுவ*
*என்னினைந் தனையிவள் வலியாம்*
*மொழிந்திடற் கரிதால் ஆயினும் மொழிவேம்*
*முழுதுல கீன்றுகாத் தோம்பி*
*உழுந்துருள் பொழுதின் அழிப்பவள் இவளை*
*ஒழியவீங் கொருசெயல் எமக்கின்*
*றழுந்துய ரொழிதி எம்மில்வே றலளீ*
*தருமறைப் பொருளென அறிதீ.*

( குபேரச் சருக்கம்-34 )

என்றும்

*தேனுமின் சுவையும் பிரித்திடற் கரிதாம்*
*செயலென கலந்தக லாமல்*
*யானுமிங் கிவளும் இருப்பதிங் கிவளே*
*யாவர்க்கு மோருயிர்த் தாயால்*

(குபேரச் சருக்கம்-35)

என்றும் இறைவனே கூறுவதாக அமைத்து சக்தியும் சிவமும் ஒன்றே என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

## சுதரிசனச் சருக்கம்

இச்சருக்கத்தில் சுதரிசனர் என்னும் பெயரிய அன்பருக்கு இறைவன் அருள் செய்து நிகழ்த்திய திருவிளையாடல் கூறப்பட்டுள்ளது.

## அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்

இப்பகுதியில் அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் இத்தலத்திற்கு வந்து மறையோர்க்கு ஆயிரத்தெட்டு வீடமைத்துத் தேவையான இல்துணைப் பொருள்களும் உணவுப் பொருள்களும் கொடுத்துக் கோயிலுக்குப் பிராகாரமண்டபமும் கோபுரமும் அமைத்துக்கொடுத்த கதையும் கூறப்பட்டுள்ளது. அத்தோடு பிங்கலை என்னும் இடைக்குல மடந்தையின் மகன் சுந்தரம் என்னும் சிறுவனின் இறையன்பும் அதன் பயனும் இப்பகுதியில் உரோமசன் என்னும் முனிவன் வாயிலாகக் கூறப்பட்டுள்ளது.

இனி இந்நூலில் உள்ள அணி நலன்களும் வருணனைச் சிறப்புமாகிய பிற நயங்களையும் விரித்துரைக்கின் பெருகும் என அஞ்சி நூல் கற்போர் தாமே அவற்றைக் கற்றுணர்ந்து இன்புறும் வகையில் விடப்பட்டுள்ளது.

### இப்பதிப்பு பற்றி

இந்நூலைப் பதிப்பிக்கும் பணி தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தினரால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இனிய இலக்கியச் சுவையுடைய இந்நூலின் மூலம் மட்டுமே சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. ஓரளவு எளிமையான நடையினைக் கொண்டதாயினும் நூலாசிரியரின் பன்னூற் பயிற்சியும் ஆழ்ந்த இலக்கிய அறிவும் சொல்லாட்சித் திறனும் சிறப்பாக உள்ளன.

இவ்வாறு அழகிய நடைச் சிறப்பும் சொல்லாட்சியும் உள்ள நூலினைப் படிக்கும் பிறரும் சிரமமின்றிக் கற்று இன்புற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்நூலுக்குக் குறிப்புரை எழுதிச்சேர்க்க எண்ணினேன். அதன்படி தெளிவான பாடல்களை விடுத்துத் தேவையான இடங்களில் குறிப்புரை எழுதிச் சேர்த்துள்ளேன்.

இந்நூலைப் பதிப்பிக்கும்பொழுது எனக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள இந்நூலகத்தில் உள்ள ஏட்டுச் சுவடி மட்டும் போதுமானதாக இல்லை. இதற்கு என்ன செய்வது என நான் தயங்கி இருந்தபோது தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்தில் பழைய பதிப்பு ஒன்று கிடைத்தது. தாது ஆண்டு மாசி மாதம் (1937) பதிப்பிக்கப்பெற்ற அப்பதிப்பிலும் மூலம் மட்டுமே உள்ளது. அதிலும் பல இடங்களில் அடி பிரிப்பு இன்றிச் சுவடியில் உள்ளது போன்றே காணப்படுகிறது. எனினும் இது எனக்கு இருட்டறையில் சூரிய ஒளி கிட்டியது போன்று பெருமகிழ்வைத் தந்தது இந்நூலில் நான் காட்டியுள்ள பாடபேதங்கள் அந்நூலுடன் ஒப்பிட்டுக் கண்டவையே பாடவேறுபாடுகளில் சரியானதாக நான் கருதிய பாடம் சுவடியிலிருந்தாலும் அச்சுப்பதிப்பிலிருந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு மற்றையதைப் பாடபேதமாகக் குறித்துள்ளேன். இதில் நானாக எந்த மாற்றத்தையும் செய்துவிடவில்லை.

பாடல்களில் சீர்பிரிக்கும் பொழுது யாப்புச் சிதைவின்றிச் சொற்களைப் பிரித்துத் தந்துள்ளேன். யாப்புச் சிதைவு ஏற்படும் நிலையிருந்தால் அத்தகு இடங்களில் சொற்களைப் பிரிக்காமல் அப்படியே கொடுத்துள்ளேன். சில இடங்களில் சொற்களைப் பிரிக்காமலிருந்தால் நயம் புலப்படுமாயின் அவ்விடங்களிலும் சொற்களைப் பிரிக்காமலேயே தந்துள்ளேன்.

இந்நூல் தமிழ் இலக்கியத்தாகம் உள்ள நெஞ்சங்களுக்குச் சிறிதேனும் நிறைவைத் தருமாயின் இப்பணி பயனுடையதாகியதாகக் கொள்ளலாம்.

*திருவாப்பருக்னூரு ஞானசம்பந்தர் எழுந்தருளி ஆப்புடைய பிரான் மீது பாடிய திருப்பதிகம் கீழே தரப்பட்டுள்ளது.*

## சம்பந்தர்தேவாரப் பதிகம்

## திரு ஆப்பனூர்

### பண்குறிஞ்சி [ 1-ஆம் திருமுறை ]

### திருச்சிற்றம்பலம்

முற்றுஞ் சடைமுடிமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படவரவம் அதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 1

குரவங் கமழ்குழலாள் குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவுந் திருமேனி விளங்கும் வளையெயிற்றின்
அரவம் அணிந்தானை அணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 2

முருகு விரிகுழலார் மனங்கொள் அநங்கனைமுன்
பெரிது முனிந்துகந்தான் பெருமான் பெருங்காட்டின்
அரவம் அணிந்தானை அணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 3

பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியின் உடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை அணியாப்ப னூரானைப்
பணியு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 4

தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகரம் ஒருமூன்றும் நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை அணியாப்ப னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 5

ஓடுந் திரிபுரங்கள் உடனே யுலந்தவியக்
காட திடமாகக் களங்கொண்டு நின்றிரவில்
ஆடுந் தொழிலானை அணியாப்ப னூரானைப்
பாடு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 6

இயலும் விடைஏறி, எரிகொள் மழுவீசிக்
கயலின் இணைக்கண்ணாள் ஒருபால் கலந்துஆட,
இயலும் இசையானை, எழில்ஆப்ப னூரானைப்
பயிலும் மனம்உடையார் வினைபற் றறுப்பாரே. 7

கருக்கு மணிமிடறன் கதநாகக் கச்சையினான்
உருக்கும் அடியவரை ஒளிவெண் பிறைசூடி
அரக்கன் திறலழித்தான் அணியாப்ப னூரானைப்
பருக்கும் மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 8

கண்ணன் கடிக்கமல மலர்மேல் இனிதுறையும்
அண்ணற் களப்பரிதாய் நின்றங் கடியார்மேல்
எண்ணில் வினைகளைவான் எழிலாப்ப னூரானைப்
பண்ணின் இசைபகர்வார் வினைபற் றறுப்பாரே. 9

செய்ய கலிங்கத்தார் சிறுதட் டுடையார்கள்
பொய்யர் புறங்கூறப் புரிந்த அடியாரை
ஐயம் அகற்றுவான் அணியாப்ப னூரானைப்
பைய நினைந்தெழுவார் வினைபற் றறுப்பாரே 10

அந்தண் புனல்வையை அணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவும் நல்ஞான சம்பந்தன்
சந்தம் இவைவல்லார் தடுமாற் றறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

சுபாவி — ஆப்பனூர்க் காரணர்

தேவி — குரவங்கமழ்குழலாள்

★

திருச்சிற்றம்பலம்

## திருப்பூவனம் கந்தசாமிப்புலவரின்

# திருவாப்பனூர் புராணம்

### விநாயகக் கடவுள் காப்பு

கலிவிருத்தம்

திருத்தன் மாக்கடல் மேனியஞ் செம்மலார்
அருத்தன் மாக்கம லந்திகழ் ஆப்பனூர்
நிருத்தன் மாக்கதை நூல்நிரம் பும்பொருட்
டொருத்தன் மாக்கழல் உன்னும்என் உள்ளமே. 1

### நூற்பயன்

அறுசீர் விருத்தம்

ஒருமையின்ஓர்ந் துபநிடதம் உணர்த்துபரம்
பரன்ஆப்ப னூர்ப்பு ராணம்
அருமையின்ஒ தினர்கேட்போர் அன்னாதி
சயனாந்தம் ஆம்எண் யோகம்
பருகுவர்வாழ் நாளளவுங் குறைதவிர்ந்து
பிணியொழிந்து பகைவென் றோங்கித்
தருமலர்மா னத்திவர்ந்து வானுலகம்
முழுவதுஞ்சஞ் சரிப்பர் மாதோ. 2

## கடவுள் வாழ்த்து

### திருவாப்புடையார்

நீர்பூத்த கடற்கண்அலை திவலைநுரை
புற்புதத்தின் நெறிபோல் எண்ணில்
பார்பூத்த அகிலாண்டம் உதித்தொடுங்கும்
கருப்பொருளைப் பரந்தா மப்பேர்க்
கார்பூத்த திருவுருவத் தரிபிரமா
தியர்கருத்தும் கடந்து நின்ற
சீர்பூத்த திருவாப்ப னூருடைய
தனிமுதலைச் சிந்தை செய்வாம். 3

### இதுவுமது

காப்புடையார் அமரர்மணி மகுடகோ
டிகள்உரிஞ்சிக் கழற்கால் சேக்கும்
சேப்புடையார்; கனகவரைச் சிலையுடையார்;
அணிசருமந் திருத்தார் மூன்றும்
பாப்புடையார் எனத்தரிக்கும் பண்புடையார்;
வையைவட பான்மிக் கோங்கும்
ஆப்புடையார் திருவடித்தா மரையைஅருள்
தேன்ததும்ப அகத்துள் வைப்பாம். 4

### குரவங்கமழ் குழலம்மை

கானேறு தருநிழல்விண் மகளிர்குழற்
கார்இருட்டும் கணவர் சூடும்
வானேறு மிளிர்தருவெண் மதியினுக்கும்
குவியாது, மலர்ந்து ஞானந்
தானேறும் அன்பர்உளத் தடம்தோன்றித்
தண்ணளிசூழ் தருநீள் வாசத்
தேனேறு மலர்க்குரவங் கமழ்குழலாள்
அடிக்கமலம் சிரமேல் வைப்பாம். 5

## சபாபதி

விரிசடைமின் ஒளிவிரிப்ப, பகீரதிவெண்
திரைபுரட்ட, மிளிர்பூங் கொன்றை
சொரிநறுஞ்செந் தேன்துளிப்ப மலைமகள்கண்
டுளங்களிப்ப, சுடர்க்கண் மூன்றும்
புரிபவுரி யினில்சுலவத் தமருகநா
தம்கறங்க, புவனம் வாழ,
பரிபுரவே தஞ்சிலம்பப் பொதுநடம்செய்
பரம்பொருளைப் பணிந்து வாழ்வாம். 6

## துர்க்காதேவி

வேறு

கருநடங் கழிக்கும் ஈசன்
கடுமுய லகன்மேல் தான்செய்
திருநடம் இதற்கொவ் வாதென்
செய்துய்என் றிருக்க, வெற்பின்
உருநடந் தனைய மேதி
உயர்சிரம் நெரிய நின்று,
பெருநடம் செய்யும் தெய்வப்
பிராட்டியை வணக்கம் செய்வாம் 7

## விநாயகர்

கலிநிலைத்துறை

திருநான்மறைச்சங்கி லிக்கொண்டு நில்லாது, செகமேழுலாய்
வருஞான மதம்ஊற மணியாக உதயாத்த மனவெற்பையே
இருபாலும் அணிஆப்ப னூர்ஆனை ஆளாந மிடையன்பொடும்
ஒருநூலின் யாப்பின்க ணிற்கின்ற திதுபோலு முளதியாதரோ. 8

### சுப்பிரமணியர்

அறுசீர் விருத்தம்

கருமாவை யரிவிழிப்பங் கயமாவைப்
புணர்திருமால் கமல நாபி
பெருமாவை யகம்படைக்கும் பிரமாஐ
யுற்றுணராப் பிரண வத்தின்
குரு,மாவை நுகர்வதுவே குணமா,வை
கலும்புனர்செல், கோட்டு மாவைப்
பொருமாவை வேற்குமரன் புதுவிரைத்தா
மரைமலர்த்தாள் போற்றல் செய்வாம். 9

### திருநந்தி தேவர்

கரியமணி கண்டனைச்செங் கண்ணுதல்வா னவனை, முனிக்
கணஞ்சூழ் வெள்ளித்
திருவரையிற் றனிமுதலை, பசியநறுங் கொடியினொடுந்
தெரிசித் தேத்தும்
அரிஅயன்இந் திரன்அமரர் தமையுமடி யார்எனத்தன்
அக்குள் ஆடிக்கும்
குருமணிவேத் திரத்தடக்கை நந்திதிரு வடிமுடிமேற்
கொண்டு வாழ்வாம் 10

### கலைமகள்

அறுசீர் விருத்தம்

உரைத்தமிழ் மூவர் நாவின்
ஊற்றெழும் அமுதை, சங்கத்
திருக்கும்வெண் முத்தை, கற்றோர்
என்னும்ஈக் கூட்டுந் தேனை,
வரைத்தமிழ் முனிவன் நெஞ்ச
மலர்க்கம லப்பூஞ் சேக்கைத்
திருத்தகும் அரச அன்னப்
பேட்டினைச் சிந்தை செய்வாம். 11

## திருஞானசம்பந்தர்

### கொச்சகம்

11 பெருமுலைப்பா லகன்பிரமன் கண்டறியாப் பெருந்தகைமேற்
பொருமுலைப்பான் மெழுகினுளம் புரைந்துருகத் தமிழ்பாடும்
அருமுலைப்பால் அருப்பனைய மணிமுறுவன் மலைமகளார்
திருமுலைப்பான் மணங்கமழ்வாய்ச் செல்வனையாம் பரவுவாம் 12

## திருநாவுக்கரசர்

### எண்சீர்விருத்தம்

12 மண்ணாசை பெண்ணாசை மூன்றும் நீத்து,
மனத்தாசை அறஎறிந்தா னந்த நீர்பாய்
கண்ணாசை சிவபெருமான் காட்சிக் காக்கி,
கருத்தாசை அவன்அருட்கே கைம்மா றாக்கி
உண்ணாசை மருந்தனையார் புகலூர் மன்னும்
உழவாரப் படையாளி உருகிப் பாடும்
பண்ணாசை திருநாவுக் கரையன் பாதம்
பத்திபழுத் தொழுகநெஞ்சிற் பதித்து வாழ்வாம். 13

## சுந்தரர்

### எழுசீர்விருத்தம்

13 எற்றுயர் கொடிநம் திருமுது குன்றத்
திறைவரைப் பொருள்குறித் தேத்திச்
சாற்றிய பதிக விலைஎனத் தனக்குத்
தரும்பொருள் முழுவது மணிமுத்

தாற்றினில் வீழ்த்திக் குளத்தினில் எடுத்துப்
பரவையில் அன்றுபுக் களித்தோன்
சேற்றினில் விளையாச் செழுமலர்க் கமலச்
சேவடி சென்னிசேர்த் துதுமே. 14

மாணிக்கவாசகர்

கொச்சகம்

14 வார்மாலை முலைஉமையாள் மணவாளன்
மலர்க்கழற்கீழ்த்
தார்மாலை யெனஞானத் தமிழ்மாலை ததும்பியகண்
நீர்மாலை யுடன்சாத்தி நிகழ்வாத வூரடிகள்
சீர்மாலை பாடுமவர் சேவடிஎன் சிரமீதால். 15

சோழாந்தகப் பாண்டியன்

அறுசீர் விருத்தம்

15 தெண்ணிலவின் வழித்தோன்றிச் சயம்புதரி
சனவிரத சீலம மேற் கொண்(டு)
எண்ணின்மறை வித்தனையோர் முளையிடங்கண்
டிடபபுரத் திறையோன் கோயில்
உண்ணிலவு மானமுதற் றிருப்பணிசெய்
சுகுணனையின் றுலகங் காத்த
தண்ணளிவெண் குடைச்செங்கோல் வழுதிசோ
ழாந்தகன்றாள் தலைமேல் கொள்வாம். 16

ஆப்பனூர்ச்சைவ வேதியன்

கொச்சகம்

16 சோதியனைப் பொன்னிதழித் தொடையானை
நிலவெறிக்கும்
பூதியனை ஆப்பனூர்ப் புண்ணியனைப் பெண்ணியலும்
பாதியனை அருத்தமனற் பாகச்சோ றடுஞ்சைவ
வேதியனைப் பனிமலர்தூஉய் மெல்லடிப்போ
திறைஞ்சுவாம் 17

## சூதமுனிவர்

### அறுசீர் விருத்தம்

17 முப்பழுத் தருஞ்சொல் வேத முனிக்குழாம் தொழுது
கேட்பத்
தீப்பழுத் தனைய வேணித் திகம்பரன் சிவபு ராணம்
காப்பழுத் துமிழும் தெய்வக் கனித்திரள் சிவண
வாய்மை
நாப்பழுத் துமிழும் சூத நற்றவ முனிதாள் போற்றி 18

## சண்டேசர்

### அறுசீர் விருத்தம் (வேறு)

18 புரிசடைமேன் முடிக்கிடந்த கொன்றையந்தார்
முடித்தசிரம் போற்றி ஈசன்
திருவுடைநன் குடித்தமலன் உண்டபரி
கலத்தினுண்ணும் திருவாய் போற்றி
கருவிடைப்புக் குழலுமெனை எடுத்தாண்ட
சண்டேசக் கடவுள் சோதி
மருவுமழுக் கரம்போற்றி அருள்நிறைசெஞ்
சரணமலர் வனசம் போற்றி! 19

கடவுள் வாழ்த்து முற்றிற்று

## பாயிரம்

### அறுசீர் விருத்தம்

19 மறைமுழுதும் அளப்பரிய ஆப்பனூர்
உடையபிரான் மான்மி யம்சிற்
றறிவுடைய யானளக்குந் தரத்ததோ
அத்தலத்தின் ஆதி சைவர்
இறைகுலசே கரவழுதி நாமநம்பி
மரபுதித்தோர் இந்நூல் தென்நூல்
துறைமுறையில் இயற்றெனஅச் சொல்மறுக்க
மாட்டாமைத் தொடங்கி னேனால். 1

எண்சீர் விருத்தம்

20 நற்கடவுள் வணக்கம்பா யிரம்சொலவை யடக்கம்
நயிமிசா ரணியவரு ணனைசூதர் காதை
பொற்கமலச் சடைமூர்த்தி ஆப்பனூர் இடப
புரம்மனவி னோதன்சந் திரசேனன் நூலில்
தர்க்கமுணர் பாட்களன்மெய்க் குபேரனொடு சுதரி
சனன்அரிச்சந் திரன்ஈறாய்ச் சருக்கமோர்
எட்டாய்க்
கற்கநிறை விருத்தயாப் பைந்நூற்றீ ரேழிற்
கவிஞரவை முறுவலிப்பக் கழறுதலுற் றேனால் 2

நூற்சிறப்புப்பாயிரம்

அறுசீர்விருத்தம்

21 கனியினைப் பிழிந்து செந்தேன் கண்டென
ஆப்ப னூர்நம்
பனிமதி மிலைந்த நாதன் பன்னரும் புராணந்
தன்னைப்
புனிதன்மெய்க் கந்த சாமிக் கவிஞன்பூ
வனத்தான் பார்மேல்
இனிதெனப் புலவர் கூற இன்றமிழ்ப்
புணர்த்தி னானே. 3

அவையடக்கம்

22 வடிதமிழ்க் கவிஞர் யார்க்கும்
விண்ணப்பம் மணற்சோ றொப்பது
அடியனேன் கவியின் குற்றம்
பார்ப்பதும் அழகோ வேணி
உடுபதி முடிக்கும் ஆப்ப
னூருடை யவரும் வையைக்
குடிஞைய மணற்சோ றந்நாள்
கொண்டருள் வழக்கால் மன்னோ! 4

# திருவாப்பனூர்ப் புராணம்

விநாயகக்கடவுள் காப்பு

1. திருத்தன் — இறைவன், " காட்டுப்பள்ளி திருத்தன் சேவடியைச் சென்று சேர்மினே" (தேவாரம் 5-84-4 மா கடல் மேனி அம்செம்மல் ஆர் அருத்தன் — கரிய ஆழியைப் போன்ற உடலை உடைய அழகிய தலைவனாகிய திருமால் பொருந்திய பாதியன், - சங்க. நாராயணன் ; மாகமலம் திகழ் ஆப்பனூர் நிருத்தன் — கமலமா என மாறுக. தாமரைக் கண்ணளாகிய திருமகள் விளங்குகின்ற ஆப்பனூர்க் கூத்தன்; மாகதை நூல் நிரம்பும் பொருட்டு—பெருமையைக் கூறும் இப்புராணம் இனிது நிறைவேற; ஒருத்தல்-யானை வடிவினன் ஆகிய அழகிய விநாயகன்; மாக்கழல் — ஞானமயமான திருவடிகளை

திருத்தனும் அருத்தனும் ஆகிய நிருத்தன் என்க. உன்னுதல் துதித்தலுக்கும்வணங்கலுக்கும் உபலட்சணம்

2 ஒருமையின் ஓர்ந்து-மனத்தை ஒருநிலைப்படுத்திச் சிந்தித்திருந்து; அன்னாதி சயனாந்தமாம் எண் போகம் -உணவு முதல் பூப்படுக்கை ஈறாக எட்டு நுகர்ச்சிப் பொருள்கள் அவையாவன — உணவு, உடை, அணிகலன், நறுமணம், தாம்பூலம், இன்னிசை, மங்கை மலர்ப்படுக்கை; தருமலர் மானத்து இவர்ந்து வானுலகம் முழுவதும் சஞ்சரிப்பர் மானத்து இவர்ந்து தருமலர் வானுலகம் முழுவதும் சஞ்சரிப்பர் என இயையும் மானம் விமானம், தருமலர் வானுலகம் - பஞ்சதருக்களது மலர்-களும் மலர்ந்து மணம்வீசும் வானுலகம். தருமலர் மானத்து இவர்ந்து என நேரடியாகக் கொண்டு தருமலர் களாலான புட்பக விமானத்தில் ஏறி அமர்ந்து எனினுமாம்

## திருவாய்ப்புடையார்

3. நீர்பூத்த - நீர்நிறைந்த; புற்புதம் - நீர்க்குமிழ் முதல் இரண்டடிகளில் உள்ள உவமை வீசிதரங்க நியாயம் எனப்படும்.

4. காப்புடையார் - அரணாக உள்ள தலைவர். காப்பு ஆகிய உடையார்; மகுட கோடிகள் உரிஞ்சி - பணிந்து வணங்குங்கால் மணிமகுடங்கள் காலில் தேய்வதால்; அணி, சருமம், திருத்தார் மூன்றும் பாப்பு, உடை, ஆர் எனத்தரிக்கும்; அணி பாப்பு, சருமம் உடை, தார் ஆர் இது நிரல் நிறை.

5. கானேறு-மணம் நிறைந்து விளங்கும்; தரு-கற்பகத் தரு முதலியன, கணவர் -- அம்மையின் கணவர் -- சிவ பெருமான்.

6. பகீரதி - கங்கை; பவுரி - சிவபெருமான் ஆடும் ஒருவகைக் கூத்து; சுலவ - சுழல; பரிபுரவேதம் சிலம்ப-வேதங்களாகிய சிலம்புகள் ஒலிக்க.

7. கருநடம் கழிக்கும் ஈசன் - உயிர்களுக்கு ஏற்படு கின்ற பிறவியின் கூத்தை ஒழிக்கும் சிவபெருமான். வெற்பின் உரு - மலையின் வடிவம்; மேதி - எருமை மகிடாசுரன்.

8. ஞான மதம் - ஞானமாகிய மதநீர்; உதயாத்தமன வெற்பு-உதயகிரி, அத்தமன கிரி என்னும் இருமலைகள்

" தெய்வீகம் பொருந்திய நான்கு வேதங்களாகிய சங்கிலிகளுக்கும் அடங்காமல் உதயகிரி அத்தமனவெற்பு ஆகிய இரண்டையுமே இருமணிகளாகப் புனைந்து கொண்டு ஞானமாகிய மதத்தைப் பொழிந்து கொண்டு ஏழு உலகங்களைச் சுற்றி வருகின்ற ஆப்பனூர்வேழம் (கணபதி) நம்மை அருளோடு ஆண்டருளி இத்தல புராணத்தை இயற்றத் துணை நிற்கிறது. இதுபோன்ற

வியப்பு வேறேது" சங்கிலிக்கும் நில்லாதது நூலின் யாப்பின் கண் (பஞ்சு நூற்கட்டில்) நிற்கின்றது என்றது நயம்.

9. கருமாஜ அரி விழி பங்கய மா - கரிய நிறத்தையும் அழகினையும், நுட்பமான வரிகளையும் கொண்ட கண்களை உடையவளும் தாமரையில் இருப்பவளுமாகிய திருமகள்; நாபிபெறு — கொப்பூழ் பெற்றெடுத்த, கொப்பூழிற் பிறந்த என்றபடி - எதுகைநோக்கி றகரம் ரகரமாயிற்று, மா வையகம் - பெரிய உலகம்; பிரமா ஐயுற்று உணரா; பிரணவத்தின் குரு - ஓங்காரப் பொருளை உபதேசிக்கும் தேசிகர்; மாவை நுகர்வதுவே குணமா - (வள்ளி நாயகி வழங்குகின்ற) திணைமாவைத் தின்பதையே பயனாகக் கொண்டு, இது பிற புலன் நுகர்ச்சிக்கு உபலட்சணம்; வைகலும் - நாள்தோறும்; புனம் செல் - திணைப்புனத்திற்குச் செல்கின்றவராகிய; கோட்டு மாவைப் பொரு - கிளைகளை உடைய மாமர மாகிய சூரனிடம் போரிடுகின்ற, கோட்டுமா-சாதியடை மாவைவேற் குமரன்—ஞானமாகிய கூர்மையான வேல் ஏந்திய முருகக் கடவுளின்.

10. கரிய மணி கண்டனை - கருமணி போன்ற கழுத்தினை உடைய சிவபெருமானை; வெள்ளித்திரு வரை - கயிலாயம்; பசிய நறுங் கொடியினொடும் — பச்சை நிறத்தையுடைய கொடிபோன்ற பார்வதியினொ டும், அடியார் என - மற்ற சிவனடியார்களைப் போலவே அபரர்தமையும்-உயர்வு சிறப்பும்மை, அடியாரை அடிக்கு உள்ளாக்கும் என்றது நயம். குருமணி - சைவத்தின் முதல் குருநாதர் நந்தியெம்பெருமானே.

11. தமிழ்மூவர் - தேவாரம் பாடிய மூவர், கற்றோர் எனும் ஈ - கல்வி என்னும் தேனை நுகர்கின்ற புலவர் களாகிய தேனீ; வரைத்தமிழ் முனிவன் — பொதிய மலைத்தமிழ் முனிவன்; வரைத்தமிழ் முனிவன் நெஞ்ச

மாகிய கமலப் பூஞ்சேக்கை என்க; கமலப் பூஞ்சேக்கை — கமல மலராகிய அழகிய இருப்பிடம்

12 முலைப்பாலகன்-முல்லைநிலத்தின் காப்பாளனாகிய திருமால்; உலைப்பால் மெழுகின்—உலைவாயில் இட்ட மெழுகினைப்போல்; அருமுலைப்பால் அரும்பு - அரிய முல்லைக்கொடியின்கண் அரும்புபோன்ற; திருமுலைப்-பால் பார்வதிதேவியின் மார்பகத்துப் பால்.

13 மண் ஆசை பெண் — நிலம், பொன் மகளிர் ஆகிய; ஆசை மூன்றும் — மூன்று ஆசை விருப்பங்களையும்; மனத்து ஆசை அற எறிந்து மனத்தின் கண் தோன்றும் குற்றங்களை முற்றும் நீக்கி, கண் ஆசை — விழிகளின் பார்வை இலக்கினை; கருத்து ஆசை—உள்ளத்து அன்பு இங்குபக்தி, உண் ஆசை மருந்து — உண்பதற்குப் பெருவிருப்பை உண்டாக்கும் மருந்தாகிய தேவாமிர்தம்; புகலூர் — திருப்புகலூர் என்னும் தலம்; உழவாரப்படையாளி — திருநாவுக்கரசர் பண் ஆசை — இசையோடு கூடிய ஆசுகவிகளைப் பாடிய தலந்தோறும் இறைவன் முன்நின்று உடனுக்குடன் பாடிய தேவாரம் ஆசுகவியே

14 ஏற்றுயர் கொடி — இடபக்கொடியினை உடைய; திரு முது குன்றம் —விருத்தாசலம்; பரவை இல்—பரவை நாச்சியார்தம் இல்லம்.

15 வார் மாலை —நீண்ட மாலை; சீர்மாலை பாடுபவர் — சிறப்பினைத் தொகுத்துப் பாடுபவர்.

16 தெண்ணிலவின் வழித்தோன்றி -- தெளிந்த சந்திர வமிசத்தில் பிறந்து; மானம்—விமானம்

17 சோதியனை — ஒளிமயமான சிவபெருமானை; இதழி — கொன்றை; பூதியனை — திருநீறு அணிந்தவனை; அருத்த — உண்பிக்க; மணற்சோறடும் — மணலைச் சோறாகச் சமைக்கும் (விரிவு அன்னவிநோதச் சருக்கத்தில் காண்க)

18. முப்பழுத்து ..முதுமை நிறைந்து; தீப்பழுத்தனைய வேணி ... தீக்கனிந்து ஒளிர்வது போன்ற சடைமுடி; காப்பழுத்து - சோலைகளின் மரங்கள் கனிந்து: வாய்மை நாப்பழுத்து — வாய்மையில் முதிர்ந்த நா

19. புரி சடைமேல் மூடிக்கிடந்த - திருகிய சடாபார மாகிய உயர்ந்த கிரீடத்தின் கண் இருந்த; அமலன் — இறைவன்; பரிகலம் - உண்கலம்; சண்டீசர் சிவநிர்மால் யத்தையே துய்ப்பவர்; கருவிடைப் புக்கு - பல பிறவி களில் சிக்கி; உழலும் என்னை - அல்லலுறுகின்ற அடியேனை.

பாயிரம்

1. மறை முழுதும் அளப்பரிய - வேதங்கள் முழுவதும் சேர்ந்தும் அளந்தறிதற்கு இயலாத; இறைகுலசேகர வழுதி நாம நம்பி மரபு - அரசனாகிய குலசேகர பாண்டி யனின் பெயரை (சிறப்பு அடையாகப்) பெற்ற ஆதி சைவர்களின் வமிசம்.

3. பனிமதி மிலைந்த நாதன் - குளிர்ந்த நிலவைச் சூடிய சிவபெருமான்.

4. உடுபதி - விண்மீன்களின் தலைவன் - நிலவு; குடிலை - ஆறு;

கலித்துறை

23 புன்னை பாடலம் தாடிமம் மரவம்பூங் குரவம்
கன்னி காரம்மந் தாரம்மாப் பழுமரம் கடுக்கை
நன்ன ரும்பல வருச்சுனம் வகுளம்வெண் ணாவல்
வன்னி கூவிளஞ் செறிநிழல் நைமிச வனமே. 1

24 வேத வித்தெனும் அருந்தவ உழவர்கள் மிடைந்து
தீத கற்றுநன் காலமோர்ந் துறுபுலன் றிருத்தி,
ஆதி பத்திமை வித்திஆ னந்தநீர்ப் பாய்ச்ச
மாத வப்பயிர் விளைநிலம் நைமிச வனமே. 2

25 விதிமு னிக்கணம் புரிமகத் தவிநசை விண்ணோர்க்
கதிக முற்றமு துணவயாத் தனுதினம் உறலால்
எதிரில் கற்பக நறுநிழல் ஏக்கற வெய்த
வதியும் நன்னிழல் அளிப்பது நைமிச வனமே. 3

26 உரிய வேள்விவாய் அவிவிழைந் தயன்வர உடன்செல்
பிரிவில் ஓதிமம் நெடும்பணை வதிந்துநாற் பெருநூல்
தெரிய வோதுவ தடையுறிற் றடையறத் திருத்தும்
வரிகொள் பூம்பொழிற் கிளிகள்சூழ் நைமிச வனமே 4

27 கரிய வண்டெனுங் கண்டிபூண் டலர்முகங் கண்ணீர்
வரத னைந்துமா கமண்டலங் கையுற வாய்ந்து
பரவு பூப்பொடி யணிந்தொரு தாள்நின்று பன்னாண்
மரனு மெய்த்தவம் புரிவது நைமிச வனமே. 5

28 கடிகை ஐந்தெனத் துயில்ஒரீஇக் கடிப்புனல் ஆடிப்
பொடிஅ ணிந்தெழுத் தஞ்செணிப் புராணிகர் பாற்போய்
நெடிய வேணியன் சிவகதை கேட்டுநெக் குருகி
வடிக ணீரினர் இருப்பது நைமிச வனமே. 6

29 வேத ஆகம விதிவழிச் சுத்திஐ விதஞ்செய்(து)
ஆத ரத்தினாற் சிவனைஅர்ச் சித்ததன் பயனைப்
பூத நாயகன் கரமிசைப் புனலொடு வழங்கும்
மாத போதனர் சரிப்பது நைமிச வனமே. 7

30 அடைவில் ஆண்டொன்று பத்துநூ றாயிரம் அயுதம்
கடைசெ லச்செல ஒர்உயிர்ப் புயிர்த்துவன் கழுமுட்
படையி னார்சிவ யோகமெய் அசைவறப் பயிலும்
நடையின் ஆரிட வகையது நைமிச வனமே. 8

31 வான மேல்மண்ணில் அவன்அவள் அது எனும் வழக்கற்[று]
ஊன மில்பல உயிர்க்குயி ராய்நிற்கும் ஒளியை
ஏனை வேதத்து முடிவையோர்ந் திரண்டற இருக்கும்
ஞான சாதனர் பயிலிடம் நைமிச வனமே. 9

கலிவிருத்தம்

32 பாத வந்தனைக் கற்பகம் பார்த்தபின்
பாத வந்தனைக் கற்பகம் பற்றுறு
மாத வந்தினஞ் செய்யுமன் றேர்விடை
மாத வந்தினஞ் செய்யும்வில் வேள்வரில் 10

oooOOOooo

## நைமிசாரணிய வருணனை

1. பாடலம் - பாதிரி மரம் ; தாடிமம் - மாதுளை; அரவம் - வெண்கடம்பு ; கன்னிகாரம் - கோங்கு ; கடுக்கை - கொன்றை ; அருச்சுனம் - மருதம்; வகுளம் - மகிழமரம் ; கூவளம் - வில்வம்.

2. வேதவித்து -மறைகள் தோன்றுகின்ற விதைகளைப் போன்றவர் ; மிடைந்து — ஒருங்கிணைந்து; புலன் திருத்தி — ஐம்புலன்களாகிய விளைநிலங்களைச் செம்மை செய்து.

3. மகம் — யாகம்; அவி — யாகத்தில் இடப்படும் உணவுப்பொருள்; ஏக்கறவு எய்த — ஏங்குமாறு

4. ஓதிமம் — அன்னம் [பிரமனின் வாகனம்] நெடும்பணை — நெடிய மரக்கிளைகள்; வரிகொள் — அழகிய; பூம்பொழில் [பூக்கள் நிறைந்த சோலைகளில் (உள்ள) வரிகொள்கிளிகள், பூம்பொழில் கிளிகள் எனக் கூட்டுக.]

5 இது மரத்திற்கும் முனிவர்க்கும் சிலேடை. கண்டி — உருத்திராக்கம் — உருவத்தில் வண்டைப் போன்று உள்ளது; அலர்முகம் கண்ணீர்வர — முனிவர்கள் தம் சிரித்தமுகம் அன்புப்பெருக்கால் கண்ணீர் உகுக்க; மரங்களின் மலர்கள் தேனைச் சொரியும்படியாகவும்; மாகமண்டலம் — ஆகாயவெளி, பெரிய கமண்டலம் மாக மண்டலம் எனவும் மா கமண்டலம் எனவும் பிரிக்க; கையுற - கிளைகள் விரிந்திருக்க, கைகளில் கொள்ள ; பூம்பொடி — மகரந்தம், திருநீறு; ஒருதாள் நின்று — அடிமரம், முனிவர்கள்தம் வைராக்கியம்.

6 கடிப்புனல — புதுநீர்; பொடியணிந்து — திருநீறு அணிந்து; எழுத்தஞ்செணி—ஐந்தெழுத்து மந்திரத்தைக் குறித்த அளவு தியானம் செய்து; நெடியவேணியன் — சிவபெருமான்.

7 சுத்தி ஐவிதம் செய்து-ஐவகைச் சுத்திகளையும் செய்து; ஆதரத்தினால் — அன்பால்; பூதநாயகன் — ஐம்பூதங்களுக்கும் தலைவன், சிவபெருமான்; மாதபோதனர் — பெரிய தவத்தினை உடையவர்; சரிப்பது — இயங்குவது

8 அடைவில் — முடிவற்ற; அயுதம் — பதினாயிரம்; கழுமுள் — சூலம்; ஆரிடம்—முனிவர்கள் தொடர்புடைய

9 இரண்டற இருக்கும் —சிவாத்துவிதமாய் இருக்கும்,

10 பாதவம் தனை — நைமிச வனத்தை தான் பகுதிப் பொருள் விகுதி; கற்பகம் பார்த்தபின் — விண்ணவர் பூங்கா கண்ட பிறகு: பாத வந்தனைக்கு — இதன் காலில் விழுந்து வணங்க; அற்பு அகம் பற்றும்—அன்பை உள்ளத்தே பெறும்; விடை — வலிமையுள்ள, இது வில்லிற்கு அடை; மாதவத்தின் அஞ்சு எய்தும் — கள்ளையுடைய ஐந்து மலர்க்கணைகளை ஏவும்; மாதவத்தின் எனற்பாலது மடக்குநோக்கி மெலிந்தது; ஐந்து மலர்களை அம்பாக எய்யும் வலிய வில்லினை உடைய மன்மதன் வந்தால் தினம் மாதவம் செய்யும்; அன்று, ஓ ஈற்றசைகள்.

கலி விருத்தம்

33 அவ்வருந் தவவனத் துறையும் அந்தணர்
பைவரும் பணிமுடிப் பரனை நோக்கித்தம்
கைவருஞ் சுருதியில் கருமங் காமுறா
மெய்வருஞ் சாத்திர கேள்விசெய் கின்றார். 1

34 அவ்விடைக் கனல்தளிர்த் தனைய வேணியன்
வெவ்விடைக் கடவுணீ றணிந்த மெய்யினன்
வெளவிடைக் கசைத்தவற் கலையின் மாதவம்
குவ்விடைத் தனிஉருக் கொண்ட கோலத்தான் 2

35 திரைசெய்நீர்க் கமண்டலன் சிவபு ராணம்என்று
உரைசெயும் அமுதமூற் றூறு நாவினன்
கரதலஞ் செபவடங் கிடந்த காட்சியன்
புரையறு சிவதியா னஞ்செய் புத்தியான் 3

36 நண்ணிய மறையெலாம் நான்கெ னப்பகுத்து
எண்ணிய வியாதன்மா ணாக்கர் ஏறனான்
புண்ணியந் தவழ்முந்நூல் புரளும் மார்பினன்
மண்ணுறும் அயன்நிகர் சூத மாதவன். 4

37 வந்தனன் வருதல்கண் டெழுந்து மாதவர்
சிந்தைமுந் தெதிர்கொளச் சென்று தாழ்ந்துநின்று
அந்தமின் முகமனோ டாச னங்கொடுத்து
எந்தைநீ இருத்திஎன் றிருத்தி னாரரோ 5

38 அருக்கியம் முதலிய திருத்தி அன்பகம்
பெருக்கிய பூசனை முடித்த பின்னவர்
திருக்கிளர் பதமிசை தானுஞ் சென்னிதாழ்த்து
உருக்கிய மொழிசில உவந்து கூறுவான் 6

39 சந்திவந் தனைசெபம் தபத்தி யானம்நன்
மந்திர மறைமுதல் வலிய வேயென
நந்திய திலைஎன நவின்று வாக்கொடு
புந்தியும் ஒருவழி பொருந்தக் கூறுவார் 7

அறுசீர்விருத்தம்

40 மருங்கொளி பரப்புஞ் சைவ
மணிக்கதிர் விளக்கே வேதம்
ஒருங்குண ருணர்வே கேள்வி
யுறும்பதி னெண்பு ராணப்
பெருங்கடற் கரையே ஞானப்
பிரளய வடிவே எங்கட்(கு)
அருங்கதித் துணையே சூத
முனியருந் தவனே கேட்டி 8

41 பண்டுநீ எமக்கு முக்கட்
பரனுறை தலங்கண் மேன்மை
விண்டுமற் றவற்றுள் யாதோ
விசிட்டமென் றகத்துள் மோகம்
கொண்டுழல் கின்றேம் மோகக்
குவையிருள் புலரச் சோதி
உண்டுமிழ் கதிர்போ லின்னும்
மொருதல முரைக்க வேண்டும். 9

எழுசீர்விருத்தம்

42 என்னலுஞ் சூத முனிவரன் இதயத்
திருந்தமிழ் ஆப்பனூர் விமலன்
தன்னையுங் குரவங் கமழ்குழல் உமையாந்
தாயையுந் தலனையும் நினையா
நன்னறுங் கமல நயனநீ ரருவி
நனைப்பமெய்ம் மயிர்புள குதிப்ப
மன்னுநன் பதுமா சனத்தினில் நெடும்போ
திருந்துளம் நெகிழ்ந்துவாய் மலர்ந்தான் 10

43 அந்தணீர் நீவிர் விநாயதிவ் வுலக
அனுக்கிர கத்தின்ஏ துவுமாம்
பந்தவல் வினைதீர்த் தருள்வழி காட்டும்
பரிசுமா முரைப்பல்யா னென்னா
நந்தலீல் குருவாம் வியாதனைப் புழைக்கை
நாதனைக் குகனையாப் புடைய
மைந்தனைக் குரவங் கமழ்குழ லுமையை
வணங்கினான் வணங்கியீ துரைப்பான் 11

44 சாற்றிய புராண மோர்ஆறு மூன்றுட்
சைவத்திற் சேத்திர காண்டத்
தேற்றிய வேகா தசவுருத் திரசங்
கிதையினில் ஈறிலான் அருளால்
தோற்றிய இடப புரியின்மான் மியத்தைச்
சொற்சுவை பொருட்சுவை தோன்ற
ஆற்றிய தவத்தீர் சொல்லுகேன் உலகம்
அறம்பொருள் இன்பம்வீ டடைய 12

சூதரை விநாயகாதை முற்றிற்று

## சூதரை வினாயகரதை

1. பைவரும் பணி - படத்தை உடைய பாம்பு ; சுருதி- வேதம்; மெய்வருஞ்ச - மெய்வருந்த; திரம்-வீடுபேறு

2. அவ்விடை - அப்பொழுது; கனல்தளிர்த்தனைய-தீ கொழுந்துவிட்டெழுதல்போல; வெவ்விடை - விரும்பப் படுகின்றகாளை; வெளவு-பற்றும்; அடைத்த-அணிந்த; வற்கலை - துவராடை, மரப்பட்டை எனினுமாம். குவ்விடை-உலகத்தில்; கு-உலகம்.

3. திரைசெய்நீர்-அலைகளை உடைய நீர், இது சாதி யடை; செபவடம் - செபமாலை; புரையறு-குற்றமற்ற.

4. வியாதன்-வியாசமுனிவன், மாணாக்கரேறு-மாணாக் கருள் தலைமையானவன்; அயன்நிகர்-பிரமனையொத்த

5. அந்தமில்முகமன் - எல்லையற்ற வாழ்த்துகள் ஆசனம் - இருக்கை.

6. அருக்கியம்-மந்திரநீர்; திருத்தி-குறைவறச்செய்து; உருக்கிய மொழி-உள்ளம் நெகிழத்தக்க சொற்கள்.

7. நந்திய நிலை-குறைவுபட்டதில்லை.

8. மருங்கு-பக்கம்

9. விசிட்டம்-உயர்ந்தது; குவையிருள்-குவிந்த இருள்; புலர-நீங்கும்படியாக.

10. ஆப்பனூர்விமலன்-திருவாப்பனூரில் எழுந்தருளியி ருக்கும் சிவபெருமான்.

11. பந்த வல்வினை - கட்டாகிய வலிய வினைகள்; நந்தலில்குரு - குற்றமற்ற ஆசான்; வியாதன்-வியாசன்; புழைக்கை நாதன் - விநாயகக்கடவுள்; குகன்-முருகன்; ஆப்புடைமைந்தன் - திருவாப்பனூர்ச் சிவபெருமான்.

**12.** ஏகாதசம் - பதினொன்றாவது.

சொல்லப்பட்ட பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய சிவபுராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் பதினொன்றாவது உருத்திர சங்கிதையில் கூறப்பட்ட இடவபுரியின் மான்மியத்தைச் சொல்லுகேன் எனவரும்.

### கவித்துறை

45 இந்த மாக்கதை முன்னைநாட் கயிலையி
னிடத்தில்
கந்த வேள்நந்தி நாதனுக் குரைப்பவக்
கதைகேட்டு
எந்தை என்குரு வியாதன்மற் றெனக்குரை
செய்தான்
அந்த வாறுரை செய்தும்நீர் அசைவரக் கேண்மின்
1

46 தேனி லஞ்சிலை குனிப்பவன் செருநிலை கூர்மந்
தானி லம்புகும் இடமெலாந் தமிழ்மணந் தழைக்க
வானி லங்குதண் மதிவழி மன்னவர் இருந்து
நானி லம்புரந் தாள்வது மதுரைஅந் நகருள் 2

47 முத்த ருக்கருள் ஆலவாய்ச் சுந்தர மூர்த்திக்கு
உத்த ரத்தொரு கூவிளி எல்லையின் விடையின்
அத்தி ரிக்குமோர் ஓசனை நிருதிக் ககன்று
தத்து நீர்வையை வடகரை இருக்குமோர் தானம்
3

48 கொன்றை பாதிரி கூவிளம் பிட்பிலம் குரவம்
துன்று மேழிலைம் பாலைசந் தனம்அகில் ஈ தம்
நின்ற பூகதம் அரம்பைஆ சினியொடு நெருங்கும்
மன்றல் மல்லிகை முல்லைமா தவிகடி மயிலை 4

49 மற்றும் என்னினிப் பகர்வது மரமெலாம் அவண
துற்றும் மென்மலர் சூழ்கொடித் தொகையெலாம்
அவண
பற்று நாண்மலர் அளியுணா அமரர்பைந் தருவுங்
குற்ற மில்வல்லி சாதமென் கொடியுமே யிலாத 5

50 ஓல நான்மறைப் பொருள்வெளிப் பட்டென
உலகின்
மேல தாகுமத் தலத்தினில் விரிஞ்சன்மால்
உணரா
மூல காரண இலிங்கமொன் றருளினால் முளைத்துச்
சால நீளொளி உருவமா யங்ஙனந் தயங்கும் 6

51 அத்த னிச்சிவக் கொழுந்தினுக் காப்புடை நாதன்
எய்த்த வாக்கரு நிதியெனும் இடவபு ரேசன்
மெய்த்த வர்க்கருள் வடிவமாம் அன்னவி னோதன்
வித்த கத்திரு நாமமீ தவனிமேல் விளங்கும் 7

52 வையை நீடணி ஆப்பனூர் இறைவனை
வணங்கப்
பொய்யி லன்புகொண் டெழுந்திருந் திற்புறம்
போந்தால்
ஐய மில்லைஓர் அடிக்கொரு பரிமகத் தரும்பேறு
எய்தும் போய்த் தெரி சிக்கிலென் முத்தியும்
எய்தும். 8

வேறு

அறுசீர்விருத்தம்

53 அடைந்துதிரு வாப்பனூ ரடிகளைக்கண்
டிடப்பெற்றோர்க் கனேக நாட்பின்
தொடர்ந்தபழ வினைபுதிய வினையிரண்டுங்
கனல்குளிரச் சுடுந்தீ வெய்யோன்
மிடைந்தகடுங் கனல்பரப்பக் கடல்சுவறி
நிலம்வெடிக்கும் வேனிற் காலத்
துடைந்தசிறு குளநீரொத் துலர்ந்துபலை
யறவறக்கு முண்மை மாதோ. 9

54 பணியாப்ப னூரரவ மணிந்தபிரான்
கொன்றைவனப் பரமன் வையை
அணியாப்ப னூருடை யா னணியநறும்
பட்டுவிலை அளந்து கூறில்
தணியாப்ப னூற்கலிங்க மளித்தவர்புத்
திரபவுத்ர சம்பத் தோடும்
குனியாப்ப னூறுபொறிப் படஞ்சுமக்கும்
புவியில்வளங் குலவ வாழ்வர் 10

55 உயரிடப புரியீசற் காகநறும்
புதல்பதிவைத் தொருபூ வேனும்
பயனுறுவெண் மதிமுடியிற் றரிப்பித்தோர்
உடன்முழுதும் பாரி சாத
நயனுறுவா சந்திரழக் கயிலாயத்
திருப்பர்நந்தி நகர நாதற்
கியலு நறுந் தூபக்கால் கொடுத்தவரு
மப்பயன்பெற் றிருப்பர் மாதோ. 11

56 பெருவிலைக்கப் பூங்கலந்த நறுந்தேய்வைக்
குறிகுளிரப் பெய்விப் போர்மெய்ச்
சுருதிசொலா யிரவாச பேயபலன்
அடைவரொரு துளிநெய்த் தீபம்
பருவரைவிற் குழகனாப் புடையநா
யகன்முன்னர்ப் பார்ப்போர் தங்கள்
அருவினைப்பற் றொழியவா யிரங்கபிலைத்
தானப்பே றடைவர் மன்னோ 12

57 பரன்முடிமே லிளநீரொன் றாட்டினூ
றயமேத பலன்கைக் கொள்வார்
அரன்முடிப்பால் தயிராட்டி னவனுலகி
னுடன்விளையாட் டயர்வார் ஞானத்
திருமருவு மன்னவினோ தனுக்கன்ன
வபிடேகஞ் செய்விப் போனிக்
கருமநிலத் தெவனவன்கொள் காணியொரு
பிரமகற்பங் கயிலை யாமால். 13

58 கருப்பஞ்சா றன்னவினோ தனுக்காட்டின்
அவ னாலாங் கதியிற் சேர்வன்
திருப்பஞ்சா முதமாட்டி விசித்திரபோ
நகமுநிவே தித்தோர் கோயில்
விருப்பஞ்சார் பணிபுதுக்கி னோர்பலத்தைச்
சன்னுமுனி விளைக்கும் வேள்வி
நெருப்பஞ்சா றணிகடவு ளறிந்துரைப்ப
னலதெவரே நிகழ்த்தற் பாலார் 14

59 இப்பொழுதிங் ஙனமுரைத்த பணியியற்றற்
கேதுவிலா ரெனினுஞ் சார்ந்து
முப்பொழுதி னொருபொழுதா யினுமாப்ப
னூருடைய முதலைப் பாகச்
செப்பெழுது முலையுமையைச் சூழ்ந்துபணிந்
துன்னுருகித் தெரிசிப் பாரேல்
அப்பொழுதின் வினைநீக்கி அழியாத
பதமளிப்பன் அருளின் மூர்த்தி 15

கலித்துறை

60 பரக்க என்பல பகர்வது பத்தியோ டமைந்து
புரக்கு மாப்புடை நாதனுக் கீந்தகைப் பொருள்தான்
அருப்ப மென்னிலும் அனந்தமாக் கொண்டரும் பவங்கள்
முருக்கி யிம்மையும் புரந்துபின் தரும்பர முத்தி 16

எழுசீர்விருத்தம்

61 வரைகளிற் சுடர்சூழ் வரைசுர பிகளின்
வானிலா னுடுக்களின் மதியங்
கரையில வொளியிற் பரிதிதா தாவிற்
கரும்புயல் பறவையிற் கலுழன்
தரைவிலங் கினத்தின் மடங்கலூர் தியிற்குஞ்
சரமிரு காலினு ளுயர்ந்தோர்
புரையினாற் காலிற் பசுவியக் கரிலூர்
புட்பகன் புருடரிற் திருமால் 17

62 மாதரிற் கௌரி மனுவினிற் பிரணவம்
பணைமரத் தினச்சு வத்தம்
யாதவர் குலத்திற் கண்ணன்மற் றின்ன
வெவ்வகை யதிகமவ் வகைபோல்
தாதவி ழிதழி வனத்தினாப் புடைய
சுயம்புவே சுயம்பினு ளதிகம்
ஆதலின் வழிபட் டவர்பிற பதியுள்
அருச்சனைப் பலனெலா மடைவர் 18

63 ஆப்புடை யமலன் மகிமையை யனந்தற்
கனந்தம்வாய் படைப்பினும் நவிற்ற
நாப்புடை பெயரா எனினொரு வாயால்
நவிற்றுதற் கொண்ணுமோ தவத்தின்
மூப்புடை யறத்தீர் என்றனன் கேட்ட
முனிவரர் குதூகலித் திருகட்
பூப்படை அருவி பெருகவா னந்தப்
புணரியங் கடலிடைப் புக்கார் 19

64 பின்னரு முனிவர் செவிச்சுவை நிரப்பும்
பெருங்கதைச் சூதனை நோக்கி
முன்னராப் புடையா னிடபபு ரேசன்
முதுமைகூ ரன்னவி னோதன்
என்னநீ நாமம் சொற்றனை மூன்றும்
எவ்வழி எய்திய ததனை
இன்னநீ விரித்து முறையினாற் கூறென்
றிறைஞ்சலுந் தாபதன் இசைப்பான் 20

மூர்த்தி மகிமை முற்றிற்று

1. கந்தவேள் - முருகக்கடவுள்; நந்திநாதன் - நந்தி தேவன்; வியாதன் - வியாசன்.

2, தேனில் அம்சிலைகுனிப்பவன்-வண்டாகிய நாணை கொண்டு அழகிய (கரும்பு) வில்லை வளைப்பவன்; செரு நிலைகூர் மந்தானிலம்-(காமனின்) போர் நிலைத் திருக்கக் காரணமாகிய தென்றல் காமத்தை மிகுவிக்கும் தென்றல்; அனிலம்-காற்று ; மந்தானிலம் - தென்றல் காற்று வான் இலங்கு தண்மதிவழி-ஆகாயத்தே விளங்கு கின்ற குளிர்ந்த சந்திரனின் வமிசம்.

3. ஆலவாய்-மதுரை; உத்தரத்து -வடதிசையில்; கூவிளி-கூப்பிடு தூரத்தில்; அத்திரி-மலை; ஓசனை-நாற் காதம்: நிருதிதிக்கு-தென்மேற்குத் திசை.

4. பிப்பிலம்-அரசு; சூதம்-மா; பூகதம்-கமுகு; அரம்பை -வாழை; ஆசினி-பலா; மன்றல்-மணமிக்க; மயிலை- இருவாட்சி.

5. அவண-அவ்விடத்தில் உள்ளனவே அளிஉணா- வண்டு மொய்க்காத; அமரர் பைந்தரு - தேவர்களின் கற்பகத்தரு: வல்லிசாதம் - ஒருவகைக் கொடி; இது கற்பக மரத்தில் படர்வது.

6 விரிஞ்சன் - நான்முகன்; தயங்கும் - விளங்கி நிற்கும்

7. எய்த்தவர்-துன்புற்றவர்; மெய்த்தவர்-மெய்யான தவநெறியை உடையோர்; வித்தகத்திருநாமம் - பெரு மைக்குரிய திருப்பெயர்கள்.

8 வையை நீடுஅணி - வையையால் பேரழகைப் பெறும்; இற்புறம் - வீட்டின் வெளியே; பரிமகம்-அசுவ மேத யாகம்.

9. கனல் குளிர - நெருப்பும் குளிர்ச்சியாகத் தோன்றும் படி; மிடைந்த-செறிந்த; சுவறி-வற்றி.

10. பணியா பன் ஊர் உரவம் அணிந்த பிரான் - அணிகளாகப் பல ஊரும் பாம்புகளைப் புனைந்துள்ள இறைவன், வையை அணி - வையையால் அழகு பெறுகின்ற! கூறில் கூறினாலும் என எண்ணும்மை விரிக்க; தணியா குறைவற்ற; இது சம்பத்தோடு இணையும்; பல நூல் கலிங்கம் அளித்தவர் - பல நூலாகிய ஆடைகளை வழங்கியவர்களும்; குனியா-நிமிர்ந்த; குனியாத—வில் ஈறு கெட்ட எதிர்மறை; பன் நூறு பொறிப்படம் - பத்துநூறாகிய தலைகளை உடைய சேடன்; இது திரிபு.

11. நறும்புதல்-மணம்மிக்க செடிகள்; பதிவைத்தல் - நட்டு வைத்தல்; நந்தி நகரம் - இடவபுரம்,

12. கப்புரம் - கற்பூரம் என்பது கப்புரம் எனத் திரிந்தது நறுந்தேய்வை - பரிமளச் சாந்து; குறி-இலிங்கம்; வாசபேயம்-ஒரு யாகம்; பருவரைவிற்குழகன் - பெரிய மலையையே வில்லாகக் கொண்ட சிவபெருமான்; கபிலைத் தானப்பேறு - பசுக்களைத் தானம் செய்த பலன்.

13. அயமேதம் - ஆட்டைக்கொன்று இயற்றும்வேள்வி, கருமநிலம் - வினைவிளையும் நிலம்; செய்விப்போன் எவன் அவன் கொள்காணி இக் கருமநிலத்து என மாற்றிப் பொருத்துக. பிரமகற்பம்-நானூற்று முப்பத்திரண்டுகோடி ஆண்டுகள் கொண்ட பிரமனது ஒருநாள்.

14. நாலாம் கதி - சாயுச்சியம் என்னும் முத்துநிலை; விசித்திரபோனகம் - சித்திரான்னம்; தேங்காய்ச் சாதம், எலுமிச்சம்பழச்சாதம் புளியச்சாதம், தயிர்ச்சாதம் போன்றவை.

15. அழியாப் பதம் - அழிவற்ற முத்தி நிலை;

16. அருப்பம் - அற்பம் மிகச்சிறிது; அரும்பவங்கள் முருக்கி - அரிய பிறவிகளை அழித்து.

17. சுடர்சூழ்வரை - சந்திர சூரியர்கள் வலம் வருகின்ற மேரு மலை; சுரபி - பசு; வானில் ஆன் - விண்ணுலகக் காமதேனு; உடு-விண்மீன்; பரிதி-சூரியன்; தாதா-வள்ளல்; புயல்-மேகம்; கலுழன்-கருடன் மடங்கல்-சிங்கம் ஊர்தி-வாகனம்; குஞ்சரம்-யானை; ஊர்புட்பகன்-இவர்ந்து செல்லும் புட்பக விமானத்தை உடைய குபேரன்; புருடர்-ஆண்கள்.

18. பனைமரம்-உயர்ந்த மரம்; அச்சுவத்தம்-அரசு; சுயம்பு-தானே எழுந்த இறைவடிவம்.

19. அனந்தன்-ஆதிசேடன்; நாப்புடை பெயரா - நா எழமாட்டா; மூப்புடையறத்தீர் - முதிர்ந்த தவமாகிய அறத்தைக் கொண்டவரே; புணரி - கடல்

## ஆப்பனூர்ச் சருக்கம்

இயற்கையெழிலும் இறையருளும் பெருகி நிற்கும் நன்னகராம் மதுரையை ஆண்டுவந்த சோழாந்தகன் என்னும் பெயரிய மன்னன் ஒருநாள் வேட்டைக்கு செல்லும் விருப்பினனாய்த் தன் அமைச்சர் முதலிய பரிவாரங்களுடன் நகரின் கீழ்திசையில் அமைந்த காட்டினுள் ஏகினான். வேட்டையில் பல விலங்குகள் உயிரிழந்தன. பல காயமுற்று வீழ்ந்தன. எங்கும் குருதி பெருகி ஓடிற்று அந்நிலையில் மான் ஒன்று வேட்டுவர் கணைக்கும் வேட்டைநாய்கட்கும் தப்பி ஓடிற்று அதைக்கண்ட மன்னன் அரைக்காத தூரம் அம்மானைத் தொடர்ந்து சென்று வீழ்த்தினான் பின்னர் களைப்பு மிகுதியால் ஆங்கொரு மர நிழலில் படுத்துக் கண்மூடினான். மன்னனைத் தேடிவந்த பிறர் அவனது களைப்பை மாற்ற உரிய பணிவிடைகள் செய்யக் கண் விழித்த மன்னனை உணவு உண்ணும்படி வேண்டச் "சுயம்பு தரிசனமன்றி அமுதும் வேண்டேன் என்றான் மன்னன். திகைத்த அமைச்சர் தனித்துக்கூடித் திட்டமிட்டு அழகிய இலிங்கம் ஒன்றைச் சமைத்து இது சுயம்புலிங்கம் எனக் கூறினர். மன்னன் மகிழ்ந்து அருகுசென்று பார்த்து அது செயற்கையாகச் செய்ததென்று அறிந்து தனது சிவவிரதம் குறைபட்டதென வருந்தி உயிர்விடத்துணிய கொன்றை மர நிழலில் ஓரேழ் தொன்னிலங்கீழ் ஆப்பு வடிவில் எழுந்தருளியுள்ளேன். குரவங்கமழ் குழலாளுடன் எமை நிறுவிப் பூசிக்க" என்ற அசரீரி கேட்டு மகிழ்ந்தான். பின் அவ்விடத்து ஆப்புடையீசனைத் தரிசித்து வணங்கினான். அவ்விடத்தில் கோயிலும் நாகமும் நிறுவி ஓராண்டுகாலம் அங்கேயே தங்கி வழிபட்டான். பின்னர் மதுரைக்குத் திரும்பி இறைவன் அருளால் ஆண் மகவு ஒன்றைப் பெற்றான். உரிய வயதில் அம்மகனுக்கு அரசுப்பட்டம் கட்டித் தான் இறைவழிபாட்டில் காலம் கழிக்கத் துணிந்து ஆப்பனூர் வந்து குரவங்கமழ் குழலாளுடன் இறைவனை வழிபட்டிருந்துத் தன் வாழ்நாளைக் கழித்து இறைவன் திருவடி சேர்ந்தான்.

# ஆப்பனூர்ச் சருக்கம்

## கலித்துறை

65 அனைத்தும் ஓதிய புராணநூற்
டொருள்முழு தாய்ந்தாய்ந்
தெனைத்தும் ஓர்ந்துயர் சிவகதை
முழுதறி யெனக்கு
நினைத்த போதெலா மற்புதந்
தருங்கதை நியமந்
தனைத்தாட் டாதூளிர் சாற்றுவன்
கேண்மெனச் சமைந்தான். 1

66 வாம மீனவன் மதிக்குல மடந்தையை மணந்து
தாம நாண்மலர் முடிகவித் திருந்துசெஞ் சடைமேற்
சோம நாயகன் சுந்தர நாயகன் சுருதி
நாம நாயகன் புரந்தது மதுரைமா நகரம் 2

67 உடுத்த நீரகழ் புரிசைகோ புரம்நிலை யுயர்வா
ணடுத்த சூளிகை மாளிகை யுபரிகை யரங்கந்
தொடுத்த சாளரம் பித்திகை மண்டபந் தொகைகண்
டெடுத்த வானவர் தச்சனு மிசைப்பரி தின்னும் 3

63 சால நீர்சுடர் மணிகளில் தனித்தனி சமைத்த
கோல மாளிகை மீச்செலு மீச்செலுங்
குணத்தால்
நீல மாய்மிளிர் செம்மையாய் வெண்மையாய்
நிறம்பொன்
போல வாயுருத் திரிந்திடும் பகலவன் புரவி 4

69 பரும ணிச்சுடர் மேனிலை வந்துபைந்
தொடியார்
கருமு கிற்குழல் கூட்டகில் நறும்புகை கதுவுஞ்
சுரந திப்புனல் குடைபவர் கூந்தலோ துகிலும்
அரும லர்த்திரு மேனியுங் கமழுமவ் வாசம் 5

70 பழுதில் வெற்பெனப் பணைத்தெழு
முலைகொண்கர் பருங்கை
மெழுகெ னக்குழை யுறப்புணர் மின்னனார்
இமையா
தெழுது சித்திர மனைவயி னொளித்திடி
னிளைஞர்
முழுது மெய்ப்பட நோக்கினு மறிந்திட
முடியா 6

71 அனைய தூணவை போதிகை யன்னதுத்
திர ே
இனைய பொற்றுலா மெனவிதந் துரைப்பவ
ரெவரே
கனைக டற்படு கதிர்க்குமம் மனைகளிற் கைசெய்
வினைதெ ரிக்கில விழியொளி மணியொளி
விழுங்க 7

72 மகிழ்வின் எவ்வெவத் தேயமாக் களுங்கொள
வரினும்
புகலு மோர்சிறு விலைப்பொருள் முதலபொன்
கோடி
தரும்வி லைப்பொரு ளாயினுங் கொளக்கொளத்
தாழா
மிகவ ளம்பழுத் துமிழ்வன ஆவண வீதி 8

73 கோதி லாதசெஞ் சூட்டுடை வாரணங் கூவ
வோத ஞாலத்து மற்றைய தலத்துளார் விழிப்பர்
ஈதல் ஏற்றலோ டறுதொழில் இருபிறப் பாளர்
வேத நாதத்தின் விழிப்பதவ் வியனகர் மாக்கள் 9

74 வேத பார்கர் வேந்தர்கள் நாய்கரேர் வினைஞர்
ஆதி யாயபல் வருணருட் சமையிகள் அளவில்
பூத நாயகன் கயற்கணாள் புணர்மது ரேசன்
பாத சேவையர் சீவன்முத் தரிற்பயில் பதியால் 10

75 அந்ந கர்க்கிறை அரும்புகார் நகர்க்கிறை யாதி
எந்ந கர்க்கிறை யேனும்வந் திணையடி யிறைஞ்சப்
பொன்ன கர்க்கிறை மணிமுடி தகர்த்துநீள் புயத்திற்
பன்ன கர்க்கிறை பரித்தபார் முழுவதும்
பரிப்போன் 11

76 மொழிந்த நற்கலை முழுதறி முறைமையி னமுதம்
வழிந்த பார்வையிற் குவலைய முவகைகூர்
வகையில்
கழிந்த திக்குறும் பகையிருள் துணிக்குவாட்
கரத்தில்
பொழிந்த தன்புகழ்க் குலமுதல் தலைவனைப்
போல்வான் 12

77 அளவில் பாற்கடல் தன்குல மதி முளைத் தாங்கு
தளர்வில் தீஞ்சுவைத் தமிழ்க்கடல் முளைத்ததண்
மதியோன்
கிளர்நெ டுந்திசை விளக்குதண் சுடர்க்குநாட்
கெழுமி
வளர்வுந் தேய்வுமைந் துறுப்புணர்த் திடப்புகழ்
வளர்த்தோன் 13

78 கடைத விரறமு தற்றிரி வருக்கமுங் கலப்பத்
தடையில் சாமமு னாஞ்சதுர் வருக்கமுஞ் சார்ந்தோ
னுடைய தான்றமர் பகைஞர்வன் கள்வரூர்
விலங்கா
லடையு மைப்பய வருக்கமுந் துடைத்தர
சான்வோன் 14

79 திறம்பு காமமுன் னாம்அறு பகைவர்க்கந்
தீர்த்தோன்
உறும்ப டைகுடி கூழமைச் சுநட்பர ணுடனே
பெறுஞ்சு வாமிய மென்னுமேழ் வருக்கமும் பிறங்க
உறங்கி டாதுசெல் நேமியொன் றுருட்டிமண்
புரப்போன் 15

80 இரத ஞாயிறெங் கெழினுமீ றுயிர்க்குறி லேனும்
வரத பூரண சச்சிதா னந்தசின் மயமாஞ்
சரத நீள்குறிச் சுயம்புநற் றெரிசனந் தவிரா
விரதசீலனென் றெவ்வுல கமும்புகழ் மேலோன் 16

### சந்தவிருத்தம்

தானாந் தனதன ............ தனதானா
81 தேனேந் தியமல ராள்காந் தனைநிகர்
சீர்வாய்ந் தவனெதிர் பொருநேரார்
ஊனேந் தியவடி வேலேந் தலின்மயி
லூர்சேந் தனில்வரு முயர்கோமான்
மீனேந் தியகொடி யால்வேந் தரினிவன்
வேள்வேந் தெனவெழி லுடையோனீன்
வானேந் திசைதிகழ் சோழாந் தகனென
வாழ்பாண் டியன்முன முளனோர் நாள் 17

தனனாத் தந்தன ............ தனதானா
82 மருவேட் டம்புயன் மதியாற் கண்டன
வகைகாட் டுங்கவி னிறை தேருந்
தருவேட் டங்கைவிண் மிசைநீட் டுங்களி
தருகோட் டும்பலும் வயமாவும்
உருவேட் டங்கச னுழல்வாட் செங்கைய
ருலையாச் சங்கமு முடன்மேவத்
திருவேட் டஞ்செயும் வினைவேட் டிந்திர
திசைமேற் சென்றனன் விரைவாயால் 18

தந்தன தானன ............ தந்தான
83 கண்குடை சோதியு மிழ்ந்தொளி நீண்முடி
கண்டவ ராதவ னென்றோத
வெண்குடை யேமதி தண்கதிர் சாமரை
விண்டிடின் நேரென வெஞ்சேனை
மண்குடை தூளிக ருங்கடன் மேடுற
வந்திகர் மாகதர் கொண்டாடப்
பண்குடை யாவரி வண்டுகள் பாடுறு
பைந்தொடை மார்பன்ந டந்தானால் 19

தானா தனதன ............... தனதானா

84 வானா றுழல்கயல் போன்மீ னுறுகொடி
வார்சேண் அசைதர அடல்வீரர்
சேனா பதிமுத லானோர் குழுவொடு
சேரா உழையரை அழையாவன்
கானா டுநரைமு னேவீ ரெனமலர்
கான்மே லணிதரு கழலோய்முன்
போனார் எனலும்வெள் வேன்மீ னவனெறி
போதா வனமெதிர் புகும்வேலை 20

தனனா தனதன ............... தனதானா

85 தொடுதோ றுயில்புரி யிருகால் மறவர்கள்
சுருள்வால் மடிசெவி நெடுநாய்க
ளொடுவார் வலையொடு படர்பார்
வையினொடும்
உழல்மான் மறைகலை வனமேதி
கடுவா யுழுவைபன் முயல்சூ கரமொடு
களிறோ டுளியமின் னவைசூழப்
படுகா னிடையொடி யெறியா வலைகொடு
வளையா வுடனெதிர் பலர்மீளா 21

தனதன தந்தன ............... தனதானா

86 அரைசன்முன் வந்தடி தொழுதுவி லங்கினம்
அளவில இங்குள வலைவாரால்
விரையவ ளைந்தனம் எனவுரை தந்தனர்
விருதர்க ணம்புடை புடைசூழ
வரைபுரை பஞ்சவன் வரிசிலை செங்கையில்
வளையந டந்துழை வருவோரைக்
கரையில்ப யங்கொடு விருகம்வெ ருண்டெழல்
கருதுமி னென்றன னெனவோடும் 22

தானன தந்தன ........... தனதானா

87 கூவிளி பம்பைத டாரிபெ ரும்பறை
கோடுவ லம்புரி துடியோசை
மேவலின் அண்டக டாகமு டைந்தென
வீறிய கம்பலை யதுகேளாய்
பாவவி லங்கினம் யாவும்வெ ருண்டெதிர்
பாய்வது கண்டடு சிலைவீரர்
தூவிய வன்கணை மாரிசொ ரிந்தனர்
சோரி பரந்தன நதியேபோல் 23

தானன தனதன ........... தனதானா

88 வாய்கிழி வனசில கால்துணி வனசில
வாலறு வனசில கழிதூரம்
போயயர் வனசில கூய்விழு வனசில
போம்வழி தெரிசில சிலவாளி
பாயுட லினசில வீழ்குட ரினசில
பார்நகர் வனசில வெளியோடி
நாய்தொடர் வனசில வேல்நுழை வனசில
நாள்கழி வனசில வனமாவே 24

தனனத் தனநன ........... தனதானா

89 வசையற் றிடுதமிழ் மதுரைக் கதிபதி
வரிவிற் கணைசில வருகேழல்
தசையுற் றிடுபுலி கரடிக் குலநிரை
தனையுற் றுருவிய வனமேதி
அசைவுற் றிடுசெவி மதவெற் புருவியும்
அருவிப் புனலென வழிசோரிப்
பசையற் றிலபடர் விசையற் றிலவிசை
பகர்தற் கரிதரி தெவராலும் 25

தனதன தத்தன ........... தனதானா

90 நசைமயிர் துற்றிய கவரிய ரற்றிட
ஞமலிய லைத்திடு மதுதேரிள்
பசையறு துர்க்குண வறிவிலி கைப்படு
பதுமினி யொத்திடு முடல்மீறித்

திசைதிசை யுற்றிரி பலவிரு கத்தின
சிறுகுடர் சுற்றிய வரிலூடு
விசைகொடு புக்குழி முயல்வலை யுற்றுழல்
விதமென வெய்த்துரு தரு மாதோ 26

அறுசீர்விருத்தம்

91 அவ்வழி வேட்டஞ் செய்யும்
அளவையின் ஒருமான் வீரர்
கைவரி சிலையோட் டம்பின்
கதியையும் பிழைத்து வாரும்
பெய்வலைத் தொடக்குந் தாண்டிப்
பின்தொடர் நாயுந் தாட்ப
வெவ்வழி மரனுந் தாவி
யெய்ப்பற வோடிற் றன்றே 27

92 ஒண்கதிர் காட்டு மான்பின்
உறுபடைத் துணைபின் நிற்ப
எண்கதிர் விலங்கின் கூட்டம்
இயல்வனத் தொருவ னாகிக்
கண்கவர் வனப்பின் வாய்ந்த
சிலையொடுங் காலிற் சென்றான்
வெண் கதிர் மருமான் முன்போம்
வெஞ்சுடர் மருமான் போலும் 28

93 மங்குலந் தரமேற் பாய்ந்து
மண்ணிடைக் குதிக்கு மானைக்
கங்குலங் குறையுங் கானில்
காவதம் அரையிற் கூடித்
தங்குல மதிக்கு வந்த
தனிமறுத் துடைப்பா னென்ன
வெங்குல வரைப்பொற் றோளான்
கணையொன்றால் வீட்டி னானே. 29

94 சீதவம் புயம்நேர் பார்க்கச்
செங்கதிர் செல்லும் மேல்வை
தாதவிழ் நறுந்தேன் வேப்பந்
தார்முடிச் செழியர் செய்த
மாதவ மனையா னெய்ந்த
வருத்தமும் பசியு மூனப்
பாதவ நிழலிற் போகி
யவசமுற் றயர்ந்தான் பார்மேல் 30

95 மந்திரத் தலைவர் சேனை
மள்ளர்மற் றியாருங் கூடல்
இந்திரத் திருவன் கானில்
எங்குற்றா னென்ன வோடி
வந்திரைத் தீண்டி வெந்தீப்
பசியினால் வரைபோற் சாய்ந்த
சுந்தரத் தமிழ்நர் கோனைக்
காண்டலுந் துணுக்க முற்றார் 31

96 தென்னருக் கரசே வேத
நூல்நெறி திறம்புந் தேய
மன்னருக் கிடியே றன்ன
மதிக்குல மணியே எங்கள்
இன்னுயிர்க் குயிரே யார்க்குங்
களைகணே யிணரா யென்ன
மன்னுயிர்க் கிறைவன் வாளா
கிடத்தல்கண் டயர்ந்து மாழ்கி 32

97 அமைச்சியற் பாரம் பூண்ட
அறிஞர்கள் விரைந்து சீதஞ்
சமைச்சலர் வாச நீர்தூஉந்
துருத்தியார் தமைக்கூ யுள்ளக்
கமைச்சின வேலான் கொண்ட
விடாய்தணித் திடலுங் கண்கள்
இமைச்செதிர் விழித்துச் சோம
சுந்தரக் கடவு ளென்றான் 33

98 செம்புலம் படர்வெல் வேலான்
சிறிதயர் வுயிர்த்தல் நோக்கி
அம்புவி யரசே மானை
யடும்விளை யாட்டி னெய்தி
வெம்புகா னிடையித் தூரம்
போந்தமெய் மெலிவை இன்னே
உம்பரின் அமுத மன்ன
உணவுகொண் டொழித்தி என்றார் 34

99 இருந்துவாய் மலர்ந்து மெல்ல
இயம்புவான் வேந்தன்மூலந்
திருந்திய சுயம்பு லிங்க
தெரிசனஞ் செய்தா லன்றி
யருந்துதற் கடிசி லேயன்
றகங்கையி னமைந்த சாவா
மருந்துறி லேனு மாழி
வீடமென மதிப்பே" னென்றான் 35

100 துண்ணெனு மொழிகேட் டுள்ளம்
சேர்ந்துபின் தெளிந்து சொல்வார்
புண்ணியப் பொருட்கும் வீயாப்
புகழ்க்குஞ்சா தனமா யிந்த
மண்ணெனுந் திருமான் பூண்ட
மங்கல வணிபோற் றோன்றும்
அண்ணலின் மேனிக் கந்தோ
வபாயம்வந் துறுமே யென்றார் 36

101 பையநா வசைத்துப் பின்னும்
பார்த்திபன் பகர்வான் யாக்கை
உய்யுமா றிம்மைக் கென்மேல்
அன்பினால் உரைத்தீர் நீவிர்
ஐயமின் மறுமை நோக்கி
யளந்துரைத் தீர லீர்உம்
மெய்யதாம் பொய்யை நம்பி
விரதத்தை விடுகி லேன்யான் 37

102 புன்னுனிப் பனியைக் கானற்
புனலினைப் புனற்கோ லத்தை
யன்னநீர்க் குமிழி யைநீ
ரருந்திய கமஞ்சூழ் வானை
யின்னவா னகத்தில் தோன்றும்
இந்திர சிலையை யேயும்
மின்னுடற் பொறையை நம்பி
விரதத்தை விடுகி லேன்யான் 38

103 நெடுமயிர் தசைந ரம்பு
நிணம்எலும் புதிரம் மூளை
படர்குட ரீருள் வீழ்நீர்
படுமலம் பொதிந்து புண்கள்
இடுமுட லகத்துட் டுச்சில்
இருந்தஇவ் வுயிரை இன்னே
விடுவதே யன்றிப் பூண்ட
விரதத்தை விடுகி லேன்யான் 39

104 என்றலும் சூழ்ச்சி வல்லோர்
இவ்வனத் தணித்தும் சேய்த்தும்
சென்றியாம் சுயம்பு லிங்கம்
தேடுதும் என்னப் போகி
வென்றிவேற் செழியன் வீர
விரதத்தின் உறுதி நோக்கித்
துன்றிய துயரி னங்கோர்
சூழலி னிருந்து சூழ்வார் 40

105 சிறுமைகண் டறியாச் செல்வத்
திருமது ரையர்கோன் எய்தும்
மறுமையை நோக்கி வாளா
விருந்திடின் மரபிற் பின்னர்
பொறைமைகூர் புவனந் தாங்கப்
புதல்வரும் பிறரும் இல்லை
வெறுமையாந் தேயம் யாவும்
வெளிற்றறி வுடைய மாவேம் 41

106 நாமுயிர் துறப்ப வேந்தன்
நலியினும் நலிக இன்று
போமுயிர் மீட்குஞ் சூட்சி
ஈதெனப் புணர்ப்பின் எண்ணித்
தேமுயிர்த் தலர்ந்த கொன்றைச்
செழுந்தரு வடியிற் றென்ற
லாமுயிர்ப் பசையும் நீழல்
வாலுகப் பரப்பி னங்கண் 42

107 நிவந்தவா ளான மன்ன
பெருமுளை நிறுவி நுண்ணூற்
சிவந்தபட் டாடை சாத்தித்
தேய்வைமட் டித்துத் தாமம்
உவந்தணிந் தாரம் பூட்டி
யுற்றுநேர் கண்டோ ருள்ளங்
கவர்ந்தழ கெறிப்பக் கைசெய்
வினையினா லிலிங்கங் கண்டார் 43

108 ஒருவர்பின் ஒருவ ராயங்
கோடிவந் தரசே தேடும்
இருவர்மற் றெவருந் தேறாச்
சயம்புவந் தெளிதி னிந்தப்
பெருவனந் தன்னி னன்பிற்
பிடியுண்டு பொன்பூங் கொன்றைத்
தருநிழ லிருப்பக் கண்டேந்
தம்பிரா னருளி தென்னா 44

104 ஆடுவார் அயல்நின் றாரைத்
தழுவுவா ரங்கு மிங்கும்
ஓடுவார் ஆனந்த தம்போல்
உரைமொழி குழறிக் காட்டிப்
பாடுவார் பாண்டி வேந்தைப்
பரவுவார் புளகப் போர்வை
மூடுவார் நயன நீருண்
முழுகுவா ராகி மொய்த்தார் 45

110 வழுதியுள் உவகை யீர்ப்பச்
சயம்புவை வணங்க வுன்னும்
பொழுதிரு கரமுந் தேர்ச்சித்
துணைவர்கை பொருந்தப் பற்ற
பழுதில்வெற் பசைந்தா லென்னப்
பைப்பைய நடந்து வண்டின்
தொழுதிசூழ் சடையி லிங்கஞ்
சேணிடைத் தோன்ற லோடும் 46

111 பெரும்பெருக் கமுதை ஞானப்
பேரொளிப் பிழம்பை வேதச்
சுரும்புசூழ்ந் தரற்றுந் தேனைத்
தூநறுங் கனியை எய்ப்பில்
விரும்பினர்க் குதவும் வைப்பை
வித்திலா முளையை முக்கட்
கரும்பினை வேம்பின் வேந்தே
காண்கெனக் காட்டி னாரே 47

112 காண்டலுங் கண்ணீர் வாரி
கரைபுரண் டோடக் காவின்
நீண்டகை குவித்துப் பூண்ட
நியதியை முடித்துப் பின்னர்
ஆண்டகை முகைவெண் மூரல்
அருந்திநீர் பருகி யன்பு
மாண்டமெய் வருத்த நீங்கி
மந்திரர்க் குரைப்ப தானான் 48

113 வாட்டிருங் கொடிய கூற்றின்
வாய்ப்படும் உயிரை இன்னே
மீட்டிருந் தென்னை யாண்ட
மெய்ப்பரஞ் சுடர்தா னிந்தக்
காட்டிருந் துறையக் கண்டுங்
கண்ணிலான் போல வேகி
நாட்டிருந் துயிரை யோம்பி
நாட்கழிப் பதுவும் நன்றோ 49

### வேறு

114 ஆதலினிச் செறிந்தபெருங் காடெறிந்து
திருநகர்கண் டரன்பொற் கோயில்
காதலிற்கண் டிவனுறையச் சயம்புதிரு
வுளக்குறிப்புக் காண்பே னென்னாப்
போதலுந்தம் பெருமான்பின் போவார்போன்
றெழுந்துமுகம் புலர்ந்து சாம்பி
நீதியமைச் சர்கணடுங்கி நின்றுநின்றங்
கொளித்தாரந் நெடிய கானுள் 50

115 தனித்தனிபோ யவர்மறையச் சிலர்தொடரப்
போயடுத்துச் சயம்பு மூர்த்தி
குனித்தசே வடிதொழலு மாப்புவடி
வாயிருந்த கொள்கை பாராப்
பனித்தவள மதிவேந்தன் றான்பிடித்த
சிவவிரத பங்கம் நோக்கி
மனித்தவுட லெடுத்தபயன் முதலொடும்போய்
முடிந்ததென வருந்தி னானால் 51

116 என்செய்தார் கற்பனையீ திருந்தவா
றென்னேமற் றிந்த மாயம்
முன்செய்தார் கதையுளுங்கேட் கிலனந்தோ
என்னமொழி மொழிகேன் என்னாப்
பொன்செய்தா ரவன்வெகுளி மீக்கொளக்கண்
சிவந்துரப்பிப் புலிபோற் சீறி
மின்செய்வாள் உறைகழித்து மந்திரர்ப்பார்த்
தலுங் காணான் விச்ாரத் தாழ்ந்தான் 52

117 கொய்யவோ பசிமுளைத்த குடரினைப்பின்
பிரித்துணர்தல் கூடா நெஞ்சைச்
செய்யவோ பிளவுவிழித் திருந்தும்வெறுங்
குருடடைந்து தெரியா நாட்டம்
வெய்யவாண் முனைத்தொடவோ என்றுபல
நினைந்துடலை வெறுத்து மான்கி
ஐயவோ வினைவலியீ தம்மவோ
வெனப்பொருமி யரற்றி னானால் 53

118 தரிப்பரே பிடித்தநிய மஞ்சிறிது
வழுவினுமெய் தடிந்தவ் வேளை
மரிப்பரே மெய்யடியா ரித்துணைப் போ
துடல்சுமந்து வாளா நின்றாற்
சிரிப்பரே இவனடியார் போல்நடிக்குங்
கள்வனெனத் தெளிவரேயான்
நரிப்பதே யவர்காணில் எனத்துணிந்துள்
வாய்மையொன்று நவில்வ தானான் 54

119 யானெடுத்த சிவவிரதப் பெரும்பத்தி
நெறிபிறழா திந்நாட் காறும்
ஊனெடுத்த பயனடையச் சயம்புதெரி
சனஞ்செய்த துண்டே லிந்தத்
தேனெடுத்த மலரிதழி யடியினாப்
பிதுகுறியாத் திகழ்க வன்றேற்
கூனெடுந்த வாள்கொடு நன் மிடறெரிந்து
மாள்வனெனக் கூற லோடும் 55

120 அவ்வுரைபோய்த் திருச்செவியி னுறுத்துதலுந்
தரித்திலர்வந் தானேற் றையர்
இவ்வுரைவான் மொழியானின் றியம்புவார்
எமக்கினியாய் எம்பால் அன்பா
செவ்வியநன் மதிமரபிற் றென்னர்சிகா
மணியேநற் செங்கோல் வேந்தே
அவ்வியந்தீர் விரதநெறி யிழுக்கில்சோ
மாந்தகனாம் அரச கேண்மோ 56

121 நின்னுடைய பேரன்பா லியாம்பிடியுண்
டலர்கடுக்கை நிழலி லோரேழ்
தொன்னிலங்கீ ழூடுருவி ஆப்புடைய
ஈசனெனத் தோன்றி னேம்பாற்
பொன்னனையாள் தனைக்குரவங் கமழ்குழலா
ளெனநிறுவிப் பூசிப் பாய்நீ
என்னலுமம் மொழிவானின் றிழியமுதம்
எனச்செவிபுக் கினிப்பக் கேட்டான் 57

வேறு

122 நீங்கினான் துயர மன்பு
நீடினான் கரங்கள் சென்னி
தாங்கினான் சிவபி ரானைத்
தழுவினான் புயங்க ளோங்கி
வீங்கினா னாடிப் பாடி
விம்மினான் விம்மிக் கண்ணீர்
தூங்கினான் ஓடி யோடி
வனமெலாந் துகைத்தான் துள்ளி 58

123 பார்த்திபன் சிவன்மேல் வைத்த
பத்தியு மவன்மேற் கொன்றைத்
தார்த்தனி முதல்தான் வைத்த
தாழ்வில்பே ரருளும் நோக்கி
ஆர்த்தனர் வானோ ரைந்து
கருவியு மார்ப்ப மென்பூத்
தூர்த்தனர் தென்னன் கீர்த்தி
துதித்தனர் இடைவி டாமல் 59

124 தான்கரைந் துருகி யுள்ளந்
ததும்புமா னந்த வாரி
வான்கரை யேறா தங்கண்
வழுக்கிவீழ்ந் தெழுந்து மீண்டுங்
கோன்கரை யிவர்ந்து தேவி
கொண்கரைப் பரவும் வேத
நான்கரை வணங்கி யீறில்
நற்றுதி மொழிந்து பின்னும் 60

125 வளைமிசை யணிகைச் சீதை
குவித்தமண் மிசைநெல் வேலிக்
கிளைமிசை முளைத்தல் காதிற்
கேட்டனங் கண்ணிற் காண
முளைமிசை முளைத்தா யான்செய்
முற்றவப் பயனி யாதோ
அளைமிசை யவனுந் தேறா
வையனே அன்பர் வாழ்வே 61

126 அடியனே னினைத்த வண்ணம்
அருளுரு வாகி யிந்தக்
கடிகமழ் வனத்தும் வந்து
காட்சிநீ கொடுத்த வாற்றாற்
படியினும் உளைய வானப்
பரப்பினும் உளையிக் கொன்றை
யடியினும் உளையென் போல்வா
ரகத்தினும் உளைநீ யையா 62

127 நெளியரா வணையிற் றுஞ்சும்
நீலமே னியற்குஞ் செந்தேன்
துளியறாக் கமல நாபித்
தோன்றற்கும் அமுதுண் வாழ்க்கைக்
களியறா தவர்க்கும் நாளுங்
கனவிலு மரியாய் அன்பர்க்
கெளியையாய் வருவா யென்ப
தென்னளா வாயிற் றன்றே 63

128 ஒற்றையா யெனையித் தூர
மீர்த்திடு முழைக்கும் வெம்மை
இற்றைநாட் காறுந் தோன்றா
தின்றுதோன் றியப சிக்கும்
உற்றயா னின்னைக் காண
முடித்த மந் திரர்க்குஞ் செய்யுங்
கற்றையஞ் சடையாய் கைமா
றெவனெனக் கழறி நின்றான் 64

கொச்சகம்

129 ஒழியாத பேருவகை உள்ளூறி வருமிதனை
அழியாத மதிநூலோர்க் கறிவிப்பா னுழையோராற்
கழியாத பெரும்பயந்தீர்த் தழைத்திடலுங் கடிதேகிப்
பழியாத புகழ்வேந்தன் பாதமிசைப் பணிந்தார்கள் 65

130 அன்னவரை முகநோக்கி அமைச்சீர்நும்
வினையத்நால்
என்னையுயிர் மீட்பான்வித் தில்லாத
முளையென்முன்
சொன்னபொருள் குறிக்கொண்டு தோன்றியவா
பாருமெனத்
தென்னர்பிரான் மொழிந்திடலும் சென்றிறைஞ்சி
நோக்கினார் 66

131 எவ்வுருவில் யாரொருவர் இயைந்துள்கு
வா ருளத்தில்
அவ்வுருவ தாய்த்தோன்றி அருள்கொடுக்கும்
புண்ணியனென்
றெவ்வுலகும் துணிபொருளை இன்றுவெளி
செய்வதற்கோ
வெவ்வினையி னேங்குறித்த வெளிற்றறிவாய்
நின்றனையே 67

132 செம்மைநெறி அமைச்சுரிமை செய்வினையொன்
றறியாத
வெம்மைவினைப் பழிநின்றும் எடுத்தாண்டெங்
கோமகற்கு
மும்மையுந்தந் துய்யக்கொண் முதல்வாமுப்
பரம்பொருளே
தம்மையுணர் வார்க்கமுதே சயசயவென்
றேத்தினார் 68

133 பொருமானை முதலடும்போர் வேட்டையினிற்
புகுந்தமதி
மருமானை முறைமுறைபோய் வணங்கியினி
திவ்வனத்தின்
ஒருமானைத் தொடர்ந்தேவந் துள்ளன்பின்
வலைவளைத்துப்
பெருமானைப் பிடித்தனையே எனமகிழ்ந்து
பேசினார் 69

134 கண்ணுதல்வா னவனடியார் கணத்துளிவன்
ஒருவனென
எண்ணுதல்செய் தீர்மாயம் இயற்றினீர லீரிருமை
நண்ணியதும் மாலெனக்கு நான்செயுங்கை
மாறிலதென்
றுண்ணிலவு முகமனுரைத் தோன்றுரைக்கும்
மனுவேந்தன் 70

எழுசீர் விருத்தம்

135 கால்புகத் திகைக்குங் கடுவன மெறிந்து
கடிநகர் கண்டுநீள் சிற்ப
நூல்புகச் சிவன தாலயம் வகுப்பீர்
நுண்மதி யீரென வவருங்
கோல்புகத் துளைகொள் மராநிகர் பராரைக்
கொடும்பணை மரநிரை யிரும்பி
னால்வகுத் தனைய ஆக்கைய மள்ள
ராலெறிந் தவண்மிசை திருத்தி 71

136 கிடங்கர்சூழ் இஞ்சி கோபுரம் மறுகு
கேழ்கிளர் மனைகள்செய் குன்றம்
நடங்குல வரங்கங் கலைபயில் கழகம்
நற்றவ ரிருக்கைநான் மறையோர்
இடங்கவி னரசர் வணிகர்பின் னவர்மற்
றிழிந்தவு முயர்ந்தவும் புணர்ந்துள்
அடங்கிய வருணத் தவரிட வகைசெய்
தணிநக ரமைத்தனர் பின்னர் 72

137 அங்கணன் பரம னாகம வளவை
யாற்சின கரமெடுத் தமைச்சர்
திங்கணன் மரபின் முதலடி தொழுது
திருநக ராலயஞ் செய்தே
நங்கணன் புடையாய் எனவவ ருடன்போய்
நோக்கியுண் மகிழ்ந்துநன் னுதலிற்
செங்கணன் பூசை செய்வதற் காதி
சைவரை யழைத்தனன் தென்னன் 73

138 விதிவழிச் சிவனைச் சிவபரம் பரையை
விரும்பிநற் பதிட்டைசெய் தவிர்செங்
கதிர்முதற் சண்டி வரைபரி வாரக்
கடவுளர்க் குறையுள்சூழ் கண்டு
புதியதேர் விழாக்கொள் மூர்த்தியும் வகுத்து
பொன்முடி மணிக்குழை யாரம்
நிதிவளை யாதி பலபணி யுதவி
நித்தநை மித்திக நடத்தா 74

139 காதிகா தலன்முன் றருகட லிதெனுங்
காட்சிய தொகுபெருங் குளங்கண்
டேதமில் சாலி விளைநிலம் பிறவும்
இயற்றியாப் புடையநா தற்கு
நீதிநூ லறிவின் மறையவர் தமக்கு
நேர்பகிர்ந் தளித்தனன் சிவனை
தாதிகா ரணப்பேர் தழுவிய நகரும்
ஆப்பனூ ராயின தன்றே 75

140 பூழிய னோராண் டிருந்துழி யொருநாள்
புரிசைசூழ் மதுரையம் பதியில்
ஊழியி னொருவன் தாள்நினைந் தெழுந்தங்
கொல்லைபோ யாப்பனூ ருடையார்
வாழிய குரவங் கமழ்சூழ லுமையாள்
மலரடி அஞ்சலித் தேத்தி
ஆழிய வன்பி னாற்பிரி வாற்றா
தயர்ந்துநின் றனுமதி பெற்றே 76

### கலி விருத்தம்

141 அன்படைம னத்தினன ரன்றளிக டந்து
வன்படையெ ழுச்சிசெறி வார்முரசி யம்ப
தன்படைமு தற்றலைவர் தானைகுழு மிக்கார்
மின்படைநெ ருங்கமிசை வெண்குடைவி ளங்க 77

142 பூமுகம டந்தையர்த னம்புடைகு லுங்கச்
சாமரைப னிப்பவரு தண்பவன நிம்பத்
தேமலர்ம ணத்தினொரு திண்சிகர மென்றோட்
காமருத மிழ்ப்பொதிய வாரநறை கால 78

143 மாறுபடு செம்பியர்ம டந்தையர்ப டரச்
சேறுபடு கொங்கைகர மென்பனசி வப்ப
ஊறுபடு கொண்கர்உ திரங்கொடுசி வக்கும்
வீறுபடு செங்கைவடி வாள்புடையின் மின்ன 79

144 அன்னநடை வஞ்சியர்க ணீல மலர் அக்கால்
உன்னதநெ டுங்குடையின் ஒன்றுதவி ரெண்ணேழ்
மன்னர்கர பங்கய மலர்க்குல முகிழ்ப்ப
மின்னவிர்ம திக்குலநல் வேந்தெனவி ளங்க 80

145 வருந்திடையி டைப்படுச யம்புமகிழ் தானம்
புகுந்துதொழு தன்பொடுமி ருந்தினிது போவான்
இகந்துத னகர்க்குவரு மிந்திரனி லின்பம்
அகந்தரநி றைந்துமது ராபுரிய டைந்தான் 81

146 மண்ணுமணி யன்னதிரு வீதிவல மாவந்
துண்ணிலவு கோபுரம்வ ணங்கியுள ணைந்தே
வண்ணநிறை பொற்கமல வாவியிடை மூழ்கி
யெண்ணுமொரு சித்திமத வேழமுனி றைஞ்சா 82

147 தடம்படிக யற்கணுமை யைத்தொழுது சார்ந்து
படம்படிசு மக்கநிமிர் பாம்பணிபு ராணக்
கடம்படிமு ளைத்தமுதல் கானமலர்வ ணங்கி
யுடம்படிதொ டுத்துமன மொத்துருகி நின்றான் 83

148 நின்றுதுதி செய்துதிரு நீற்றொளிப ழுத்த
குன்றுபுரை யண்ணல்விடை கொண்டுமட நல்லார்
மன்றுளணி மங்கலமெ டுத்தெதிர்வ ரப்போய்
என்றுமுள கோயிலுள ணைந்தினிதி ருந்தான் 84

149 சந்ததமு மீசனிரு தாண்மலர்சி ரங்கொண்
டந்திபகல் மன்னுயிர்த மக்கருள கங்கொண்
டுய்ந்தறமு ளைக்குமொரு கோலுயர்க ரங்கொண்
டிந்திரனின் மிக்கரசி யற்றிவரு நாளில் 85

150 அங்கணர்சி வத்தசடை ஆப்புடைய நாதர்
தங்கருணை யானதுத னித்துருவ மைந்த
திங்கிதுகொ லென்னவொரு புத்திரனை யீன்றான்
திங்களினி ளங்குழவி யென்றுலகு செப்ப 86

151 உற்பவம கிழ்ச்சிவினை செய்துலகு வப்பச்
சொற்புனையும் நாமகர ணஞ்சுகுணன் என்றே
பொற்பவணி வித்தகவை யைந்தின்மதி புல்கும்
பற்பலக லைத்தொகுதி கற்பனப யிற்றா 87

152 வாள்வினையு முற்றிமத மாக்கவன மாவூர்
ஆள்வினையு முற்றியத றிந்தவனி தாங்குந்
தோள்வினை குறித்துரிய தொன்முறைமை நல்கு
நாள்வினையி யற்றிமணி நன்முடிக வித்தான் 88

153 பின்னரிக போகநனி துய்த்தொழிவு பெற்றுத்
தென்னவன்வி ரத்தியொடு சித்தமசை வுற்றுத்
தன்னையுணர் தத்துவவு ணர்ச்சிதலை நின்றே
மன்னுதிரு வாப்புடைய வள்ளலைநி னைந்தான்
89

154 தார்புகுத வம்புயன்வி ரைத்தருள்த ழைக்குஞ்
சீர்புகுக யற்கணுமை சேருமது ரேச
னேர்புருப தந்தொழுதெ ழுந்தருளி யாப்ப
னூர்புகுந டந்துநிறை யன்பொடவ ணுற்றான் 90

155 கன்னிகுர வங்கமழ்கு ழற்கவுரி பாகம்
மன்னிநிறை ஆப்புடை யவள்ளல்திரு முன்னர்
சென்னிமிசை யஞ்சலிதி ருத்துபுந டந்தே
வன்னியிழு தொத்துருகி மண்ணிடைப
ணிந்தான் 91

அறுசீர் விருத்தம்

156 உடல்குழைந் துருக மேனி
உரோமங்கள் சிலிர்ப்பக் கண்ணீர்
மடைதிறந் தொழுக நெக்கு
மனம்பதை பதைத்து ளின்பந்
தடையறப் பெருகச் செந்நாத்
தழுதழுப் படைய வேந்தன்
இடையறா வன்பி னானின்
றிவ்வகை துதிப்ப தானான் 92

157 காரணக் கடவுள் போற்றி
கடல்வரும் ஆல கால
பாரணப் பரம போற்றி
பராபர யோகி போற்றி
பூரணச் சுடரே போற்றி
புண்ணிய புராண போற்றி
ஆரணப் பொருளே போற்றி
ஆப்பனூ ருடையாய் போற்றி 93

158 திரிபுர விசய போற்றி
தேவர்கள் தேவே போற்றி
பரிபுர வேத நாத
பங்கயத் தரசே போற்றி
எரிபுர மதனுக் காவி
யிரதியா லளித்தாய் போற்றி
அரிபுரந் தரற்கு மெட்டா
ஆப்பனூ ருடையாய் போற்றி 94

159 உலகெலாம் நிறைந்தாய் போற்றி
ஒண்டிறல் படைத்த வெங்கோன்
மலருளோன் சாப மன்றி
மற்றொரு சாப மேறா
நலனுலாம் புழைக்கை வேழ
நாதனைப் பயந்தாய் போற்றி
அலகில்சோ தியனே போற்றி
ஆப்பனூ ருடையாய் போற்றி 95

160 சுடர்மழுப் படையாய் போற்றி
சுருதிசொல் நடையாய் போற்றி
படர்நதிச் சடையாய் போற்றி
பாலனப் பெடையாய் போற்றி
இடர்மனத் தடையாய் போற்றி
இவர்ந்தவெள் விடையாய் போற்றி
அடர்தலைத் தொடையாய் போற்றி
ஆப்பனூ ருடையாய் போற்றி 96

161 மாக்கட லாவம் நந்த
வனமடைப் பள்ளி மாயோன்
மேக்குயர் விடைகோல் காந்தை
விளங்குமர்ச் சகன்மென் மெல்லப்
போக்குயிர்ப் பொருநால் வேத
புராணவா கமங்க ளாக
ஆக்குமெம் மிறைவா போற்றி 97
(ஆப்பனூ ருடையாய் போற்றி)

162 வேட்டம திளைக்கு மென்னை
மீட்டுயி ரளித்து முன்பு
காட்டகத் தறிவாய் வந்து
காட்சிசெய் கருணை போற்றி
நாட்டமூன் றுடைய எங்கள்
நாயக போற்றி பைவாய்
ஆட்டர வணிந்த சோதி
ஆப்பனூ ருடையாய் போற்றி 98

163 என்னநின் றேத்தி யீசன்
இன்னருள் கைக்கொண் டேர்ந்தார்
மன்னனன் றாப்ப னூருள்
வதிந்தன னாக வந்தத்
தென்னனின் றேத்துந் தெய்வத்
திருத்துதி யரன்பொற் கோயின்
முன்னர்நின் றேத்து வோர்தம்
முழுவினை யொழிவ தாமே 99

164 வேண்டிமுன் தனையீர்ந் தாட்கொள்
விமலர்க்குத் சிறந்த பூசை
தூண்டுதேர் விழாவும் உள்ளம்
பெருங்களி தூங்கச் செய்தோர்
ஆண்டுறைந் தருளும் நாள்வாய்
ஆப்பனூ ருடைய வண்ணல்
நீண்டபே ரருளும் வேந்தன்
ஆயுளும் நிரம்பிற் றன்றே 100

### வேறு

165 கிடைப்பரிய பெருங்கதிகள் ஒருமூன்றுங்
கடந்துபோய்க் கிளர்வான் நேமிப்
படைக்கரிய நிறத்தவற்கும் நான்முகற்கும்
அடைவரிய பதவி மேவி
விடைக்கடவுள் சிவபுரத்தி னவனுருவின்
உடன்கலந்து வேறற் றொன்றாய்த்
துடைத்தவிரு வினைசோழாந் தகமாறன்
விளங்கினான் தொன்னான் மன்னோ 101

### சந்த விருத்தம்

தான தனனதன தானாந் தன

166 மேய வழுதியுயர் சோழாந்தகன்
வீடு மருவுகதை யீதாஞ்சொல்வோர்
நேய மொடுசெவியின் வாய்மாந்தினர்
நீடு பொருள்முழுது மாராய்துளோர்
தீய வினையொழிவர் மேவாம்புகழ்
சேர்வர் குறைதவிர வேவாழ்ந்துநீள்
ஆயுள் இறுதியினில் நாலாம்பதம்
ஆவ தடைகுவர ருள்கூர்ந்தரோ 102

ஆப்பனூர்ச் சருக்கம் முற்றிற்று.

ஆப்பனூர்ச் சருக்கம்

1 ஓர்ந்து — ஆராய்ந்து

2 வாமம்—அழகு; வாமமீனவன்—சுந்தரபாண்டியன்; மதிக்குல மடந்தை – சந்திரவமிசத்தில் தோன்றிய அங்கயற்கண்ணி; தாமம் - மாலை; சோமநாயகன்-சந்திரனை முடியில் தரித்துள்ள தலைவன் - சிவபெருமான் சுருதி-வேதம்.

3 உடுத்த - சூழ்ந்த; புரிசை - மதில்; சூளிகை - நிலாமுற்றம்; உபரிகை - உப்பரிகை; பித்திகை-சுவர்கள்; வானவர்தச்சன்-தேவதச்சன், மயன்.

4 சுடர்மணிகள் - ஒளிவீசும் மணிகள்; பகலவன் புரவி - சூரியனின் தேர்க்குதிரை.

5 கதுவும் - மூளும்; சுரநதி - ஆகாய கங்கை.

6 பணைத்து - பருத்து; கொண்கர் - கணவர்; மின்னனார் - மின்னலைப் போன்ற மகளிர்.

7 போதிகை - தாழ்வாரத்தூண்; பா.பே போதியை

8 முதல - முதலாக; வளம்பழுத்துமிழ்வன - வளம் செழித்து விளங்குவன; ஆவணவீதி - கடைத்தெரு.

9 கோது - குற்றம்; சூடு - கொண்டை; வாரணம் - சேவல்; ஓதஞாலம்-கடல்சூழ் உலகம்; அறுதொழில்-அந்தணர்க்குரிய அறுவகைத் தொழில்கள். அவையாவன: ஈதல், ஏற்றல், கற்றல், கற்பித்தல், வேட்டல், வேட்பித்தல்; இருபிறப்பாளர்-பார்ப்பனர்; வியனகர் பரந்த நகர்; ''வாழிய வஞ்சியும் உறந்தையும் போலக்-கோழியின் எழாத ஏமப் பேரூர்'' - பரிபாடல்

10 வேதபாரகர் - வேதத்தைக் கற்பிப்போர்; நாய்கர்-வணிகர்; - வினைஞர்-வேளாளர்; பூத நாயகன்-சிவ பெருமான்;மது ரேசன்-மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்; பாதசேவையர் - திருவடி வழி-பாட்டினர்; சீவன்முத்தர்-உடலில் இருக்கும் போதே மலங்களை நீத்து வீட்டின்பத்தைத் துய்ப்போர்.

11 பொன்னகர் - தேவர் உலகம்; பரித்தல் - காத்தல்.

12 இது பாண்டியர் குல முதல் தலைவன் - சந்திரன் சிலேடை.

**சந்திரன் :-** நற்கலை முழுதறிதல் - தனக்குரிய 16 கலைகளுடனும் அறியப் படுதல், காட்சியளித்தல், அமுதம் வழிந்த பார்வையின் - காண்பவர்களுக்கு அமுதம் போல் இன்பம் அளித்தல்; குவலயம் உவகைகூர்வகை - குவளை மலர்கள் மகிழும்படி; திக்குறும் பகைஇருள் துணிக்கும் வாள்கரத்தில் - அச்சத்தைத் தரும் பகையாகிய இருளினை வெட்டு கின்ற ஒளிமிக்க கதிர்கள்;

**மன்னன் :—** நற்கலை முழுதும் அறிதல் - கல்வி யறிவு நிறைந்தவனாயிருத்தல்; அமுதம் வழிந்த பார்வை — எதிர்ந்தவர்களைக் குளிர நோக்குதல்; குவலயம் உவகை கூர்வகை – உலகினர் மகிழும்படி; திக்கு உறும் பகை இருள் துணிக்கும் வாள் கரம் - எட்டுத் திசைகளிலும் உள்ள பகைவர்களாகிய இருட்டை (அவர்களின் யானையை எனினும் ஆம்) வெட்டும் உடைவாளேந்திய கரம்.

13 மதியோன்-சந்திரனைப் போன்றவன் நாட்கெழிமி - நாளும் பொருந்தி.

14 கடைதவிர் அறம் முதல் திரிவருக்கம் - வீடு என்னும் இறுதியானது நீங்கிய அறம்பொருள் இன்பமாகிய உறுதிப்பொருள்கள்; சாமமுன் ஆம் சதுர்வர்க்கம் -

சாமம் தானம், பேதம், தண்டம் என்னும் நான்கு உபாயங்கள்; காண்க பெரிய புராணம் திருநகரச் சருக்கம் 36.

15 திறம்பு - பிறழ்தலான ; காம முன் ஆம் அறுவகை - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் ஆகிய அறுவகைப்பகைகள்; சுவாமியம் குருத்துவம்; பிறங்க - நிறைய, நேமி - ஆட்சிச் சக்கரம்.

16 இரத ஞாயிறு - தேரில் ஊர்கின்ற சூரியன். வரத பூரண - வர மருளும் தன்மையும் பூரணத்துவ மும் கொண்ட; சரதர் - உண்மையான, சத்துப் பொருளான.

17 தேனேந்திய மலராள் - மலர்மகள், திருமகள் ; காந்தன் - கணவன், திருமால், சேந்தன் - முருகன்; வானேந்து இசைதிகழ் - வானை எட்டும் புகழ் விளங்கும்.

18 அங்கை - அழகிய துதிக்கை ; உம்பல் - யானை ; வயமா - குதிரை, அங்கசன் - மன்மதன் ; வேட்டம்- வேட்டையாடல்; இந்திர திசை - கிழக்குத்திசை.

19 கண்குடை - கண்ணைக் குடைகின்ற, கண்ணைப் பறிக்கின்ற ; விண்டிடின் - கூறினால்; மண் குடை தூளி - மண்ணைக் குடைதலால் எழும் தூசி ; வந்திகர்-மங்கலம் பாடுவோர்; மாகதர் - இருந்தேத் துவோர் ; பண்குடையா - பண்ணை இசைத்துக் கொண்டு.

20 வானாறு-ஆகாய கங்கை; உழையர்-அமைச்சர்;

21 தொடு தோல்-செருப்பு ; வனமேதி-காட்டெருமை; கடுவாய் - கழுதைப் புலி; உழுவை - புலி சூகரம் - பன்றி ; உளியம் - கரடி.

22 விருதர் - படை வீரர்; பஞ்சவன் - பாண்டியன் ; கரை இல் பயம் - எல்லையற்ற அச்சம்; விருகம்- மிருகம்.

23 கூவிளி - ஒருவகை இசைக்கருவி; கம்பலை- ஆரவாரம்; சோரி - குருதி.

24 கழிதூரம்-வெகுதூரம் ; கூய்-கூவி ; வாளி-அம்பு.

25 வசையற்றிடு - குற்றமற்ற.

26 நசை மயிர் துற்றிய - விரும்பத்தக்க மயிர் நிறைந்த; கவரி - கவரிமான்; மீறி-கிழிந்து; விருகம் - மிருகம் பதுமினி-நால்வகைப் பெண்களுள் உயர்வகைப் பெண்.

27 அம்பின்கதி - அம்பின் பாய்ச்சல் ; வெவ்வழி - கடுமையான வழி, மரன் - மரம்; எய்ப்பற - களைப் பின்றி.

28 வெண்கதிர் மருமான் - சந்திரனின் மருமகன், சந்திரகுலத்தவன் ; முன்போம் - முன்னால்போகும் வெஞ்சுடர் மருமான் — சூரிய குலத் தோன்றல், இராமபிரான்.

29 மங்குல் அந்தரமேல் - மேகங்களை உடைய வானத்தின் மீது; கங்குல் உறையும் கான் - இருள் நிறைந்துள்ள காடு ; தன்குலமதிக்கு வந்த - தன் மரபின் முதல்வனாகிய சந்திரனுக்கு ஏற்பட்ட; வெம்குல வரை பொற்றோளான் — விரும்பத்தக்க பெரிய மலைகளைப் போன்ற அழகிய தோள்களை உடையவன், சோழாந்தகன்.

30 பாதவ நிழல் - மரநிழல் ; அவசம் - களைப்பு; அயர்ந்தான் - சோர்வுற்று வீழ்ந்தான்.

31 மந்திரத் தலைவர் - அமைச்சர் தலைவர் ; சேனை மள்ளார் - படைவீரர் ; கூடல் இந்திரத் திருவின் - மதுரை மன்னனாகிய இந்திரனைப் போன்ற செல்வன் ; துணுக்கமுற்றார் - திடுக்குற் றார். பா. பே. தமிழர்கோனை ;

32 திறம்பும் - தவறும்.

33 சீதஞ் சமைச்சு அலர் — குளிர் சேர்ந்து விளங்கும்; வாசநீர் தூஉந்துருத்தியர் — மணம் கலந்த நீரைத் தூவும் துருத்தியை உடையவர்; கமை — பொறுமை

34 வெல்வேல் - வெற்றியைத்தரும் வேல்; அடும் - கொல்லும்; உம்பர் - தேவர்.

35 சயம்பு லிங்கம் — தானே தோன்றிய இலிங்கம்; சாவா மருந்து - இறத்தலைத் தவிர்க்கும் மருந்து. அமிழ்தம்; ஆழிவிடம்-பாற்கடலினின்றும் தோன்றிய நஞ்சு, ஆலகாலம்.

39 வீயா புகழ் - அழிவற்ற புகழ்; அண்ணல் - தலைவன்.

37 யாக்கை உய்யுமாறு - உடல் காக்கப்படும் வகையில்; அளந்து உரைத்தீர் அலீர்-ஆராய்ந்து கூறவில்லை; மெய்யதாம் பொய்-மெய்போலத் தோன்றும் பொய்.

88 புனற்கோலம் - நீர் மேல் எழுதிய கோலம் ; இந்திரசிலை - வானவில்.

39 நிணம்-கொழுப்பு ; ஈருள்-ஈரல்; புன்கண்-நோய்; துச்சில் - தங்குமிடம்.

40 சூழலிலிருந்து சூழ்வார் - ஓரிடத்திருந்து ஆலோசிப் போர்.

41 சிறுமை கண்டறியா - இல்லை என்னும் சிறுமையை என்றும் கண்டறியாத ; பொறைமை - சுமை; வெளிற்றறிவு - அறிவின்மை.

42 தேம் - தேன், வாலுகம் - வெண்மணல்.

43 தேய்வை - பரிமளச் சாந்து ; மட்டித்து - பூசி ; தாமம் - மாலை ; அழகெறிப்ப - அழகு சுடர்விட பா. பே. அழல் செறிப்ப

44 தேறா - கண்டறியாத.

45 புளகப் போர்வை-உடல்முழுதும் மயிர்சிலிர்த்திருத் தல்; மகிழ்வென்னும் போர்வை எனினும் ஆம்.

46 வழுதி - பாண்டியன்; தேர்ச்சித்துணைவர் — அமைச்சர்; வண்டின்தொழுதி - வண்டின் கூட்டம்;

47 வேதச் சுரும்பு — வேதமாகிய வண்டு; வேம்பின் வேந்து - பாண்டியன்.

48 கண்ணீர் வாரி - கண்ணீர்க்கடல்; ஆண்டகை - பாண்டியன்; முகைவெண் மூரல் - முகிழ்க்கும் வெண்மையான புன்சிரிப்பு; மந்திரர் - அமைச்சர்.

49 காடெறிந்து - காட்டை அழித்து; முகம் புலர்ந்து - முகம் வெளுத்து; சாம்பி - கூம்பி; ஒளித்தார் - மறைந்து கொண்டனர்.

51 குனித்த சேவடி-தூக்கிய திருவடி; பனித் தவளமதி - குளிர்ந்த வெண்ணிலவு.

52 பொன் செய் தாரவன் - பொன்னால் செய்யப்பெற்ற மாலையை அணிந்த பாண்டியன், அழகிய மாலை எனினும் ஆம்; உரப்பி - அதட்டி; மந்திரர் - அமைச் சர்;

53 பிரித்துணர்தல் கூடா நெஞ்சு – சுயம்பு என்றும் படைப்பு என்றும் பிரித்து உண்மை அறிய இயலாத உள்ளம்.

54 நரிப்பதே - சிறுமையடைவது.

55 ஊனெடுத்தபயன்-பிறவி எடுத்த பயன்; கூனெடுத்த வாள் - வளைவு கொண்டவாள்; மிடறெரிந்து - கழுத்தை அரிந்து.

56 தரித்திலர் - தாமதித்து இருந்திலர் ; ஐயர் - சிவ பெருமான்; வான்மொழியால் – அசரீரியாக ; ஔவியம் - தீவினை;

57 கடுக்கை நிழல் - கொன்றை மர நிழல்.

58 அன்பு நீடினான் - அன்பு பெருகினான்; கண்ணீர் தூங்கினான் – கண்ணீர் பெருக்கினான் ; துகைத் தான்-விளையாடினான்-பார்க்க: "சூடினான் தொழு தான் ஓடி உலகெலாம் துகைத்தான் துள்ளி"

(கம்ப. இரணியவதைப்படலம். 128)

59 ஐந்து கருவியும் ஆர்ப்ப — ஐவகை இசைக்கருவி களும் ஒலிப்ப; ஐவகைக் கருவிகளாவன ; தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சைக்கருவி, மிடற்றுக்கருவி.

60 வேதநான்கரை–நான்கு வேதங்களாகி நிற்போனை- ஈறில் நற்றுதி - முடிவற்ற நல்வாழ்த்துக்கள்.

61 கிளைமிசை - மூங்கில் மரத்தடியில்.

63 நெளியராவணை - நெளிகின்ற பாம்புப் படுக்கை; நீல மேனியன்- நீலநிற உடலை உடைய திருமால்; கமல நாபித் தோன்றல் — பிரமன்; அமுதுண் வாழ்க்கைக் களி அறாதவர் — அமுதினை உண்டு வாழும் நீங்காத இன்பத்தினை உடைய தேவர்கள்.

64 உழை - மான்.

65 உழையோர் - ஏவலாளர்; மதிநூலோர்-அமைச்சர்.

66 வித்தில்லாத முளை - தானே தோன்றியது - சுயம்பு லிங்கம்.

67 இயைந்து உள்குவார் - மனம் ஒன்றி நினைப்பவர்; எவ்வுருவில் ............ புண்ணியன் — "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" — சிவஞான சித்தியார்.

68 வெம்மை வினைப் பழி — தீவினைப் பழி; மும்மை- இம்மை, மறுமை, உம்மை.

69 மதிமருமான் - சந்திரகுலத்தவன்.

70 கண்ணுதல் வானவன் - நெற்றியில் கண்ணுடைய சிவபெருமான்; முகமன் உரைத்து-பாராட்டிப் பேசி.

71 கால் புகத்திகைக்கும்-காற்று உள்புகுந்து செல்ல வழி காணாது திகைக்கும்; வேல்புகத் திகைக்கும் மரா— இராமனின் அம்பால் துளைகொண்ட மரா மரம். பராரை கொடும்பணை — அடிபருத்து வளைந்த கிளைகளை உடைய மரம்; சிற்ப நூல் புக- சிற்பக்கலை நூல்கள் சொல்லும் வகையாக.

72 கிடங்கர் - அகழி; இஞ்சி - கோட்டை; கேழ்கிளர் - ஒளிவீசுகின்ற; நடம் குலவு அரங்கம்-நாட்டியவரங் கம்; பின்னவர்-வேளாளர்; இழிந்தவும் உயர்ந்த வும் புணர்ந்துள் அடங்கிய வருணத்தவர் — நால் வருணத்தாருள் தாழ்ந்த பிரிவின் ஒருவரும் உயர்ந்த பிரிவின் ஒருவரும் கலந்து அதிற்பிறந்த மக்கள். இவரை அனுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர், பாகியர் எனப் பிரிப்பர். (மனுதர்ம சாத்திரம்) பா.பே வருணத்தவரிடை வகை செய்து

73 அங்கணன் - சிவபெருமான் ; சினகரம் - கோவில்.

74 பதிட்டை செய்து - பிரதிட்டை செய்து.; கதிர் முதல் சண்டேசர் வரை - சூரியன் முதல் சண்டேசர் வரை; தேர்-தேரும்; விழாக் கொள்மூர்த்தி - உற்சவ மூர்த்தியும்; பணி - அணிகலன்; பா. பே : நித்தநைமித்தியம் நடத்தா.

75 காதி காதலன் - காதியின் மகனாகிய விசுவாமித்திரன் ; சாலி-நெல்.

76 பூழியன் — பாண்டியன்.

78 நிம்பத் தே மலர் - வேம்பின் தேன் நிறைந்த மலர் ; பொதிய வாரம் - பொதிகைமலைச் சந்தனம்; ஆரம் –சந்தனம்; நறைகால - மணம் வெளிப்பட; பா. பே. : தண் பவ நிதம்பத் தேமலர்.

79 படீரச்சேறு - சந்தனக் குழம்பு.

80 ஒன்றுதவிர் எண்ணேழ் மன்னர் - ஐம்பத்தைந்து மன்னர்; ஒன்று தவிர் என்றது ஐம்பத்தாறு தேயத்து மன்னருள் பாண்டியனைத் தவிர்த்து ஏனையோரைக் குறிக்க.

81 வகுத்திடை யிடைப்படு சயம்பு-நிலத்தைப் பிளந்து இடையே தோன்றும் சுயம்பு,

82 சித்தி மத வேழம் - சித்தி விநாயகர்;.

83 கடம்படி முளைத்த முதல் - கடம்ப மரத்தடியில் தோன்றிய சுந்தரேசப் பெருமான்.

84 என்றுமுள கோயில் - தான் என்றும் தங்கும் அரண்மனை,

85 சந்ததம் - எப்பொழுதும்.

87 பொற்ப அணிவித்து - பொலிவு மிகும்படியாக அணிவித்து.

88 மதமா-யானை; கவனமா-குதிரை; நாள்வினை - முடிசூட்டுதற்குரிய நன்னாள் குறித்தலாகிய வினை.

89 இகபோகம் - இவ்வுலகில் நுகரும் இன்பம்

90 மதுரேசன்-மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்; கயற்கண்உமை-மீனாட்சியம்மை.

93 பாரணம்-உண்டருளிய; ஆரணம்-வேதம்.

94 எரிபுரமதன்-எரிந்த உடலுடைய மன்மதன்.

95 வெங்கோல் மலருளோன் - வெவ்விய மலரம்புகளை உடைய மன்மதன்; சாபம் - கரும்பு - கரும்புவில்; புழைக்கை-துதிக்கை.

96 சுருதி-வேதம்; படர்நதிச்சடை - அகன்ற கங்கையைக் கொண்டுள்ள சடைய உடைய சிவபெருமான்; பாலனப்பெடை - காத்தருளுகின்ற பெடை, உமையவள்; இடர்மனத்து அடையாய் - துன்புறும் மனத்திற்கு அடைக்கலம் ஆனவன்; அடர்தலைத்தொடை - நெருக்கமாகப் பிணைத்த மண்டையோட்டுமாலை. பா. பே. பாலனப் படையாய்

97 ஆவம் - அம்பறாத் தூணி; கடல் இறைவனுக்கு (திருமாலால்) அம்பறாத்தூணியாகவும், (அரவு மாலையால்) நந்தவனமாகவும், (விடத்தால்) மடைப் பள்ளியாகவும் உள்ளது என்பது கருத்து; மாயோன் மேக்குயர் விடைகோல் காந்தை விளங்கும் அர்ச்சகன் -மாயவன் சிவபெருமானுக்குப் பெருமை பொருந்திய விடையாகவும், அம்பாகவும், மனைவியாகவும், அர்ச்சகனாக்வும், உள்ளான் (சிவானந்தலகரி; 82).

98 நாட்டம் மூன்று - முக்கண்

100 ஆயுளும் நிரம்பிற்று - ஆயுள்காலம் முடிந்தது. விமலர்க்குப் பூசை விழா செய்து, ஓராண்டு உறைந் தருளும் நாள்வாய், ஆப்பனூர் அண்ணல் பேரருள் நிறைந்தது,வேந்தன் ஆயுள் முடிந்தது எனக்கூட்டுக.

101 நேமிப்படை - சக்கரப் படை; கரிய நிறத்தவர் - திருமால்; பா. பே. தொன்னாள் மன்னே.

102 நாலாம்பதம் - சாலோகம், சாமீபம் சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கனுள் நான்காவதாகிய சாயுச்சியம் என்னும் முத்திநிலை.

ஆப்பனூர்ச் சருக்கம் முற்றிற்று.

சோழாந்தகன் இறைவனடி சேர்ந்தபின் அவன் மகன் சுகுணன் மதுரையை நன்முறையில் ஆட்சி செய்து வந்தான் ஒருசமயம் கோள் நிலை திரிய அவ்வாண்டு மாரி வளம்குன்றி எங்கும் வறட்சி மிகுந்தது. ஏரி வறண்டது. கிணற்றுநீர் சுருங்கியது. எங்கும் பஞ்சம் நிலவியது.

இக் காலத்தில் ஆப்பனூரில் வைகிய அந்தணாளர் சிந்தித்துத் தங்கள் பங்கு நிலத்தில் வான் பயிராகப் பருத்தியை விதைத்தனர். ஏரியின் ஒரு சிறு பகுதியில் இருந்த நீர் கொண்டு ஆப்பனூரீசனுக்குரிய பங்கில் சைவ வேதியன் நெல் விதைக்க அது வளர்ந்து கதிர்விட்டது. அது கண்ட பிற வேதியர் இவ்வேரி நீரில் சரிபங்கு நமக்குமாம் என்று வன்மையாகக் கூறி வயலுக்கு நீர் வரும் வழியை அடைத்து நீரைப் பருத்திக்குப் பாய்ச்சினர் அதுகண்டு வருந்திய வேதியன் இறைவனுக்கு அமுது செய்யப் பயன்படும் நெல்லுக்கு நீர் விட வேண்ட "நஞ்சுணத்தகும் நாதர் அமுதுண்பரோ" என எள்ளி நகைத்தனர். அது பொறாது வேதியன் இறைவனிடம் சென்று முறையிட இறைவன் நீதிஇல் இத்தலத்தின் நீங்கி உமையொடு உகந்ததொரு தலத்தில் வைகுவம் நீயும் உன் குடும்பத்துடன் புறப்படுக" என்றான். அது கேட்ட வேதியன் "மூவரும் தொடரவொண்ணா உன்னை யான் எங்ஙனம் தொடர்வேன்" என வேண்ட, "நாம் செல்லும் வழியில் எமது விடையின் காலடிச் சுவடும் கொன்றை நாண்மலரும் முன்பொருந்தும்" என, இறைவன் அருளினான்.

சைவ வேதியன் தன் மனையாளொடு வீதிமுனைகளில் நின்று 'இவ்வூர் கல் மாரியால் அழியும் உடன் இவ்வூர் விட்டு நீங்குக" எனக்கூறி விடையடிச் சுவடுபற்றிச் சென்றான். இக்கூற்று கேட்ட நல்லோர் அந்நகர் நீங்கினர். பின்னர் அந்நகர் கல்மாரியால் அழிந்தது.

விடையேறிவந்த இறைவன் மதுரைக்கு வடக்கே வையை வடகரையில் தங்கத் திருவுளம் கொண்டான். நந்திநாயகனின் வேண்டுதலுக்கு இணங்கி அவ்விடத்திற்கு இடவபுரம் என்றும் அருகில் உள்ள தீர்த்தத்திற்கு இடப தீர்த்தம் என்றும் பெயர் ஏற்பட அருள்புரிந்தான்.

## இடவபுரச் சருக்கம்

### கலிநிலைத்துறை

167 இக்காதை அமுதப்பெ ருந்தாரை
நனைவித்த இருகாதுளீர்
முக்காலும் உமையொப்ப ரியாரென்று
மகிழ்வுற்ற முனிசூதனை
அக்காலை முனிவோரெ ழுந்தஞ்ச
லித்தேத்த அணியாப்பனூர்
மெய்க்கார ணன்பெற்ற நகரீச
னாங்காதை விண்டானரோ. 1

168 சுடர்சூழும் நெடுவேணி மிசைஇந்து
வழிவந்த சோழாந்தகன்
கடல்சூழ்த ரும்பார்பு ரந்தீச
னுடன்மேவு கதிசேர்ந்தபின்
அடல்வாகை புனைமீளி சுகுணப்பெ
யர்ப்பூழி யன்காமர்வெண்
குடைநீழல் உலகின்கண் உயிர்வாழ
முறைசெய்து கோலோச்சுநாள் 2

169 வீறாநி லத்தேவர் திரிகால
கருமத்தின் விலகாரதின்
மாறாத செந்தீவ ளர்த்தெங்கும்
விண்மாரி வருவிப்பர்வன்
பாறாடும் வேல்மன்னர் முதன்மூன்று
வருணத்தர் பலகிப்பெறும்
பேறான தங்கன்மம் வழுவாத
நெறிநிற்பர் பின்றார்களால். 3

170 மாரிக்கு வித்தன்ன மடமாதர்
கற்போங்கி மல்கும்பெருந்
தூரிக்கு முதலான பைங்கூழ்நி
லந்தான்சு ரந்தேவளம்
பாரிக்கும் நாளும்ப லத்தோடி
ருக்கும்ப சுங்காவெலாம்;
பூரிக்கு நல்லானி னம்பால்மி
குந்தேபொ ழிந்தூறுமால். 4

171 தானந்த வங்கல்வி மெய்ஞ்ஞானம்
இன்பந்த ழைத்தீறிலா
ஆனந்த போகந்த தும்புந்த
மிழ்ப்பாண்டி யணிநாடெலாம்
வானம்பெ ருஞ்சீர்வி ரும்புந்த
கைத்தாயிவ் வண்ணம்பனாள்
ஊனந்த விர்ந்தேபல் உயிர்வாழ
அந்நாளில் ஓராண்டரோ. 5

எழுசீர் விருத்தம்

172 மருவு கோள்நிலை திரிய மாரி
வறப்ப ஏரி வறந்துபோய்
பெருகு கூவலும் நீர்சு ருங்குப
பேரு யிர்த்தொகை யெய்திடப்
பொருவி லானின மாதி நாத்தலை
புற்ற லைப்பட லின்றியே
திரிய நீர்விளை வஃகி வந்தது
சிறுவி லைப்படு நாளரோ. 6

173 அந்த நாள்அணி யாப்ப னூர்வரும்
அந்த ணாளர்கள் எண்ணியே
சந்த வான்மழை யின்மை யால்வரு
தங்கள் பங்குநி லக்கணே
முந்த நீடுப ருத்தி வித்தி
முளைத்து வான்பயி ராகமுன்
வந்த ஆப்புடை நாதர் பங்கு
வயற்கண் அங்கவர் அருளினால். 7

174 உண்ணும் ஏரியின் மண்தொ டுங்குழி
உள்ள டங்கிய நீரினால்
வெண்ணி றச்சிறு நெற்ப யிர்க்கொள
வித்தி நாடொறு மாப்பனூர்
அண்ண லார்திரு மேனி தீண்டுமோர்
ஆதி சைவன்வ ளர்க்குநாள்
புண்ணி யப்பொருள் போல்வ ளர்ந்து
பொலிந்து பைங்கதிர் விட்டதால். 8

175 சின்னி லத்துறு சாலி பைங்கதிர்
நீட்டல் கண்டுதி ருந்துநூல்
மன்னர் முன்னவர் உன்னி யுன்னிம
னம்பொ றாமலிவ் வேரிநீர்
துன்னு பாதிய தன்றி யேழு
துஞ்சை வாகம வேதியன்
என்ன வன்மைதன் நெற்ப யிர்க்கணி
றைப்ப தென்றுகு ழாங்கொளா. 9

176 வீறு சேரந் நிலத்தில் நீடிய
வெண்ப ருத்திகள் நீரிலா
தீறு காண்குற யாமி ருப்பதென்
இக்கு ளத்திரு கூறிலோர்
கூறு நீர்நம தேய தற்கொரு
கோதி யாதுகண் வாயினுட்
சேறு காணவி றைத்து நங்குறை
தீர்வம் என்றுரை செப்பினார். 10

177 அன்ன செய்தி யறிந்த யர்ந்திடும்
ஆதி சைவருள் உத்தமன்
என்ன செய்வமி தற்கெ னாநெடி
தெண்ணி யெண்ணிவ ருந்துவான்
சொன்ன விப்பிரர் பால்ந டந்துதொ
டர்ந்து பேரவை யுட்புகுந்
தின்னல் கூரவி ரங்கி வாய்மொழி 11
யின்ன கூறின னாலரோ.

178 ஆதி நூலொரு நாலு நூலுடன்
அங்க நான்முத லாகநூல்
நீதி நூலும றிந்து ளீர்விளை
நீள்ப ருத்திய வாவில்நும்
பாதி நீரத னுக்கி றைப்பது
பன்னி னீரெனல் கேட்டனன்
ஈதி யாரும யுத்தம் என்பரெ
வர்க்கும் இன்னதி சைந்திரா. 12

179 அன்றி யாப்புடை நாத னார்திரு
அமுது செய்வத னுக்கிவை
யின்றி யேயமை யாமை யாலரு
ளீர்ள னக்கொடி ரந்தனன்;
நன்றி லாதவர் நஞ்சு ணத்தகு
நாதர் தானமு துண்பரோ
என்ற சங்கதி யாடி வன்மையி
யப்பி யொல்லையெ ழுந்தரோ. 13

வேறு

எழுசீர் விருத்தம்

180 எண்ணீர்மை யற்ற மறையோர்ப ருத்தி
யிடையே குளத்து அருகுந்
தெண்ணீரி றைப்ப வதுகண்டு சிந்தை
தெருமந்து நின்று செயல்போய்க்
கண்ணீர் இறைத்து முறையிட்டி ரந்து
கரைஆதி சைவன் முடிமேல்
விண்ணீர் முடித்த திருவாப்ப னூரர்
மெய்த்தாண்முன் வீழ்ந்து மொழிவான். 14

181 தேவாதி தேவ கயிலாய வாண
திரிசூல நாத முறையோ
மாவாடு தாரு வனவிப்பி ரேசர்
வலியட்ட சர்பு முறையோ
மேவார்பு ரங்கள் தனிபாழ்ப டுத்த
விறல் வாகை வீர முறையோ
வாவாவி தென்கொல் மறையோர்செய் தீமை
அணியாப்ப னூர முறையோ. 15

182 என்றென்ற ரற்றி பொழிகின்ற சைவன்
இதயக் குறிப்பின் வழியாப்
நின்றென்றும் அன்பர் நினையுங்க ருத்து
நிறைவேற்று மாதி மறைநூல்
அன்றென்றும் மற்றி தாமென்றும் உண்மை
அறியா திளைப்ப முடிவில்
ஒன்றென்று நின்ற பொருள்மூல லிங்க
வுருநின்றும் வந்து பகர்வான். 16

### கலித்துறை

183 இசைய நந்தமை வழிபடும்
வேதிய இவ்வூர்
நசையொ ழிந்தியாம் மலைமக
ளுமையொடு நலஞ்சேர்
திசைவ யிற்படர்ந் துளத்தினுக்
கிசையிடஞ் செல்வேம்;
வசையி லாதநின் குடும்பமும்
நீயும்பின் வருதி; 17

184 தொழுகு லயத்தில்வந் திழிகுலத்
தியற்கையைத் தொடர்ந்து,
பழுது யற்றிநீர் பருத்தியுட்
பாய்ச்சிய பதகர்
அழுத ரற்றிநம் ஆணையின்
உருமினோ டதிர்கள்
மழையி றைப்பவூர் பாழ்படும்
மாய்ந்தென வழங்க 18

185 தேவ தேவநங் கீலக
நாயக தெரிதத
மூவர் வானவர் அருந்தவர்
யோகியர் முனிவர்
ஏவ ருந்தொட ராவுனை
எங்ஙனந் தொடர்வேன்
தூவி யன்னமன் னாளொடும்
போம்வழி துருவி. 19

186 என்று கூறலும் இறையுளம்
மகிழ்ந்தியாம் ஏகும்
துன்று நீள்நெறி யிடத்தில்நம்
விடைஅடிச் சுவடும்
பொன்றொ டுத்தன கொன்றைநாண்
மலருமுன் பொருந்தும்
தென்ற மிழ்த்திரு நாட்டினிக்
குறிவழிச் சேறி. 20

187 எனவு ரைத்தணி யாப்பனூர்த்
திருவுரு இலிங்கந்
தனைம றைத்துமை யாளொடுந்
சேயொடுந் தாவும்
துணைவி டைப்பரி மேற்கொடு
நடந்தனன் சுருதி
முனைவன் உத்தமன் பசுபதி
பரமனைம் முகத்தோன். 21

188 அந்த வேலையின் அருச்சகன்
அகங்குழைந் தவ்வூர்ச்
சந்த நான்மறைக் கிழவர்தம்
வீதியைத் தணந்து
முந்தை வீதியி னிடந்தொறுங்
குறுகியே முக்கண்
எந்தை யாப்பனூர் இறைவர்
மொழியிதென் றியம்பும். 22

189 சிற்ப ரன்றிரு நாமமுச்
சரிப்பவர் திருநீ
றற்பு டம்பினில் அணிபவர்
அவனையர்ச் சிப்போர்
கற்பின் மேம்படு வனிதையர்
யாவருங் கழறு
கிற்பன் ஈங்கிது சத்தியஞ்
சத்தியங் கேண்மின். 23

190 மதிமு டித்தநங் கீலக
நாயகர் வயல்நெற்
பதர்பி டிப்பநீர் பருத்தியில்
நிறைத்தநூற் பனவர்
சிதைவு றப்பெருங் கன்மழை
யுருமொடுஞ் சிந்திப்
பதிய றக்கெடும் போமினப்
பாலெனப் பகர்ந்தான். 24

191 சொன்ன வாசகஞ் செவிநுழைந்
தீர்த்திடத் தூயோர்
அன்ன மாநகர் துறந்துசென்
றயல்நகர் அடைந்தார்;
பின்னர் மூடரும் அறு
தொழிற் குரியரும் பெயரா
தென்னி தாகுமென் றிகழ்ந்தனர்
இற்கணே இருந்தார். 25

192 ஆதி சைவரின் மாசிலான்
மனைவிபால் அரனார்
ஓதி யேகிய அருண்மொழி
பகர்ந்தவ ளோடும்
போது நன்னெறி விடையடிச்
சுவடுகண் பொருந்த
நாத னார்திரு அருள்நிறைந்
தகம்நெக நடந்தான். 26

193 அக்க ணத்தெழு முகிற்குலம்
அரனதா ணையில்வான்
மிக்கெ ழுந்துக முடிவென
மன்பதை வெருவத்
தக்க பாதலத் தரவிறை
யுடல்நெளி தரவெண்
திக்க யங்களுஞ் செவிடுற
இடித்தன திரண்டே. 27

194 மீது விப்பிரர் விழிமணி
தெறித்திட மின்னிக்
காத டைப்பவார்த் தனவவர்
சிகைத்தலை கடிதிற்
பேத முற்றெதிர் பிளப்பவன்
பெருங்கல்வெங் கால
தூதர் விட்டெறி கவண்கல்கொல்
ஈதெனச் சொரிந்த. 28

195 இடிக்கு லஞ்சிலை மழையொடுஞ்
சிதறிட வெங்கும்
வடிக்கும் வெண்சுதை தீற்றிய
மாடமா ளிகைகள்
கொடிக்கொள் கோபுரம் ஆலயம்
அரங்குசெய் குன்றம்
பொடிக்கு லத்தொடும் வேரறத்
தகர்ந்தன புரமே. 29

196 மக்கள் பேர்சொலி யழைப்பர்மற்
றவர்சொரி மழைக்கற்
றொக்க செம்புனீ ருடன்வரக்
கண்டுயிர் சோர்வார்
ஒக்க லிற்சிறு குழவியை
எடுப்பதற் கோடிப்
புக்க மாளிகை யுருமினா
லிடிந்துயிர்ப் போவார். 30

197 கருத்த ழுந்தியாம் அருச்சகன்
இரப்புரை கடிந்து
பருத்தி செய்ததிற் பலித்ததிப்
பலனெனப் பகர்வார்
அருத்தி யுற்றுயிர் பிழைத்திடச்
செய்யிலாப் புடைய
நிருத்தர் கோயிற்கே கொடுப்பநம்
பங்கென நினைப்பார். 31

198 உரிய பங்கினுக் குள்ளநீர்
இறைக்கவும் உற்ற
பரிசி தென்னிலாப் புடையவர்
கோயிலுட் பட்ட
திரவி யங்கவர்ந் தவர்படுஞ்
செய்கையார் தெரிப்பார்
நரக முற்றுங்கொள் காணியங்
கவர்க்கென நவில்வார். 32

199 தெய்வ நாயகன் வயலில்வெண்
சாலியைச் சிதைத்த
வெய்ய தீவினை கொடிதென்பர்;
சிவனருள் விலகாச்
சைவ வேதியன் மனைபுகில்
யாமெலாந் தடையற்
றுய்ய லாமென ஓடுவர்;
இடையில்வீழ்ந் துலப்பர். 33

200 முதிரும் என்புகண் முரிந்திட
முகந்தலை கரங்கால்
பிதிர மெய்யெலாங் குருதியந்
தாரைநீர் பெருக
அதிரும் வாகனம் நின்றுவீழ்
சிலைமழை யன்றி
உதிர மாரியுஞ் சொரிந்தெனக்
கிடத்ததவ் வூருள் 34

201 மாசி லாவரு டத்திலவ்
வாப்பனூர் மறைந்து
தேசி லாவகை யன்றுதொட்
டிருந்தது சிறந்தோர்
பேசி லாரமு தனையவாப்
புடையவெம் பெருமான்
ஆசி லாலவாய்ப் பெருந்திரு
நகர்வயி னணுகி 35

202 மருக்கமழ் கொன்றை வனமலி
வைகையின் வடபால்
இருக்க வுன்னினன் அப்பொழு
திடவநா யகன்இத்
திருக்கி ளர்வனத் திருப்பதே
நலனெனச் செப்பி,
அருக்க நன்மலர் வேணிய
னடிபணிந் தைய! 36

203 இத்த லப்பெயர் என்பெய
ராகஈங் குறையும்
அத்த நின்றிரு நாமமும்
அதற்கிசை பெயரா
உத்த மப்புலி யிடபபு
ரேசனென் றுரைப்ப
நித்த மாவரந் தருகெனக்
கொடுத்துப்பின் நிமலன் 37

204 இன்னும் ஓர்வரந் தருதும்யாம்
என்னெனில் எமக்கு
மன்னு தென்றிசை விடுமொரு
கணையெல்லை வனசந்
துன்னு தீர்த்தமொன் றுன்பெய
ராற்கண்டு சுருதி
பன்னி அப்புன லால்எமை
ஆட்டெனப் பணிந்து 38

205 இடவ தீர்த்தத்தைத் தெரிசிக்கிற்
பரிசிக்கி லினிமை
தொடர வுட்கொளிற் குடைந்திடின்
அறமுதற் றொகைநா
லுடைய மெய்ப்பயன் அடைவரீ
துண்மையென் றுரைத்து
வடிவின் மேம்படு நந்தியை
மனமகிழ் வித்து 39

206 அம்பி கைகுர வங்கமழ்
குழலணங் கவன்சேய்
தும்பி மாமுகன் தன்னொடங்
கமர்ந்தனன் சுருதி
எம்பி ரானணி ஆப்பனூ
ரிறையவன் இமையோர்
தம்பி ரானுமை தனிப்பிரான்
சராசரத் தலைவன் 40

சந்த விருத்தம்

தான தான தனதன தத்தா

207 ஆதி நாளி லிடவபு ரப்பேர்
ஆசை காதை வரவிது சொற்றோர்
ஈதி லேசொ லொருகவி கற்றோர்
ஈறி லாத பொருள்செவி யுற்றோர்
வேத நாதர் கயிலை வரைக்கே
மேவி வாழ்வ ரெனமுனி வர்க்கே
சூத னோத அவனிரு பொற்றாள்
சூடி னார்கள் தமதுசி ரத்தே 41

இடவபுரச் சருக்கம் முற்றிற்று

## இடவபுரச் சருக்கம்

1 பெற்றம் - எருது; பெற்ற நகர் - இடவபுரம்.

2 நெடுவேணி - நீண்ட சடைமுடி.

3 வீறாநிலத் தேவர் - மேம்பாடுடைய அந்தணர், பூசுரர்; திரிகாலக்கருமம் - காலை, பகல், மாலை என முக்காலத்தும் செய்யும் வேள்வி முதலியன; பாறு ஆடும் - கழுகுகள் சூழ்கின்ற.

4 பெருந்தூர் இக்கு முதலான பைங்கூழ் - பெரிய வேர்களை உடைய கரும்பு முதலிய பசிய பயிர்கள்; வளம் பாரிக்கும் - வளம் அதிகரிக்கும்; பலம் - பயன்; பூரிக்கும் - மிகுந்து விளங்கும்; பொழிந்தூறும் - ஊறிப் பொழியும் என மாறுக.

6 கூவல் - கிணறு; பொருவில் ஆன்இனம் - இணையற்ற பசுக்கூட்டம்; நாத்தலை - நாவின் கண்; தலைப் படல் - எதிர்ப்படல்; அஃகி - சுருங்கி; சிறுவிலைப் படு நாள் - பஞ்சகாலம்.

9 ஈற்றடியில் நெற்பயிர்க்கண் இறைப்பது என்று பிரிக்க.

10 கண் வாய் - மதகு.
11 விப்பிரர் - அந்தணர்.

12 நாலு நூல் - நான்கு வேதங்கள்; அங்க நூல் - வேதாங்க நூல்கள்; அயுத்தம் - தகுதியற்றது.

13 கொடு இரந்தனன் - கொண்டு இரந்தனன் இடைக் குறை; நன்றில்லாதவர் - நற்செயலற்ற அவ் வேதியர்; வன்மை இணம்பி - கடுமையாப் பேசி; ஒல்லை - விரைவில்.

14 சிந்தை தெருமந்து - மனம் சுலங்சி.

15 தாருவன விப்பிரர் - தாருகாவனத்து முனிவர்கள்; வலி அட்ட - வலிமையை அழித்த; சம்பு - சிவ பெருமான்.

16 மறைநூல் - வேதங்கள்; அன்று என்றும் மற்று இதாமென்றும் உண்மையறியாது இளைப்ப - மூலப்பொருள் இஃதன்று என்றும் மற்றும் இஃது ஆம் என்றும் உண்மையை உணர்தற்கு அறியாது மயங்கி நிற்க

17 இசைய - ஆகமமுறைக்குப் பொருந்துமாறு; இவ்வூர் நசை ஒழித்து - இவ்வூர்மீதான விருப்பத்தை நீக்கி.

15 தொழுகுலம் - தொழத் தகுந்தகுலம்; பழுதியற்றி - தீச்செயல் புரிந்து; பதகர் - இழிந்தவர்; உருமினோடு - இடிமின்னலுடன்,

19 கீலக நாயகன் - இலிங்கேசன்; ஏவரும் - எவரும்.

20 துன்று நீள் நெறி - பொருந்திய நெடுவழி.

21 துனை - விரைவு; சுருதிமுனைவன்-வேதமுதல்வன்.

22 தணந்து - நீக்கி.

23 சிற்பரன் - சிவபெருமான்.

24 பதர் பிடிப்ப - பதராகிப் போக; பனவர்-பார்ப்பனர்,

25 அறு தொழிற் குரியர் - ஓதல் முதலிய ஆறு தொழில் களுக்கும் உரிய பார்ப்பனர்.

27 உகமுடிவு - யுகத்தின் இறுதிக்காலம்; வெருவ - அஞ்சி நடுங்க; பாதலத்து அரவு — பாதாளத்து

உறையும் பாம்பு, ஆதிசேடன்; எண்டிக்கயம் எட்டுத்-திசை யானைகள்.

29 சிலை மழை - கல் மழை.

31 இரப்புரை - வேண்டிக் கேட்ட உரை;
அருந்தியுற்று - விருப்புற்று.

33 உலப்பார் - அழிவார்,

34 பிிர - துணிபட; உதிரமாரி - குருதி மழை.

35 தேசிலா வகை - பொலிவிழந்த வகை;
இதுமுதல் ஆறுபாடல்கள் குளகம்.

36 மருக்கமழ்-மணம் கமழ்கின்ற; கொன்றை வன மலி-கொன்றைக் காடுகள் மிகுந்த; இடவ நாயகன் - நந்தியெம் பெருமான்; அருக்க நாண்மலர் - எருக்க மலர்.

39 பரிசிக்கில் - தொட்டால்; குடைந்திடில் - நீராடில்:
அறமுதல் தொகை நாலு - அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு பொருள்கள்.

40 தும்பி மாமுகன் - விநாயகன்; சராசரம் - இயங்குவனவும், இயங்காதனவும் ஆகிய அனைத்தும்.

---

இடவபுரச் சருக்கம் முற்றிற்று

## அன்ன வினோதச் சருக்கம்

இறைவன் ஆணைப்படி ஆப்பனூர் நகர் நீங்கி விடையடிச்சுவடுபற்றிச் சைவவேதியன் மனையாளொடும் வையை வட கரையில் உள்ள இடவபுரம் வந்தடைந்தான். அங்குத் தனக்கு அறிந்தார் யாரும் இல்லையாகலின் இறைவனுக்குப் படைக்கவும் தான் உண்ணவும் உணவிற்கு வழி வேண்டி இறைவனைத் துதித்தான். இறைவன் எழுந்தருளி "உள்ளன்பொடு வையை மணலெடுந்து உலையிலிட்டுச் சமைத்தால் உணவாகும். இதைப் பிறர்க்குரைத்தால் மணல் சோறாகாது" என்று கூறியருள, அதன்படி நாளும் உணவு சமைத்து இறைவனுக்குப் படைத்துத் தானும் மனையாளோடு உண்டிருந்தான். ஒருநாள் அவன்மனையாள் ஊரெங்கும் பஞ்சம் நிலவத் தமக்குமட்டும் இனிய உணவு கிட்டும் வகை யாதென வினவ, வேதியன் இறைவன் கூற்றை எண்ணிச் சொல்ல மறுத்தான். அவளோ உண்மை கூறாவிடில் உயிர் துறப்பேன் என அச்சுறுத்தினாள். பழிக்கு அஞ்சி அவன் உண்மையைக் கூறி விட்டான்.

மறுநாள் வழக்கம் போல் மணலெடுத்து உலையேற்ற அது சோறாகாமல் மணலாகவே இருந்தது. வேதியன் மனம் வருந்தி இறைவனை இறைஞ்சி வேண்ட, இறைவன் அசரீரியாக 'மதுரை மன்னனிடம் செல்; முன்னாள் கனவில் அவனுக்கு யாம் உன் நிலை உணர்த்தியுள்ளோம்'' என்றருளிச் செய்தான். வேதியன் மகிழ்ந்து மன்னன் சுகுணனையணுகி நடந்ததைக் கூற, அவன் உள்ளம் உருகி இறைவனுக்குக் கோவிலும் வேதியனுக்கு மாளிகையும் கோவிலைச் சுற்றி நகரமும் அமைத்துக் கொடுத்தான். மணற்சோறு ஏற்றுக் கொண்டமையான் இறைவன் அன்ன விநோதன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டான்.

## அன்ன வினோதச் சருக்கம்

### அறுசீர் விருத்தம்

208 பின்னர் முனிவர் அப்பனூர்ப்
பெருமான் இடவ புரநாதன்
அன்ன வினோத னெனுந்திருப்பேர்
அடைந்த நிலையீங் கருளென்னச்
சொன்ன மொழியாற் சூதமுனி
சுடர்ச்செஞ் சடில முடிதுளக்கிக்
கன்னல் மதுரம் பழுத்தனைய
கதைநீர் கேண்மின் எனமொழிவான். 1

209 உம்பர் தொழுங்கந் தரன்ஆப்ப
னூர்நின் றிடவ புரத்தினமர்ந்
திம்பர் வணங்க இருந்ததற் பின்
இறைவன் அடியர்ச் சனைபுரியும்
நம்பி சிவவே தியர்திலகன்
நலங்கூர் குடும்பத் துடனடந்தே
அம்பொன் சடிலர் அளித்ததிரு
அடையா ளத்தின் நெறிச்செல்வோன். 2

210 நடக்கும் வழிமேல் அரிபிரமர்
நயனங் களிகூர் தரவணங்கக்
கிடக்கும் தரும விடைப்பெருமான்
கிளர்காற் சுவடும் பொற்பூவும்
தடக்குங் குமப்பூண் முலைமனையாள்
தன்பாற் காட்டி விரைந்து விண்ணீர்
அடக்குஞ் சடையார் சேவடியீ
தார்க்குக் கிடைக்கும் எனத்தொழுவான். 3

211 தொழுது தொழுது மணிவிழிநீர்
துளும்பத் துளும்ப நடித்துநடித்
தழுது குழைந்துள் உருகிமகிழ்ந்
தாரா மையினா லடிச்சுவடு
முழுதுங் கண்மே லொற்றி யொற்றி
முதிர்கற் புடையா ளுடன்சிவன்பேர்
எழுது நாவ னருள்வழிச்சென்
றிடவ புரத்துள் அடைந்தானால். 4

212 அந்தண் கயிலை மலைமருந்தை
அமுதை அமரர் சிகாமணியை
செந்தண் பவளச் சிவக்கொழுந்தைத்
திருவாப் புடைய பெருமானை
மைந்தர் மலைமா தொடுமிடவ
மடுநீ ரொடுகண் டதிசயித்துச்
சிந்தை மலர்ந்து குவித்திருகை
சிரமேற் சூடி ஈதுரைப்பான். 5

213 வாயுள் இருக்கும் நான்மறையோய்
வானுள் இருக்கும் பெருந்தேவர்
ஆயு ளிருக்கும் மணிமிடற்றோய்
அறிவுள் இருக்கும் திருவுருவோய்
வேயுள் இருக்கும் மணிப்பசுந்தேன்
விமலை குரவங் கமழ்குழலெந்
தாயுள் இருக்கும் ஒருபுறத்தோய்
தந்தாய் வழிநான் வந்தேனால். 6

214 வந்தேன் உனையான் ஆட்டுதற்கு
வையை நீருண் டருச்சனைக்குச்
செந்தேன் மலருண் டிவ்வனத்தில்
தேவே அரிய திருவமுதுக்
கந்தோ யாதுண் டென்னிடையே
அறியாய் கொல்லோ சிறுவிலைநான்
தந்தா தரிப்பார் யார்யானித்
தலத்தில் அறிந்த துணையன்றோ. 7

215 உண்ணா அமுதே உனைப்பூசித்
துண்ப தெனது விருத்தியவை
பண்ணா தொழியிற் சீவன மெப்
படியென் றிரந்து மொழிந்திடலுங்
கண்ணாற் காண அருவுருவின்
காட்சி யிலிங்கத் திடைத்தோன்றிப்
பண்ணார் மறையோய் வந்தனையோ
பாவை யோடும் எனவினவி 8

216 உரிய வாப்ப னூரிடைநின்
றுயர்வெள் விடையின் நடந்திங்கண்
மருவி ஆட்சி பெறவிருந்தேம்
வருந்தி விடைத்தே வெனைவந்தித்
தரிய தலமா கியமூன்றும்
அடியேன் பெயர்கொண் டருளுகெனப்
பரிவின் உரைப்ப மகிழ்ந்துவரம்
பாலித் தேமிப் பார்விளங்க. 9

217 இப்பால் நீவேண் டுறும்பொருளுக்
கிந்த வேக வதிமணலுன்
கைப்பால் வாரிக் கொடுவனைமட்
கலனிட் டறலிட் டுலையேற்றி
வெப்பார் காட்டத் தெரிமூட்டி
மெய்யன் புறுத்தி யடிலமுதாம்
தப்பா தநனை யெமக்குநிவே
தனஞ்செய் தகையிற் கொடுபோகி 10

218 கற்புக் குரிய துணைவியொடுங்
காதற் குரிய புதல்வரொடும்
அற்புக் குரிய நீயுமகிழ்ந்
தருந்தி யருந்தி எமைவழிபட்
டிற்புக் குறைவாய் ஈதியார்க்கும்
இசையேல் இவையெப் பகல்வெளியாஞ்
சொற்புக் குறும்அப் பகலடிசில்
தோன்றா திருக்குஞ் சொன்னேமால். 11

219 ஈதெ லாம்உன் பொருட்டுரைத்தேம்
என்றே இலிங்கத் துட்புகுத
நாதன் இடப புரப்பரமன்
நல்குங் கருணைத் திறம்போற்றிச்
சீத மலிவை யையிற் படிந்து
திருவெண் மணல்வேண் டுபவெடுத்துக்
காதல் நீர்விட் டுலைப் பெய்து
கனல்வாய்த் துவரிட் டடப்புகுந்தான். 12

20 அடும்போ தரனை நஞ்சமு
தாக்கும் மணியை அரும்பொருளை
நெடும்போ துளத்தில் நினைத்திடலும்
நெற்பா லடிசில் எனப்பாகம்
படும்போ தன்ன மறியாத
பரனை ஆட்டி நறுந்தேன்வாய்
விடும்போ தர்ச்சித் தன்னமும்நி
வேதித்திறைஞ்சி மனைபுகுந்தான். 13

221 அணியாப் புடையார் கொடுத்ததிரு
அமுதைக் குடும்பத் துடனருந்தித்
தணியாப் பசிதீர்ந் தகத்துவகை
தழைத்தூர் உலகம் வினவாதப்
பணியாற் சைவன் இயற்றிவரும்
நாளில் ஒருநாள் பரந்துபசிப்
பிணியால் தமிழ்நாட் டுயிர்வருந்தும்
பெற்றி பார்த்தங் கவன்மனையாள் 14

222 காந்த ளிடத்தில் அவனிருகண்
களிப்பச் சிலம்பு புலம்பநறுஞ்
சாந்த மணிந்த தனந்ததும்பத்
ததும்ப நடந்து வரிக்குயிலும்
வாய்ந்த கிளியும் வாயடைப்ப
மதுரந் துளிப்ப மலைமுருக்கிற்
சேந்த பவள மணிச்செவ்வாய்
திறந்தாள் திறந்தீங் கிவைகேட்பாள். 15

223 இவ்வூர் மனித்தர் பசியெனுந்தீக்
கிலம்பா டெனுநெய் இறைத்தெழுப்பி
எவ்வூர் புகுவோம் உய்வதற்கென்
றியம்ப யாமிவ் வூர்புகுந்தேங்
கைவாய் சிவப்ப யானுலக்கை
ஓச்சா தில்லங் காத்திருப்பத்
தெய்வீ கப்பே ரமுததிகந்
தினமும் தருவ தெவனென்றாள். 16

222 அமுதின் உரைக்கு மறுத்தெதிர் சொல்
லாடான் சிறுபோ திருந்துமலர்க்
குமுத மணிவாய்த் திருவேயான்
கூறில் நாளை யமுதுதவா
நமது விருத்தி கெடும்பசித்தீ
நமையுந் தொடர்ந்து சுடுமதனாற்
சுமதி யுடையாய் கேளற்க
சும்மா இருநீ யெனச்சொன்னான் 17

225 கேட்டாள் மதிவாள் நுதற்குறுவேர்
கிளர்ந்தாள் புகைந்தாள் இதழ்துடித்தாள்
தீட்டா வேற்கண் கடைசிவந்தாள்
சிரித்தாள் புருவம் மேல்நெரித்தாள்
நாட்டா மரைமென் முகம்புலர்ந்தாள்
நண்பா நன்று நன்றுசொல்லிக்
காட்டாய் எனிலியா னின்னேயுன்
கழற்கீழ் விடுவன் உயிரென்றாள். 18

226 அந்த மாற்றம் செவிகுடைந்துள்
ஆவி பதைப்ப மனம்பதைப்பப்
பந்த யாக்கை நடுங்கிநம்பார்ப்
பனியே பனிமா மதிக்கண்ணி
எந்தை ஆப்ப னூரிடைப்பண்
டியற்றுஞ் செயலும் அறிதியவ்வூர்ச்
சிந்தை நீத்திவ் விடையடைந்த
செயலுந் தெரிதி தெரிதியால். 19

227 பின்னர் அணியாப் புடையபிரான்
பெருந்தாள் துணைகைக் குவித்திறைஞ்சி
என்னை வருத்மும் பசிப்பிணிதீர்த்
தாளென் றிரப்ப எதிர்தோன்றிச்
சொன்ன உபாயம் என்சொல்கேன்
சொன்னாற் சுரரும் அதிசயிப்பார்
அன்ன நடையாய் நீகேட்கில்
அனந்தா னந்தம் அடைதியால். 20

228 அன்ன உபாயம் யாதெளில்நந்
தளைநீர் வேக வாதிமணலை
உன்ன திருகை நிரம்பவெடுத்
துலைவைத் தடிலோ தனமாகும்
பின்னர் நிவேதித் தருந்திதனைப்
பிறருக் குரையேல் உரைக்கினதி
துன்னும் மணலாம் எனச்சொன்னான்
சொன்னேன் சொன்னே னெனலோடும். 21

229 செவ்வாய்க் கமுதா யினஇந்நாட்
செவிக்கும் அமுதா யினவென்றே
ஐவா யரவம் அணிந்தபிரான்
அருளும் அழகன் அருச்சனைசெய்
மெய்வாய் நிறைவே தியனன்பும்
வியந்தா னந்தக் கடல்படிந்தாள்
சைவா கமநூல் முழுதுணர்ந்தோன்
சாவாத் துயரக் கடல்வீழ்ந்தான். 22

**வேறு**

230 அப்ப கல்கழிந் தெதிர்ப்பகல்
இப்பகல் அடியவர்க் கெளியானை
முப்ப ரம்பொருள் முதல்வனை
வழிபடின் முதிர்புனல் மலர்போலும்
செப்பும் இன்னமி தமைப்பதெப்
படியெனத் தெருமர லுறுங்காலை
ஒப்பில் கற்புடை மறைக்கொடி
பதிக்கிவை உய்த்துரைத் தனள்மாதோ. 23

231 ஐய நீயுயிர் உடலியான்
இதனில்வே றாயதென் மருளெல்மற்
றுய்ய நம்பொருட் டுரைத்த
சொன்மையால் ஒருவரும் அறியார்நீர்
வையை நன்னதி படிந்துமுன்
போலுலை வைத்தடின் மணற்சோறாம்
பொய்யு றாதரன் அருள்மொழி
இம்மெனப் போகெனப் புகன்றானால்.24

232 அம்மொ ழிப்படி ஈசனைப்
பூசைசெய் யருத்திமுன் ஈர்த்தேகச்
செம்ம னத்தவன் கடன்கழீஇ
அந்நதித் திருமணல் உலைவாய்ப்பெய்
திம்மெ னப்புகுந் தட்டில்வாய்த்
துவர்முழு தெரித்தெரித் தனங்காணா
தும்மை நற்பயன் உலந்ததென்
றவ்வெரி யுதரமுற் றெழச்சோர்வான். 25

233 சன்னி திக்கண்வந் தடியற
வீழ்தருத் தகைமையிற் பணிந்தேத்தி
என்னி னிச்சொல்வ துனக்கியான்
யாவையு மிருந்திடத் தறிவாய்நீ
நென்ன லிற்பழிக் கஞ்சிநின்
றுணர்த்தினன் நேரிழை நசையன்றாற்
கன்னி உத்தமிக் கொருபுறம்
அளித்தநங் கடவுளே எனநாதன் 26

234 வருத்தம் ஒன்றுறில் அடியவர்
விரைந்தெதிர் வந்துநின் றிரந்தோதுங்
கருத்த றிந்தவை முடிப்பது
விரதமாங் கண்ணுதல் எதிர்தோன்றி
அருத்தி கூர்தரும் மறையவ
னைவருள் அதிகவுத் தமனேள்நீ
திருத்த வையையைந் துறைமணல்
அமுதடுஞ் செயலினி முடியாதால் 27

235 நீயி ரக்குமிக் குறைக்கியான்
நெருநலே நீணிலத் துயிர்க்கெல்லாந்
தாயி ரக்கமிக் குள்ளவன்
சுருணனாந் தண்கதிர் மருமான்பாற்
போயி ரக்கமுற் றிரவெதிர்
கனவிடைப் புகன்றதுண் டவன்பால்நன்
றாயு ரைத்தியாம் வந்ததும்
இருந்ததும் அடைவினிற்
போயென்றான். 28

236 என்ற நாதனை வணங்கினன்
இறைவனும் இலிங்கத்துண்
மறைந்தான்பின்
தென்றல் நாடனைக் காண்பதற்
கந்தணன் சென்றனன் செலுமுன்னர்
மின்ற வாமுடிக் கோமான்
பேரவை மேவுமந் திரரோடும்
அன்றி ராக்கன விடைத்தனிக்
கண்டபே ரதிசயம் நவின்றானால். 29

237 வேத விப்பிர வேடராய்
விழிமணி மெய்யின ராய்ப்பூதி
சாத னத்தவ நடையராய்
ஒருவர்தாந் தனித்துவத் தெனைவேந்தே
நீத மற்றபே ராப்பனூர்
எனும்நகர் நின்றுநம் மனையாளுங்
காதன் மக்களும் வீடிலோம்
வையையின் கரைமருங் கிருக்கின்றேம். 30

238 அன்றி யும்பசித் திருந்தனம்
அமுதினுக் கடைந்தனம் நின்பாலியாம்
என்று கூறியங் ஙனமறைந்
தேகினர் என்றலுங் கனிந்தூறும்

துன்றி ருங்கனிச் சுவையெனச்
செவிப்புலன் சுவைப்பமந் திரர்யாரும்
நன்று நண்றென மகிழ்ந்தணி
ஆப்பனூர் நாதனைப் புகழ்காலை 31

239 ஆதி யாகம வேதியன்
அரசவை வைகியங் ஙனம்வைகி
ஈதி யாப்புடை நாயகர்
திருவெண்ணீ றெனக்கரங் குவித்தேற்று
நீதி யால்நுதல் நிலவுறத்
தரித்தனன்; நிமலனர்ச் சகன்பின்னர்
சோதி வான்மதி வேந்தகேள்
அற்புதஞ் சொல்லுகேன் எனச்
சொல்வான். 32

240 மற்று நீதியில் ஆப்பனூர்
விடுத்ததும் வரும்வழிக் கடையாளஞ்
சொற்ற துந்திரு மனையவ
ளுடன்குறி தொடர்த்துபின் படர்ந்திங்ஙண்
உற்ற துந்துறை மணலமு
துகந்ததும் உண்மையை அவன்பால்போய்
அற்ற தும்பரன் விடைகொடுத்
துரைத்ததும் அறைந்தனன் அயராதே. 33

24' வேந்தர் சேகரன் குதூகலித்
. துருகினன் வேத்தவை யுளர்கோமான்
சாந்த நீற்றினன் கனவுரைபு
கன்றதுஞ் சைவநூற் சிகையாளன்
கூர்ந்து வந்திவை பகர்ந்ததுஞ்
சருக்கரைக் குன்றின்றேன் மழைநான்ற
தாந்த கைத்தென மகிழ்ந்தனர்
புகழ்ந்தனர் ஆப்புடை யவர்நாமம். 34

242 இரைத்த காதல்முன் ஈர்த்தெழ
வேதிய னெழுந்துமுன் செலச்சாந்த
வரைத்த ரேசனும் அமைச்சர்பின்
வரப்பெரு வரைப்புறத் திரைக்கையால்
அரைத்த சாந்தணிந் தலர்சொரிந்
தமுதுமங் கருத்தியார்த் தெழும்வையைக்
கரைத்த னிச்சிவக் கொழுந்தினை
விரைந்துசெல் காவலன் கண்டானால். 35

243 கண்ட கட்பொறி வழியெழும்
புனலுரங் கலந்தமுத் தீரத்தார்
வண்ட லிட்டிழி தாமயிர்
முகிழ்ப்பெழ மலர்க்கரங் குவித்தேகித்
தொண்ட ருக்கெளி வருங்கரு
ணையங்கழல் துணையடி முடிசூடத்
தண்டெ னத்தரை மிசைபணிந்
தெழுந்தருள் தழைத்திடக்
கரைந்தானால். 36

கொச்சகம்

244 விரையிருக்குஞ் செழுங்கமல மேலிருக்கும்
பொருளுணரா
உரையிருக்குஞ் சதுர்மறையின் உச்சியிருக்
கத்தனிவெள்
வரையிருக்கத் தொழுமடியார் மனமிருக்க
மணிவையைக்
கரையிருக்குஞ் செயலென்னோ கரைகடந்த
பரமேட்டி. 37

245 ஆடளிக்கு நறுந்தேன்பெய் அம்புயற்கும்
பாற்கடல்வாய்
நீடளிக்குள் அறிதுயில்கொள் நெடியவர்க்கும்
கற்பாந்த
நாடளிக்கும் பிடும்யோக நற்றவர்க்கும்
மற்றவர்க்கும்
வீடளிக்கும் நீகனவில் வீடிரந்த செயலென்னே. 38

246 கமழ்முலைச்சிற் றரும்பன்ன மூரலிளங்
கனியமலை
சமைவுறத்தன் னிடத்திருப்பத் தனியோத
நஞ்சொன்றி
நிமிர்நற்கந் தரமிருத்தி நிறைதருவின்
னாட்டவர்க்கும்
அமுதளிக்கும் நீகளவில் அமுதிரக்கும்
பரிசென்னே, 39

247 என்றினைய வகைபன்னி ஈறில்களிப்
படைந்திறைவன்
துன்றியநுண் மதியமைச்சர் தம்மொடும்பொன்
சொரிகொன்றை
மன்றன்மலர்த் தருநிழலுள் வதிபவர்க்கும்
மலைமகட்கும்
நன்றமைபொற் றிருக்கோயில் இனிதெடுக்க
நனிநினைந்தான். 40

கலித்துறை

248 சிற்ப நூற்பொருள் முழுதுங்
கைகொடு தேற்றுங்
கற்பி னார்தமை யழைத்திரு
கண்சிறைப் படுத்தும்
பொற்பி னான்மக மேருவின்
முடிமிசைப் புனைய
நற்பொன் மாமுடி வகுத்தென
மானநன் கமைத்து 41

249 அருத்த மண்டபம் ஆதிமா
மண்டபம் அறுகால்
பொருத்து பீடிகை மண்டபம்
பொன்னனா ராடும்
நிருத்த மண்டபம் திருமதில்
கோபுரம் நிமலற்
கருத்தி யான்முடித் துமைக்குமப்
படிவகுத் தமைத்து. 42

250 பானு முற்படப் பகர்பரி
வாரவா னவர்க்கு
மேனி லத்தினல் லுறையுளும்
விதிமுறை திருத்தி
வானு யர்த்தவெள் விடைக்கொடி
மரம்பலி பீடத்
தானி யற்றினன் வேறுள
பணிகளுஞ் சமைத்து. 43

251 நந்தி தீர்த்தத்தின் ஞாங்கர்சூழ்
படித்துறை நவிற்றிச்
சந்தி யாமடம் கண்டுகற்
றளிப்புறஞ் சாதி
சிந்து மாதவி வலம்புரி
மணவிரஞ் சிறைத்தேன்
வந்து சூழ்மலர் மலியநந்
தனவனம் வைத்து. 44

252 கிருத மாலையின் நீர்ப்புக
வயல்வளங் கிளக்கும்
மருத நன்னில வரைப்பினில்
ஊர்களும் வழங்கிப்
பெரிது பூசனை இயற்றிப்பின்
பேரியந் துவைப்பக்
கருது மன்பர்கண் களித்திட
நல்விழாக் கண்டு. 45

253 இன்ப முற்றடி யவர்குடி
புரப்பதற் கிசைந்து
முன்பு வையைவெண் மணலமு
துகந்தருள் முறையால்
என்பு நெக்குநின் றிடவபு
ரேசனை இறைஞ்சி
அன்பி னாலெடுத் தன்னவி
னோதனென் றழைத்தான். 46

254 சன்னி தித்தெரு வீதியின்
அருச்சகன் றனக்கங்
குன்ன தத்திரு மாளிகை
எடுத்துமற் றுள்ள
நன்ன லத்தகத் தடியவர்க்
குறையுளும் நவின்று
மன்ன மெய்த்திரு வைதிகர்
நியமமும் வகுத்து 47

255 நீதி மன்னவர் வணிகர்பின்
னவர்குடி நெருங்கும்
வீதி துன்னுநல் ஆவணம்
அமைத்துநீள் விண்ணோர்
கோதில் நன்னகர் எனும்படி
செய்தனன் குளிர்வெண்
சோதி மின்னிய மதிக்குலக்
கோமகன் சுகுணன். 48

256 இத்த கைச்சிவ தருமநற்
பணிசெயு மியல்பாற்
சுத்த முத்தமிழ் நாடெலாம்
மழைவளஞ் சுரப்ப
மொய்த்த பல்லுயிர் புரக்குநாள்
தன்குலம் முழுதோம்
புத்த மத்தினி யான்மக
வீன்றினி துவந்தான். 49

257 வண்மை யுங்குல மானமும்
பொறைமையும் வழுவா
உண்மை யுஞ்சிவ தருமமும்
புகழ்மையு முடையாத்
திண்மை யுத்தனி மகவுடன்
வளர்த்தணி திகழ்பார்
எண்ம தங்கயத் தொடுஞ்சுமந்
தரசுவீற் றிருந்தான். 50

## சந்த விருத்தம்

தான தன்னன தானன தந்தனா

258 ஈறில் அன்னவி னோதனெ னுங்கதை
ஈது சொன்னவர் கேள்விமு யன்றுளோர்
தேறு நன்னிதி யாயுள்பெ ரும்புகழ்
சேர்வர் இன்னலு றார்பசி கொண்டிரார்
மாறில் மன்னர்ச மானரெ னும்படி
வாழ்வ ரென்னவு மாதவர் முன்சொனார்
நீறு மின்னிய மேனியன் அந்தணர்
நேய முன்னிய சூதன்ம கிழ்ந்தரோ 51

அன்ன வினோதச் சருக்கம் முற்றிற்று

## அன்னவினோதச் சருக்கம்

1 சடிலம் - சடை; துளக்கி - அசைத்து.

2 கந்தரன் - கழுத்தை உடையவன், நீலகண்டன்; இம்பர் - இவ்வுலகத்தோர்.

3 கிளர்கால் சுவடு - ஒளிரும் கால் சுவடு

4 சிவன் பேரெழுதுநாவன் - சிவன் பெயரை உச்சரிக்கும் நாவினன்.

5 அந்தண் கயிலை - அழகிய குளிர்ச்சி பொருந்திய கயிலாயம்.

6 வேய் - மூங்கில்; விமலை - பராசக்தி.

7 சூட்டுதற்கு - நீராட்டுதற்கு; சிறுவிலைநாள் - பஞ்சம் நிலவும் நாள்.

8 விருத்தி - ஒழுக்கம்.

9 வரம் பாலித்தோம் - வரம் அருளினோம்.

10 வனை மட்கலன் - வனையப்பட்ட மண்சட்டி ; அறல் - நீர்; காட்டம் - விறகு; வெப்பார் காட்டம் - காய்ந்த விறகு.

11 அற்புக்குரிய - அன்பிற்கு உரிய; இசையேல் - சொல்லற்க; பா. பே. துணையோடும்.

12 சீதமலி வையை-குளிர்ச்சி பொருந்திய வையை நதி துவர் - விறகு; பா. பே. : அடற் புகுந்தான்.

13 அன்னம் அறியாத - அன்னத்தை வாகனமாக உடைய பிரமன் அறியாத.

15 காந்தன் - கணவன்; மலைமுருக்கு - பலாசு; சேந்த - சிவந்த.

16 மனித்தர் - மனிதர்; இலம்பாடு - வறுமை; உலக்கை ஓச்சாது - உலக்கையாற் குத்தாது.

17 சுமதியுடையாய் - நல்லறிவினை உடையாய்; பா. பே. எனச்சொல்வான்.

18 புகைந்தாள் - மனஎரிச்சலுற்றாள்; நாட்டாமரை மென்முகம் - அன்றலர்ந்த தாமரையைப் போன்ற மென்மையான முகம்;

20 சுரர் - தேவர்; அனந்தானந்தம் - பெருமகிழ்ச்சி.

21 நந்து - சங்குப்பூச்சி; ஓதனம் - சோறு; பா. பே: உன்ன தார்வம் நிரம்ப.

22 ஐவாய் அரவம் - ஐந்து தலையுடைய நாகம்

23 எதிர்ப் பகல்; — மறுநாள் பகல்; தெருமரலுறல் கலக்கம்உறுதல்.

24 இம்மென - விரைந்து.

25 அனங்காணாது - சோறு உண்ணாமல்; உலந்தது - அழிந்தது; எரிஉதரம்முற்றெழ - வயிறு முற்றும் நெருப்பு எழும்படியாக. பசி உண்டாக என்றபடி.

21 பழிக்கஞ்சி - மனையாள் மடிவாள் என்ற பழிக்கு அஞ்சி.

27 இரந்து ஓதும்-வேண்டிக் கூறும்; அருத்தி-விருப்பம்.

28 தண்கதிர் மருமான் - சந்திரன் வழித் தோன்றல்.

29 தென்றல்நாடன் - பாண்டியன்; மின்றவாமுடி - ஒளிகுன்றாத மணிமுடி; மந்திரர்—அமைச்சர்.

30 வேதவிப்பிர வேடராய்; வேதம் பயிலும் பார்ப்பனர் வேடத்தவராய் ; நீதம் - நீதி, அறம்.

31 துன்றிருங்கனி - நெருங்கியசிறந்த கனி.

35 இரைத்த காதல் - பொங்கிய அன்பு; சாந்தவரை - பொதிய மலை; தரேசன் - மன்னன்.

36 கட்பொறி வழி எழும்புனல் - கண்ணாகிய புலனி லிருந்து தோன்றும் நீர்; உரம் கலந்த முத்து ஈரத்தார் - மார்பைச் சேர்ந்த நித்திலங்களால் ஆகிய குளிர்ந்த மாலையில்;வண்டலிட்டு இழிதர-சுழித்துக் கொண்டு இறங்க; மயிர் முகிழ்ப்பு எழ - மயிர் கூச்செரிப்ப.

37 விரை - மணம்; செழுங்கமல மேலிருக்கும் பொருள்- செம்மையான தாமரையின் மேல் இருக்கும் பிரமன்; சதுர்மறையின் உச்சி - நான்கு வேதங்களின் முடிவு; வெள்வரை - பனிமலை.

38 ஆடளி - ஆடுகின்ற வண்டு; அம்புயன் - பிரமன்; நீடளி— நீண்ட படுக்கை; நெடியவன் - திருமால்; கற்பாந்தம் - கற்பகாலத்து இறுதிவரை; நாள்தளி- தன் இறுதி நாளைத் தவிர்த்து.

39 மூரல்-புன்சிரிப்பு; ஓதநஞ்சு--பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய நஞ்சு; கந்தரம் - கழுத்து.

41 கற்பினார் - கல்வியறிவுடையவர். ஈண்டுச் சிற்பி கள்; மானம் - விமானம்.

42 ஆதிமாமண்டபம் - முதலில் உள்ள மகா மண்டபம் பொன்னனார் - நாட்டிய மகளிர்.

43 பானு - சூரியன்.

44 ஞாங்கர் - பக்கம்; நவிற்றி - அமைத்து ; பா. பே. சந்தியா மண்டகம்.

45 கிருத மாலை - வையை; கிளக்கும் - விளங்கித் தோன்றும்.

46 மன்ன - நிலைபெற; நியமம் - தெரு.

48 ஆவணம் - கடைத்தெரு; கோதில் - குற்றமற்ற

50 மதங்கயம் - மதம் கொண்ட யானை.

அன்னவினோதச் சருக்கம் முற்றிற்று.

## சந்திரசேனச் சருக்கம்

அவந்தி நாட்டையாண்ட சந்திரசேனன் என்னும் மன்னன் கன்னியரின்பமே கருதியமுத்தி என வாழ்ந்து வரும் நாளில், ஒருநாள் மாலை சுகுணன் என்னும் அமைச்சனுடன் உப்பரிகையில் இருக்கத் தெருவில் சென்ற எழில்மிகுந்த ஓர் அந்தணப் பெண்ணைக் கண்டு அவள்மேல் தீராக்காமம் கொண்டான். எவ்வாற் றேனும் அவளை அடையத்துணிந்து அவளைக் கொண ரும்படி அமைச்சனைப் பணித்தான். சுகுணன் இராப் பொழுதில் ஊரடங்கியபின் அவள் மனைக்குச்சென்று உறங்கிக்கொண்டிருந்த அவள் கணவனைக்கொன்று அவளைக் கைப்பற்றி அரசன் முன் கொண்டுவிட்டான். மன்னன் காதல்மொழி பேசி நெருங்க அவள் வெறுத்துப் பழித்தாள். வன்மையாக அவன் அவளை நெருங்க முற்படப் பிரமபாவம் அவனையும் அமைச்சனையும் பிடித்து வெருட்டியது அதற்கு அஞ்சிய இருவரும் ஓடிக் கேதாரம், காசி சீசைலம் முதலிய தலங்களுக்கும் சென்று இறுதியில் தில்லை வந்தடைந்தனர். தில்லை யில் சிவகங்கைத் தீர்த்தக்கரையில் அகத்தி யரைக் கண்டு வணங்கித் தம் வினைப்பயன் தீர வழி வேண்டி நின்றனர். அகத்தியரும் அவர்கள் வினை நீங்கும் நாள் நெருங்கியதெனக் கூறி, வீரபத்திரனின் பாவம் நீங்கிய திருத்தலமாகிய இடவபுரம் ஏகப் பணித் தார். வீரபத்திரனின் பாவமும் அது தீர்ந்த விதமும் யாதென வினவினர். முன்பு பிரமனும் ஐந்து தலைகளை உடையவனாக இருந்தபோது சிவபெருமானொப்ப எமக்கும் ஐந்து தலை எனத் தருக்கி நகைக்க, அதையு ணர்ந்த சிவபெருமான் அவன் ஒரு தலையைக் கொய்யும் படி வீரபத்திரனைப் பணித்தார். வீரபத்திரனும் அவ்வாறே செய்ய, அவனைப் பிரமபாவம் பிடித்தது.

அப்பாவத்தைத் தொலைக்க இறைவனின் அறிவுரைப்படி இடவபுரம் வந்து வழிபட்டுப் பாவம் தீர்த்தான் என அகத்தியர் கூறினார். பின்பு சந்திரசேனனும் சுகுணனும் இடவபுரம் அடைந்து, தம் பாவம் தீர்த்து ஆப்பனூரானைப் பலவாறாகத் துதித்து வணங்கித் தன் நாடான அவந்தி சென்றடைந்தான்.

## சந்திரசேனச் சருக்கம்

### கலிவிருத்தம்

259 கேட்டமா தவர்குழாம் பின்னுங் கேட்பது
வேட்டனம் யாந்தனி விடைப்பி ரான்பெயர்
சூட்டுமத் தீர்த்தத்தின் கதைசு ருக்கிமுன்
காட்டினை விரித்திளிக் கழறுவா யென்றனர். 1

260 நந்திநா யகன்பெயர் திருத்த நன்கதை
சிந்தியா இருவிழி பனிப்பத் தேக்கிய
புந்தியான் சூதனாம் புராண தேசிகன்
அந்தணீர் கேண்மினென் றறைதன் மேயினான். 2

261 பண்டைநாண் மந்திரி யுடனோர் பார்த்திபன்
றுண்டைநீர் மடுவிடைக் குடைந்து மேற்குலக்
கெண்டைவாள் நயனியாற் கிடைத்த தீப்பழி
விண்டயர் வுயிர்த்தனன் விரைந்தென்
றோதினன். 3

262 முதுமறை யிருடிகள் மொழிந்தவேந் தனியார்
எதுபெயர் எதுநகர் இவற்குப் பூசுர
வதைநெடும் பழியெவள் வாஞ்சையா லுற்ற
ததுதொடர்ந் தலைப்பவீங் கடைந்த வாறெவன். 4

263 உளைமதி அமைச்சனோ டுற்றிந் நீர்படீஇ
விளைமதி மருட்டுவெவ் வினையிற் றீர்ந்துசூழ்
வளைமதில் நற்றளி வாயில் தாழ்ந்துநன்
முளைமதிக் கண்ணியங் கடவுள் முன்செலா, 5

264 ஆதியை அடிபணிந் தரிதின் எத்துதி
ஓதியவ் வரசன்றன் நகர்க்கண் உற்றனன்
ஈதினி தெமக்குநன் கியம்பு வாயென
நீதியின் வரன்முறை நிகழ்த்து வானரோ. 6

265 ஊடுமின் கொடியனார் உணர்த்து நாதரைக்
கூடுமின் கலவிமேல் நிலையிற் கோதற
நாடும்வெண் கதிர்மலி னந்து டைப்பதொத்
தாடும்வெண் கொடிதிகழ் அவந்தி மாநகர். 7

266 மறையொலி முழவொலி மாதர் ஆடலின்
துறையொலி புரவொலி துள்ள நாடொறுங்
கறையணி மிடற்றுமா காள வீசனாண்
டுறைதரும் உலகுயிர்க் குவகை நல்கியே. 8

267 முனைவரும் முழுதுணர் மோன ருந்தவத்
தெனைவரு மசைவற விருக்கும் யோகரும்
அனைவரு முனிவரு மற்றை மூவரும்
அனைவரும் சரிப்பதா லளகை தோற்குமால். 9

268 அத்திரு நகர்புரந் களிக்கும் மன்னவன்
பைத்தலைச் சுடிகைமீக் கிடந்த பாரகம்
வைத்ததிண் புயப்பெரு வலியி னான்மடற்
சித்திரத் தொழில் நலம் சிறக்குஞ் செவ்வியான். 10

269 கழுதுவாய் சிவப்புறப் பகைஞர் கன்னியர்
அழுதுகண் சிவப்புற அரசர் பொன்முடி
உழுதுகால் சிவப்புற கணக்கர் கொண்கரம்
எழுதுகை சிவப்புற எடுக்கும் வாளினான். 11

270 புத்தியைத் திரிக்கும்வேள் புணர்ச்சி நூன்முறை
சித்திரக் குவிமுலை யவரைச் சேக்கையில்
நித்தம்வைத் திடைத்துகில் நெகிழ்வ தன்றியோர்
முத்திமற் றிலையென முடிக்கும் பெற்றியான். 12

271 கன்னியர் ஆடலே நிறைந்த கண்ணினான்
கன்னியர் பாடலே நுழைந்த காதினான்
கன்னியர் ஊடலே திருத்தும் கையினான்
கன்னியர் காமமே கனிந்த சிந்தையான். 13

272 சதமறா துறுந்தொகைத் தைய லாரையற்
புதமறா நறுமலர் பொதிந்த பாயலி
னிதமறா தணைவது நேமம் மேற்கொளா
மதமறா யானையின் மதிம யங்குவான். 14

273 கொலைவிளை யாடும்வேற் குரிசில் கோதையர்
முலைவிளை யாடும்பொன் மார்பன் மூரிவெஞ்
சிலைவிளை யாடும்தோட் செம்மல் எண்டிசைத்
தலைவிளை யாடும்பேர்ச் சந்திர சேனனே. 15

274 ஆமத்தார் வேந்தன தமைச்சன் அன்னவன்
காமத்தால் அழிதருங் கருத்துக் கேற்பநல்
தூமத்தார்க் குழலியர்த் துரீஇப்பு ணாப்பவன்
நாமத்தாற் சுகுணன்சென் னடையில் துர்க்குணன் *16*

275 அன்னவ னொடுத்தனி யரச னோர்பகல்
மன்னிய காமநோய் மலரும் மாலையில்
உன்னத நெடுங்கொடி யுபரி கைக்கணே
கன்னலஞ் சிலைகடை குழைப்ப வைகினான். 17

276 மருக்கம ழந்நகர் வீதி வாய்பெருந்
திருக்குல மறையவர் தெரிவை மேம்படும்
அரக்கினை யூட்டிநல் அமுதைத் தீற்றிய
முருக்கிதழ் வாயினாள் முத்த மூரலாள். 18

277 தேனையும் பாகையும் திரட்டுஞ் செஞ்சொலாள்
மானையும் மீனையும் மருட்டுங் கண்ணினாள்
ஊனையும் உயிரையும் உருக்கும் பொற்பினாள்
வானையும் மண்ணையும் மயக்கும் காட்சியாள். 19

278 ஒருசிறு நூல்கிடந் தொசிய ஓங்கிய
இருக்குரும் பையுமசைந் தேற காந்தளம்
பெருமலர் வீசிவெண் பிறைப ணிப்பநற்
றிருமலர் சிவப்பவத் தெருவில் செல்கின்றாள் 20

279 மேனிலத் தேவரும் விரும்பி யங்கவர்
கானிலத் தேவருங் கவின்கொண் டுற்றிடும்
பூநிலத் தேவர்பொற் றொடியைப் போதமில்
நானிலக் கோமகன் நயந்து நோக்கினான். 21

## எழுசீர் விருத்தம்

280 மருமலர்க் குழலோ குழல்வகிர்ந் ததனுள்
வரித்தசெந் தூரமோ அணரும்
திருநறு நுதலோ திலகமோ நெறித்த
சிறுகொடிப் புருவமோ எழுதும்
கருவிழி யழகோ கடைவிழித் துடிப்போ
காளையர்க் கனங்கவேள் விடுத்த
நிருபமே யனைய திதுவென எவரும்
நிகழ்த்துபொன் னோலைவார் குழையோ. 22

281 கண்ணடி யனைய கபோலமோ நாசி
காபர ணத்தின்முத தசைவோ
தண்ணறுங் கனிவாய் அதரமோ விரதந்
ததும்பிமேல் வழிந்ததேன் மொழியோ
வண்ணலங் கமுகின் அணியியன் மிடறோ
வமைத்தடந் தோள்களோ சிவந்த
வண்ணவிற் பவளம் கிளைத்ததன் கிளையின்
வாய்த்தநன் மணிவிரல் வடிவோ. 23

282 சந்தனக் கலவைச் செழுநறுஞ் சேற்றில்
தண்பனி நீரினுள் முளைத்த
சுந்தரக் கமலத் துணைமுகை யீதெனச்
சுணங்குபூத் தொளிர்தரும் முலையோ
உந்தியிற் கிளைத்த அணிமயிர் ஒழுங்கோ
ஒருபிடி நுசுப்பின தொசிவோ
மைந்தருக் கமுதம் ஊற்றிருந் தொழுக
வாய்த்தபே ரல்குலின் வனப்போ. 24

283 நாவலா றடுத்த கரைவளர் கதலி
நலங்கவர் பொலங்கவா னெழிலோ
சேவலார் முடித்த மதிமனைப் புறனில்
திருந்திய தசைமுழந் தாளோ
தூவலார் பகழித் தூணியின் கணைக்கால்
தோற்றமோ சீரடித் துணையோ
பாவலா ருரைக்கும் உவமையுங் கடந்த
பாவையே இவளென நினைந்தான். 25

284 நினைந்தநெஞ் சுருவி மலர்க்கணை துளைப்ப
நெட்டுயிர்ப் பெறிந்துளைந் துளைந்து
மனைத்தவ முனிவர் பெருங்குலக் கற்பின்
மடந்தையென் றறிந்துதன் மனத்துள்
தினைத்தனை யெனினும் முதுக்குறை விலனாய்த்
தெரிவைதோள் நலம்நுகர் காதல்
பனைத்தனை வளரப் பார்த்தகண் திருப்பாப்
பார்த்திபன் அமைச்சனை வாயால் 26

285 அழைத்துநீள் கரத்தால் சுட்டிமா திவள்பே
ரல்குலின் றுறைப்படி யார்வம்
தழைத்தமற் றினியிவ் வொருத்தியே யமையும்
சதவனி தையர்சுகம் விரும்பேன்
பிழைத்திடில் உய்யேன் கொணர்கென முகமன்
பேசினன் பேசலு மனையா
னுழைத்தனி மகிழ்நன் பிரிவிலா திருக்கின்
உஞற்றுவ தெவனென வுரைப்பான். 27

286 சரத்தினைத் துரந்து மதனுடல் பிளப்பத்
தாழ்ப்பதென் இவள்தனை முனிவன்
சிரத்தினைத் தடிந்து கொணர்கெனச் சுடர்வாள்
திண்கைதொட் டெந்திடுங் காலைக்
கரத்தினை ஒடுக்கிக் கொடுங்கொலை இதையான்
காண்கிலேன் எனக்கடி தோடி
குரத்தினைத் தொடர்காற் பசும்பரித் தேரோன்
குறைந்தனன் மறைந்தனன் குடபால்.
28

287 இளமையும் பொருளும் மடமையும் அரசும்
இவையொரு நான்குமாங் கெய்தும்
வளமையில் அரசன் பழிப்புகழ் பரந்த
வண்ணமொத் திருண்டது கங்குல்
அளவகன் முறைசெய் அரசன தேவல்
ஆணையா றொழுகுமந் திரியும்
விளையொலி நகர்துஞ் சளவுநின் றேகி
மிக்கவர் கொடிமனை புகுந்தான். 29

288 பனிமலர்த் தளிம மீமிசைத் துயிலும்
பார்ப்பனி மருங்குகண் படைகொள்
தனிமறைப் பனவன் சிகைத்தலை தடறு
தணந்தகூர்ங் கருவியாற் றடிந்து
கனிபழுத் தமைந்த மழலையம் தீஞ்சொல்
கவரிதழ்க் குவிமுலைக் கணைகண்
குனிசிலைப் புருவக் கருநெடுங் கூந்தல்
கொடியினைக் பிடித்தலும் துடித்தான். 30

கலி விருத்தம்

289 இறந்த ஆடவற் கேங்கியங் கெய்துறை
துறந்த வாளவன் கண்டுதுண் ணென்றழத்
திறந்த வாயினைச் சிக்குறச் சேமியா
மறந்த வாமதி மன்னன்முன் விட்டனன். 13

290 விட்ட போது விடாநகை வேந்தன்வேல்
தொட்ட போது சுடுவ தெலாநின்கட்
பட்ட போது குளிர்ந்தன பாவைநீ
நட்ட போதென் நயப்பறி வாயரோ. 32

291 முலைத்த லைச்சுகம் நல்கிடின் மோகவேள்
கலைத்த லைத்தொழிற் காந்தையர் கைதொழ
அலைத்த லைத்திரு வன்னவுன் றன்னையென்
தலைத்த லைத்தனி தாங்குவன் யானென்றான்.
33

292 என்ற போதத் திருசெவி யின்றுளை
மன்றல் நாறு மலர்க்கையிற் சேமியா
நின்ற நேரிழை நீதியை வேரொடுங்
கொன்ற வேந்தனைப் பார்த்திவை கூறுவாள்.
34

293 கொலைவி ழைந்தவர் செய்ந்நன்றி கொன்றுவாழ்
தலைவி ழைந்தவர் சாதிவி ழைந்தவர்
புலைவி ழைந்தவர் பொற்பழிந் தேபிறன்
இலைவி ழைந்தவர் யாவரு யர்ந்துளார்.

294 தார மல்லவர் தாயென்ப தாயினை
நேரு மன்னை நிருபமுன் னோன்மனை
சாரு மன்னை யினுந்தவத் தேசிகன்
பாரி பார்ப்பனி பார்க்கி னதிகமால். 36

295 இன்ன தன்மை யிருக்கமற் றியாரென
என்னை யுன்னினை யீறில்செங் கோன்முறை
மன்னர் செல்நெறி மாற்றினை மாற்றினை
கன்ன வின்மனக் காவல னீயென்றான். 37

296 குவடு பட்ட குவிமுலைக் கூர்விழி
அவள்து வர்க்கனி வாயி னறைந்தசொல்
துவன்து ணர்க்கழை நாணொலி துன்னலிற்
செவிடு பட்ட செவியினன் கேட்டிலான். 38

297 காத ரப்பெருங் காமுக ரேறனான்
மேத ரத்தன மேற்றன் மிடுக்கினல்
ஆத ரத்தினில் அங்கையினான் மருடம்
போத ரற்றினள் பொற்பினி லொப்பிலாள். 39

298 அனைய காலை அரசனை வைதுநீஇ
மனையள் பால்துயர் மாசற மாற்றவான்
எனவவ் வேதியன் தானிக வாப்பழி
வினையு ருக்கொடு வந்துவி லக்கினான் 40

299 இடிக்கும் வெம்பகு வாய்திறந் தேங்கும்பற்
கடிக்கும் அஞ்சவு றுக்கும்கண் மேற்கனல்
பொடிக்கும் நின்றுபு கைந்துயிர்க் கும்பிடர்
அடிக்கும் வஞ்சினங் கூறும் அடர்க்குமால்· 41

300 என்ன பாவ மிதுவென் றழும்நகும்
மன்ன வாபழி தாவெனும் மந்திரி
தன்னை வாபொர வென்னும் தனித்தனி
இன்னல் கூரயிவ் வாறு தொடர்ந்ததால். 42

கலிநிலைத் துறை

301 மேவும வந்தியும் நாடுமிகந்துபின் வேறேகுங்
காவலன் மந்திரி யோடியு ழன்றிரு காலோய்வர்
கேவல வெம்பழி தீர்வகைகண்டிலர் கேதாரம்
போவது புந்தியில் நீடுநி னைந்தனர்
போனாரால்.
43

302 எவ்வுயி ரேனும ருந்திடி னெஞ்சத் திகவாதே
திவ்விய லிங்கம தாகத் திரள்தரு சிவதீர்த்தம்
வெளவுற மூழ்கினர்கேதா ரத்நமர் மாதேவன்
செவ்விய தாண்மலர் அங்கைவ ணங்கினர்
சென்றாரால் 44

303 கொங்கலர் சேர்பிரு தூதக வாவிகு
டைந்தேகிக்
கங்கையின் மூழ்கினர் காசியி லீசன் கழல்பேணிப்
பங்கமில் சீசயி லம்பணி யாவருள் படர்கோடி
சங்கர மேவினர் அங்கண மர்ந்துத ணந்தாரால்.
45

304 கோதா விரிகண வேணிபி னாகினி குளிருந்தண்
போதார் பொன்முகி முதலா நதிகள்பு குந்தாடித்
தீதார் பழிகழி யாதே தொடர்வுறு செயலெண்ணித்
தாதா ரிதழியர் ஏகாம் பரநகர் சார்ந்தாரால்.
46

305 சைவா கமமுறை மலையாள் வழிபடு தண்கூதப்
பைவா ளரவணி பவர்கால் மலர்கள் பணிந்தேகிப்
பெய்வார் மழைதவழ் கரிசயி லத்துறை
பெருமானாஞ்
செவ்வாய் வரதமு குந்தனை வந்தனை
செய்தாரல். 47

306 சூழ்ந்தொளிர் காஞ்சிக டந்துத லம்பல
தொழுதேபின்
தாழ்ந்தொளிர் வேணியன் உமையுட னாடிய
தனிமன்றம்
வாழ்ந்தொளிர் தில்லையின் எல்லைவ ணங்கிம
கிழ்ந்தேவிண்
போழ்ந்தொளிர் கோபுர வாயில்ப ணிந்துள்பு
குந்தாரால். 48

## சந்த விருத்தம்

தனாதன தந்தன . தனதானா

307 சிமையநெ டுஞ்சிலை யுடையப ரம்பொருள்
சிவஞானம்
அமையநி ரம்பிய வெளியொளி மன்றினுள்
அகலாதே
உமையவள் அம்பிகை பரைசிவ சுந்தரி
யுடனாடும்
இமையவர் கும்பிடு நடமிரு கண்களி
னெதிர்கண்டார். 49

308 இருவிழி மென்புன லருவிசொ ரிந்திட
வெதிர்வீழா
உருகினர் நின்றடி பரவினர் அஞ்சலி யுடன்மீளா
வரும்வழி கண்டனர் உயர்சிவ கங்கைநன்
மலர்வாவிப்
பொருகரை யின்புடை எழுகடல் உண்டருள்
புகழோனை. 50

309 முதுதிரி புண்டர நுதலனை மென்சடை
முடியானை
அதிர்கடல் நஞ்சினை யமுதினு கர்ந்தவன்
அனையானை
சதுர்மறை யின்பொரு ளறிவனை யின்றமிழ்
தருவானைப்
பொதியநெ டுங்கிரி முடியினி ருந்தருள்
புரிவானை. 51

வேறு

தனனந் தனதன......... தனதானா

310 இனிதுன் றெரிசனம் எனவந் தடியிணை
யெதிர்வீழா
முனிபுங் கவவுனை நனிநம் பினமென
மொழிவார்முன்
புனிதன் சிவமுணர் விழிகொண் டனையவர்
புரிபாவந்
தனையுந் தெரிபவன் அருள்தந் தெதிர்மொழி
தருவானால். 52

அறுசீர் விருத்தம்

311 ஓவருங் கொடிய பாவம்
உழந்துடல் நடுங்கும் நீவிர்
யாவருஞ் சுறுநாள் நுங்கட்
கினியணித் ததனாற் றேவர்
தேவரும் பொதுவின் ஆடல்
தெரிசித்தீ ரெனையுங் கண்டீர்
மேவருங் களிப்பான் முன்செய்
வெம்பவம் விளம்பித் தீர்வீர். 53

312 என்றுரை கொடுப்ப வேந்தன்
இறைஞ்சிநின் றெங்கட் கிங்ஙண்
நன்றுரை வழங்க யாஞ்செய்
நன்மையு முளவோ வைய
குன்றுறழ் நெடிய மாடக்
கொடுநகர் அவந்தி யாள்வேன்
தன்தகை யழிந்து தேயுஞ்
சந்திர சேன னென்பேர். 54

313 என்னுயி ரமைச்சன் மற்றீங்
கிவன்பெயர் சுகுணன் யாக்கை
துன்னும்யெள வனத்தில் செல்வத்
தருக்கில்துன் மதிமீக் கூர்ந்து
மன்னுயிர் வருத்தி வாழ்ந்தேன்
மறையவர் பொருள்கூட் டுண்டேன்
கன்னிய ரல்குல் காமக்
கடலிடைக் கவிழ்ந்து வீழ்ந்தேன். 55

314 நிதம்பக லிரவாய் நூறு
நேரிழை யவர்தோள் தோய்ந்து
மதம்படு விலங்கின் நின்றேன்
மற்றெலாம் நிற்க யான்செய்
கதம்புரி வினையி னொன்று
கழறுகேன் ஒருநாள் தேவர்
பதந்தொட உயர்ந்த செம்பொன்
படர்நெடுஞ் செய்குன் றேறி 56

315 இருந்தனன் இவனோ டங்கண்
இருஞ்சிறை நேமிப் புட்கும்
வருந்துகா முகர்க்குந் தத்தம்
மனந்தொறும் பகிர்ந்து வைப்பான்
முருங்கெரி மேல்பால் வெற்பின்
முகட்டிற்சே ணுறவ ளர்ந்தான்
திருந்துவே ளென்ன மாலைச்
செக்கர்வந் தணையும் வேலை 57

316 தேனிருந் தொழுகுங் கொவ்வைச்
செங்கனி மணிவாய்க் கெண்டை
மீனிருந் தொளிரும் வாட்கண்
மிக்கவர் தெரிவை மைக்கார்
வாணிருந் தொளிரு மின்னின்
மருங்குல்தள் ளாட வந்தாள்
ஆனிருங் கொடியார் வைகுப
அவந்திநீள் மறுகி [illegible]ம. 58

317 கண்டனன் மதியை மோகக்
கார்முகில் மறைப்ப மேலாம்
பெண்டினை முயங்கி யின்பம்
பெறவிவன் றன்னோ டந்த
வண்டிமிர் குழலாள் சென்ற
மனைவயின் வெளவி என்பாற்
கொண்டணை முனிவன் சீறிற்
கோறியென் றுரைத்து விட்டேன். 59

318 சொற்படி முனிவன் சென்னி
துணித்தவள் கொணர்ந்தான் மானக்
கற்படி பெயரா மின்னைக்
கரத்தினா லணைக்கு முன்னர்
அற்படி நிறத்திற் சீறி
யடர்ந்தது பிரம பாவம்
நற்படி வலஞ்செய் குற்றேம்
விடாதுபின் நலிவ தைய. 60

319 நெய்யடை கனலிற் சீறி
நெருக்கிய பழிக்கு ளெய்த்தேங்
ஐயடை யாங்க ளெம்மைக்
காப்பதுங் கடமை யென்றார்
மெய்யடை நீற்று வேணி
மெய்த்தமிழ் முனிவன் பாவ
மையடை யுளத்தீ ரஞ்சல்
அஞ்சலென் றருளி மாதோ. 61

320 படவர வேணி காட்டும்
பதிநதி வடபாற் றோன்றும்
இடவபு ரேசன் பாதம்
இருகடி கைப்போ துன்னி
உடல்புள குதிப்பக் கண்ணீர்
ஊற்றிருந் தொழுக வாங்கவ்
வடலர சனைப்பார்த் தன்பின்
அருள்சுரந் துரைப்ப தானான். 62

321 கனிநறுஞ் சுவைத்தேன் கைப்பக்
கற்றுளோர்க் கினிப்ப மேனாட்
பனிவரை முகட்டி லென்பாற்
பரஞ்சுடர் உபதே சித்த
புனிதநற் றமிழ்சேர் சங்கம்
பொலிநகர் வடபால் வையைக்
கினிதணித் துறையுங் காட்சி 63
இடவபு ரப்பேர் மூதூர்.

322 ஏயவந் நகரி னன்ன
விநோதனா மிலிங்க மூர்த்திக்
காயதெதன் றிசையி னந்தி
யடிகள்பேர் தீர்த்த முண்டால்
மேயவத் தீர்த்த மூழ்கி
விறல்வடு கேசன் றீர்ந்து
போயினன் பிரம பாவம் 64
பூருவ மெனலுங் கேட்டார்.

323 குரைமுக வூர்திக் கெய்துங்
கொடும்பழி வரவென் னிந்தத்
திரைதவழ் வாவி தோய்ந்து
தீர்த்தெவ் வாறின் றெங்கட்
குரையென சிறுவி திப்பே
ருடையவன் மகத்திற் செந்தா
மரைமகன் அமரர் நாப்பண் 65
வந்துமுன் பிருக்குங் காலை

324 சராசரச் சடங்கள் தோறும்
தனித்தனி கலந்து நிற்கும்
பராபரன் விமலன் எந்தை
பசுபதி சிரங்கள் போலும்
விராவிய சிரங்கள் ஐந்தும்
விளங்கிய தனக்கு மென்னாத்
துராணவம் அடைந்து நின்றான் 66
அஃதுணர் சுருதி மூர்த்தி

325 சினந்தலை நிமிர்ந்த சூலத்
திகம்பரர் குமரற் கூவி
மனந்தலை மயக்குந் தண்பூ
மகன்றலை யைந்தி னாக்கின்
நனந்தலை விளங்கும் எம்மை
நகுதலை யறுத்தி யென்னா
முனந்தலை யறுத்தான் பாவம்
முருகிய தரன்பாற் போகி 67

326 ஐயவிப் பாவம் பாறும்
வழியெனக் கருள்செய் என்ன
வையையின் வடபாற் செங்கோல்
வழுதிநாட் டிடவ நாமச்
செய்யநன் னகருண் டந்தத்
திருநகர்த் தென்சா ராக
வெய்துறு மிடவ தீர்த்தம்
விளங்குமூ வுலகு மேத்த. 68

327 அவ்விடை மருவி னாடி
அரும்பவங் கழிந்து பின்னர்
இவ்விடை நம்பாற் சேறி
யெனப்படூஇப் பழியின் நீங்கித்
தெவ்விடை மழுவ லான்பாற்
சென்றனன் காரி மேனாள்
உவ்விடை யடைந்தந் நீர்தோய்ந்
துறும்பழி கழுவி நீவிர் 69

328 அன்னக ரிலிங்க மூர்த்தி
அன்னவி னோத நாதன்
பொன்னடி வணங்கி வாழ்ந்து
போற்றிநீ டவந்தி யென்னும்
சென்னகர் அடைமின் என்று
செப்பலும் விடைகொண் டேகி
மன்னவ னமைச்ச னோடும்
வந்துகா விரிநீர் மூழ்கா. 70

## வேறு

### சந்தவிருத்தம்

தனனா தன தன ... ... தன தானா

329 எருதூர் திருவிடை மருதூ ருடையவர்
இருதாள் தொழுதடி கருதாரூர்
பொருதூர் நகையிறை யுறையூர் பலநெறி
புகுவார் பரவினர் ஒருநாவல்
தருதூ ரிடைவளர் சடைபோல் நிறைபுனல்
தழலூர் திருவுரு முழுதூரும்
விருதூர் கொடிவிடை யவர்கான் மலர்சிர
மிசைசூ டினர்பழி வினைதீர்வார். 71

### வேறு

தன தன தனன தந்தனா

330 விரிநதி யணிய ரங்கமேல்
விழிவளர் கரிய செங்கண்மால்
திருவடி மலர்ப ணிந்துநீள்
திரிசிர கிரியில் எந்தைதாள்
பரவினர் பழிக ழிந்திலார்
பதிபல நெறிக டந்துபோய்
அருள்பொழி வழுதி தென்றல்நா
டதனைவி ரைவின டைந்துளார். 72

### கலித்துறை

331 செந்த மிழ்த்திரு நாட்டிடை விரைந்துசெல் பவர்பூஞ்
சந்த னத்தட வரைமுனி தமக்குமுன் பிசைத்த
சுந்த ரப்பெருந் திருநகர் விழியெதிர் தோன்ற
மந்த ரப்புயத் தவர்தொழு திம்மென வருவார். 73

332 தடந கர்க்கயல் வரவர நிழலெனத் தழூஇத்
தொடர்பெ ரும்பழி கால்தளர்ந் தயர்ந்துபின் தூங்கிப்
படர்தி றத்தினை நோக்கின ரிருவரும் பலகால்
நடந விற்றினர் பாடினர் மகிழ்ந்தனர் நடந்தார் 74.

333 தாணு மெய்த்திரு வாப்புடைய வர்பெருந் தலத்தின்
ஏணி புக்கனர் விலகென தொடர்பழிக் கிலசத்து
மாணு றத்தமை வம்மினென் றழைத்தென வானங்
காண கர்கொடி நிமிர்ந்தூபி னுடங்குவ கண்டார். 75

334 நஞ்ச முண்டவா யருவருப் பறநனி யமுது
பஞ்ச நாண்மலர் முகத்தரற் கருள்நதிப் பாங்கர்
வஞ்சி போல் மருங் குடையவா முகமென மலருங்
கஞ்ச நாண்மலர்த் தடமுநந் தனங்களுங் கண்டார். 76

335 உவந்த சிந்தையர் புரம்புகுந் திறையவ ருலாக்கொள்
நிவந்த தேர்விழா வீதியும் மண்டப நிலையும்
சிவந்த நுண்டமிழ்க் கழகமும் அளகையான் செல்வம்
கவர்ந்து வைத்தன பலபொருள் தெருவுநேர் கண்டார். 77

336 வட்ட வெண்குடைச் சுகுணனாந் செந்தமிழ் மாறன்
மட்ட றாமலர்க் கொன்றையி னவர்க்குமுன் மணற்சோ
றட்ட வேதியற் கன்பினா லியற்றிமே லாட
விட்ட கேதன மாளிகை வீதியுங் கண்டார். 78

337 பைந்த மிழ்த்திரு ஞானசம் பந்தர்தம் பனுவல்
மந்தி ரப்பதி கத்தினா லமணர்பொய் மதம்போய்
நந்த நற்சிவ சமயமே சயத்தம்ப நாட்ட
வந்தி ருக்கும்வை திகத்திரு மாமடங் கண்டார். 79

338 தெளிந்த செம்மணி வெயில்விடத் தருவின்மென் சினைகள்
தளிர்த்த தொத்தலி லரம்மையர் பாசிலை தனைத்தேன்
துளிர்த்த பூவுடன் முறியெனக் கொய்துறச் சுரர்கண்
களித்து நோக்கியுண் ணகப்புரி மாடங்கள் கண்டார். 80

339 விரும்பு மேனிலை இருந்துதம் மென்குழற் காளைச்
சுரும்பு தன்பெடை யெனத்தொடர்ந் தெய்த்திட மீப்போய்
அரும்பு கற்பகப் பொதும்பர்புக் களியினின் றாடக்
கரும்ப னார்பரு மணிக்கழங் காடுவ கண்டார். 81

340 விழித்த பார்வைக ளிளைப்பறத் தஞ்செயல் வெறுத்துப்
பழித்த வானர மடந்தைய ரதிசயம் படவா
னுழித்த வாதுயர் மேடைமே லம்மனை யுறைகள்
கழித்த வாளன கண்ணினா ராடுவ கண்டார். 82

341 இன்ன தாயநன் நகர்வளம் கண்டுகண் டேகி
நன்னர் மாதவர் மறையவ ரருச்சனை நவில்வோர்
பன்ன காபர ணன்புகழ் விரிப்பவர் பாங்கர்
மன்னு மால்விடை மடுவிடைப் போயெதிர் வணங்கி 83

342 எறிந்த தெண்டிரை வாவியின் படித்துறை யிழிந்தங்
கறிந்த சங்கற்ப விதிமுறை யசைச்சனோ டாடிப்
பிறிந்தி லாககொடும் பழிபிறிந் [illegible]றப் பிணித்துச்
செறிந்த ம[illegible]ற விளங்கினன் [illegible]ர சேனன். 84

343 வெருவ ரும்பணி வாயுமிழ் சுடரென விளங்கும்
இருவ ருஞ்சின கரமடைந் திடவபு ரேசன்
ஒருவ ருங்குர வங்கமழ் குழலுமை பாகன்
பொருவ ருஞ்சரண் பணிந்தனர் வேந்திவை
புகலும். 85

344 தேவ தேவநி ராமவ துரியவ தீத
மூவ ராகிமற் றிருவரா மொருமுழு முதல்வ
பாவ காரியர் உளம்புகா வாதியெம் பரம
தாவு மால்விடைக் கீலக நாயக சரணம். 86

345 நாத பன்னக பூடண சுடர்த்திரி நயன
வேத மன்னவி பூதிமே னியவிளங் ககில
பூத மன்னவ நூபுர மறைச்சர ணாம்பு
சாத வன்னவி நோதமெய்ப் பரஞ்சுடர்
சரணம். 87

346 அந்த காரிகங் காதர திரிபுர மெரித்த
மந்த காசவெண் கயலைமால் வரைசிகா
மணியாம்
இந்து சேகர நீலகந் தரவெமக் கிறைவ
சந்த நான்மறை யாப்பனூர்த் தனிமுதல்
சரணம். 88

347 பரும வாளர வல்குலார் மயற்படு குழிவீழ்
கருமன் என்பெரும் பழிதெறக் கலங்கனுர்
உழந்தேன்
தெரும ராவகை யருள்சுரந் தருள்நிமிர்
திமில்வெண்
தரும மால்விடை யூர்திகழ் பசுபதி சரணம்.
89

348 என்ன வேத்திநின் றிறைஞ்சலும் இருசெவிக்
கினிப்பச்
சொன்ன தோத்திரத் திறையவன் மனம்களி
தூங்கி
நன்னர் மாக்கக னத்திடை வாணியி னலங்கூர்
மன்ன கேட்டியென் றவனெதிர் இம்மொழி
வழங்கும். 90

349 சினக்கு றும்பெறிந் திலங்குவேற் சந்திர சேனா
உனக்கும் மந்திரி தனக்கும்வன் பழிதொலை
வுற்ற
தெனக்கு வித்திரு கரம்சிர மேற்றிநின் றிறைஞ்சி
அனக்கு ழாம்படர் தடம்பணை யவந்திசென்
றடைந்தார். 91

350 அடைந்த ரசியல மைச்சிய லறந்தெரிந் தாற்றி
நடந்து நாள்கழீஇப் பின்னர்முன்
விடைப்பெயர் நளிநீர்
குடைந்த புண்ணிய மானமீ திவர்ந்திமக் குன்ற
மடந்தை பாகர்தங் கயிலைபுக் கிருந்தனர்
மாதோ. 92

சந்தவிருத்தம்

தனன தந்தன தந்தன தந்ததான

351 தொடர வந்திபு ரந்தருள் சந்திரசேனன்
சுகுண மந்திரி யென்றிவர் தெண்டிரைதாவும்
கடவுள் நந்தியி லஞ்சிப டித்துபின்மேவுங்
கடிய வெம்பழி நின்றும கன்றருள்காதை
தடைய றும்படி விண்டவர் திண்செவிசாருந்
தகைய ரந்தமில் வெண்பொனெ டுங்குரியூடு
படர்வ ரென்றுசி வன்பெயர் நன்குணர்சூதன்
பகர வந்தனர் சிந்தையு வந்தனர் மாதோ. 93

சந்திரசேனச் சருக்கம் முற்றிற்று

2 புந்தி-மனம் பா. பே. : நந்திநாயகப்பெயர்.

3 கெண்டைவாள் நயனி-கெண்டை மீன் போன்ற நீண்ட கண்களை உடையவள், குண்டைநீர்-இடப தீர்த்தம்; குண்டை-இடபம்.

7 கோதற-குற்றம் நீங்க.

8 மாகாளன்-சிவகணத் தலைவருள் ஒருவன்.

9 அளகை-குபேரனின் தலைநகரம், அளகாபுரி.

10 பைத் தலைச் சுடிகை-படத்தையுடைய சிரத்தின் உச்சியில்; பாரகம்-பூமி.

11 கழுது-பேய்.

12 புத்தியைத் திரிக்கும் வேள் புணர்ச்சி நூல்-மனத்தை மயக்கும் காம சாத்திரம்; சேக்கை-படுக்கை.

14 சதமறாது-நூற்றுக்குக் குறையாமல், பாயல்-படுக்கை

15 மூரி-வலிமை.

16 தூமத்த ர் குழலியர்-நறும்புகையுண்ட மலர்க் குழலி ர்; துரீஇ-தேடி.

18 மருக்கமழ்-மணம் கமழ்கின்ற.

19 பொற்பு-அழகு.

20 ஒரு சிறு நூல் கிடந்து ஒசிய நூலின் மெல்லிய இடை நெளிய; குரும்பை-இளநீர், இளநீர் போன்ற மார்பகம்; காந்தள் - காந்தள் மலர் போன்ற விரல்கள்; பிறை-பிறை நிலவு போன்ற நெற்றி; திருமலர்-தாமரை போன்ற முகம்.

21 மேனிலத் தேவர்-தேவர் உகலத்தவர்; கால் நிலத் தேவரும் கவின்கொண்டு - நிலத்தில் படியாக் கால்களும் இவள் பொருட்டு நிலத்தில் படியும் பாடியக் கால்களும் இவள் பொருட்டு நிலத்தில் படியும் படியாக; பூ நிலத்தேவர் - அந்தணர். போதமில்-அறிவற்ற.

22 மருமலர்-மணமலர், அணரும்-பேல்நோக்கி எழும்; அனங்கவேள்-மன்மதன்.

23 கண்ணடியனைய கபோலம்-கண்ணாடி போன்ற கன்னக் கதுப்புகள்; நாசிகாபரணம் - நத்து. மூக்குத்தி முதலியனவாய மூக்கில் அணியும் அணி கலன்கள்; இரதம்-சுவை. அமை-மூங்கில்.

24 மூகை-மொக்கு.

25 நாவலாறு-மேருமலையில் தோன்றும் ஒர் ஆறு; கவான்-தொடை; சே வலார் முடித்த - எருதைச் செலுத்துகின்ற சிவபெருமான் சூடிய; மதிமனை புறனில்-சந்திரனின் வீடாகிய கடகத்தின் (நண்டின்) முதுகினைப் போன்ற; இல் - உவம உருபு; தூவல் ஆர் பகழித் தூணி-பொழிவதற்குரிய அம்பு களை உடைய கூடு

26 முதுக்குறைவிலனாய்-அறிவற்றவனாய்.

27 அனையாள் உழைத்தனி மகிழ்நன் அவளுடன் இருக்கும் கணவன்; உஞற்றுவது-முயல்வது

28 சரத்தினைத் துரந்து - மலரம்பினைச் செலுத்தி; குரம்-குதிரைக் குளம்பு; கால்—தேர்ச்சக்கரம்.

29 கங்குல்-இரவு.

30 தளிமம்-படுக்கை; கண்படைகொள் - கண் துயிலும்; தடறு - உறை; தணந்த - நீங்கிய; பனவன்-பார்ப்பனன்.

31 ஆடவர் - கணவன்; மறம் தவாமதி - அறம் தவறிய மறச் செயல்களில் உறுதி கொண்ட சிந்தை

32 நட்டபோது- நேசித்தபோது.

33 மோகவேள் கலைத்தலைத் தொழில் காந்தையர்-மன்மதக்கலையைத் தலைத்தொழிலாகக் கொண்ட பெண்களை; அலைத்தலைத்திரு-கடலில் தோன்றிய இலக்குமி; தலைத்தலை - தலையில் வைத்து.

34 மன்றல்-நறுமணம்.

35 சாதி - கள்; புலை - ஊன்; இலை - இல்லத்தை, மனைவியை.

36 தாரமல்லவர் தாயென்ப-மனைவியைத் தவிர்ந்த பெண்கள் தாய் எனப்படுதற்குரியவர்; தாயினை நேரும் அன்னை (என்ப)-பெற்ற தாய் இயற்கையால நேர்ந்த அன்னை; முன்னோன் மனை சாரும் அன்னை-தனக்கு மூத்தோன் மனைவி தம் குடும்பத்தைச் சார்ந்து வந்த அன்னை; தவத்தேசிகன் பாரி-பார்ப்பனி பார்க்கின் அதிகமால்-தவத்தை உடைய தேசிகனின் மனைவியும் பார்ப்பனப் பெண்களும் இவர்களின் மிகுதியாகப் போற்றுதற்குரியவர்; ஆல்-அசை.

37 கல்நவில் மனம்-கல் போன்ற கடுமையான மனம்.

38 குவடுபட்ட-திரட்சியுற்ற; துவள்துணர் கழை-துவள்கின்ற மலரம்புகளை உடைய கருப்பு வில், மன்மதன் வில்.

39 மேதரத்தனம்-மலை போன்ற மார்பகம்; ஆதரத்தினால்-பெருவிருப்பினால்.

41 பகுவாய்-பிளந்த வாய்; உறுக்கும் - அச்சுறுத்தும்.

44 வெளவுற-விருப்பமுற.

45 தணந்தார்-சென்றார்.

46 கோதாவரி, கணவேணி, பினாகினி, பொன்முகி-இவை நதிகள்; கணவேணி-கிருஷ்ணா. பினாகினி-பெண்ணை. ஏகம்பர நகர்-காஞ்சி மாநகரம்.

47 மலையாள் - மலை மகள், பார்வதி; தண்சூதம், குளிர்ந்த மாமரம்; மாமர நிழலில்வீற்றிருக்கும் சிவ பெருமான் ஏகம்பர நாதர்; பைவாளரவு-படத்தை யுடைய பாம்பு; கரிசயிலம்-அத்திகிரி - காஞ்சியில் வரதராஜப்பெருமாள் கோவில்.

48 விண் போழ்ந்து-விண்ணைப் பிளந்து-வானளாவி.

50 எழுகடல் உண்டருள் புகழோன் - அகத்தியன் இது முதல் மூன்று பாடல்கள் குளகம்

51 திரிபுண்டரம்-திருநீற்றினாலாய முக்கோடு.

53 ஓவரும்-முடிவற்ற; உஞ்சுறுநாள் - உய்வு பெறும் நாள்; அணித்து-அருகாமையில் உள்ளது.

54 குன்றுறழ்-குன்றினைப்போல் விளங்கும்.

56 கதம்-கொடுமை.

57 நேமிப்புள் - சக்கரவாகப் பறவை; முருங்கெரி - அழிக்கக் கூடிய வெப்பத்தையுடைய சூரியன். வேலை-பொழுது.

58 மிக்கவர் - பிராமணர்; ஆனிருங்கொடியர் - இடபக் கொடியையுடைய சிவபெருமான், நீள்மறுகு-நீண்ட தெரு.

59 மதியை-அறிவை; கோறி-கொன்று விடு;

60 அல்படி-இருள்போன்ற; பிரமபாவம்-பிராமணனைக் கொன்றதால் வரும் பாவம். பிரமகத்தி.

61 கையடையாங்கள் - நாங்கள் உம் அடைக்கலம்; பாவமையடை உளம்-பாவ இருள் சேர்ந்த உள்ளம்.

62 படஅரவு எணி காட்டும் பதிநதி-பையினை உடைய நாகம் எல்லையைக் காட்டிய ஊரில் (மதுரையில்) உள்ள ஆறு [வைகை]; காண்க : திருவிளையாடல் புராணம். திரு. ஆலவாயான் படலம்.

63 பனிவரை-இமயம்; பரஞ்சுடர்-சிவபெருமான்.

64 வடுகேசன்-பைரவன்.

65 குனைமுகவூர்தி - நாயை வாகனமாக உடைய பைரவன்; சிறுவிதி-தக்கன்; மகம்-யாகம்; நாப்பண்-நடுவில்; தாமரைமகன்-பிரமன்.

66 துராணவம் - தீய ஆணவம்; சுருதிமூர்த்தி-வேத நாயகன், சிவபெருமான்.

67. குமரர் - பைரவன்; தண்பூமகன் - பிரமன்; நணந்தலை-நடுவில்

68 பாறும் - நீங்கும்; வெய்துறும் - விருப்பத்தைக் கொடுக்கும்.

69 காரி - பைரவன்.

71 எருது ஊர் திருவிடைமருதூர் உடையவர் - இடபத்தில் இவரும் மகாலிங்கர்; அடிகருதார் ஊர்-வணங்காதவர்களின் முப்புரத்தை; பொருது ஊர் நகை-ஊர்ந்து பொருதஎனமாறுக, பரவிப்போரிட்ட

முறுவல்; ஒரு நாவல் தரு தூரிடை-ஒப்பற்ற நாவல் மரத்தின் வேர்ச்செறிக்கிடையே, அடியில் என்றபடி; சடை போல் - சடையில் கங்கை தழுவுவதைப் போலவே; தழல் ஊர் திருவுரு முழுதும் - தீயைப் போன்ற செம்மேனி முழுவதையும்; நிறைபுனல் ஊரும்-நிறைகின்ற நீர் தழுவுகின்ற தலம், இது திருவானைக்கா

72 தென்றல் நாடு-பாண்டிய நாடு.

73 மந்தரப்புயம்-மலை போன்ற தோள்;

74 நட நவிற்றினர்-மகிழ்ச்சியால் நடனமாடினர்;

75 தாணு-சிவபெருமான்; ஏணி-எல்லை.

76 பஞ்ச நாண் மலர் முகத்தினர்-புதுமலர் போன்ற ஐந்து முகத்தினை உடைய சிவபெருமான்; நதி-வைகை. கஞ்சம்-தாமரை; நந்தனம்-நந்தவனம்.

77 நிவத்த-உயர்ந்த.

78 கேதனம்-அடையாளக் கொடி.

79 நந்த-நலியும் படியாக.

80 முறி-இலை.

81 காளைச் சுரும்பு - ஆண் வண்டு; கழங்கு-மகளிர் ஆடும் ஒரு விளையாட்டு.

2 அரமடந்தையர்-தெய்வ மகளிர். வானுழித்தவாது-வானத்தின் கண் நீங்காது; உறைகள் கழித்த-உறையினின்றும் நீங்கிய.

83 பன்னகாபரணன்-பாம்பை அணிகலனாகக் கொண்ட சிவபெருமான்.

84 பிறிந்திலா-வேறுபடாத; நீங்காத எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டது

85 வெருவு-அச்சமூட்டும்; சினகரம் கோவில்; ஒருவரும்-நீங்கலற்ற; பொருவரும்-ஒப்புமையற்ற

86 பாவகாரியர்-பாவங்களைச் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள்.

87 பண்ணகப் பூடணன்-பாம்பை ஆபரணமாகப் பூண்டவன்; அம்புசாதம்-தாமரை.

88 திரிபுரம் எரித்த மந்தகாசன்-திரிபுரத்தை அழித்த சிரிப்பினன், நீலகந்தரன்-நீலகண்டன.

89 தெற-வருத்த; அஞர்-துன்பம்; தெருமராவகை-அச்சமற்றவகை, மனக்கலக்க முறாத வகையில்.

91 அனக்குழாய-அன்னப்பறவையின் கூட்டம்.

93 இலஞ்சி-குளம்.

சந்திரசேனச் சருக்கம் முற்றும்.

## பாட்களச் சருக்கம்

அளகை என்னும் நகரில் அந்தணர் குலத்தில் பிறந்தவன் பாட்களன். இளமையில் தன் தந்தையையே குருவாகக் கொண்டு வேதம், புராணம், இதிகாசம், பரதம், சோதிடம், வேதாந்தம் தர்க்கம், மருந்துவம், காப்பியம் முதலான நூல்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தான். பின்னர் தான் கற்ற கல்வியறிவு கொண்டு பொருள் தேடத்தொடங்கிப் பல்லாற்றானும் கோடிப்பொன் சேர்த்தான். அதனால் ஏற்பட்ட மமதையுடன் பெண்ணாசை மிகவே வேசியரிடம் பொருள் முழுவதும் இழந்தான். எனினும் காமச்சுவையினின்றும் மீள மாட்டாது உறவினர் வீடுகளிலும், யாகசாலையில் பசுக்களையும் திருடத் தொடங்கினான். ஊரார் அவனைப் பிடித்து ஒரு காலைத் துணித்து விட்டனர். கால் துணிக்கப்பட்ட பாட்களன் தவழ்ந்து கொண்டே புரையோடிய புண்ணுடன் ஊர் ஊராகத் திரிந்து இறுதியில் இடபபுரம் வந்தடைந்தான். அங்கு இடபதீர்த்தத்தில் தன் மனத்துன்பம் நீங்க முழுகி எழ அறுபட்ட கால் மீண்டும முளைத்திருக்க கண்டான். நோய் தீர்ந்த அற்புதத்தை எண்ணி இறைவனை வணங்கி வாழ்த்தியிருந்தபோது இவன் செய்தியறிந்தபிறர் மன்னனிடம் சென்று இவனைப்பற்றிக் கூற மன்னன் வியந்து அவனை அழைத்துத் தன் அமைச்சனாக்கிக் கொண்டான்.

இதுபோலவே முன்பு தேவேந்திரனும் அகலிகையை நயந்த காரணத்தால் கவுதமரால் சபிக்கப் பெற்று உடல்

முழுவதும் ஆயிரம் யோனிகளைக் கொண்டு வருந்தித் தன் குருவிடம் சென்று தன் துயர் தீரும் வழி ஏதென வினவி நின்றான். அவன் குருவும் இடபபுரம் சென்று இடபதீர்த்தத்தில் மூழ்கின் துயர் தீரும் எனக் கூற அதன் படிச் செய்து ஆயிரம் யோனிகளும் ஆயிரம் கண்களாகப் பிறருக்குக் காட்சியளிக்கப் பெற்றான். பின் அவன் இடவபுரேசருக்குப் பெருவிழாக்கள் நடத்தி மகிழ்ந்தான்.

### அறுசீர் விருத்தம்

352 வேத முனிவர் பெருந்தீர்த்த
மேன்மை விரும்பி வினவுதலுஞ்
சூத முனிவன் அச்சோவென்
சொல்கே னெங்கோ னருள்துடைத்தோன்
ஏது செயினும் பரிகாரம்
இல்லாப் பாவி பாட்களனென்
றோது பெயரோன் வஞ்சனைக்கோர்
உறையு ளனையான் ஒருமறையோன். 1

353 அவனி மடுத்தோய்ந் துறுபவம்
அகன்று செழியற் கமைச்சுரிமை
புவனி முழுதுந் திறையளப்பப்
புரிந்து சிவசா யுச்கியமாம்
உவமை யொழிந்த பெரும்பதவி
யுற்றா னனலு முனிவரவ
னெவனி வரும்பே றடைந்தனன்மற்
றெமக்கு விரித்தோ தெனமொழிவான். 2

354 புண்ட ரீக மலர்ப்பசுந்தார்
பூசு ரேசர் மகச்சாலை
கொண்ட தூமம் புயலளக்குங்
கொடிமின் கொடிகள் தனையளக்கும்
விண்ட நாத மறையொலிபோய்
மேக நாத மளந்தப்பால்
அண்ட கூட முகடளக்கும்
அளகை நாமப் பெருமூதூர். 3

355 அரணி திருத்திக் கடைந்தமைத்த
அழல்வாய் ஓம நறுந்தூமம்
சுரரை அவிதுய்த் திடவழைக்கும்
தூதிற் துறக்கம் புகும் மடவார்
கருமென் குழற்கூட் டகிற்புகைபோய்க்
கடவுள் மகளிர் முடித்தகுழற்
றருவின் நறுமென் மலர்வாசந்
தனையும் விழுங்கிக் கமழுமால். 4

356 இருகை யொருநன் முகப்பிரமா
இவர்கொல் எனும்வை திகர்நெருங்கித்
தரும நிதியாற் கலிதுரந்து
தழைக்கு மவ்வூ ரவதரித்தோன்
உரிய பெயர்பாட் களன்குருவாய்
உடைய தாதை யிடத்தினின்றும்
கருதுஞ் சுருதி முழுவதுஞ்சாத்
திரமுங் கனியக் கற்றானால். 5

57 புதுநாண் மலர்வாய்க் கவர்தேனீப்
பொருவப் புராணம் இதிகாசம்
சதிகூர் பரதம் சோதிடம்வே
தாந்தம் தர்க்கம் வாகடம்நற்
றுநி சேர் பெருங்காப் புறம்முதலாச்
சொன்னூல் யாவுங் கசடறக்கற்
றதிவா லியவா சாலகனும்
ஆகி வடநூற் கரைகண்டான். 6

358 இந்நூல் கொளுத்துந் தேசிகர்க்கொன்
றீந்தால் நலனெட் டுணையேனும்
அந்நாள அறிவி னான்மேம்பட்
டகிலம் புகழும் கவியானான்
பின்னூற் பொருளால் பொருள்தேடும்
பெற்றி மேற்கொண் டனுதினமு
முந்நூல் புரளுந் தடந்தோளான
மோகித் தூரூர் தொறுமுழலும். 7

359 கருத்தோ டரச ரவையணுகிக்
கற்ற நூல்சோ தனையுறுத்தி
வருத்த மகலப் பங்குமனை
வாங்கிப் பொருள்கூட் டுவதன்றி
மிருத்து மகிடந் தயிலகடம்
விலக்குஞ் சாகந் திலதேனுத்
தருக்குங் கால புருடன்முதற்
றானங் கவர்ந்தும் தனம்வளர்க்கும். 8

360 பெரிய நகர்நன் னதிக்கரைகள்
பெயரா திருந்து புராணநூல்
தெரிய வுரப்பி விரித்துரைத்துந்
தேன்போல் வடசொல் சுவைதிரட்டி
அரிய பிரபந் தாதிவகுத்
தருப்பப் பரிசிற் கவையளித்தும்
உரிய சிர த்தம பிராமணருக்
குஞற்றி உலைந்தும் பொருளீட்டும். 9

361 மண்ணின் முளைத்த பல்கொடிநீள்
மரத்து மூலம் இலைகாய்பூ
வண்ண நறுமன் கனிகிழங்கின்
மருவுங் குணங்கள் விதந்துரைத்தும்
எண்ணின் மருந்துண் டிறந்தவுயிர்
எழுப்பும் எனப்பண் டிதஞ் சொற்றும்
நண்ணும் பிணியை மிகவளர்த்து
நாளிற் றிணித்து நிதிகவரும். 10

362 அல்லல் புரியும் கேதுதிசைக்
கப்பால் பிருகு திசைநுமக்கு.
மல்கும் பொழுது தனகனக
வத்து வாக ணாபரணம்
புல்குங் குடைசா மரையாதி
பொருந்தும் எனவும் வறுமையிலாச்
செல்வ ரிடத்திற் சோதிடநூல்
தேற்றித் திரிந்தும் பொருள்கூட்டும். 11

363 இவைய லால்நெய் பால்தயிர்மோர்
எண்ணெய் காட்டம் இலவணநற்
சுவைகூர் பலங்காய் இலைபயறு
சொன்றி முதலா கியவிற்றும்
நவைகூர் பொருள்வட் டியின்மிதப்ப
நவின்று கொடுத்து வாங்கியுமற்
றவையால் வெறுக்கை மிகவிளைக்கும்
அந்தோ ஆசைக் களவின்றால். 12

364 கங்கை யமுனை பிரயாகை
கண்ண வேணி காவிரிமற்
றெங்கும் நடந்து சேதுமுதல்
லெற்றுந் தீர்த்த யாத்திரைநெய்
பொங்கும் ஓமம் சிவபூசை
பொருவில் சீருத் திரசெபமும்
அங்க ணுலகிற் பிறர்பொருட்டால்
ஆற்றி நிதியங் கூலிகொளும். 13

## கலி விருத்தம்

365 ஆவா வொரு நெல்வால்நுதி யளவாகிலு முதவா
தோவமாலி வகைதேடினன் ஒருகோடிபொன் அதன்மேல்
மேவாமம தைகள்மேவினன் வீழ்நாள்பட வாழ்நாள்
பூவார்முலை விலைமங்கையர் தஞ்சேரிபு குந்தான். 14

366 கொல்லுங்கணை விழிவேசையர் கூடுங்கல வியைநேர்
சொல்லுஞ்சுக மரமாதர்சு வர்க்கத்தினு மிலதென்
றல்லும்பக லீனும்வேள்களி யாட்டந்தவி ராமற்
புல்லும்பணை யந்தானொரு பொருளன்றென நினையும். 15



ஐந்தொழில் புரியும் ஈசன் அன்பருக்கருளும்
காட்சி.

367 மையோதியர் அல்குல்சுவை வாஞ்சித்துறு
பணையங்
கையோடுற நல்கிப்புணர் காமத்துறை புக்கான்
பெய்யோகவின் டுளியாற்றனி பெருகிக்குள
முடைத்தாங்
கையோபொருள் ஒருகோடியும் அற்றான
ருளற்றான். 16

368 அற்றாலுமென் விலைமாதர்தம் முலையாசைய
றாமல்
சுற்றார்தரு மனையிற்பொருள் சோரஞ்செய்
தளித்தும்
பற்றாமல்மெய்ம் மறையோர்நறை படர்தீவினை
ஓமக்
கற்றானினந் திருடுந்தொழில் கண்டார்கள்
கலித்தார். 17

369 மறைத்தாலுவர் கோவென்றுவ ளைத்தார்வளை
யாமுன்
நறைத்தார்முடி யரசன்றமர் நணுகிச்சின
மனமிக்
குறைத்தாங்கவ னிருகாலினுள் ஒருகாலறு
காலாய்க்
குறைத்தார்கரு வியினால்வினை கொடிதென்றுவி
ழுந்தான். 18

370 ஊர்நோக்கவு ளைந்தங்கண் ணொதுங்குஞ்சர
ணுறுபுண்
நீர்நோக்குமி ரங்குந்தனி நெஞ்சோடுபு லம்பும்
வார்நோக்குமென் முலைவேசையர் வழிநின்றெதிர்
நோக்கப்
பார்நோக்குமி ருக்குந்துயர் பகரும்பரி சன்றால்.
19

371 கானோய்முழு நோயென்றுக லங்கும்கர
மூன்றித்
தானேதவ ழும்பார்மிசை தளருங்கலுழ்
கண்ணீர்
ஆனாநிலம் நனையும்படி யவ்வூரிடை நின்றும்
ஊனோடுயிர் உருகத்தனி யூரூர்தொறு
முழலும். 20

372 அந்தோதெரு மருநாள்வயின் அவன்மாசுட
லெங்கும்
நொந்தோடவ சும்பூறுபுண் நோய்பொங்குகி ரந்தி
சந்தோவரும் வெஞ்சூலைவி தலைகூர்வி ர
ணத்தான்
வந்தோலமி டுந்தீரும சுந்தார்தரும் என்பான். 21

373 முன்னேவரு பவர்கண்ணொடு மூக்கின்றுளை
புதைப்பக்
கொன்னேமுடை நாறும்பிணி பழுத்துற்றுடல்
குலைவான்
என்னேகழி பவநல்வினை யீதென்றறி கில்லேன்
மின்னேர்சடை யானன்னவி னோதன்பதி
புக்கான். 22

சந்தம்

தானத்தன... - தனனா

374 மேகச்சுர வேகத்தினின் மேவிப்பசு மடுநீர்
சோகத்துயா போகத்தனி தோய்வுற்றன னுடனே
ஆகந்தறு கால்பெற்றனன் ஆசிற்பிணி யறவே
மாகத்தெழு பாலக்கதிர் மானப்பொலி
தருவான். 23

375 ஈதற்புத மீதற்புத மியசர்பெற்றன ரெனவே
ஓதிப்பெரி தாடிப்புன லூறிப்பொழி விழியான்
சோதிப்பெரு வாவிக்கரை சூழ்வுற்றெதிர்
பணிவான்
ஆதித்தனி நாதற்றொழ ஆர்வத்தொடும்
அணையா. 24

### வேறு

**தனனந்தன...... தனனா**

376 குரவங்கமழ் குழல்பங்கமர் குழகன்சின கரநேர்
தரவஞ்சலி யுடன்வந்திரு சரணந்தொழு
தெதிர்நின்
றிருகண்களும் நிறையும்புனல் எழநெஞ்சமுள்
உருகிச்
சுரகங்கையர் மகிழும்படி துதியிங்கிது
புகலும். 25

### எழுசீர் விருத்தம்

377 அடர்பூத நாத சதுர்வேத கீத
அளவாவ தீத சரணம்
படரால கால நுகர்கால கால
பரநாத மூல சரணம்
நடனாபி ராம குணரூப நாம
நவைபோய தாம சரணம்
திடஞான கோச கயிலாய வாச
சிவகீல கேச சரணம். 26

378 பூவாகி மேவு மணமாகி மூல
புயலாகி நீடு துளியாய்
காவாகி வீசு கொடையாகி யீறில்
கதிராகி வீறு சுடராய்ப்
பாவாகி யோது பொருளாகி வந்து
பழைதா யிருந்து புதிதாம்
தேவாகி யேக வடிவாகி நின்ற
சிவகீல கேச சரணம். 27

379 இருளாய்வி டிந்து பகலாய்வி ளங்கி
எழுகின்ற சோதி சரணம்
அருளாய் உணர்ந்து தெளிவார்தெ ளிந்த
வடிவாம னாதி சரணம்
சுருளாய் அடங்கி விரிவாய்ம லர்ந்து
தொடர்பாவ நாச சரணம்
தெருளாய் நிறைந்து முடிவாகி நின்ற
சிவசீல கேச சரணம். 28

380 வேல்காட்டி யன்ன விழிகாட்டி யல்குல்
விலைகாட்டு மாதர் முலைமேல்
மால்காட்டி நோய்கொள் வினையேற்கு முய்யும்
வழிகாட்டி யாரு மறியக்
கால்காட்டி யின்றுன் அருள்காட்டி யாண்ட
கதையென்கொல் கூர்மை எழுதுஞ்
சேல்காட்டும் வாட்கண் உமையாள்ம ணாள
சிவசீல கேச சரணம். 29

381 மாவேட்ட மாடு செழியன்ற னன்பின்
வலைபுக்கு நின்ற பெருமான்
நீவேட்டி ரங்கி வலியப்பு ரந்த
நிலையென்கொல் ஐய சரணம்
பூவேட்டி ருந்த வயன்மாலி ரண்டு
புடைதங்கு நேச சரணம்
தீவேட்டு வேத முனிவோர்வ ணங்கு
சிவசீல கேச சரணம். 30

382 ஈவற்ற லோபி ஒழிவற்ற காமி
இடருற்ற மூடன் இதுவோ
பாவத்தி னுக்கும் முடைநோய்க்கு மிங்கோர்
பரிகாரம் அற்ற கொடியேன்
வாவிக்குள் மூழ்கி வினைவிட்டொ ழிந்து
மறுவுற்ற மேனி யுடன்நான்
சேவிக்க இன்றுன் அருள்தந்த தென்கொல்
சிவசீல கேச சரணம். 31

383 என்றோதி யோதி முடிதாழ்த்தி றைஞ்சி
இறைமுன்னர் நிற்கு மளவிற்
குன்றாத கோயில் அடியார்ம கிழ்ந்து
குழுமிப்பு கழ்ந்து விரைவிற்
சென்றோத வந்து தமிழ்மாற னெங்கள்
திருவாப்ப னூரர் செயலும்
தன்தாள்தி ருத்தி மறையோன்வி ளங்கு
தகவும்ப ணிந்து வியவா. 32

384 இறைகோயில் வாயின் முறைகூற மைச்சின்
இயல்பூட்டி னான்பின் அரசர்
திரைகோடி கோடி தரமீன வன்கொள்
செங்கோல்வ ளர்த்து நெடுநாள்
துறைசேர்பல் போக நனிதுய்த்தொ ழிந்து
தொடர்கீல கேச னருளால்
தரையோர்செ லாத சாயுச்சி யப்ப
தவிமேவி னானம் மறையோன். 33

385 கேடுற்று யர்ந்து வெருபாட்க ளன்கை
கிளர்நேமி யானு மருவா
வீடுற்ற வண்ண மிதுதேவர் கோன்முன்
விறல்வே ளலைப்ப மருண்மான்
மூடுற்று ழன்றொர் தினம்அற்றம் நோக்கி
முனிமேத மன்றன் மனையாள்
மாடுற்று ணைந்த முனிசாப மேற்று
வானாட டைந்து கவல்வான். 34

386 அயிராணி யாதி யரமாத ருக்கும்
அமரர்க்கும் நாணி யழிவான்
உயிராசை யற்ற உடலான்வ ருந்தி
உருகிக்கு ழைந்து குருமுன்
பெயராந டந்து வெருவிப்ப ணிந்து
பெருமாத வன்க வுதமன்
வெயிராவு ரைத்து விடுசாப யோனி
விளைமேனி காட்டி நவில்வான். 35

387 மாதர்க்கு மல்லன் மைந்தர்க்கு மல்லன்
பற்றிங்கெ னக்கு மலனிக்
கோதுற்ற சாபம் ஒழியச்சு னாசி
கூறென்று கூற மறையோன்
தீதற்ற சிந்தை ஒருமித்து நன்கு
சிந்தித்தி ருந்து வரையா
மேதக்க வேத முனிசெ ற்ற தீமை
விளைதீரும் வண்ண மொழிவான். 36

388 இகழ்கின்ற சாப மிதுகன்ம பூமி
யினிலன்று யெங்கும் ஒழியா
தகழ்கின்ற வீரை புடைசூழ்நி லத்தின்
அரவாய்ந்த மாலம் விரவித்
திகழ்கின்ற நிம்பம் அணிமீன வன்மை
திரமிக்கி லங்கி யெவரும்
புகழ்கின்ற கூடல் வடபாலின் வையை
புணர்கின்ற கூட மதன் வாய். 37

389 விடைநந்தி நாம நகர்தான்வி ளங்கி
மிகமல்கும் அந்த நகரி
னிடைநந்தி யான திறைதேவர் தேவன்
இறைவன்பு ராண புருடன்
கடைநந்தி நீரு குழையண்ண லாதி
கயிலாய வாணன் மழுவாட்
படைநந்தி நாதன் இமவான்ம டந்தை
பதிகில கேசன் உறையும். 38

390 உயர்கீல கேசன் உறைகோயி னின்று
மொருசாய கஞ்செ லளவிற்
செயனின்தெ னாது திசையூடு நந்தி
திருநாம வாவி யுளதவ்
வியனீரின் மூழ்கின் ஒழியாத சாப
வினைபாறும் என்ன விடைகொண்
டயல்சூழும் உம்ப ருடனேச மழ்ப்பும்
அகலாது சூழ நடவா. 39

391 தென்பால்வி ளங்கு தமிழ்நாட்டு யர்ந்த
திருவால வாயின் மருவி
நன்பார்பு கழ்ந்த திருநந்தி நாம
நகர்மேவி எற்று மடுநீர்
அன்பாலவ ழாத சங்கற்ப மோதி
அரனென்று மூழ்கி உடன்மேல்
வன்பால்வி ளைந்த பகமம்ப கத்தின்
மலரச்சு னாசி மகிழா. 40

392 குரவங்க மழ்ந்த குழல்மங்கை கொங்கை
குழையக்கு ழைந்து தழுவும்
பரமன்சி வந்த பவளம்ப ழுத்த
பரிசொத்த மேனி யழகன்
அரவம்பு னைந்த சரணார விந்தன்
அகிலாக மஞ்சொல் இறைவன்
புரபங்க னெங்கள் சிவலீல வேசன்
உறைகோயில் சென்று புகுதா. 41

393 திருமுன்ப ணிந்து வலம்வந்தெ னண்ணல்
திருமேனி கண்டு வியவா
இருகண்க ளன்றி விழியாயி ரங்கள்
இன்றெய்த வந்த பயனீ
தருமந்த மேன்மை யெனநின்று கூறி
அணியாப்ப னூரன் அமலன்
பொருமந்த காரி சரணங்கள் தாழ்ந்து
பூசிப்ப துன்னி விரைவான். 42

394 வானின்று வந்த நதிநீர்பொ னாடை
மணியாரை மாலை கடவுள்
ஆநின்ற வைந்து கனிதூப தீபம்
அமுதாதி கொண்டு சுரர்தம்
கோனின்று பூசை விதியாற்செய் துண்மை
குறையாத வன்பின் வடிவாய்
நாதின்ற வேத மொழியா லிரங்கி
நயனங்க ளுழ்ந்து பகர்வான். 43

## அறுசீர் விருத்தம்

395 சீர்பூத்த மலர்ச்சொருக்கும் பிறைகீற்றுந்
திலகமும்வெண் ணீறுந் தோடும்
தார்பூத்த மணிக்குழையுங் கிள்ளையுஞ்சூ
லமுந்துகிலும் சரும யாப்பும்
பார்பூத்த சிற்றுதரப் பசுங்கொடிபா
கமுந்தனது பாக முங்கொண்
டேர்பூத்த திருவாப்ப னூருடைய
தனிமுதலின் இருதாள் போற்றி. 44

396 காரணஞா னத்தருவே யுபநிடதம்
பழுத்துமிழும் கனியே யேத்தும்
நாரணனா ரணனளவா வியோமநிரா
மயபரமா னந்தத் தேனே
பூரணசோ திச்சுடரே நிரதிசயம்
விளைமூலப் பொருளே யோங்கும்
பாரணகா ளத்தமுதே யாப்பனூர்
அரசேநின் பாதம் போற்றி. 45

397 இனையவகை துதித்திறைஞ்சி யருள்பெற்றா
னந்தவெள்ளத் திழிந்தங் கேறி
நனையமலர்த் தருமணியான் வேண்டுமுப
கரணமெல்லா நல்க வீக்கி
வனைகழல்ஆ கண்டலன்ஆப் புடையவர்க்குத்
தேர்விழாவ மூாது செய்வான்
அனையவர னூர்திமதி யவனுடுவின்
அங்குரார்ப்ப ணம்முன் ஆற்றி. 46

398 திருப்புணர்ந்த மூரிவிடைக் கொடியேற்றி
சோதிநாள் தேர்ந டாத்தித்
குருப்புணர்ந்த நாளெனலாம் விசாகத்தில்
திருத்தவிழாக் குறையா தாற்றி
விருப்புணர்தன் அகத்திருந்து விளையுவகைப்
பெருப்பெருக்கின் வெள்ளத் தாழ்ந்து
மருப்புணர்கொன் றையன்மலர்த்தாட்
புணைபிடித்துக்
கரையேறி வானா டுற்றான் 47

399 அரசுரிமை புரிசுதன்மைப் பெயர்மணிமண்
டபத்துளரி யாத னத்திற்
பரசுமிமை யவர்வணங்கப் புலோமசைப்பெண்
புடையிருப்பப் பசும்பொன் வான
முரசுகிடந் ததிரவம ருலகளிந்தான்
இடவபுர மூர்த்தி பாதம்
கருதுதல்சற் றகன்றொழியான் கண்கொடுத்த
கடவுலனயார் கருதா ரம்மா. 48

சந்தம்

தானந் தானன தாத்தன தானன

400 பாசங் கூர்தரு பாட்கள னீபரி
பாவஞ் சாவமு டிக்குறு காதைதான்
நேசங் கூர்மறை யேய்ப்பன வாமிதன்
நீதி தேர்ந்துரை கேட்பவ ரோதினர்
தேசங் கூர்புவி மேற்புகழ் சேர்தரு
சீரும் போகமும் வாய்ப்புற வாழ்வரோர்
நாசங் கூர்தலில் லாப்பர னாரருள்
நாலென் றார்சிவ மாக்கதி
சேர்வாரால் 49

பாட்களச் சருக்கம் முற்றிற்று

— ... —

## பாட்களச் சருக்கம்

1 பா. பே. : சொல்கேன் றங்கோனருள் துடைத்தோன்.

2 அவனிமடுதோய்ந்து-அவன் இ மடு தோய்ந்து எனப் பிரியும்-அவன் இந்தக் குளத்தில் மூழ்கி; சாயுச்சியம்-இறைவனோடு ஒன்று பட்டிருக்கும் நிலை.

3 பூசுரேச-அந்தணர் தலைவர்; மகிச்சாலை-யாகச்சாலை துமம்-யாகப்புகை; புயல்-மேகம்.

4 அரணி-தீக்கடை கோல்; தரு-கற்பகத்தரு.

5 சுருதி-வேதம்.

6 வாகடம்-மருத்துவம்; வாலிய-தூய்மையான; வாசாலகன்-வாக்குவன்மை உடையவன்.

7 நூல் கொளுத்துதல் - நூல் கற்பித்தல்; முந்நூல் - முப்புரிகளை உடைய பூணூல்.

8 மிருத்து-பொன் முதலாகிய உலோகங்களால் செய்யப் பெற்ற இயமனின் உருவம்; மகிடம் - எருமை; தயிலகடம் - எண்ணெய்க்குடம்; விலக்கும் சாகசம் - அனுமதி மறுக்கப்பட்டதாகிய ஆடு; திலதேனு-எள்ளால் செய்யப்பெற்ற பசு; கால புருடன்-கால புருடனின் உருவம்; இவை துஷ்டதானங்கள் எனப்படும். நல்ல அந்தணர் பெறார்.

பா. பே. : விளக்கஞ் சாகம்

9 உரப்பி - பேரொலியுடன் பேசி; அருப்பப் பரிசில் - மிகச் சிறிய பரிசில்; உஞற்றி-நடத்தி; சிராத்தம்-இறந்தவர்களுக்கு இயற்றும் கடன்.

10 பண்டிதம்-மருத்துவம்.

11 பிருகு திசை-சுக்கிர திசை; புல்கும்-சேரும்.

12 காட்டம் விறகு; இலவணம்-உப்பு; பலம்-கிழங்கு; சொன்றி-சோறு; வெறுக்கை-செல்வம்; இவை அந்தணரால் விற்கத்தகாத பொருள்களாம் வட்டி வாங்குதலும் தடையே.

14 நுதி-கூர் முனை.

15 அரமாதர் சுவர்க்கம்-தேவ மகளிர் வாழும் சுவர்க்கம். தேவ மகளிரது மார்பகங்கள் என்றும் பொருள்படும்; வேள்களியாட்டம்-மன்மத விளையாட்டு; பணையம்-பொருத்தப்பணம்.

16 வாஞ்சித்து-பெருவிருப்புற்று

17 நறை-நறும்புகை; தீவினை-அக்கினிக்காரியம்-தீயால் செய்யப்படும் யாகமாகிய வினை; கற்றா-கன்றினை உடைய பசு; கலித்தார்-ஆரவாரித்தார்.

18 மறைத்தாலுவர்-வேதம் உச்சரிக்கும் நாவினை உடையவர்; சினமன மிக்குறைத்தல்-சினம் கொண்ட மனம் மிகுந்த உறுதி அடைதல்.

16 உளைந்து-வருந்தி; சரணுறு புண்-காலில் பட்ட புண்; புண் நீர் நோக்கும்-புண்ணது தன்மையை நோக்கும்.

21 தெருமருநாள்-துன்பப்படும் நாள்; அசும்பு-நீர்க்கசிவு கிரந்தி-மேகநோய்; விரலை-நடுக்கம்.

23 மாகத்தெழு பாலக்கதில்-வானத்தில் எழும் இளம் கதிரவன்; பா. பே. : மாகத்தெழு வாலக் கதிர்.

25 சரணம்-இருவடி.

26 அடர் பூத நாத-நெருங்கியுள்ள உயிர்க் கூட்டங்களின் தலைவனே; அதீத-எதனாலும் அளந்தறிய முடியாதபடி அனைத்தையும் கடந்தவன்; படர் ஆல காலம் நுகர் கால காலனே-தன் நச்சுத்தன்மையை எல்லா பக்கங்களிலும் படரவிட்ட ஆலகால விடத்தை உண்ட கால சம்ஹார; பரநாத மூல-அனைத்தையும் கடந்த நாத தத்துவத்திற்கும் ஆதி காரணனே; நடனாபிராம-கூத்தாடும் அழகனே; குணரூப நாம-பண்புகளாலும் அழகாலும் பெயர் பெற்றவ; நவை போய தாம-குற்றங்கள் நீங்கிய இடத்தைக் குடியிருப்பாக உடையோய்; திடஞானகோச-நிலைத்த மெய்யறிவின் கருவூலமே; கீலகேச - ஆப்புடையாரே; கீலகம்-ஆப்பு

29 மால் காட்டி-மயக்கம் கொண்டு; பா. பே. முலை காட்டும்.

30 மாவேட்டம்-விலங்குகளை வேட்டையாடுதல்; வேட்டு-விரும்பி; செழியன் - பாண்டியன், சுகுணன்; பூவேட்டிருந்த அயன் மால்-'பூவேட்டிருந்த' என்னும் தொடர் பிரமனைக் குறிக்குங்கால் மலரினை விரும்பி யிருந்த எனவும்; திருமாலைக் குறிக்குங்கால் பூமியை (பூமகளை)மணந்திருந்த எனவும் பொருள்படும்.

31 ஈவற்ற லோபி-கொடுத்தலில்லாக் கஞ்சன்.

33 பா. பே. அமைச்சன்.

34 மருள் மால் முடுற்று-மயக்கத்தைத் தருகின்ற ஆசையால் அறிவிழந்து; மருண்மால்-வேற்றுமைத்தொகை இப்பாடலுக்கு முன் சுவடியில் "தேவேந்திரன் சாபம் தீர்ந்தது" எனத் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

35 அயிராணி-இந்திராணி; வெருவி-அஞ்சி; வெயிராவுரைத்து-சினம் கொண்டுசொல்லி

36 மாதர்க்கும் அல்லன்-மகளிருக்கும் பயன் படாதவன்; மைந்தர்க்கும் அல்லன்-ஆண்களுக்கும் பயன் படாதவன்; மற்று இங்கு எனக்கும் அலன்-எனக்கும் கொள்ளும் பயன் இலாதவன்; இந்திரன் கொண்ட சாபம் இத்தகைய இழிவும் கொடுமையும் கொண்டது; சுனாசி கூறென்று கூற-கூறென்று சுனாசி கூற என மாறுக; சுனாசி-இந்திரன்.

37 வீரை புடை சூழ்-கடல் சூழ்ந்துள்ள; அரவாய்ந்த மாலம்-அரம் போன்ற வாயினை உடைய இலை. நிம்பம்-வேம்பு; பைதிரம்-நாடு; கூலம்-ஊர்.

39 சாயகம்-அம்பு; தெனாது திசை-தென்திசை; பாறும்-நீங்கும்; சமழ்ப்பு-வெட்கம், வருத்தம்.

40 பகம்-பெண் குறி; அம்பகத்தின் மலர-கண்களாகத் தோன்ற; சுனாசி இந்திரன்.

41 புரபங்கன்-திரிபுரங்களை அழித்தவன்.

42 அருமந்த-அருமருந்தன்ன; பொரும் அந்த காரி-போரிட்ட இயமனை அழித்தவன்.

43 ஆநின்ற ஐந்து - பசுவினின்று பெறப்படும் ஐந்து தூய்மைப் பொருள்கள். அவை பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பன. நயனங் கலுழ்ந்து-கண்கள் நீர் சொரிய.

44 இப்பாடல் அம்மையப்பர் திருக்கோலத்தைக் குறிக்கிறது. மலர், திலகம், தோடு, கிள்ளை, துகில் ஆகியன இடப்பக்கத்தமர்ந்த உமையாளது அணிகலன்கள். பிறைக்கீற்று வெண்ணீறு, மணிக்குழை, சூலம், புலித்தோல் ஆகியன சிவபிரானது-அணிகலன்கள். பா. பே. : நீர் பூத்த.

45 உபநிடதம் பழுத்து உமிழும்கனி-உபநிடதங்கள் முடிவாகக் கூறும் பொருள், நாரணன் ஆரணன்-நாராயணனும் பிரமனும், அளவா-பொருந்தாத, கண்டறியாத; வியோமம் - ஞான ஆகாயம் - வெளியாகி நின்ற; நிராமயம்-நோயற்ற-குற்றமற்ற, பாரண காளத்து அமுதே-காளபாரணத்து அமுதே என மாறுக. நஞ்சை உணவாகக் கொண்ட அமுதமயமானவரே.

46 வீக்கி-நிறைந்தது; ஆகண்டலன்-இந்திரன்; அரனூர்தி மதி-இறைவனின் வாகனமாகிய இடப மாதத்தில், வைகாசியில்; அவன் உடுவில் - இறைவனுக்குரிய திருவாதிரையில்; திருவாதிரையில் கொடியேற்றிப் பத்தாம் நாள் சுவாதியில் தேர்; அங்குரார்ப் பணம்-முளைப்பாலிகை.

47 மூரி-எருது; சோதி-சுவாதி; குரு புணர்ந்த நாள் எனல் ஆம் விசாகத்தில்-(முழு நிலவின்) ஒளி சேர்ந்த தினமாகிய (வைகாசி) விசாகத்தில் 11-ஆம் நாள் தீர்த்தவாரி. மரு புணர்-மணம் சேர்ந்த.

48 சுதன்மை-இந்திரன் அரசிருக்கும் மண்டபம்; பரசும்-போற்றும்; புலோமசை-இந்திராணி.

49 அரி-இந்திரன்.

பாட்களச் சருக்கம் முற்றிற்று.

## குபேரச் சருக்கம்

நான்முனின் மகனுக்குத் தனையனாம் விச்சிரவசு என்பவனுக்கு மகன் புண்ணியசேனன். அவன் சிறுவயது முதல் இறையன்பு மிக்கவன். காளைப்பருவம் எய்தியதும் இறைவன் திருத்தலங்கள் பலவும் கண்டு மகிழப் புறப்பட்டான். பல தலங்களும் கண்டு வருங்கால் இயற்கை எழில்மிகுந்ததும் அகத்தியர் இருந்து தவமியற்றுவதுமான பொதிகை வந்து சேர்ந்தான். அம்மலையில் எழில் கண்டு வருங்கால் அகத்தியரின் இருப்பிடம் வந்து சேர்ந்தான். அங்கு அகத்தியரைக் கண்டு வணங்கித் துதித்து எண்டிசைப் பாலகருள் ஒருவனாகவும். அறிவில் நன்னிதிக் கொருவனாகவும் இருக்க விழையும் தன் விருப்பத்தை எடுத்துரைத்து அதற்கான வழியைக் காட்டியருள வேண்டினான். அகத்தியரும் இடவபுரத்தின் பெருமைகளை உரைத்து இடபதீர்த்தத்தில மூழ்கி அதன் கரையில் தவமியற்றினால் எண்ணம் கை கூடும் என்று உரைத்தருளினார்.

அதன்படிப் புண்ணியசேனன் இடபபுரமடைந்து நீராடி இடபதீர்த்தக் கரையில் தவமியற்ற இறைவன் குரவங் கமழ் குழலாளொடு முன் தோன்றி அவன் வேண்டிய வரமளித்தான். புண்ணியசேனனும் மகிழ்ந்து குரவங் கமழ் குழலாளை நினைந்து இறைவனுடன் இருக்கும்படி இவள் என்னினும் எத்தகு தவமியற்றினாளோ என எண்ணித தன ஒரு கண்ணால் நோக்கினான். அம்மட்டில் அன்னை அவனை உறுத்துப்பார்க்க அவன் ஒரு கண் இழந்தான். தன் தவற்றை எண்ணி வருந்தி மன்னிக்க வேண்ட, இவறைவன் அன்னையின் பெருமைகளை உரைத்து அவளிடமே வேண்டுகவென, அவனும் அன்

னையைப் பலவாறாகத் துதித்து வேண்டினான். அன்னை மனம் குளிர்ந்து அருள அவன் மீண்டும் கண் பெற்றான். அன்று முதல் அவன் குபேரன் என்ற பெயரு டன் வடதிசைக்காவலனாகவும் நவநிதிக்கும் அரசனாக வும் விளங்கினான்.

## குபேரச் சருக்கம்

### கலிவிருத்தம்

401 தனிமா தவர்தம் தவமே சிவமார்
முனிசூ தபுரா ணிகனே முடிமேற்
பனிமா மதியார் பதிகொன் றைவனத்
தினிதா கியமான் மியமோ தினையால். 1

402 உளமுஞ் செவியும் உருகிப் பருகிப்
புளகந் தரநீ புகலும் பரிசோர்
அளவின் றதனால் அமைகின் றிலதால்
இளகும் படிநெஞ் செழுமா சையரோ. 2

403 இன்னுங் கதையொன் றிசையென் றலுமே
துன்னும் பவமோ சனசோ தனையாந்
தென்னந் திசைநந் திபுரச் சரிதம்
பன்னுந் தகையன் றெனினும் பகர்வேன்.

404 மேனாள் ஒருமா தவன்மேன் மையுளோன்
ஞானா லயமா கியநான் மறையோன்
தேனார் கமலத் திசைநான் முகனார்
தானா தரநீள் தனையன் றனையன். 4

### கலித்துறை

405 குற்ற மிக்கவைம் புலச்செயல் கடிந்துமுக் குறும்புஞ்
செற்ற நற்றவர் சேகரன் தீவினைத் திறம்போ
யற்ற விச்சிர வசுவென விளங்கபி தானம்
பெற்ற உத்தமன் குலத்தினும் தவத்தினும் பெரியோன். 5

406 அனைய வன்விடை யவன்மகிழ் நெடுந்தவ மாற்றி
வினைய கல்வட திசையொரு விபுலமும் விளங்க
நினைவின் மாதவக் கொழுந்தென நிகழமுன் பெற்ற
தனையன் புண்ணிய சேனனென் றுயர்தனிப் பெயரோன். 6

407 பால மைப்பரு வந்தொடுத் தாதியம் பரமன்
மேல மைப்புறுஞ் சிவபத்தி மிக்கெழ விரும்பி
நீல மைக்களத் தரனடி யருச்சனை நியமஞ்
சால மைத்துளி விழிவழி வரச்செய்து சார்நாள் 7

408 வரையி லெந்தைத னன்புமென் னையனும் வளர்ந்து
புரையி லெவ்வனந் தழுவவெவ் வனங்களும் புகுந்து
கரையின் மாதவர்த் தொழுதரன் றானங்கள் காணூஉத்
தரையி னீள்சிவ தீர்த்தங்கள் யாவுஞ்சஞ் சரித்து. 8

409 ஆரு மின்சுவை யாற்புலவர் கண்மதித் தருந்தச்
சாரு செம்பொருள் அமுதமுள் ளுறைதந்து நாவாய்
ஊருஞ் செந்தமிழ்க் கடலிருந் தருந்தவ முஞற்றப்
பாருந் திண்பெருந் துறக்கமும் புகழ்மலை படர்ந்தான். 9



சைவவேதியன் ''மூவர், வானவர், அருந்தவர் யோகியர் ஏவரும் தொடராவுனை எங்ஙனம் தொடர்வேன்'' என்று கூற, ''யாம் ஏகும் துன்று நீள் நெறியிடத்தில் நம் விடையடிச் சுவடும் பொன்றொடுத்தன கொன்றை நாண் மலரும் முன்பொருந்தும்'' என்றருளி இடப வாகனத்தில் உமையொடு இடவபுரம் ஏகுதல்.

410 இமவ ரைப்பிடி வதுவைநா ளமையொப்பாய் தென்பார்
சமநி றுத்தெனக் குறுமுனிக் கிறைவிடை தரப்போந்
தமர்த லிற்படர் விசாலமஞ் சினம்புதைத் தாங்கு
நிமிர்த லிற்பொதி யமுமொரு கயிலைபோல் நின்ற. 10

411 அவ் வரைப்புறத் தருச்சுனந் தேக்ககி லாரம்
மொய்வி ரைத்தளி ராம்பிரம் வருக்கைவிண் முகில்தோய்
வெவ்வ ரைக்குல மிலவங்கம் ஏலமென் கொடிகள்
செவ்வி மிக்கநன் கறிக்கொடி மலர்க்கொடி செறிவ. 11

412 மேன்மை பெற்றவர் தம்புடை யாவர்மே வினுந்தம்
பான்மை யிற்செயும் பரிசெனப் படர்பனை நிவந்து
சூன்மை யுற்றபன் மரங்களும் தம்குணம் துவன்றக்
கான்ம ணப்பெருஞ் சந்தனம் பொதுளிய கடிக்கா. 12

413 முதிர்ந்த சூற்பிடி நசையறக் கற்பகம் முறித்தங்
கதிர்ந்த மால்களி றளிப்பன புழைக்கையி னகல்வான்
வதிந்த வெண்கயம் பசுந்தரு நறுந்தழை மறுத்தாண்
டெதிர்ந்த சந்தின திளஞ்சினை யிறுப்பகை நீட்டி. 13

414 அலத்த கத்தளி ரடியர மாதர்புக் காடிச்
சலத்த வானதிக் கரைநின் றுதங்குழ லீரம்
புலர்த்த வேட்டுவர் புனமெறி யகில்சுடும்
புகைபோய்
நலத்த பூங்குழ லியல்மணம் விழுங்கிமே
னாறும். 14

415 படிவர் வேள்விவாய் நறைகளும் பன்மலர்
மருவும்
கடிவ ரையர மகளிர்தோ யருவிநீர் கடியும்
மடிவில் பூழையின் புழுகுரிஞ் சியசந்தின் மணமும்
நெடிய சாரலின் பரப்பெலாங் குமுகுமு
நிகழும். 15

416 இத்த கைத்தநல் வரைவளங் கண்டுகண் டேகிச்
சுத்த மெய்த்திரு வரையிடைச் சுருதிகண் முழங்க
முத்தி வைப்பென லாகியா ராமஞ்சூழ் முற்றும்
சத்தி யத்தனி யுறையுள்கண் டதனயல் சார. 16

417 மான மாமயிர்த் தொடக்குண் டுநிற்பவள்
ளுகிராற்
மான வேங்கைக ணீக்கிமற் றதனொடு கலக்குந்
தேனி லாமரு வியுளரிக் குருளைசென் றொழுகத்
தான மாம்பனைக் கரமடுத் தெடுக்குறுந் தழுவி.
17

418 ஏனை மாக்களு மிவ்வகை பகைதவிர்த் திருப்ப
தான வாச்சிர மத்தினுண் ணுதல்விழி யகன்ற
ஞான மாசிவ னாமென விளங்கினால் வேத
கான வாய்க்குட முனியவ ணிருப்பது
கண்டான். 18

## எழுசீர் விருத்தம்

420 சித்தமுள் நெகிழக் கண்புனல் துளிப்பத்
திருமுன்பு சென்றுதாழ்ந் தெழுந்து
முத்தமிழ் பழுத்த நான்மறைத் தருவே
முதுதவக் கதிர்விடு சுடரே
சத்திய ஞானா னந்தமாக் கடலே
தருமமெய்ப் பொருள்பிறந் தகமே
இத்தகு மலைய வரைச்சிகா மணியே
எனத்துதித் தாடிநின் றுரைப்பான். 19

420 என்மனத் தொழுமோர் வேட்கையென் னெனில்யான்
இருந்திசைப் பாலரோ டழிவில்
நன்னிதிக் கொருவ னாகவும் அடியேன்
நயந்தனன் அதற்கொரு வழிநீ
பன்னிடக் கடவ தெனவவன் மேற்கண்
பரப்பிநான் முகன்மகன் மகன்சேய்
உன்னுனைப் பெளிதி னுறத்தகு முபாயம்
உரைப்பலென் றுளத்தினாய்ந் துரைப்பான். 20

421 இப்பெரும் பொருப்பன் பதிநதி வடபால்
இருக்கும்வெள் விடைப்புர மதனின்
மூப்பெரும புவனம் பரவவாப் புடைய
முழுமுத லுறைதருந் தென்சார்
எப்பெரும் பவமும் தொலைத்தவா அளிக்கும்
ஏற்றுயர்ப் பெயர்த்தட மொன்றுண்
டப்பெரும் திருத்தம் பகுத்ததன் மருங்கில்
அமர்ந்தினி தருந்தவம் புரியில் 21

422 திருவருள் உருக்கொண் டணிகிளர் பவளச்
செழுஞ்சடை ஆப்புடை யமலன்
வரும்வர மளிக்கு மிந்திரத் திருநேர்
வளத்தினில் வைகுதி யெண்ணில்
விரைவினிற் படர்கென் றிசைக்கமுன் பணிந்து
விடைகொடு பரவிவெற் பிழிந்து
பரனருள் ஈர்ப்ப வயிச்சிர வணனுட்
பரிவொடும் பதிகனாய்ச் சென்றான். 22

423 உள்ளில்வன் பவங்கள் ஒழிப்பதாய்க் காணில்
உவந்தன யாவுநல் குவதாய்த்
தள்ளரும் புனித மாய்ச்சிவ ராச
தானியாய் உத்தமத் தலமாய்க்
கொள்ளுநன் கதிக்கோர் ஏணியாய்க் கோதில்
நெடுத்தமிழ்க் குறுமுனி கூறும்
புன்னுறை கமல வாவிசூழ் இடவ
புரத்தினில் விருமபியுள் புகுத்தான். 23

424 மலர்சூடைந் தாடும் தேனிரால் வாவி
வதித்துசங் கற்பநன் கியற்றி
நலனுற மூழ்கிக் கீலக நாம
நாயகன் கோயில்சூழ்ந் திறைஞ்சிப்
பலனுறு பூசை விதிப்படி யாற்றிப்
பசுபடுப் பாலினி திருந்து
குலவுகார் மாரி வருடநாட் கான்மேல்
கொளநிறை நீரினுட் குளித்தும் 24

425 வெயிற்சுடு வேனில் ஐவகை நெருப்பி
னனந்தலை நின்றும்வீழ் பனிநாள்
வயிற்குளிர்க் குடையா தாடைநீத் திருநதும்
வள்ளுகிர் மயிர்ச்சடை வளர்த்தும்
தியக்குமைம் பொறியின் வாயில்க ளடைத்தும்
சிலபகல் அருந்தவ நடப்பக்
குயிற்குலம் மருளுங் குரலவார் குழற்பெண்
கொடியொடும் பரன்வெளி வருமால். 25

426 மின்பழுத் துமிழ்செஞ் சடைநறுங் கொழுந்தும்
வெண்பிறைத் தளிரும்வாண் முகமும்
பொன்படைத் தனைய மேனியும் திருவெண்
பூதியும் புலியதள் உடையு
மன்பணிக் குழையும் உபயமு மபய
வரதமும் மிளிர்கழல் மலரும்
அளபனைப் புரிந்து தொடர்முழு நோக்கும்
ஆகிவந் தவனெதிர் நின்றான். 29

427 நின்றியாம் மகிழ்ந்தோம் பெருந்தவப் பிள்ளாய்
நெடுந்தவம் நீத்தெழுந் திருநீ
என்றுவாய் மலர உடனெழுந் தாடி
இருவிழி நீர்பரந் திழியத்
தன்றகை வருந்தி நாள்பல வுழத்த
தவமுருக் கொடுவந்த தனைய
கொன்றையந் தருவின் அணுநிழ லமர்ந்த
குழகனைப் பணிந்திவை துதிப்பான். 27

428 குணவிரா சதத்தின் மலர்மக னாகி
கோதில்சத் துவகுணத் தரியாய்
உணர்வில்தா மதத்தின் உருத்திர னாகி
உலகெல மீன் றுகாத் தழித்தும்
தணிவில்சாக் கிரத்தில் விசுவனாய்க் கனவில்
தைசத னாய்ச்சுழுத் தியினிற்
புணர்பிராக் கிஞனாய் உயிர்தொறும் புணரும்
பூரணப் பரஞ்சுடர் போற்றி. 28

429 ஆதியாய் நடுவாய் அந்தமாய் அவைதீர்
அனாதியாய்ச் சுருதியும் அளவா
நீதியாய்த் தூல சூக்கும வடிவாய்
நிர்க்குண மாய்த்தனி முளைத்த
சோதியாய்ப் பரமா னந்தமந் திரமாய்ச்
சொல்லள வாலளந் தியாரும்
போதியாப் பொருளாய் உலகெலாம் நிறைநின்
பொன்னடிப் பூந்தளிர் போற்றி. 29

430 பிரணவ வடிவாய் அட்டமூர்த் தியுமாய்ப்
பேருயிர்க் குயிரதாய் மாயை
அரணநீத் திலங்கும் அறிவதாய்ப் பரமா
காயமாய் முக்குறும் பெறிந்து
சரணடைந் தவர்கட் கருள்நிறை கடலாய்ச்
சச்சிதா னந்தமாய்ச் சனன
மரணமில் பொருளாய் ஆப்பனூ ரமர்ந்த
மாசிலா முழுமுதல் போற்றி. 30

431 எண்ணிலிவ் வகைய துதிமொழிந் தங்கம்
எட்டினோ டைந்தினு மிறைஞ்ச
விண்ணவர் பெருமான் தவத்தினுந் துதிக்கும்
விழைந்தனம் விழைந்தன கொடுப்போம்
கண்ணுறு தவத்தோய் கேளெனத் திசைவாழ்
கடவுள ரோடொரு வனுமாய்
எண்ணிதிக் கரசாய் அழிவிலாச் செல்வத்
துறைபதந் தருகென வுரைத்தான். 31

432 இருந்திசைப் பாலர் யாரினுஞ் சிறந்த
இந்திரத் திருநகர் வளத்திற்
பொருந்திநன் நிதிக்கோன் ஆதியெண் டிசையிற்
பொருவில்சீர் வடதிசை புரக்கும்
அருந்திறல் அடைதி எனப்பெரும் வரங்கள்
ஒப்புடை அமலனாங் களிப்ப
வருந்திநோற் றுயர்ந்த வயிச்சிர வணனுள்
மலர்ந்தெழு களிப்பினால் மயங்கி 32

433 மின்னினும் சிறந்த குரவவார் குழற்பெண்
விடைமிசை அரனொடு மிருப்ப
என்னினு மிவளெத் தவமுயன் றனளோ
எம்பிரா னுடனிருந் தனளென்
றுன்னினன் நோனா தொருகணாற் பார்க்க
உமைசிறி துறுத்தலும் உருகி
அந்நிலை யொருகண் மறைந்துயி ரவியா
அரனுயி ரளிப்பவாங் கெழுந்தான் 33

434 எழுந்தயர் பவனைப் பெருந்தவச் சிறுவ
என்னிலைந் தனையிவள் வலியாம்
மொழிந்திடற் கரிதால் ஆயினும் மொழிவேம்
முழுதுல கீன்றுகாத் தோம்பி
உழுந்துருள் பொழுதின் அழிப்பவள் இவளை
ஒழியவீங் கொருசெயல் எமக்கின்
றழுந்துய ரொழிதி எம்மில்வே றலனீ
தருமறைப் பொருளென அறிதி. 34

435 தேனுமின் சுவையும் பிரித்திடற் கரிதாஞ்
செயலெனக் கலந்தக லாமல்
யானுமிங் கிவளும் இரும்பதிங் கிவளே
யாவர்க்கும் ஒருயிர்த் தாயால்
வானுளிந் திரற்குப் பெருந்திரு வளித்த
வரப்பெருஞ் செல்விசெங் கமலப்
பூநிறந் திகழ்மென் றளிரடி இலதோர்
புகலிலை நினக்கெனப் புகன்றான். 35

436 சோதியாங் குரைத்த திருமொழி சிரத்திற்
சூடினன் தொழுதிவை துதிப்பான்
ஓதியாங் கிரைக்கும் பழமறை முடிவின்
உண்மையுங் கடந்தர னுருவில்
பாதியாம் பரையே முழுதுமாய் நிறைந்து
படைப்பன ஆதியைந் தொழிற்கும்
ஆதியாங் குரவங் கமழ்குழல் உமையே
அஞ்சினேன் அபயநின் னபயம். 36

437 மலர்தலை உலகஞ் செயுந்தவக் கொழுந்தே
மலைபழுத் துமிழ்நறுங் கனியே
குலமறைக் கொடிமேற் படர்கொழு கொம்பே
குதலைமென் மொழியிளங் கரும்பே
நலநிறை திருவே குயிலிளம் பெடையே
நங்கையர்க் கொருமணி விளக்கே
அலர்தருங் குரவங் கமழ்குழல் உமையே
அஞ்சினேன் அபயநின் னபயம். 37

438 ஓமெனு மெழுத்தின் ஒருதனிக் குடம்பை
உள்ளுறைந் தருள்பசுங் கிளியே
தேமருங் கடுக்கை வளர்சடைப் பெருமான்
திருவுளத் தடமட வனமே
காமரு பனிமால் வரைத்தனி மயிலே
கயிலையஞ் சயிலமேன் மருந்தே
யாமெனுங் குரவங் கமழ்குடி லுமையே
அஞ்சினே னபயநின் னபயம். 38

439 நிலத்தினிற் பயிராய்ச் சலத்தினிற் சுவையாய்
நெருப்பினில் வெம்மையாய்க் காலிற்
செலத்தகு நடையாய்க் காயத்தி னிடமாய்ச்
சுடரினிற் கதிர்மதி நிலவாய்
நலத்தரு புயலிற் றாரையாய் விளங்கி
நல்லுயிர்த் தொகைபுரந் தளிக்கும்
மலர்த்திகழ் குரவம் கமழ்குழலு மையே
அஞ்சினேன் அபயநின் னபயம். 39

440 கறைமிடற் றிறைவன் விழிகுடி யிருப்பக்
கவின்குடி யிருந்தடி பணைத்துப்
பிறைவடங் கிடந்த முலைப்பசுங் கொடியே
பெண்ணலங் கனிந்ததெள் ளமுதே
முறைமுறை புவன சராசர சடங்கண்
முழுவதுந் தனிப்பிறந் தகமே
அறையலர்க் குரவங் கமழ்குழல் உமையே
அஞ்சினேன் அபயநின் னபயம் 40

441 இவ்வகை துதித்தங் கன்னைநீ சேயான்
இழைத்ததீங் கிவைபொறுத் தருளென்
றவ்விடை யிருப்ப வாப்புடை அமலன்
அவமதித் திகழ்ந்கண் இவன்பெற்
றுய்வகை யளித்தி எனமகிழ்ந் திறைவி
உருகிமுன் மறைவிழி பொன்போல்
வெளவுற வளித்தான் அன்றுதொட் டுலகம்
வழுத்தின குபேரனென் றவனை. 41

442 பரவருங் குரவங் கமழ்குழல் அணங்கும்
பரமனுங் கோயில்புக் குறையத்
தரவருங் களிப்பி னளகையிற் குபேரன்
சார்ந்திரு நிருக்கர சாகி
வெருவரு மியக்கர் குய்யகர் வீணை
விஞ்சையர் கின்னரர் இறைஞ்சப்
பொருவருஞ் சிறப்பின் வடதிசைப் புரவு
பூண்டர சியற்றினன் மாதோ. 42

சந்த விருத்தம்

தான தனதன தனன தனதன

443 ஆயு முனிமகன் அளகை யதிபதி
யாய கதையிதை யிதயநெகிழ்தர
வாயின் மொழிபவர் இதழின் வரைபவர்
மாசில் செவிவழி யுருகிநுகர்பவர்
தீய கலியுகம் மருவு பவவினை
தீர்வர் வறுமைகள் ஒழிவர் சுபமய
நேய நிதிநனி பெறுவர் உவமையின்
நீடு சிவபுரி யடைவர் சரதமே 43

குபேரச்சருக்கம் முற்றிற்று

1. பனிமாமதியர்-தண்ணிய நிலவினைச் சூடியுள்ள சிவ பெருமான்.

2. புளகம் தர-மயிர் சிலிர்ப்புற.

3. பவமோசனம்-பிறப்பு நீங்கல், பன்னுந்தகையன்று-செல்லற்கு எளிதன்று.

4. ஆதரம் நீள்-அன்பு மிக்க. பா. பே.: தானா தரநீ யனையன்.

5. முக்குறும்பு-காமம், வெகுளி, மயக்கம் என்று மூன்று குற்றங்கள்; செற்ற-அழித்த; அபிதானம்-பெயர்.

6. விபுலம்-பெருமை.

7 நீலமைக்களம்-நீல நிறத்து இருண்ட கழுத்து.

8. எவ்வனம்-இளமை.

9. ஆரும் இன்சுவையால் புலவர்கள் மதித்து அருந்த-பெருகிய இனிய சுவையின் பொருட்டு புலவர்கள் பெரிதும் விரும்பி அனுபவிக்க; சாரும் செம் பொருள் அமுதம் உள்ளுறைதந்து நாவாய் ஊறும்-உள்ளத்தில் கண் பெருகி நிறைந்து நாவின் கண் பாக்களாகிய ஊற்றாக ஊறும்படியான; செந்தமிழ்க் கடல்-தமிழ் முனிவனாகிய அகத்தியன்; துறக்கம்-சுவர்க்கம். 'ஆரும் இன்சுவை' முதலாக 'நாவாய் ஊறும்' என்பது வரையானவை செந்தமிழுக்கு அடைமொழிகளாக வந்தவை. செந்தமிழ் முனிவனாகிய அகத்தியன் தவ மியற்றலால் பெருமை பெற்ற பொதிகை மலை என்பது கருத்து.

10. இமவரைப் பிடி-இமயவன் மகளாகிய பார்வதி.

11. அருச்சுனம்-மருதமரம்; ஆரம்-கடப்பமரம்; ஆம்பிரம்-மா; வருக்கை-பலா; கறிக்கொடி-மிளகுக்கொடி.

12. பணை - கிளைகள்; நிவந்து - உயர்ந்து; துவன்ற-நிறைந்திருக்க; பொதுளிய செழித்த.

13. முதிர்ந்த சூற்பிடி முதிர்ச்சியுற்ற கருவினைத் தாங்கிய பெண்யானை; அதிர்ந்த மால்யானை முழங்கிய மயக்கத்தைத் தரும் பெரிய யானை; புழைக்கை-துளையையுடைய துதிக்கை; வெண்கயம் - வெள்ளை யானை; சந்தின் இளஞ்சினை-சந்தன மரத்தின் இளந்தளிர்கள், உயர்ந்த பொதியை மலையில் வாழும் கரிய யானை தன் துதிக்கையை நீட்டி வானுலகத்தில் உள்ள கற்பக மரக்கிளையை ஒடித்துச் சூல் கொண்ட தன் பிடிக்குக் கொடுக்கும்; வானுலகில் உள்ள வெள்ளை யானை தன் பக்கலில் உள்ள கற்பகக்கிளைகளை மறுத்து ஈண்டுள்ள சந்தனக் கிளைகளை விருப்பி முறித்துத் தின்னும் என்பதாம். இது மலையின் உயரத்தையும் சிறப்பையும் காட்டுவதாகும்.

14 அலத்தகம்-செம்பஞ்சுக் குழம்பு; சலத்த-நீருள்ள; வானதி-ஆகாய கங்கை.

15. படிவர்-முனிவர்; பூஞை-பூனை.

16. ஆராமம்-ஆசிரமம், மலர்த்தோட்டம்.

17. மானமா-கவரி மான்; பணைக்கரம்-யானை.

18. குட முனி-அகத்தியன்.

20. நான்முகன் மகன் மகன் சேய்-பிரமனுக்கு மகனாகிய புலத்தியருக்கு மகன் விச்சிரவசுவின் மகன் புண்ணிய சேனன்.

21. பவம்-வினை.

22. பதிகன்-வழிச்செல்வோன்.

23. சிவராசதானி-சிவபெருமான் கொலு வீற்றிருக்கும் அவை; குறுமுனி அகத்தியன்.

25. நனந்தலை-நடுவில்; தியக்கும்-கலக்கும்;

26. புலியதள்-புலித்தோல்.

28. குணவிராசதத்தின் மலர் மகனாகிக் கோதில் சத்துவகுணத் தரியாய் உணர்வில் தாமசத்தில் உருத்திரனாகி-இராஜச, சத்துவ, தாமச குணங்களில் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரனாகி; சாக்கிரம்-விழிப்பு நிலை; விசுவன்-சீவான்மா; தைசதன்-சூக்தும உடலை யான் எனக்கருதும் சீவன்; சுதுத்தி மயக்கமான நித்திரை பிராக்கிஞன்-உணர்வு நிலை.

30. முக்குறும்பு-காமம், வெகுளி, மயக்கம்.

31. எண்ணிதி - சிறப்பாகப் போற்றப் படுகின்ற எட்டு நிதிகள் அவை பதுமநிதி, மகாபதுமநிதி, மகாநிதி கச்சபநிதி, முகுந்தநிதி, குந்தநிதி, நீலநிதி, சங்க நிதி ஆகியன. இவை குபேரனுக்கு உரியவை.

36 பரை - சிவசக்தி; படைப்பனவாதியைந் தொழில்-படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள்.

38. குடம்பை-கூடு, உருவகம்; கடுக்கை-கொன்றை.

39. காயம் - ஆகாயம் என்பதன் முதற்குறை. தாரை-மழை

41. குபேரன் என்ற சொல் நன்மையற்ற [தீய] வடிவினன் எனப்பொருள் படும். ஒற்றைக் கண்ணனாதலின் இப்பெயர்.

42. இருநிதி-பெரிய நிதிகள்; குய்யகர்-குபேரனது நிதியைக் காவல் புரியும் தெய்வ கணத்தார்.

குபேரச்சருக்கம் முற்றிற்று.

## சுதரிசனச் சருக்கம்

கஞ்சனூர் என்னும் ஊரில் சுதரிசனர் என்பவர் வாழ்ந்து வந்தார். நீதி நேர்மை வாய்ந்த உத்தமர் அவர் சிவநாமம் ஒதி அர்ச்சனை செய்யும் தொழிலினர். என்றும் சிவன் சேவடிக்குள் மனம் வைத்து வாழ்பவர். அவர் சிவதீர்த்த யாத்திரை தொடங்கிப் பல தலங்களும் சென்றுவழிபட்டு, இறுதியில் திருவாப்பனூரினை அடைந் தார். ஆப்பனூரில் இடபதீர்த்தத்தில் நீராடி உரிய பூசை களை முடித்து இறைவன் கோவிலையடைந்து வணங்கிப் பரவிப் பின் குரவங்கமழ் குழலாளையும் வழிபட்டு மீண் டும் இறைவன் சன்னதி வந்து தியானத்தில் அமர்ந்தார். தியானம் முடித்து எழுந்து பார்க்க நள்ளிரவு ஆகி விட்டி ருந்தது. கோவிலை விட்டு வெளியே வர எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது. இவ்விருளில் செல்ல வழித்துணை யாரும் இல்லையோ என எண்ணி ஏங்கியிருக்க இறைவன் கோவில் காவலன் போல் வந்து தன் பெயர் சிவன் எனக் கூறி அவரை வீட்டிற் சேர்த்தான் வீடு சேர்ந்ததும் சுதரி சனர் அக்காவலனுக்கு உணவும் கறி வகைகளும் நிறைந்த பெட்டியைத் தந்து உண்டும்பாம் என, ' இஃது எம் மனையாளுக்கும் பிள்ளைக்கும் ஆம்'' எனக் கூறி எடுத்து வந்து கோயிலுட்புக்கு மண்டபம், பலி பீடம். முற்றும் அதனை இறைத்து இலிங்கத்தின் தலையிலும் சிறிது வைத்து அருகிலேயே பெட்டியையும் வைத்து மறைந்தார்.

மறுநாள் காலையில் கோயிலுக்கு வந்து பார்த்த அதிகாரிகள் துணுக்குற்று, பூட்டும் முத்திரையும் அப் படியே இருக்க இவ்வாறு செய்தார் யார் எனக்காவலரை விசாரிக்க அவர்கள் யாதொன்றும் அறியோம் எனக் கூறினர். அப்பொழுது வழி பாட்டிற்காக அங்கு வந்த

சுதரிசனர் செய்தியறிந்து முதல் நாள் நடந்ததைக் கூற அவர்கள் சிவன் என்னும் பெயரிய காவலாளியை அழைத்து விசாரித்தனர். அவன் தனக்கு யாதொன்றும் தெரியாதெனக் கூறினான். முகக்குறிப்பால் அவன் குற்றமற்றவன் என உணர்ந்து இஃது இறைவன் செயலே எனத்துணிந்து அனைவரும் மகிழ்ந்தனர்.

## சுதரிசனச் சருக்கம்

### எழுசீர் விருத்தம்

444 புனித மார்நயிமி சத்த ருந்தவர்
புகழ்ந்து கீலகபு ரேசனும்
வனிதை நாயகியும் நிதிப திக்குநல்
வரங்கொ டுத்தஇதி காசமீ
தினிது கூறினை எனச்சி றந்தபதி
னெண்பு ராணமுனி யெம்பிரான்
கனியி னோடுமமு தங்க லந்தனைய
கதையி னொன்றுபகர் வானரோ. 1

445 வேத வித்தனைய விப்பி ரேசர்புரி
வேதி மேகலைசெய் வேள்வியும்
நாத மிக்ககிடை யும்பு ராணநவில்
நன்ன தித்துறையு முபநிடப்
போத முற்றவர்ம டங்கள் நந்தனவ
னங்க ளும்பொதுளி யாவரும்
காத லிப்பவுள தஞ்ச மூர்பெரிய
கஞ்ச னூர்பொருவு கஞ்சனூர். 2

446 அயனி றைந்துதிர ணாதி மூன்றுநிகழ்
அந்த வூரவத ரித்துளார்
உயர்கு லத்தரின்மு னவிலு முத்தமர்
உயர்ந்து ளாரினு முயர்ந்துளார்
நயன நெற்றியர்த மன்ப ரிற்றலைமை
நண்ணி னாரருள்செய் கண்ணினார்
இயனி ரம்புதிரு மேனி மேனிலவெ
றிக்கு நீற்றொளிப ழுத்துளார். 3

447 அண்ணல் கண்மணிசி ரங்க ரங்குழைகை
ஆக முற்றவும ணிந்துளார்
எண்ணி லாதசிவ நாமம் ஓதியரன்
அர்ச்ச னைத்தொழிலி யற்றுவார்
மண்ணி னூடுகடல் மலைம ரங்கொடி
மனித்தர் புள்விருக மாதியாய்க்
கண்ணி னூடுதெரி பொருளி யாவுநிறை
சிவமெ னப்பரவு காட்சியார். 4

448 ஈறி லாதசிவ னேப ரம்பொருளி
தற்கொரையமிலை யிலையெனத்
தேறி னார்கவலை மாறி னார்விமலர்
சேவ டிக்குள்மனம் வைத்திளைப்
பாறி னார்வினையை நூறி னார்பரமன்
அஞ்செ ழுத்தின்மணி நாத்தழும்
பேறி னார்சுதரி சனரெ னப்புவியி
சைக்கு நற்பெயரி சைந்துளார். 5

449 நீதி வைதிகசை வத்த வப்பயிர்நி
லத்தி னேற்றியவர் நிகழுநாட்
சோதி மெய்யர்சிவ தீர்த்த யாத்திரைதொ
டங்கி யனபொடுந டந்துசெம்
பாதி மெய்யினொரு மாதி ருந்தவர்த
லங்கள் பற்பலப ணிந்துவந்
தாதி சைவர்குல தெய்வ மானபரன்
ஆப்ப னூருணனி யமருநாள் 6

450 தரும நந்திமடு நீர்ப டிந்துதய
சந்தி தர்ப்பணமு யன்றெழீஇக்
கரையி ருந்துதிரு நீற ணிந்துதிகள்
கண்டி பூண் டுயர்க டன்கழீஇப்
புரையி கந்தசிவ மான தப்பொருவில்
பூசை யாற்றியணி யாப்பனூர்ப்
பரனி ருந்தசின கரம டைந்துவலம்
வந்து கந்தெதிர்ப ணிந்தரோ 7

451 சாந்த நீற்றர்சிவ கீல சேசர்மகிழ்
சன்னி தானமெதிர் நின்றுவே
தாந்த நற்றுதிபு கன்று பின்குரவ
வார்கு ழற்கவுரு தன்னையும்
போந்து பத்திமைப ழுத்த நெஞ்சொடுபு
கழ்ந்து போற்றிமறி மானமழு
ஏந்து கைத்தலர்த ளிக்குண் மீளவுநொய்
தெய்தி னார்திருமுன் வைகினார். 8

452 ஆதி யைத்தனத கத்தி ருத்தியசை
வற்றி ருந்துபர வசமடைந்
தூதி யப்பரம சுகம னோலையம
துற்றி ருந்தபொழு துணர்கிலா
தேத மற்றதொரு தம்ப மாமெனவி
சைந்த யோகினர்வி ழித்தனர்
தீத கற்றுதிரு வத்த யாமவரை
யாதல் கண்டுதெரி சித்தரோ. 9

453 வரைசெய் நற்சிகரி வாயில் நீங்கிவெளி
வந்து பார்த்தபொழு தங்கதம்
அரைய சைத்தபர னஞ்செ ழுத்தையவன்
அன்ப ரைச்சிவனை யவமதித்
துரைசெய் மக்கள்பவ வினையெ னக்குழுமி
யோவி யோவியெரி சுடரும்வாய்க்
கருநி றக்கழுதும் வழிந டப்பரிய
சங்குல் கண்டுதனி நின்றனர். 10

454 நின்று போய்வழிம யங்கி வானுறநி
வந்த கோபுரநி லைக்கண்வந்
தொன்றி யாவர்துணை போது வாரெனவு
ளத்தி லுன்னினரவ் வெல்லையாய்
ஒன்று மன்பர்செல்வ ழிக்கு நற்றுணையெ
னப்பு குந்துதவு மாப்பனூர்க்
குன்ற வார்சிலைய னெம்பி ரான்றனது
கோயில் காவலளின் மேவுவான். 11

**அறுசீர் விருத்தம்**

455 கான்ம தக்களிற் றீருரி யெனக்கருங்
கஞ்சுகந் தரித்தேநீர்ச்
குன்ம ழைக்கிடை வெளிப்படா மின்னின்வாள்
உறைபுகத் தோள்தூக்கி
மான்ம ழுப்படை கரந்தகைத் தலஞ்சிலை
வாளிதொட் டிமையோர்தங்
கோன்ம லர்ப்பதம் புவிதொடு மொலியெழக்
கோயிலின் புறம்போந்தான். 12

456 யாவர் போமவ ரெனமறை முனிவர்
அழைத்தலும் யானையா
தேவர் தேவர்தங் கோயில்கா வலன்பெயர்
செப்புவர் சிவனானென்
றோவு றாதநீ ரெங்கிருந் தெங்ஙன
முறுதிரென் றலுங்கோயின்
மேவி நாதனை வணங்கின னில்புக
வேண்டிநின் றனனென்றார். 13

457 என்ற லுந்திரு மாளிகை காறும்யான்
இருள்வழித் துணைசெல்வேன்
நின்ற நீரினி வருதிரென் றேகவும்
நெகிழ்மனத் தவர்பின்பேய்
மன்றன் மாமனை யடைதலு மந்தணீர்
மனையிது செலும்யானென்
முன்றி லார்மனைக் கேகுவ னெனவரன்
மொழியமற் றவர்சொல்வார். 14

458 இம்ம னைப்புற வேதிகை யிருத்தியான்
இனிதமு தயின்றப்பால்
பொம்ம னற்சுவை யடிசிலுய்ப் பேன்உண்டு
போதிய லெனத்தாழாச்
செம்ம லிற்கிடை யாட்டியும் புதல்வருந்
தேடுவ ரெனைமுடு
மைம்மு கத்தபா னாளிரு ளாயதென்
மனைப்படர் வேனென்றான். 15

459 சந்த நான்மறை வேதியர் கணமினித்
தாழ்ந்தியோ தனமேனும்
இந்த வேலையாந் தருதுநின் னில்லிடை
யேகிமற் றயிலென்னா
வெந்த காய்கறி வருக்கமும் பருப்புநெய்
விட்டுறப் பிசைசோறும்
தந்து பாலனஞ் சருக்கரை யொடுநிறை
தரக்கொடுத் தனரன்றே. 16

460 இற்றெ ரும்பலிக் குழல்பவர் தாழ்ப்பரோ
இருகையும் விரித்தேந்திப்
பெற்றி தென்பெண்டிர் சேய்க்குமுண் டெனத்தரும்
பெட்டியிற் சுமந்தேகி
மற்றி ருந்துறை கோயில்புக் கயின்றணி
மண்டபம் பலிபீடம்
முற்றும் நன்கறி வருக்கமு மடிசிலு
முழுதிறைத் தனர்மாதோ. 17

வேறு

461 பின்னர்முன் னன்னங் காணாப்
பிறைத்திரு முடிமே லெஞ்சும்
அன்னம்வீற் றிருக்க வைத்தாங்
கதுகொணர் பெட்டி ஞாங்கர்
தன்னரு கிருத்தி நாதன்
சயம்புவி னுறைந்தா னாகத்
துன்னிருள் புலருங் காலைத்
தொடர்பரி சனங்க ளீண்டி 18

462 சினகரம் புகுந்து தேவர்
தேவனைத் தெரிசித் தேத்த
மனநெகிழ்ந் துருகி யாங்கு
வருதலும் முன்றி லெங்கும்
மனைகறி வருக்க மொய்ப்பப்
பொருந்துமோ தனங்கண் டியாவர்
வினையிது வென்னா அஞ்சி
மிச்சிலென் றகல வேகி 19

463 விள்கரும் பொனிற்செய் பூட்டு
விடுத்திருங் கதவ நீக்கி
உள்புகச் சொன்றி யாங்கும்
இறைத்திருப் பதுகண் டோர்ந்திக்
கள்வரியார் என்னக் கண்ணீர்
கலுழ்ந்தரன் முன்னர் ஏகி
வள்ளறன் சென்னி மேலும்
மற்றவை யிருப்பக் கண்டார். 20

464 உச்சிட்டம் இதனை யொன்றும்
உள்கிலா தஞ்சா தம்பொற்
கச்சிட்ட முலையாள் பாகன்
கதிர்த்திரு முடியின் மேலும்
வைச்சிட்ட தென்கொ லந்தோ
வந்தவா றென்னோ வென்னா
மெய்ச்சிட்ட ராதி யாகும்
வெருவினா ருருகி னாரால். 21

465 அச்செயல் கோயில் வைகும்
அரசுரித் தொழில்செய் மாக்கள்
இச்செயல் புரிந்தார் யாவர்
எனச்சினந் திருகி வார்ந்த
மைச்சுரு ளோதி பாகன்
மந்திரப் பெரியோர் தம்மை
நிச்சயித் துரைமி னென்னா
நிறுத்தினர் தடுத்தா ரன்னோர். 22

466 முத்திரை யிருப்பப் பூட்டு
முறிபடா திருப்ப வுள்புக்
கத்தமண் டபமு மிச்சில்
அன்னமாங் காங்குச் சிந்திக்
குத்திரக் களவு மின்றிக்
குறிமிசைச் சொன்றியாக்குஞ்
சித்திர மிதனை யொன்றுந்
தெளிகிலம் யாங்க ளென்றார். 23

467 பின்னுமுட் காப்புங் கோயிற்
பெரும்புறக் காப்பு மேற்கொண்
டுன்னருந் தொழில்செய் வாரை
யுறுந்தண்ட மிழைப்ப வோலிட்
டன்னவ ரேற்றி மாய
மறிகிலே மென்ன வையுற்
றென்னிது நடந்த வாவென்
றுசாவியங் கிருக்கும் வேலை 24

468 சிவமுணர் புனித ராஞ்சு
தரிசன மறையோர் காலைத்
தவநிய தியினை முற்றித்
தக்கபா தலத்தி னின்றும்
அவனியிற் றோன்றுஞ் சோதி
அன்னவி னோத நாதன்
நவமலர்க் கழல்கண் டேத்த
நற்றளி யகத்துள் வந்தார். 25

469 வருதலும் நடந்த வண்ணங்
கேட்டுளம் வருந்தி மாழ்கி
உருகினர் பதைத்து ளெய்தி
நோக்கினர் உனத்தர சங்கை
பெருகினர் குறிப்பி னால்தம்
பெட்டிவெஞ் சனஞ்சோ றென்னக்
கருகிரு ளுடைநேற் றுற்ற
காரணந் தெரியக் கூறி 26

470 அந்தணர் சிவனா ரென்னும்
அவனையீங் கழைமி னென்றார்
மந்திரக் காவல் பூண்டோன்
வந்தெதிர் வணங்க வந்த
தந்திர மொழிதி யென்னத்
தளர்ந்துவாய் புலர்ந்து கம்பித்
திந்திர சால மையா
இம்மொழி யெனத்தாழ்ந் தானால். 27

471 அங்கவன் முகத்தி னோடும்
அகத்தியல் உணர்ந்தி யாரும்
இங்கிவன் செயலன் றன்பர்
இவர்பொருட் டாப்ப னூர்நம்
திங்களஞ் சபையார் செய்த
திருவிளை யாட்டீ தென்னாத்
தங்களிற் றெளிந்தா னந்த
சாகரத் தமிழ்ந்தி னாரால் 28

472 தஞ்சனேன் பொருட்டிவ் வண்ணந்
தம்பிரான் புரிந்த தென்னாக்
கஞ்சனூர் முனிவர் கண்ணீர்க்
கடலிடைக் குளித்தார் கோயில்
எஞ்சலில் அடியார் கூடி
யரவொலி எழுப்பி யேத்தி
அஞ்சலித் திறும்பூ தெய்தி
யாடினர் பாடி னாரால். 29

சந்தம்

தந்த தானனா தந்த தானனா

473 கஞ்ச ஞூரில்வா ழந்த ணாளர்சேர்
கங்குல் வாயநாள் வந்து காவலாய்
நஞ்ச மூர்கிரீ பன்செல் காதைதான்
நம்பி யோதுவோர் பப்பு கேள்வியோர்
நெஞ்சு ளோதியா னஞ்செய் மேன்மையோர்
நிந்தி யாதசீர் தங்கி வாழ்வருழ்
விஞ்சு பாவநா சஞ்செய் தீறிலா
வெண்பொ னீடுவே தண்ட மேவுவார். 30

சுதரிசனச் சருக்கம் முற்றிற்று.

1 நிதிபதி - குபேரன்.

2. விப்பிரேசர்-பார்ப்பனர்; வேதிமேகலை-ஓமகுண்டத்தைச் சுற்றி வளைய விடும் கோலம்; கிடை-வேதம் பயிலும் இடம்; உபநிடப்போத முற்றவர் உபநிடதம் கற்றறிந்தவர்; அஞ்சம் ஊர் பெரிய கஞ்சன் ஊர் பொருவு-அன்ன வாகனனாகிய பிரமனின் உலகத்தைப் போன்ற.

3. திரணாதி மூன்றும் அயல் நிறைந்து நிகழ் அந்த ஊர் என்பது கொண்டு கூட்டு. திரணாதி மூன்று-கால் நடைகளுக்குப் புல், நீர், மக்களுக்கு உணவு தரும் வயல் என்பன. உயர் குலத்தரின் முனவிலும்-உயர் குலத்தாருள் முதன்மையானவர் என நவிலப் பெறும்; நயன நெற்றியர்-நெற்றிக் கண்ணராகிய சிவ பெருமான்; நிலவெறிக்கும் நீற்றொளி-நிலவினைப் பழிக்கும் வெண்மையை உடைய திருநீற்றொளி.

4. களம்-கழுத்து; குழை-காது; பனித்தர்-மானிடர்; விருகம்-மிருகம்-விலங்கு.

5. விமலர் - குற்றமற்றவர் - சிவபெருமான்; வினையை நூறினார்-வினையை அழித்தார்.

7. கண்டி-உருத்திராக்க மாலை; சினகரம்-கோவில்

8. நொய்து-விரைந்து; தளி-கோயில்.

9. ஆதியை-ஆதியாகி நின்ற சிவனை; பரமசுக மனாலயம்-முழுமையான இன்பம் நிறைந்த மனமடங்கிய நிலை; தம்பம்-தூண்; யோகினர்-யோகயராகிய சுதரிசனர்; அத்தயாமம்-நள்ளிரவு.

10. சிகரிவாயில் - கோபுரவாயில்; அங்கதம் - பாம்பு; அரை-இடை; அசைத்த-கட்டிய; கழுது-பேய்.

11. குன்றவார் சிலையன் - மலையையே வில்லாகக் கொண்ட சிவபிரான்.

12. கஞ்சுகம்-சட்டை.

13. மறை முனிவர்-சுதரிசனர்.

14. காறும்-வரையும் (இதுகாறும் என்றாற்போல்) முன்றிலார் மனை-முன்னிடத்தைக் கொண்ட வீடு.

15. வேதிகை-திண்ணை; இற்கிடையாட்டி-இல்லாள்; மைமுகத்த பானாள்-மை போன்ற கரிய நள்ளிரவு.

16. ஓதனம்-உணவு; வேலை-காலம்; அயில்-உண்.

17. இல்தோறும் பலிக்குழல்வார்-வீடுதோறும் பிச்சைக்குத் திரிபவர் தாழ்ப்பரோ-மறுப்பரோ.

18. எஞ்சும் அன்னம்-எஞ்சிய உணவு; ஞாங்கர்-பக்கம் இது முதல் மூன்று பாடல்கள் குளகம்.

20. கரும்பொன்-இரும்பு; சொன்றி - சோறு

21. உச்சிட்டம்-எச்சில்; உன்கிலாது - சிந்தியாது; வைச்சிட்டது - வைத்தது; மெய்ச்சிட்டர் - உண்மையான சான்றோர்.

22 மைச்சுருளோதி-கரிய சுருண்ட கூந்தலை உடைய உமையாள்; மந்திரப் பெரியோர்-கோயில் பெரியவர்கள்.

23. அத்த மண்டபம்-கருவறை முன் மண்டபம்; குத்திரக் களவு-வஞ்சகக் களவு.

26. ஆசங்கை-ஐயம்.

27. மந்திரம்-கோவில்; கம்பித்து-நடுங்கி; இந்திர சாலம் மாயவித்தை.

28. ஆனந்த சாகரம்-மகிழ்ச்சிக்கடல்.

29. இறும்பூதெய்தி-வியப்பெய்தி

30. நஞ்சமூர் கிரீவன் - நஞ்சுண்ட கழுத்தன், (சிவ பெருமான்) ; பா. பே. பாப நாசஞ்செய் தீதிலான்.

சுதரிசனச் சருக்கம் முற்றிற்று.

## அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்.

கதிரவன் குலத்தோர் இருந்து அரசு புரிந்த அயோத்தி நகரை அரிச்சந்திரன் என்னும் ஒரு மன்னனும் ஆண்டு வந்தான். எத்துயர் நேரினும் சத்தியம் தவறா நிலையுடைய அவன் மன்னர்க்கு உரிய நற்குண நற்செயல்களனைத்தும் கொண்டு கொடைமடம் நிறைந்தவனாக வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் அரசவைக்கு அகத்தியர் எழுந்தருளினார். அவரை வரவேற்று உபசரித்து அங்கு அவர் எழுந்தருளிய காரணம் யாதென வினவினான் மன்னன். அகத்தியரும் கோள் நிலை காரணமாக மன்னனுக்குறும் தீங்கை உணர்த்தி அதனினின்றும் தப்ப தீர்த்தயாத்திரை செய்ய வேண்டும் என்பதைக் கூறவே வந்ததாக உரைத்தார். அதன்படி அரிச்சந்திரன் அப்பொழுதே தீர்த்த யத்திரை செல்லப் புறப்பட்டான். அவன் கேதாரம் முதலிய வடநாட்டுத் தலங்களும் காஞ்சி முதலிய தென்னாட்டுத்தலங்களும் வழிபட்டு இராமேசுவரம் திருப்பூவணம் வழியாக இடவபுரம் வந்தடைந்தான்.

அங்கு உரோமசன் என்னும் முனிவன் தவமியற்றி இருக்கக்கண்டு அவரை வணங்கி நின்றான். உரோமசன் கண் விழித்து மன்னனை வாழ்த்தி இடவபுரத்தில் முன் நடந்து தான் கண்ட அற்புதத்தைக் கூறினான் இத்தலத்தில் பிங்கலை என்னும் இடைக்குல மடந்தையின் மகன் சுந்தரன் என்பவன் தன்னொத்த சிறுவரோடு மாடு கன்று மேய்த்திருந்தான். அப்பொழுது அகால மழை பிடித்துப் பொழிந்தது. சிறுவன் தன் நண்பரோடு சிறு குளம் ஒன்றை அமைத்து மழை நீரை அதில் தேக்கினான் பின் ஓரிடத்தை நன்கு திருத்திக் கன்று கொண்டு உழுது பண்படுத்தி நெல் நாற்று நட்டுத் தினமும் குளத்து நீரை அதற்குப் பாய்ச்சினான். இப்பயிர் ஆப்புடை

ஈசனுக்காம் எனக் கூறியிருந்தான். பயிர் வளர்ந்து கதிர் வாங்கிப் பால் பிடித்து முற்றிய தருணத்தில் ஆப்புடை ஈசனின் கோயிற் காளை அதனை மேய்ந்து தின்றது. கடைவாயில் பால் ஒழுகத் தின்னும் அது கண்ட சிறுவன் சுந்தரன் இஃது இடவபுரத்தானே என எண்ணி மகிழ்ச்சி கொண்டான். இவன் மனநிலை கண்டு இறைவன் மகிழ்ந்து பாண்டிய மன்னனுக்குக் கனவில் உணர்த்த அச்சிறுவனுக்கு மன்னனவையில் அமைச்சர் பதவி கிட்டியது. இக்கதையை உரோமசமுனிவர் அரிச்சந்திரனுக்குக் கூறி இவ்விறைவனுக்கு ஒன்று ஈந்தால் அது பலவாகப் பெருகும் எனக் கூறி அரிச்சந்திரனை அங்கு வாழும் மறையோர்க்கு ஆயிரத்தெட்டு இல்லங்கள் அமைத்துக் கொடுக்கச் சொன்னான். அம்மாத்திரத்திலேயே, "இம் முனிவன் சொல்படிச் செய்" என அசரீரி கேட்டது. அதன்படி மன்னன் ஆயிரத்தெட்டு வீடுகளைச் சாத்திர முறைப்படி அமைத்து அவற்றில் இல்துணைப் பொருள் களும் வைத்து உணவும் பொருளும் வழங்கி அந்தணர் களுக்கு நீர் வார்த்துக் கொடுத்தான். பின்னர் கோவிலுக் கும், கோபுரம், மண்டபம், மதில் அமைத்து விழாவெடுத் துத் தன் நகரை அடைந்தான்.

## அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்

### கலித்துறை

474 இன்னு மோர்கதை இயம்புதுங் கேட்பவர்க்
கென்றுந்
துன்னி யாங்கெதிர் காலத்தி னுறுவினை துரந்து
மன்னு மாப்புகழ் ஆயுகஞ் செல்வமும் வழங்கி
முன்னு நற்கதி தருமெனச் சூதன்பின்
மொழிவான். 1

465 பொதிய விழ்மலர்க் கவட்டிலை யார்த்தடம்
புயத்துக்
கதிர வன்குலக் கான்முளை யாமயன் மனுச்சந்
ததியெ னத்தகும் அரசர்கள் உறைதரச் சரபு
நதிவ ளத்தினி தமர்தரும் அயோத்திமா நகரம். 2

476 எம்மு கந்தொறும் சென்றுசென் றினிதுநோக்
குறினும்
அம்மு கந்தொறு மலர்த்திரு மகள்விளை யாடுஞ்
செம்மு கப்பெரு வாயிலும் நியமமும் செறிந்து
பைம்மு கப்புவி மாதணி கலனெனப் பதிந்த. 3

477 நெடுந கர்த்திரு நியதியின் பெரும்பனை நீட்டிப்
படர்ம னைத்தழை பொதுளிநல் லணிமலர் பரப்பித்
தொடரு மன்பதைப் புள்ளினம் நுகர்தரத் துதைந்து
வருவி லாவண மெனுங்கனி பழுத்தசீர் வளத்த 4

### அறுசீர் விருத்தம்

478 பரவுநகர்க் கரசனறக் கடவுளருட்
கடலுயிர்நன் பயிர்க்கு மேகம்
இருபொருள்வைப் பிடம்பொறையின் உறையுள்சய
மகள்கோயில் இசையின் மூர்த்தி
மருவிநிறை குணசயில மறிவுவிளை
நிலமிரவி மரபின் பொற்பூண்
கருதுமனு நூற்பொருள்மற் றயலரசர்
புனைசிரசே கரமொய் பானோன். 5

479 தூங்காமை அரணுடைமை படையுடைமை
துணிவுடைமை தூய்மை சேண்மை
நீங்காமை அறிவுடைமை நாணுடைமை
பொறைமைபுன்மை நெறிச்செ லாமை
பூங்காமை எனக்கொடுக்கும் கொடைமடமை
இவைதழுவிப் புரவு பூண்டோன்
ங்காமை வகைப்பயந்தீர்த் தாறகற்றி
யேழ்நிலங்கோல் செலுத்தா நின்றான். 6

கலித்துறை

480 செயிரில் கோசல நாட்டினும்
பதியினும் செறிந்து
துயரி னால்வகைப் படையினும்
அமைச்சினும் துலங்குற்
றயர்வில் கற்புடை மனையினும்
சேயினு மாகத்
துயரி னும்புகல் சத்தியம்
புரப்பதொன் றுடையோன். 7

481 இவர்த ருந்திருப் பெயரரிச்
சந்திர னென்போன்
அவனி ருந்தர சியற்றுநா
ளலைகடல் குடித்த
தவன வணடை தலுங்கடை
புரப்பவன் சார்ந்தங்
கவனி காவலற் குணர்த்தினன்
விரைவினாங் கெழுந்தான். 8

482 நடந்த ருக்கிய மாதிய
நன்புரோ கிதர்கொண்
டடைந்தி டத்தமிழ் முனிவனைப்
பூசனை யாற்றித்
தொடர்ந்த மெய்த்தவந் தீர்த்தநந்
தனந்தருச் சூழல்
படர்ந்த புள்முதல் வினவலு
மருளொடும் பாரா. 9

483 இனிய நாடுநன் குடியும்பங்
காறிலொன் றீந்த
துனியில் செம்பொருட் கோசமும்
மாண்படைத் தொகையும்
கனியு மென்மொழி மகார்முதல்
வினவியும் கரவின்
முனியும் வேந்துடன் முகமனங்
கிருந்தெதிர் மொழிய. 10

484 இருகை கூப்பிநின் றிற்றைநாட்
காறும்யா னிழைத்த
பரவு பூசனை விரதநற்
புண்ணியப் பயன்போல்
தெரிச னங்கொடுத் தெழுந்தரு
ளினையிவண் சேர்ந்த
பரிச தென்னவை செயுங்கருத்
தெனக்கெனப் பகர்ந்தான். 11

485 இனன்கு லத்தவ கேண்மதி
எம்மிருக் கையில்யாங்
கனித வத்தியா னத்திருந்
தருளுமக் காலை
நினது சன்மநா ளிராகுமே
வவும்நெடும் பீடை
உனைவ ருத்தவுங் கண்டவை
யுரைப்பவீங் குற்றேம். 12

486 திருத்த யாத்திரை நீசெயிற்
றீருநற் றினமும்
பொருத்த முற்றநல் லோரையும்
புகுந்ததிப் பொழுதே
விருப்பி னாற்கடி தேகுதி
எய்தும்நின் வேட்கை
யிருத்தி யேற்புகுந் துயர்என
ஏகினன் முனிவன். 13

487 விரைந்து வேந்தனும் யாத்திரை
போய்வர வீக்கம்
பொருந்து றாதுநங் கரிமுக
விமலனைப் பூசித்
தருந்து வித்துயர்ந் தோர்க்குத்தக்
கணையொடு மடைகாய்
திருந்து றக்கொடுத் தாசிபெற
றனுக்கையிற் சென்றான். 14

488 பெருந்த வத்தனி வசிட்டனு
மளவில்விப் பிரரும்
பரிந்து முன்செல நிதியொடுந்
தொடர்ந்துபின் படர்ந்து

பொருந்தி நீடுகே தாரத்தி
னறும்புனல் தோய்ந்தங்
கிருந்த சங்கரற் கண்டடி 15
வணங்கின னேகி.

எண்சீர் விருத்தம்

489 மிடைவெதிரி காச்சிரமந்
தனிலடைந்து வேத
வியாதனைக்கண் டுயர்நரநா
ராயணரை வணங்கித்
தடையில்கோ மதிசிந்து
கண்டகைநற் சரையு
சங்கமநீர் பிரயாகை
யினுமூழ்கிக் காசி
யிடைமருவிக் கங்கைமணி
கன்னிகையின் ஆடி
யாரினுமிக் காம்விசுவே
சனையுமையைத் தூண்டிக்
கடகளிற்றை யுலோலாதித்
தனைக்கால வடுகக்
கடவுளைமா தவனையெதிர் 16
கண்டுதொழு தங்கண்

490 அறுசுவையூண் மறையவரை
அருத்தினன்பின் கயைவந்
தடைந்தியல்பற் குனிதோய்ந்து
சிரார்த்ததருப் பணத்தோ
டுறுந்திரளோ தனபிண்டம்
உதவிவர நதிபோ

யுவாக்கலக்கு மிடம்படிந்தா
யிரங்குடஞ்சுட் டளித்துத்
தெறும்பவந்தீர்த் தருள்சகநா
தம்பணிந்தெம் பெருமான்
சீசயிலங் காளத்தி
வேங்கடஞ்சென் றிறைஞ்சி
மறைபயிலே காம்பரத்தெம்
பரம்பரனை வணங்கி
வரதராச னைத்தெரிசித்
தேத்தியகம் மகிழ்ந்தான். 17

491 அறந்தழைக்கும் காஞ்சிகடந்
தம்மைநடம் பரவும்
ஆலங்கா டருணைபழ
மலைபணிந்து தில்லைப்
புறந்தழைக்கும் திருவெல்லை
தாழ்ந்துதிரு வீதி
புகழ்ந்துதொழு தேழ்நிலைக்கோ
புரம்வணங்கி மணிவாய்
திறந்தழைக்கும சுருதியுப
நிடப்பொருளி னுருவஞ்
சிறந்ததிரு வம்பயத்திற்
றிகழ்ந்தொருபாற் பச்சை
நிறந்தழைக்கும் உமைகளிப்ப
அருள்துளிப்ப நடஞ்செய்
நிமலனடி பழிச்சியுள
நெகிழ்ந்துருகி நின்றான். 18

492 அங்கிருந்து கழுமலப்பொற்
பதியடைந்து வாஞ்சி
யங்குடமூக் கிடைமருது
வேதவனஞ் சாய்க்கா

டெங்குநிகழ் - திருவாரூர்
பெருந்துறைசீ தளிப்புத்
தூரிறைஞ்சி சேதுவிற்சென்
றிருஞ்சிலைக்கோ டியினிற்
சங்கையற நானவிதிப்
படிமூழ்கி யாதித்
தனிச்சுடரையி ராமநா
யகனையடி பரவிப்
பங்கயப்பூம் புனலாடிக்
கோசமங்கை யரனைப்
பணிந்துதிருக் கானப்பே
ரூர்தொழுது படர்வான். 19

493 ஆதிசிதம் பரத்திருப்பார்க்
கரபுரமே னாளின்
அத்திமலர் தரச்செய்பிதிர்
முத்திபுர மெனப்பேர்
ஓதியதென் பூவணத்தின்
அரசர்பிரான் அடைந்தங்
குற்றமணி கன்னிகையி
னாடியுயர் பிதிர்கட்
கேதமிலெட் டருப்பணநன்
களித்துரிய மரபின்
இரவிபுரி பூசனைகொண்
டிருந்ததனிப் பொருளைச்
சோதியைஞா னச்சுடரைச்
சுடரொளியை ஒருபாற்
சுந்தரமின் னனையுமையைத்
தொழுதுருகித் துதித்தான். 20

494 ஆங்ககன்று பரங்குன்றத்
தமர்பவளக் குன்றை
அலங்கிலைவேற் படைமணியை
யடிதொழுது மதுரைத்
தேங்கமழ்பொற் கமலந்தோய்ந்
தருள்சித்திக் களிற்றைச்
சேனயனக் கரும்பையணி
யாலவா யமுதைப்
பாங்குறக்கண் டிரசிதமன்
றாடல்தெரி சித்தப்
பதிகடந்து வசிட்டனொடும்
பனவரொடும் படர்ந்து
பூங்கதிர்நித் திலஞ்சுருட்டுந்
திரைவேக வதிநீர்ப்
பொருகரைப்பா லிடவபுரத்
திருநகர்புக் கனனால். 21

எழுசீர் விருத்தம்

495 ஒல நீர்த்தி ரைப்ப சுந்த
டங்கு டைந்து ரோமசன்
கூல நீடி யோக மெய்தல்
கண்டு கைகு வித்துமுன்
சால நேர நின்ற போது
தவ்வி ழித்து ணர்ந்துநீர்
ஞால நாத நின்வ ரத்து
நல்வ ரத்தெ னச்சொலா. 22

496 கண்டு நாள னேக முண்டு
காணெ னப்பு கன்றுபின்
மண்டு நீர்த்த ரங்க வையை
வாலு கத்தை அன்னமாய்ப்
பண்டு காணு நாத ரிப்ப
திக்குள் வைகு மேன்மையார்
விண்டு கூறு வாரிந் நாள்வி
யப்ப தொன்று கண்டனன். 23

497 என்சொல் கேனெ னப்ப னிந்தி
லங்கு செங்கை வேலினான்
தன்சொ லிற்று தித்து நின்று
சாற்றெ ணாத தேனுமென்
முன்சொ லத்த குந்த யாவின்
மொழிகெ னத்த போதனன்
இன்சொ லிற்பு கழ்ந்து மன்ன
வீது கேளெ னச்சொல்வான். 24

498 தலையெ னச்சொ லிந்த மாத்த
லத்து ளாளோர் தையல்பிங்
கலையெ னத்த கும்பெ யர்க்கு
டைத்தி மாடு கன்றுளாள்
இலையெ னச்சொ லாது பால்நெய்
என்றும் விற்றுண் வாழ்க்கையாள்
விலையெ னக்கொ டாது மோர்வி
ளைந்த ளிக்கு மேன்மையாள். 25

499 இழுது நாறு மேனி யாள
ளித்த சேயெம் மீசனைத்
தொழுதுன் நேசம் எய்த வந்த
சுந்த ரப்பெ யரினான்
பழுதில் கன்றி னங்க ளாயர்
பால ரோடு மேய்க்கும்நாள்
பொழுது தேர்கி லாத கால
மாரி நாள்பு குந்ததால். 26

500 புடையு டுத்த சிறுவ ரோடு
மழைபொ ழிந்த போதெலாம்
படலி டைத்தன் உடலொ டுக்கி
நிற்ப னங்கோர் பகல்மனத்
திடையெ டுத்த வேட்கை யாலி
ரைத்த வாய்ம காரொடு
மடைதி ருத்தி யோர்கு ளம்வ
குத்து நீர்ம றித்தனன். 27

501 கோட்டி நீர்நி றைந்த பின்கு
றித்த பிள்ளை மைவிளை
யாட்டி னாலோர் சூட்ட டிக்கு
மைது நன்னி லஞ்சமைத்
தோட்டி வந்த கன்றை விட்டு
ழக்கி வெண்ணெய் போற்குழைத்
தீட்டு சேறு செய்து நாற்றெ
டுத்து வந்து நட்டரோ. 28

502 இந்நி லத்தி லிதுவி ளைந்த
தென்னில் இந்த வையைநீர்
பொன்னு முத்த முங்கொ ழித்த
பூந்தி ரைக்க ரைக்கணே
கன்னி பக்கம் நின்ற கீல
கப்பி ரான்ற னக்கெனாப்
பன்னி நித்த லும்பு குந்து
பாது காப்ப தாயினான். 29

503 திறந்து விட்டு நீர்தி னஞ்செ
லுத்து போது சிறுகுளம்
வறந்து விட்ட தஃத றிந்து
மாசி லான்சு ரந்தபால்
கறந்து விட்டும் அம்ம ருங்கு
கன்று மேய்த்தும் நாடொறும்
மறந்து விட்டி டாது மேல்வ
ளர்த்து நன்ப யிர்செய்தான். 30

504 பால்பி டித்து முற்றி நற்ற
லைப ழுத்து பக்குவத்
தால்பி டித்தி ருந்த றஞ்சொ
லண்ணல் செங்கை முத்தலை
வேல்பி டித்த காலி னான்வி
ரும்பி மேய்தல் கண்டுநன்
கோல்பி டித்த கைய னண்டர்
கோன்ம கிழ்ச்சி கூர்ந்தரோ. 31

அறுசீர் விருத்தம்

505 கால்பாய வெருண்டுவயற் கயல்பாய
நுரைபாய்ந்து கடைவாய் தோறும்
பால்பாயக் கதிர்மேய வாப்புடையால்
நயனநீர் பரந்து பாயச்

சால்பாய வுவகைமனத் தலைபாய
ஆவுருவந் தனைக்கொண் டெங்கோன்
சேல்பாய்மை விழிபாக னாப்புடையான்
நுகர்வதெனத் தெளிந்தான் மன்னோ. 32

506 அச்செயல்கண் டணியாப்ப னூருடையான்
மகிழ்ந்துவிரைந் தண்டர் கோன்றன்
மெய்ச்செயல்பாண் டியற்குணர்த்தி
யமைச்சுரிவ ம
அவகளிப்ப வேண்டு மென்னா
விச்சையிற்சொற் பனஞ்சாதித் திரந்தனர்யா
தொன்றேனு மீந்தோர் வேண்டின்
முச்சகமு மளிப்பனிந்த மூர்த்திவரப்
பெருங்கருணை மூர்த்தி வேந்தே. 33

507 ஆதலின்நீ யாயிரத்தெட் டருமறையோர்க்
கித்தலத்து ளமைத்தி யேல்நாள்
மூதிரையா னுவக்குமென வுரோமசன்மந்
திரத்திருவாய் மூடு முன்னம்
தீதகலிம் முனியுரைத்த படியெமக்குள்
உவகைதரச் செய்நீ யென்னாச்
சோதிகொள்வா னகடுகிழித் தொருமொழிவேந்
திருசெவியிற் றூங்கிற் றன்றே. 34

508 சிந்தையிடஞ் சுருங்கமலர் பெருங்களிப்பாற்
சிவன்கோயில சென்று சூழ்ந்து
வந்துபணிந் தன்னவினோ தனைக்குரவங்
கமழ்குழலை வழுத்தி மீண்டும்
முந்துவசிட் டனையுமுரோ மசனையுங்கேட்
டுரியசுப முகூர்த்தம் வைத்துத்
தந்திரநூற் படியிருநா ன் கடுத்தவாயி
ரங்கிரகஞ் சமைத்தான் மன்னே. 35

509 இலவணமுற் சுவைப்பொருளும் உரலுலக்கை
இல்லுறைகல் இந்த னத்தோ
டலர்தருவெண் சாலிவல்சி கறிக்கினிய
காய்வருக்கம் அறுவை பொற்பூண்
குலவியவெண் கலமாதி பாத்திரமா
வினமின்ன குறித்து வெவ்வே
றுலைவிலகந் தொறுமமைத்தந் தணர்கையினீ
ரொடுமளித்தான் ஒருசொல் வேந்தன். 36

510 இருபிறப்பி னோர்க்கருளா யிரத்தொடிரு
நாலகுபங்கில் இருபங் கென்றும்
ஒருபிறப்பு மிலிக்குதவிப் பிரகாரங்
கோபுரங்கண் டுயர்ந்த தீர்த்தக்
கரையிருக்கும் மண்டபஞ்செய் தளவிலணி
யாடையொளி கஞலத் தந்து
புரையறுக்கும் புனிற்றாவீ ரைந்நூறு
திரிசூலம் போகட் டீந்தான். 37

511 பின்னராப் புடையபிரான் மலர்க்குரவங்
கமழ்குடிலெம் பிராட்டி பாதந்
தன்னையாத ரத்திறைஞ்சி வசிட்டனொடும்
அயோத்திநகர் சார்ந்து துந்து
வென்னுமோ ரவுணனுடல் தடிந்தசுடு
சரவேந்த னிருந்தா னப்பாற்
றுன்னியோங் கசத்தியத்தோ டத்தினுறா
தரசியற்றிச் சுவர்க்கஞ் சேர்ந்தான். 38

512 பொற்றகடு நிரைத்தனைய பூங்கொன்றை
வனத்தமலன் புகழ்மை கேட்கப்
பெற்றிடுநிம் மால்யானும் பவித்திரமா
னேனென்று பேசி மோனம்
உற்றிருந்த சூதபவு ராணிகனை
ஆப்பனூ ருடையா னாகக்
கற்றமுனிக் கணம்பூசித் தருள்பெற்றா
னந்தமதிற் கலந்தார் மன்னோ. 39

### சந்த விருத்தம்

தான தனனதன தானனா

513 ஈச னிடவபுர மான்மியம்
ஈது பரமசிவ னாலயம்
வீசு நதிபுனித மாமிட
மேவி வினவுமவர் பான்மன
நேச முறவுரைசெய் வோர்தினம்
நீடு செவியினுகர் வோர்வினை
மாசு கழுவுவர்ப ராபரன்
வாச மலரடியுன் வாழ்வரால். 40

### வாழ்த்து

### அறுசீர் விருத்தம்

514 தெய்வமறை யவர்விளங்கச் சிவசமய
மனுவேந்தன் செங்கோல் ஓங்கப்
பெய்வளங்கூர் மழைபொழிக மன்னுயிர்க்கின்
பம்பொலிக பெரியோர் வாழ்க
மெய்வளர்ந் திருவாப்ப னூருடைய
பரமர்திரு மேனி தீண்டும்
சைவர்குலம் பெருகவான் றளிபுதுக்கும்
அன்பர்குழாம் தழைக்க மாதோ. 41

அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரச் சருக்கம்
முற்றிற்று.

திருவாப்பனூர்ப் புராணம் முற்றிற்று.

## அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்

1. துரந்து-விரட்டி; ஆயுகம்-ஆயுள்.

3. செம்முகப்பெருவாயில்-செம்மையாக அமைந்த முகப்பினை உடைய பெரிய வாயில்; நியமம்-தெரு. இஃது அடுத்த பாடலுடன் குளகம்.

4. நியதி-வீதி; பெரும்பணை-பெரிய கிளை; நியதியின் பெரும்பணை-தெரு எனும் பெருங்கிளை; மனைத் தழை-வீடுகள் என்னும் இலைகள்; மன்பதைப் புள்ளினம்-மக்கள் என்னும் பறவைகள்; ஆவண மெனுங்கனி-கடைத்தெரு என்னும் பழம்; இப்பாடலில் நகரம் மரமாக உருவாக்கப்படுகிறது.

5. இருபொருள்-கல்வி செல்வம் என்னும் இருபொருள்; பொறை-பொறுமை; நிறைகுணசயிலம்-நிறைவான குணத்தில் மலை போன்றவன்.
இறுதியில் வரும் ஒப்பனோர்ன் என்பதை எல்லாவற்றுடனும் கூட்டுக.

6. கொடை மடமை-முன் வந்து பெற்றவரே மீண்டும் வந்து வேண்டினும் வரையாது கொடுக்கும் தன்மை; புர்வு-வளம்; ஏழ் நிலம்-ஏழுலகம்; ஐவகைப் பயம்-தன்னால், தன்சுற்றத்தால், பகைவரால், கள்வரால், படைத்திறத்தால், ஆகிய ஐந்து வகையாலும் ஏற்படும் அச்சங்கள். ஆறகற்றி-ஆறு ஆவன காமம், குரோதம், லோபம் மோகம், மதம், மார்ச்சரியம் என்பனவாம். இவ்வாறனையும் நீக்கி.

7. செயிர்-குற்றம

8. கடல் குடித்தவன் - அகத்தியன்; கடைபுரப்பவன் - வயிற் காவலன்.

9. நந்தனம்-நந்தவனம்.

10. துனி-குற்றம்; பொருங்கோசம்-பொருளின் ஈட்டம்; மகார்-மக்கள் பா. பே. இனிது நாடு.

12. இனன் குலம்-சூரிய குலம்.

13. திருத்த யாத்திரை-தீர்த்த யாத்திரை; ஓரை-காலம், இருத்தியேல்-இருப்பாயேல்.

14. வீக்கம் - இடையூறு; கரிமுகவிமலன் - விநாயகன்; தக்கணை - தட்சிணை; அடைகாய் - வெற்றிலை, பாக்கு; அனுகையில்-விடை கொண்டு.

15. விப்பிரர் - அந்தணர்; கேதாரம் - இமயமலையில் உள்ள ஒரு சிவத்தலம்.

17. வெதிரிகாச்சிரமம் - பதிரிகாசிரமம்-இலந்தைவனம்; மணிகன்னிகை-காசியில் உள்ள ஒரு தீர்த்தம்;

17. பற்குனி-பல்குனி என்னும் பெரிய நதி; ஓதனம் அரிசி உணவு, உவா-கடல்;

18. அருணை-திருவண்ணாமலை, பழிச்சி-போற்றி;

19. கழுமலம்-சீர்காழி; குடமுக்கு-கும்பகோணம்; வேத வனம் - திருமறைக்காடு - வேதாரணியம்; பெருந் துறை - திருப்பெருந்துறை; சிலைக்கோடி - தனுக் கோடி; கோசமங்கை-உத்தர கோசமங்கை;
பா. பே.: 1. எங்குநிறை திருவாரூர்; 2. சீர்தளிர் புத்தூர்.

20. பார்க்கரபுரம்-பாஸ்கரபுரம்; அத்தி-எலும்பு.

21. இரசிகமன்று-வெள்ளியம்பலம்-மதுரை; பனவர்-அந்தணர்; வேகவதி-வைகை.

22. ஒலநீர்த்திரை ஒலிக்கும் நீர் அலை; உரோமசன்-ஒரு முனிவர்; கூலம்-ஆற்றங்கரை; தவன்-தவமுடையவன்.

23. தரங்கம் அலை; வாலுகம்-மணல்.

24. செங்கைவேலினன்-அரிச்சந்திரன்.

25. குடத்தி-இடைக்குலப்பெண்.

26. இழுது-நெய்; பொழுது தேர்கிலாத-காலம் கண்டுணராத; காலமாரி-காலத்தே பொழியும் மழை.

27. புடையுடுத்த-பக்கத்தே உள்ள, இரைத்தவாய் மகார்-ஆரவரிக்கின்ற சிறுவர்கள்; பா. பே.: பகல் மடுத்திடையெடுத்த

30. மாசிலான்-குற்றமற்ற பசுக்கள். பா. பே.: வறந்துவிட்டதை யறிந்து.

31. முத்தலை வேல்பிடித்த காலின் ஆன்-(அடையாளத்திற்காக) காலில் திரிசூலக் குறியிட்ட பசு.

34. மூதிரையான்-திருவதிரையான்-சிவபெருமான்; வானகடு-வானவெளி; பா பே.: யெண்ணாள்.

35. இருநாலடுத்தவாயிரம்-ஆயிரத்தெட்டு; பா. பே.: முகிழ்த்தம்.

36. இலவணம்-உப்பு; இல்லுறைகல்-அம்மிமுதலாயன; இந்தனம் விறகு; வெண்சாலி வல்சி-வெண்மையான நெல்லரிசி; அறுவை-ஆடை, உலைவில் - குறைவற்ற.

37. இருபிறப்பினோர் - அந்தணர்; ஒருபிறப்பிலி - சிவ பெருமான்; ஒளிகளுல-ஒளிவிளங்க; புரையறுக்கும்-குற்றமற்ற; புனிற்றா-இளங்கன்று உடைய பசு.

38. ஆதரம்-அன்பு; துந்து-ஓர் அசுரன்; தோடம்-குற்றம்.

அரிச்சந்திரன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் முற்றிற்று.

திருவாப்பனூர்ப் புராணம் முற்றிற்று.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

(பாடல் வரிசை எண்)


| | |
|---|---|
| அக்கணத்தெழு | 193 |
| அங்கணர்சிவந்த | 150 |
| அங்கணன் | 139 |
| அங்கவன் | 471 |
| அங்கிருந்து | 492 |
| அச்செயல்கண் | 506 |
| அச்செயல்கோயில் | 465 |
| அடர்பூதநாத | 377 |
| அடியனேன் | 126 |
| அடும்போதரனை | 220 |
| அடைந்த ரகசிய | 350 |
| அடைந்து திரு | 54 |
| அடைவிலான் | 30 |
| அண்ணல் கண் | 447 |
| அணியாப்புலடையார் | 221 |
| அத்தனிச்சிவ | 51 |
| அத்திருநகர் | 258 |
| அந்தகாரிகங் | 346 |
| அந்தண் கயிலை | 21[illegible] |
| அந்தணர் | 470 |
| அந்தணீர் | 43 |
| அந்தநாள் | 173 |
| அந்த மாற்றம் | 226 |
| அந்தவேலை | 188 |
| அந்தோ தெருமரு | 372 |
| அந்நகர்க்கிறை | 75 |
| அப்பகல் | 230 |
| அப்பிகைகுரவம் | 209 |
| அம்மொழிப்படி | 232 |
| அமுதின் உரைக்கு | 224 |
| அமைச்சியற் | 97 |
| அயனிறைந்து | 446 |

அயிராணி 386
அரசுரிமைபுரி 399
அரணிதிருத்தி 355
அருக்கியமுதலிய 38
அருத்த மண்டப 249
அரைசன் முன் 86
அல்லல் புரியும் 362
அலத்தகத்தளி 414
அவ்வருந்தவ 33
அவ்வரைப்புறத் 411
அவ்வழிவேட்டம் 91
அவ்விடைக்கனல் 34
அவ்விடைமருவி 327
அவ்வுரைபோய் 1 0
அவனி மடுத் 353
அழைத்து நீள் 285
அளவில் பாற்கடல் 78
அற்றலுமென் 368
அறந்தழைக்கும் 491
அறுசுவையூண் 490
அன்படைமனத் 141
அன்றியாப்புடை 179
அன்றியும் பசித் 238
அன்னகரிலிங்க 328
அன்ன செய்தி 178
அன்ன நடைவந் 144
அன்னவரை 130
அன்னவனொடு 275
அன்னவுபாயம் 228
அனைத்து மோதிய 65
அனைய காலை 298
அனைய தூணவை 71
அனையவன் 406
ஆங்ககன்று 494
ஆடளிக்கு 245
ஆடுவாரயல் 109

| | | | |
|---|---|---|---|
| ஆதலினிச் | 114 | இசையநந்தன | 183 |
| ஆதலினீ | 507 | இடவதீர்த்தத்தை | 205 |
| ஆதிசிதம்பரத் | 493 | இடிக்கும்வெம் | 299 |
| ஆதிசைவரின் | 19 . | இடிக்குலஞ்சிலை | 195 |
| ஆதி நாளில் | 207 | இத்தகைச்சிவ | 256 |
| ஆதி நூலொடு | 178 | இத்தகைத்த | 416 |
| ஆதியாகம | 239 | இத்தலப் பெயர் | 203 |
| ஆதியாய் நடுவாய் | 429 | இந்தமாக் கதை | 45 |
| ஆதியைத்தன | 452 | இந்நிலத்தி | 502 |
| ஆதியையடி | 264 | இந்நூல்கொளுத் | 358 |
| ஆப்புடையமலன் | 63 | இப்பால் நீ | 217 |
| ஆமத்தார் | 274 | இப்பெரும்பொரு | 421 |
| ஆயுமுனிமகன் | 443 | இப்பொழுதிங்ஙன | 59 |
| ஆருமின்சுவை | 409 | இம்மனைப்புற | 458 |
| ஆவாவொரு | 365 | இமவரைப்பிடி | 410 |
| இக்கதையமுத | 167 | இரதஞாயிறு | 80 |
| இகழ்கின்ற | 385 | இருகை கூப்பி | 484 |

| | |
|---|---|
| இருகையொரு | 356 |
| இருந்தனன் | 315 |
| இருந்திசைப்பாலர் | 432 |
| இருந்துவாய் | 99 |
| இருபிறப்பினோர் | 510 |
| இருவிழிமென்புனல் | 308 |
| இருளாய் | 379 |
| இரைத்த காதல் | 242 |
| இலவணமுற் | 509 |
| இவ்வகைதுதித் | 441 |
| இவ்வூர் மனித்தர் | 481 |
| இவர் தருந்திரு | 481 |
| இவையலால் | 363 |
| இழுது நாறு | 499 |
| இளமையும் | 287 |
| இற்றொரும் | 460 |
| இறந்த ஆடவற் | 289 |
| இறை கோயில் | 384 |
| இன்ப முற்றடி | 253 |
| இன்ன தன்மை | 295 |
| இன்னதாய | 341 |
| இன்ன மோர்வரம் | 204 |
| இன்னுங் கதை | 403 |
| இன்னுமோர் கதை | 474 |
| இனன் குலத் | 485 |
| இனிதுன்றெரிசனம் | 310 |
| இனிய நாடு | 483 |
| இனிய வகை | 397 |
| ஈசனிடவபுர | 513 |
| ஈதற்புத | 3 5 |
| ஈதெலாமுன் | 219 |
| ஈவற்றலோபி | 382 |
| ஈறிலன்ன | 258 |
| ஈறிலாத | 418 |
| உச்சிட்டமிதனை | 464 |
| உடல்குழைந்துருக | 156 |

| | | | |
|---|---|---|---|
| உடுத்த நீரகழ் | 67 | எண்ணிலிவ் | 431 |
| உண்ணா அமுதே | 215 | எண்ணீர்மை | 180 |
| உண்ணு மேரியின் | 174 | எம்முகந் | 476 |
| உம்பர் தொழுங் | 209 | எருதூர் திருவிடை | 331 |
| உயர் கீல கேச | 390 | எவ்வுயிரேனும் | 302 |
| உயரிடப புரி | 55 | எவ்வுருவில் | 131 |
| உரிய பங்கினுக்கு | 198 | எழுந்தயர் | 434 |
| உரியவாப்பனூ | 216 | எறிந்ததெண்டிரை | 342 |
| உரிய வேள்வி | 26 | என் செய்தார் | 116 |
| உரைத்தமிழ் | 10 | என் சொல்கே | 497 |
| உலகெலாம் | 159 | என் மனத்தெழு | 420 |
| உவந்தசிந்தை | 335 | என்ற நாதனை | 236 |
| உள்ளில்வன் | 423 | என்றபோதத் | 292 |
| உளமுஞ்செவி | 402 | என்றலும் சூழ்ச்சி | 104 |
| உளைமதி | 263 | என்றலும் திரு | 457 |
| உற்பவ மகிழ்ச்சி | 151 | என்றினைய | 247 |
| ஊடுமின்கொடி | 265 | என்று கூறலு | 186 |
| ஊர் நோக்க | 370 | என்றுரைகொடுப்ப | 312 |

என்றென்றரற்றி 182
என்றோதியோதி 383
என்ன நின்றேத்தி 163
என்ன பாவமிது 300
என்னாலுஞ் 42
என்னவேத்தி 348
என்னுயிரமைச் 313
எனவுரைத்தணி 187
ஏயவந்தகரி 322
ஏற்றுயர் கொடி 13
ஏனை மாக்களு 418
ஐய நீயுயிர் 23
ஐயவிப்பாவம் 326
ஒண் கதிர் 92
ஒரு சிறு நூல் 278
ஒருமையினோர்ந்து 1
ஒருவர் பின் 108
ஒழியாத பேருவகை 129
ஒற்றை யா 128
ஓமெனு 438
ஓல நான்மறை 50
ஓல நீர்த்திரை 49
ஓவருங் கொடிய 311
கங்கை யமுனை 364
கஞ்சனூரில் 473
கடிகையைந்தென 28
கடைதவிரறம் 78
கண்குடை சோதியும் 83
கண்டசப்பொறி 243
கண்டனன் மதியை 317
கண்டு நாளனேக 496
கண்ணடியனைய 281
கண்ணுதல்வானவ 134
கமழ்முலைச் 246
கரியமணி 9
கரியவண்டெனுங் 27

| | | | |
|---|---|---|---|
| கருத்தழிந்தி | 197 | காரணஞானத் | 398 |
| கருத்தோடரச | 359 | கால்பாய | 505 |
| கருநடங்கழிக்குங் | 6 | கால் புகத் | 135 |
| கருப்பஞ்சாறன்ன | 58 | கான்மதக் | 455 |
| கருமாவையரி | 8 | கானேறு தரு | 4 |
| கழுதுவாய் | 269 | கானோய் முழு | 371 |
| கற்புக்குரிய | 218 | கிடங்கர் சூழ் | 136 |
| கறைமிடற் | 440 | கிடைப்பரிய | 165 |
| கன்னிகுரவம் | 155 | கிருதமாலையி | 252 |
| கன்னியராடலே | 271 | குணவிராசத | 428 |
| கனிநறுஞ்சுவை | 321 | குரவங் கமழ் குழழ் | 376 |
| கனியினைப் | 21 | குரங்கமழ்ந்த | 392 |
| காண்டலும் | 112 | குரைமுகவூர்தி | 323 |
| காதரப்பெருங் | 297 | குவடுபட்ட | 296 |
| காதிகாதலன் | 139 | குற்ற மிக்க | 405 |
| காந்தனிடத்தி | 222 | கூவிளி பம்பை | 87 |
| காப்புடையார் | 3 | கேட்ட மாதவர் | 259 |
| காரணக்கடவுள் | 137 | கேட்டரள் மதி | 225 |

| | |
|---|---|
| கேடுற்று | 385 |
| கொங்கலர் | 303 |
| கொய்யவே | 117 |
| கொல்லுங்கணை | 366 |
| கொலைவிழைந்தவர் | 293 |
| கொலை விளையாடும் | 273 |
| கொன்றை பாதிரி | 48 |
| கோட்டி நீர் | 501 |
| கோதாவிரிகண | 304 |
| கோதிலாத | 73 |
| சதமறாதுறுந் | 272 |
| சந்தமுமீசன் | 149 |
| சந்தநான்மறை | 459 |
| சந்தனக்கலவை | 282 |
| சந்தவந்தன | 39 |
| சரத்தினைத் | 286 |
| சராசரடங்கள் | 324 |
| சன்னிதிக் ்ண் | 233 |
| சன்னிதித்தெரு | 254 |
| சாந்த நீற்றர் | 451 |
| சால நீள்சுடர் | 68 |
| சாற்றிய புராணம் | 44 |
| சித்தமுள் | 419 |
| சிந்தையிடஞ் | 508 |
| சிமையநெடு | 307 |
| சிவமுணர் | 468 |
| சிற்பநூற் | 248 |
| சிற்பரன்றிரு | 189 |
| சிறுமைகண் | 105 |
| சின்னிலத்துறு | 175 |
| சினக்குறும் | 349 |
| சினகரம் புகுந்து | 462 |
| சினந்தலை | 325 |
| சீதவப்புய | 94 |
| சுடர்சூழுநெடு | 168 |
| சுடர் மழுப்படை | 160 |

| | | | |
|---|---|---|---|
| சூழ்ந்தொளிர் | 306 | தனிமாதவர்தம் | 401 |
| செந்தமிழ்த் | 331 | தாணுமெய்த் | 333 |
| செம்புலம்படர் | 98 | தார்புகுதடம் | 154 |
| செம்மைநெறி | 132 | தாரமல்லவர் | 294 |
| செயிரில்கோசல | 480 | தான்கரைந்துருகி | 124 |
| செவ்வாய் கமுதா | 229 | தானந்தவங் | 171 |
| சைவாகமமுறை | 305 | திரிபுரவிசய | 158 |
| சொற்படி முனிவன் | 318 | திருத்தயாத் | 486 |
| சொன்னவாசகம் | 191 | திருத்தன்மாக்- | காப்பு |
| சோதியினைப் | 16 | திருநான்மறை | 7 |
| சோதியாம் | 436 | திருப்புணர்ந்த | 398 |
| தஞ்சனேன் | 472 | திருமுன் பணிந்து | 393 |
| தடநகர் | 332 | திருவருள் உருக் | 422 |
| தடம்படிகயல் | 147 | திரைசெய்நீர்க் | 35 |
| தரிப்பரோ | 118 | திறந்து விட்டு | 503 |
| தருமநந்தி | 450 | திறம்புகாம | 79 |
| தலையெனச் | 498 | துன்னெனுமொழி | 100 |
| தனித்தனிபோய் | 115 | தூய்காமை | 479 |

| | | | |
|---|---|---|---|
| தெண்ணிலவின் | 15 | நசைமயிர் | 90 |
| தெய்வநாயகன் | 199 | நஞ்சமுண்ட | 334 |
| தெய்வமறை | 514 | நடக்கும் வழி | 210 |
| தெளித்த செம்மணி | 338 | நடந்தருக்கிய | 482 |
| தௌபால் விளங்கு | 391 | நண்ணியமறை | 36 |
| தென்னருக்கரசே | 96 | நந்திதீர்த்தத்தின் | 251 |
| தேவதேவநங் | 185 | நந்தி நாயக | 260 |
| தேவதேவநிராமய | 344 | நற்கடவுள் | 20 |
| தேவாதிதேவ | 181 | நதபன்னக | 345 |
| தேனிருந்தொழுகுங் | 316 | நாமுயிர் துறப்ப | 106 |
| தேனிலஞ்சிலை | 46 | நாவலாறெத்த | 283 |
| தேனுமின் | 435 | நிதம்பமலிர | 314 |
| தேனேந்திய | 81 | நிலத்தினிற் | 439 |
| தேனையும் | 277 | நிவந்தவாளன | 107 |
| தொடரவந்தி | 351 | நின்றியாமகிழ்ந் | 427 |
| தொடுதோல் | 85 | நின்றுதுதி | 148 |
| தொழுகுலத்தில் | 184 | நின்றுபேம்வழி | 454 |
| தொழுதுதொழுது | 211 | | |

| | | | |
|---|---|---|---|
| நின்னுடைய | 121 | பரக்கவென் | 60 |
| நினைந்தநெஞ் | 284 | பரவருங்குரவ | 442 |
| நீங்கினான் | 122 | பரவுநகர்க் | 478 |
| நீதிமன்னவர் | 255 | பரன்முடிமேல் | 57 |
| நீதிவைதிக | 449 | பருமணிச்சுடர் | 69 |
| நீயிரக்குமிக் | 235 | பருமவாளர | 347 |
| நீர்பூத்த கடற் | 2 | பழுதில்வெற் | 70 |
| நீர்பூந்த மலர் | 395 | பனிமலர்த் | 288 |
| நெடுநகர்த் | 477 | பாசங்கூர்தரு | 400 |
| நெடுமயிர்த் | 103 | பாதவந்தனை | 32 |
| நெய்யடைகன | 319 | பார்த்திபன் | 123 |
| நெளியரா | 127 | பால்பிடித்து | 504 |
| படவரவேணி | 320 | பாலமைப்பருவ | 407 |
| படிவர் வேள்வி | 415 | பானுமுற்பட | 250 |
| பண்டுநீ யெமக்கு | 41 | பிரணவ வடிவாய் | 430 |
| பண்டை நாண் | 261 | பின்னர் முன் | 461 |
| பணியாப்டனூர் | 54 | பின்னர் முனிவ | 208 |

| | | | |
|---|---|---|---|
| பின்னரணியாப் | 227 | பெருந்தவத்தனி | 488 |
| பின்னராப்புடை | 511 | பெரும்பெருக் | 111 |
| பின்னரிஷபோக | 153 | பெருமானை | 133 |
| பின்னருமுனிவர் | 64 | பெருமுலைப்பால | 11 |
| பின்னுமுட் | 467 | பெருவிலைக் | 50 |
| புடையுடுத்த | 500 | பைந்தமிழ்த் | 337 |
| புண்டரீச | 354 | பையநாவசைத்து | 101 |
| புத்தியைத் | 270 | பொதியவிழ் | 475 |
| புதுநாண்மலர் | 357 | பொற்றசடு | 512 |
| புரிசடைமேல் | 18 | மக்கள்பேர் | 19 |
| புன்னுனிப்பனி | 102 | மகிழ்வினைவ் | 72 |
| புன்னைபாடலம் | 23 | மண்ணாசை | 12 |
| புனிதமார் | 444 | மண்ணில்முளைத் | 361 |
| பூமுகமடந் | 142 | மண்ணுமணி | 146 |
| பூரவகி | 378 | மதிமுடித்தநங் | 190 |
| பூழியனோராண் | 140 | மந்திரத்தலைவர் | 95 |
| பெரியநகர் | 360 | மருக்கமழ்கொன்றை | 202 |

| | | | |
|---|---|---|---|
| மருக்கமழந்நகர் | 276 | மாரிக்கு | 170 |
| மருங்கொளி | 40 | மாவேட்டமாடு | 381 |
| மருமலர்க்குழ | 280 | மாறுபடுசெம்பியர் | 143 |
| மருவுகோணிலை | 172 | மானமாமயிர் | 417 |
| மருவேட்டம் | 82 | மிடைவெதிரி | 489 |
| மல்குலந்தமேற் | 93 | முன்பழுத்துமிழ் | 426 |
| மலர்க்குடைந் | 424 | மின்னினும் சிறந்த | 433 |
| மலர்தலை | 437 | மீதுவிப்பிரர் | 194 |
| மற்றுநீதியில் | 240 | முத்தருக்கருள் | 47 |
| மற்றுமென்னினி | 49 | முத்திரையிருப்ப | 466 |
| மறைத்நாலுவர் | 369 | முதிர்ந்தசூற்பிடி | 413 |
| மறைமுழுது | 19 | முதிருமென்புகண் | 200 |
| மறையொலி | 266 | முதுதிரிபுண்ட | 309 |
| மாக்கடலா | 161 | முலைத்தலைச் | 391 |
| மாசிலாவருட | 201 | முன்னேவருபவர் | 373 |
| மாதர்க்குமல்லன் | 287 | முனிவரும் | 267 |
| மாதரிற்கொளரி | 62 | மூதுரையிருடி | 262 |

| | | | |
|---|---|---|---|
| மூப்பழுத்தருஞ் | 17 | வந்தேனுனை | 214 |
| மேகச்சுரவேக | 374 | வருத்தமொன் | 234 |
| மேயவழுதி | 166 | வருதலுநடந்த | 469 |
| மேவுமவந்தி | 301 | வரைகளிற் | 61 |
| மேன்மைபெற்ற | 412 | வரைசெய்நற் | 453 |
| மேனாளொரு | 404 | வரையிலெந்தை | 408 |
| மேனிலத்தேவரும் | 279 | வழுதியுள் | 110 |
| மையோதியர் | 367 | வளைமிசை | 125 |
| மொழிந்தநற் | 76 | வாட்டிடுங்கொடிய | 113 |
| யாவர்போம் | 456 | வாமமீனவன் | 66 |
| யானெடுத்த | 119 | வாய்கிழிவன | 88 |
| வகுத்திடையிடைப் | 145 | வாயுள் இருக்கும் | 213 |
| வசையற்றிடு | 89 | வார்மாலைமுலை | 14 |
| வட்டவெண்குடை | 336 | வாள்வினையு | 152 |
| வடிதமிழ்க் | 22 | வானமேன் மண் | 31 |
| வண்மையுங்குல | 257 | வானாறுமல் | 84 |
| வந்தனன்வருதல் | 37 | வானின்றுவந்த | 394 |

| | | | |
|---|---|---|---|
| விட்டபோது | 290 | வெருவரும்பணி | 343 |
| விடைநந்தி | 389 | வெயிற்சுடுவேனில் | 424 |
| விதிமுனிக்கணம் | 25 | வேட்பமதி | 162 |
| விதிவழிச்சிவனை | 138 | வேண்டிமுன் | 164 |
| விரிகதியணி | 330 | வேதபாரகர் | 74 |
| விரிசடைமின் | 5 | வேதமுனிவர் | 352 |
| விரும்புமேனிலை | 339 | வேதவாகமவிதி | 29 |
| விரைந்து வேந்தன் | 477 | வேதவித்தனைய | 445 |
| விரையிருக்கும் | 264 | வேதவித்தெனும் | 24 |
| விழித்தபார்வை | 340 | வேதவிப்பிர | 237 |
| விள்கரும்பொனிற் | 463 | வேந்தர்சேகரன் | 241 |
| வீறாநிலத் | 169 | வேல்காட்டியன்ன | 380 |
| வீறுசேரந்நிலத் | 176 | வையை நீடணி | 52 |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| VI | 12 | பின்னா | பின்னர் |
| X | 26 | பதினெண | பதினெண் |
| 1 | 1 | திருவாப ருக்னூரு | திருவாப்பனூருக்கு |
| 3 | 15 | யோகம் | போகம் |
| 5 | 23 | வருநான | வருஞான |
| ,, | 28 | உயதியா நரோ | உளதியா தரோ |
| 6 | 17 | அக்குள் ஆடிக்கும் | அடிக்குள் ஆக்கும் |
| 11 | 6 | சங்க | சங்கர |
| 18 | 5 | கூவளம் | கூவிளம் |
| ,, | 19 | அலர்முகய் | அலர்முகம் |
| 27 | 23 | அருவிளை | அருவினை |
| 31 | 1 | கானல் ருளிர | கானல்குளிர |
| ,, | 3 | பன் ஊர் உரவம் | பன் ஊர் அரவம் |
| ,, | 24 | முத்து நிலை | முத்தி நிலை |
| 33 | 28 | நரகமும் | நகரமும் |
| 34 | 20 | மாளகை | மாளிகை |
| 35 | 17 | பார்கர் | பாரகர் |
| 44 | 27 | ஆனந்த தம்போல் | ஆனந் தம் போல் |
| 54 | 5 | அங்கணார்சி வத்த சடை | அங்மணார்சி வத்த சடை |
| 56 | 16 | (ஆப்பனூருடையாய் போற்றி) | ஆப்பனூ ருடையாய் போற்றி |
| 75 | 9 | தொழுகு லயத்தில் | தொழுகு லத்தில் |
| ,, | 18 | தெரித்த | தெரிந்த |
| 108 | 15 | துரீ இப்ப ணாப்பவன் | துரீ இப்பு ணர்ப்பவன் |
| 109 | 22 | முத தசைவோ | முத் தசைவோ |
| 119 | 11 | தெதன் றிசை | தென் றிசை |
| ,, | 27 | பரா யான் | பராபரன் |
| 123 | 9 | பார்வைகளி'ைப்பற | பார்வைகளி மைப்பற |
| 138 | 10 | ஓவா மாலி | ஓவா மலி |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| ,, | 25 | பகலீனும் | பகலினும் |
| 140 | 11 | ஈதொான் றறிதில்லோான் | ஈதொான் றறிகில்லாான் |
| 143 | 9 | முறை றகூ றமைச்சின் | முறைறகூ ரமைச்சின் |
| 163 | 26 | இவறைறவன் | இறைறவன் |
| 161 | 15 | அனுநிழ லமர்ந்த | அணிநிழ லமர்ந்த |
| 164 | 28 | அவமதித் திகழ்ந் கண் | அவமதித் திகழ்ந்தகண் |
| 173 | 27 | நீ றணிந்து திகள | நீரணிந்து திகழ் |
| 175 | 4 | குன்ம மைழக்கிடை | கூன் மழைக் கிடை |
| 182 | 10 | மமைமுகத்த | மைம முகத்த |
| 186 | 13 | பெரும் பனை | பெரும் பணை |
| ,, | 16 | வருவி லாவண | வருவிலாவண |
| 187 | 7 | ங்காமை | தீங்காமை |
| 197 | 8 | அவகளிப்ப | அவற்களிப்ப |